

சிலப்பதிகாரம்

சிலப்பதிகாரம்

பதிப்பு-ஆசிரியக் குழுவினரால்
வெளியிடப்பட்டது

வெளியிடுவோர்
எஸ். ராஜம்
15, தம்புச் செட்டித் தெரு
சென்னை-1

முதல்-பதிப்பு—1957
உரிமை பதிவு செய்யப் பெற்றது

விலை ரூபாய் ஒன்று
(வியாபாரிகளிடம் விற்பனை விலை ரூபாய் 1.25)

கிடைக்கும் இடம்
மார்ரே அண்டு கம்பெனி
5, தம்புச் செட்டித் தெரு,
சென்னை-1

எஸ்.'விசுவநாதன் அவர்களால், சென்னையில்,
சென்ட்ரல் ஆர்ட் அச்சுக்கூடத்தில், அச்சிடப் பெற்றது

பதிப்புரை

தமிழ் மொழியிலுள்ள அருமையான காவியங்களில் ஒன்று சிலப்பதிகாரம். இயல்-தமிழின் கூருகிய ஆசிரியப்பா கலிப்பாக்களையும், இசைத் தமிழின் பகுதி ஆகிய வரிப் பாடல்களையும் குரவைச் செய்யுட்களையும், நாடகத் தமிழுக்கு உரித்தான உரைப் பாட்டையும், தன்னகத்தே கொண்டு, முத்தமிழ்ப் பெருங்காப்பியமாக இது விளங்குகின்றது. 'செஞ்சொல் குடக்கோ முனி சேரன் தண்டா உரை முத்தமிழ்' என ஒரு பழம்பாடல் இக் காவியத்தை 'முத்தமிழ்' என்றே குறிக்கிறது. இதனால் இதற்கு 'இயல் இசை நாடகப் பொருள் தொடர்நிலைச் செய்யுள்' என ஒரு பெயரும் வழங்குகின்றது. இந் நூலின் பதிகம் 'உரை இடையிட்ட பாட்டு உடைச் செய்யுள்' என்று இதனைக் குறிக்கின்றது. 'நாடகக் காப்பியம்' என்றும் இதனை வழங்குவர்.

இளம்பூரணர், நச்சினார்க்கினியர் முதலிய பண்டை உரையாசிரியர்கள் இந் நூலைத் தம் உரைகளில் எடுத்தாண்டுள்ளார்கள். இளம்பூரணர் சிலப்பதிகாரத்தின் அகவல் பாட்டுக்களைப் பெரிய பாட்டுக்கு உதாரணமாக (தொல். செய்யு. 150) எடுத்துக் காட்டுகின்றனர். நச்சினார்க்கினியர் உரைப் பாட்டின் வகை ஆகிய 'பாட்டிடை வைத்த குறிப்பு' என்பதற்குச் சிலப்பதிகாரத்தை உதாரணமாகக் காட்டியதோடு (தொல். செய்யு. 173) 'தொன்மை' என்னும் வனப்பிற்கு உரியதாகவும் (தொல். செய்யு. 237) காட்டியுள்ளனர். தொன்மையாவது பழங் கதையைப் பொருளாகக் கொண்டு, உரை விரவிப் பாடப்படும் காவியம். அரும்பத உரையாசிரியர், தமது உரைத் தொடக்கத்தில்,

'சேரமான் செய்த சிலப்பதிகாரக் கதையைச்
சாரமாய் நாவே தரி'

என்று குறிப்பிடுதலும் நோக்கத்தக்கது.

இக்காவியம் கோவலன் கண்ணகியின் கதையை உட்கொண்டு, மூன்று முக்கியப் பொருள்களை வற்புறுத்திக் கூறும் நோக்கத்துடன்

எழுந்தது என இதன் பதிகம் குறிக்கிறது. சிலம்பு காரணமாக இக் கதையின் முக்கிய நிகழ்ச்சி செல்லுதலின், இது 'சிலப்பதிகாரம்' என்று பெயர் பெற்றுள்ளது.

கதை நோக்கமும் அறத்தை வற்புறுத்தும் உட்கோளும் முன்னின்றபோதிலும், இக் காவியத்தை இளங்கோ அமைத்துள்ள வகை மிக அருமையாக உள்ளது. கதையின் இடையிடையே வேறு சில புதுமைகளையும், சில கிளைக்கதைகளையும், வரலாறுகளையும் அங்கங்கே புகுத்தி, கோவலன் கண்ணகி கதையின் அங்கமாக அவற்றை அமைத்துவிடுகிறார். அரங்கேற்று காதை முற்றும் இசை, நாட்டியம் பற்றிய செய்திகளே. கானல் வரி, குன்றக் குரவைகளில் அகப்பொருள் துறை அமைந்த பாடல்களைக் கவி அழகுற அமைத்திருக்கின்றார். வேட்டுவ வரியிலும் காட்சிக் காதையிலும் வெட்சி, வஞ்சி, காஞ்சி என்னும் புறத்திணைப் பகுதிகள் விரவி வந்துள்ளன. இந்திர விழவு ஊர் எடுத்த காதையில் பூம் புகார் நகரத்தையும், ஊர் காண் காதையில் மதுரை மாநகரையும், படம் பிடித்ததுபோல் காட்டியதோடு, அங்கு வாழும் பல்வேறு மக்களின் வாழ்க்கைகளையும் சித்திரித்துச் செல்கின்றார். எண்வகை வரி, நவமணி இலக்கணம், மலைபடு பொருள்கள் முதலியவற்றை அங்கங்கே உரிய இடங்களில் அமைத்து அழகு செய்கின்றார். ஐவகை நிலங்களிலும் அங்கங்கே நிகழும் விழா, பாட்டு, கூத்து, ஆகியவற்றை விளக்கும் வகையில் இந்திரவிழவு ஊர் எடுத்த காதை, கானல் வரி, வேட்டுவ வரி, ஆய்ச்சியர் குரவை, குன்றக் குரவை ஆகியவை அமைந்துள்ளன. வஞ்சிக் காண்டம் முழுமையும் செங்குட்டுவனது வட நாட்டுப் போர் வெற்றியையும் பத்தினி வணக்கத்தையும் எடுத்துரைக்கும் பகுதியாக உள்ளது. இங்ஙனமாக, கோவலன் கண்ணகியின் கதையைக் கூறும் முகத்தால், தமிழகத்தின் வாழ்க்கையையும் பண்பாட்டையும் இக் காவியத்தில் அடிகள் விளங்கச் செய்தலைக் காண்கிறோம்.

இப் பெருங்காவியத்தை இயற்றிய ஆசிரியரின் வரலாறு தெளிவாகத் தெரியவில்லை. இவர் அரசு துறந்து, துறவு பூண்டு, குணவாயில் கோட்டத்து இருந்தார் என்றும், குடக்கோச் சேரல் என்றும், இளங்கோ அடிகள் என்றும், பதிகம் இவரை அறிமுகப் படுத்துகிறது. இவர் வாழ்ந்து நூல் இயற்றிய காலம் பற்றி வேறுபட்ட கொள்கைகள் நிலவுகின்றன. செங்குட்டுவனது வரலாற்றாலும், அவன் காலத்து வாழ்ந்த இலங்கை மன்னன் கயவாகுவின் சரித்தத்தாலும், அடிகள் வாழ்ந்த காலம் கி. பி. இரண்டாம் நூற்றாண்டு என்பர். ஒரு சிலர் சங்க காலத்திற்கும் பிற்காலத்திற்கும் இடைப்பட்ட காலம் என்று கூறுகின்றனர்.

இப் பெரு நூலுள் அமைந்த பொருள்களை விளங்கிக் கொள்வதற்கு உதவியாக ஆன்றோர் இருவரது உரைகள் நமக்குக் கிடைத்துள்ளன. இவர்களது உரை இல்லையாயின் இசை, கூத்து முதலியன பற்றிய செய்திகளை அறிதல் எளிதன்று. அவை பற்றி எழுந்த நூல்களில் பலவும் பிற்காலத்தே மாய்ந்துவிட்டன. பழைய நூல்களை எல்லாம் நன்கு துருவி ஆராய்ந்து எழுதியதே அரும்பத உரை. இவ் உரையை வகுத்தவரின் பெயர் தெரியாமையால், இவர் அரும்பத உரையாசிரியர் என்றே வழங்கப்படுகின்றார். இவருக்குப் பின்னர் அடியார்க்குநல்லார் விரிவாக உரை வகுத்தனர். காணல் வரிக்கும், வழக்கு உரை காதை தொடங்கிப் பிற்பகுதிகளுக்கும் இவரது உரை இப்பொழுது கிடைக்கவில்லை.

இந் நூலை முழுமையும் ஆராய்ந்து, உரையுடன் செவ்வையாகப் பதிப்பித்து உதவியவர் பதிப்பாசிரியர் திலகமாய் விளங்கிய காலஞ்சென்ற மகா மகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் ஆவர். இவர்களுடைய பதிப்பு (1892) வெளிவந்தபின் தான் சிலப்பதிகாரம் எங்கும் பரவலாயிற்று. அவர்களும் பதிப்பிற்குப் பதிப்பு தமது ஆராய்ச்சிகளால் பல்வேறு வகையில் செம்மைப்படுத்தி, அகராதி முதலிய ஆராய்ச்சிக் குறிப்புக்களுடன், நல்ல முறையில் அமைத்துத் தந்துள்ளார்கள். இவர்களுக்குத் தமிழுலகம் என்றும் கடப்பாடு உடையது.

சிலப்பதிகாரத்தை நாங்கள் பதிப்பிக்கத் தொடங்கியபோது ஐயர் அவர்களின் பெயரர் திரு. க. சுப்பிரமணியம் அவர்கள் மனமுவந்து, ஐயரவர்கள் வெளியிட்ட மூலத்தைப் பயன்படுத்தி, அதை ஒட்டியே மூலத்தை வெளியிட எங்களுக்கு அனுமதி தந்தார்கள். அவர்களுக்கு எங்கள் நன்றி உரியது.

இப் பதிப்பில் மூலபாடம் பதம் பிரித்து, உரிய நிறுத்தல்-குறிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. இதன் பகுதிகள் கதை தழுவிய நீண்ட பாடல்களாக இருப்பதால், கதை நிகழ்ச்சிகள் விளங்கும் பொருட்டு, உரிய இடங்களில் தலைப்புக்கள் இடப்பட்டுள்ளன. கதையில் ஏற்படும் திருப்பங்களையும் நிகழ்ச்சிகளையும் தொடர்ச்சியாகத் தெரிவதற்கு இத் தலைப்புக்கள் பெரிதும் உதவ வல்லன. நூலின் இறுதியில் அரிய சொற்களுக்கும் தொடர்களுக்கும் அகராதி வரிசையில் பொருள் தரப்பட்டுள்ளது. இப் பொருள் விளக்கமும், பதப்பிரிப்புடன் கூடிய மூலமும், தலைப்புக்களும், சிலப்பதிகாரக் காவியத்தை எளிதில் கற்று, அனுபவிக்கப் பேருதவியாக இருக்கும் என்று நம்புகிறோம்.

திருவாளர்கள் பெ. நா. அப்புஸ்வாமி, வி.மு. சுப்பிரமணியம், அ.ச. ஞானசம்பந்தம், மு. சண்முகம், ஆகிய நால்வரும் இந்நூலின் பதிப்பு-ஆசிரியக் குழுவினராக இருந்து, இதனை அழகுறப் பதிப் பித்துள்ளார்கள். இவர்களுக்கு எமது உளம் கனிந்த நன்றி உரிய தாகுக.

'தேனிலே ஊறிய செந்தமிழின் சுவை
தேரும் சிலப்பதிகாரமதை
ஊனிலே எம் உயிர் உள்ளளவும், நிதம்
ஓதி உணர்ந்து, இன்புறுவோமே.'

மார்ரே அண்டு கம்பெனி,
சென்னை-1.
20-3-57

வெளியிடுவோர்

உள்ளுறை

பதிகம்
உரைபெறு கட்டுரை

பக்கம்

புகார்க் காண்டம்

1. மங்கல வாழ்த்துப் பாடல் ... 1
2. மனையறம் படுத்த காதை ... 3
3. அரங்கேற்று காதை ... 6
4. அந்திமாலைச் சிறப்புச் செய் காதை ... 11
5. இந்திரவிழவு ஊர் எடுத்த காதை ... 14
6. கடல் ஆடு காதை ... 21
7. கானல் வரி ... 26
8. வேனில் காதை ... 36
9. கனாத் திறம் உரைத்த காதை ... 40
10. நாடு காண் காதை ... 44

மதுரைக் காண்டம்

11. காடு காண் காதை ... 53
12. வேட்டுவ வரி ... 59
13. புறஞ்சேரி இறுத்த காதை ... 65
14. ஊர் காண் காதை ... 71
15. அடைக்கலக் காதை ... 77
16. கொலைக்களக் காதை ... 83
17. ஆய்ச்சியர் குரவை ... 90
18. துன்ப மாலை ... 95
19. ஊர் சூழ் வரி ... 97
20. வழக்கு உரை காதை ... 99
21. வஞ்சின மாலை ... 103
22. அழல் படு காதை ... 105
23. கட்டுரை காதை ... 110

வஞ்சிக் காண்டம்

24. குன்றக் குரவை ... 117
25. காட்சிக் காதை ... 121
26. கால்கோள் காதை ... 127
27. நீர்ப்படைக் காதை ... 134
28. நடுகல் காதை ... 142
29. வாழ்த்துக் காதை ... 149
30. வரம் தரு காதை ... 154

நூல் கட்டுரை ... 162
சொல்-தொடர் விளக்கம் ... 163

பதிகம்

குணவாயில் கோட்டத்தில் இளங்கோ

குணவாயில் கோட்டத்து, அரசு துறந்து இருந்த,
குடக் கோச் சேரல் இளங்கோ அடிகட்கு—

குறவர் கூறிய விந்தை நிகழ்ச்சி

குன்றக் குறவர் ஒருங்குடன் கூடி,
'பொலம் பூ வேங்கை நலம் கிளர் கொழு நிழல்,
ஒரு முலை இழந்தாள் ஓர் திரு மா பத்தினிக்கு,
அமரர்க்கு அரசன் தமர் வந்து ஈண்டி, அவள்
காதல் கொழுநனைக் காட்டி, அவளொடு, எம்
கண்-புலம் காண, விண்-புலம் போயது
இறும்பூது போலும்; அஃது அறிந்தருள் நீ' என—

உடன் இருந்த சாத்தனர் நிகழ்ந்ததைக் கூறல்

அவன் உழை இருந்த தண் தமிழ்ச் சாத்தன்,
'யான் அறிகுவன் அது பட்டது' என்று உரைப்போன்,
'ஆரங் கண்ணிச் சோழன் மூதூர்,
பேராச் சிறப்பின் புகார் நகரத்துக்
கோவலன் என்பான் ஓர் வாணிகன், அவ் ஊர்
நாடகம் ஏத்தும் நாடகக் கணிகையொடு
ஆடிய கொள்கையின் அரும் பொருள் கேடு உற,
கண்ணகி என்பாள் மனைவி—அவள் கால்
பண் அமை சிலம்பு பகர்தல் வேண்டி,
பாடல்சால் சிறப்பின் பாண்டியன் பெரும் சீர்
மாட மதுரை புகுந்தனன். அது கொண்டு
மன் பெரும் பீடிகை மறுகில் செல்வோன்
பொன் செய் கொல்லன்-தன் கைக் காட்ட—
''கோப் பெருந் தேவிக்கு அல்லதை, இச் சிலம்பு
யாப்புறவு இல்லை; ஈங்கு இருக்க'' என்று ஏகி—
பண்டு தான் கொண்ட ''சில் அரிச் சிலம்பினைக்
கண்டனன் பிறன் ஓர் கள்வன் கை'' என—
வினை விளை காலம் ஆதலின், யாவதும்
சினை அலர் வேம்பன் தேரான் ஆகி,
கன்றிய காவலர்க் கூஉய், ''அக் கள்வனைக்
கொன்று, அச் சிலம்பு கொணர்க ஈங்கு'' என—

கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி
நிலைக்களம் காணுள், நெடுங் கண் நீர் உகுத்து,
பத்தினி ஆகலின், பாண்டியன் கேடு உற,
முத்து ஆர மார்பின் முலைமுகம் திருகி,
நிலை கெழு கூடல் நீள் எரி ஊட்டிய
பலர் புகழ் பத்தினி ஆகும் இவள்' என—

வினைவிளைவைப் பற்றி விளக்கும்படி அடிகள் கேட்டல்

'வினை விளை காலம் என்றீர்; யாது அவர்
வினை விளைவு?' என்ன—

சாத்தனர் தாம் கேட்டதை உரைத்தல்

'விறலோய்! கேட்டி:
அதிராச் சிறப்பின் மதுரை மூதூர்,
கொன்றை அம் சடைமுடி மன்றப் பொதியிலில்
வெள்ளியம்பலத்து, நள் இருள் கிடந்தேன்;
ஆர் அஞர் உற்ற வீர பத்தினி முன்
மதுரை மா தெய்வம் வந்து தோன்றி,
''கொதி அழல் சீற்றம் கொங்கையின் விளைத்தோய்!
முதிர் வினை நுங்கட்கு முடிந்தது; ஆகலின்,
முந்தைப் பிறப்பில், பைந்தொடி! கணவனொடு
சிங்கா வண் புகழ்ச் சிங்கபுரத்துச்
சங்கமன் என்னும் வாணிகன் மனைவி
இட்ட சாபம் கட்டியது; ஆகலின்,
வார் ஒலி கூந்தல்! நின் மணமகன்-தன்னை
ஈர்-ஏழ் நாள்அகத்து எல்லை நீங்கி,
வானோர்-தங்கள் வடிவின் அல்லதை
ஊனோர் வடிவில் காண்டல் இல்'' எனக்
கோட்டம் இல் கட்டுரை கேட்டனன் யான்' என—

அதைக் கேட்ட இளங்கோ கூறல்

'அரைசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்று ஆவதூஉம்,
உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்,
ஊழ்வினை உருத்து வந்து ஊட்டும் என்பதூஉம்,
சூழ் வினைச் சிலம்பு காரணமாக,
சிலப்பதிகாரம் என்னும் பெயரால்
நாட்டுதும் யாம் ஓர் பாட்டு உடைச் செய்யுள்' என—

சாத்தனர் அடிகளை வேண்டுதல்

'முடி கெழு வேந்தர் மூவர்க்கும் உரியது,
அடிகள்! நீரே அருளுக' என்றற்கு—

அவர்,
மங்கல வாழ்த்துப் பாடலும், குரவர்
மணியறம் படுத்த காதையும், நடம் நவில்
மங்கை மாதவி அரங்கேற்று காதையும்,
அந்தி மாலைச் சிறப்புச் செய் காதையும்,
இந்திர விழவு ஊர் எடுத்த காதையும்,
கடல் ஆடு காதையும்,
மடல் அவிழ் கானல் வரியும், வேனில் வந்து இறுத்தென
மாதவி இரங்கிய காதையும், தீது உடைக்
கனத் திறம் உரைத்த காதையும், வினைத் திறத்து
நாடு காண் காதையும், காடு காண் காதையும்,
வேட்டுவ வரியும், தோட்டு அலர் கோதையொடு
புறஞ்சேரி இறுத்த காதையும், கறங்கு இசை
ஊர் காண் காதையும், சீர்சால் நங்கை
அடைக்கலக் காதையும், கொலைக்களக் காதையும்,
ஆய்ச்சியர் குரவையும், தீத் திறம் கேட்ட
துன்ப மாலையும், நண்பகல் நடுங்கிய
ஊர் சூழ் வரியும், சீர்சால் வேந்தனொடு
வழக்கு உரை காதையும், வஞ்சின மாலையும்,
அழல் படு காதையும், அரும் தெய்வம் தோன்றிக்
கட்டுரை காதையும், மட்டு அலர் கோதையர்
குன்றக் குரவையும்—என்று, இவை அனைத்துடன்
காட்சி, கால்கோள், நீர்ப்படை, நடுகல்,
வாழ்த்து, வரம் தரு காதையொடு
இவ் ஆறு-ஐந்தும்
உரை இடையிட்ட பாட்டு உடைச் செய்யுள்
உரைசால் அடிகள் அருள, மதுரைக்
கூல வாணிகன் சாத்தன் கேட்டனன்.
இது—பால் வகை தெரிந்த பதிகத்தின் மரபு-என்.

உரைபெறு கட்டுரை

1. அன்றுதொட்டு, பாண்டியன் நாடு மழை வறம் கூர்ந்து, வறுமை எய்தி, வெப்பு-நோயும் குருவும் தொடர, கொற்கையில் இருந்த வெற்றிவேல் செழியன் நங்கைக்குப் பொற்கொல்லர் ஆயிரவரைக் கொன்று, கள-வேள்வியால் விழவொடு சாந்தி செய்ய, நாடு மலிய மழை பெய்து, நோயும் துன்பமும் நீங்கியது.

2. அது கேட்டு, கொங்கு இளங்கோசர் தங்கள் நாட்டகத்து, நங்கைக்கு விழவொடு சாந்தி செய்ய, மழை தொழில் என்றும் மாறுதாயிற்று.

3. அது கேட்டு, கடல் சூழ் இலங்கைக் கயவாகு என்பான் நங்கைக்கு நாள் பலி-பீடிகைக் கோட்டம் முந்துறுத்து-ஆங்கு, 'அரந்தை கெடுத்து, வரம் தரும் இவள்' என, ஆடித் திங்கள் அகவையின், ஆங்கு ஓர் பாடி விழாக் கோள் பல் முறை எடுப்ப, மழை வீற்றிருந்து, வளம் பல பெருகி, பிழையா வீளையுள் நாடு ஆயிற்று.

4. அது கேட்டு, சோழன் பெருங்கிள்ளி கோழிஅகத்து, 'எத்திறத்தானும் வரம் தரும் இவள் ஓர் பத்தினிக் கடவுள் ஆகும்' என, நங்கைக்குப் பத்தினிக் கோட்டமும் சமைத்து, நித்தல் விழா அணி நிகழ்வித்தோனே.

சிலப்பதிகாரம்

முதலாவது

புகார்க் காண்டம்

1. மங்கல வாழ்த்துப் பாடல்

வாழ்த்தும் வணக்கமும்

திங்களைப் போற்றுதும்! திங்களைப் போற்றுதும்!—
கொங்கு அலர் தார்ச் சென்னி குளிர் வெண்குடை போன்று, இவ்
அம் கண் உலகு அளித்தலான்.

ஞாயிறு போற்றுதும்! ஞாயிறு போற்றுதும்!—
காவிரி நாடன் திகிரி போல், பொன் கோட்டு
மேரு வலம் திரிதலான்.

மா மழை போற்றுதும்! மா மழை போற்றுதும்!—
நாம நீர் வேலி உலகிற்கு, அவன் அளி போல்,
மேல் நின்று தான் சுரத்தலான்.

பூம் புகார் போற்றுதும்! பூம் புகார் போற்றுதும்!—
வீங்கு நீர் வேலி உலகிற்கு அவன் குலத்தோடு
ஓங்கிப் பரந்து ஒழுகலான்.

புகார்ச் சிறப்பு

ஆங்கு,
பொதியில் ஆயினும், இமயம் ஆயினும்,
பதி எழு அறியாப் பழங் குடி கெழீஇய
பொது அறு சிறப்பின் புகாரே ஆயினும்,
நடுக்கு இன்றி நிலைஇய என்பது அல்லதை
ஒடுக்கம் கூறூர், உயர்ந்தோர் உண்மையின்,
முடித்த கேள்வி முழுது உணர்ந்தோரே.
அதனால்,
நாக நீள் நகரொடு நாக நாடு-அதனொடு
போகம், நீள் புகழ் மன்னும் புகார்-நகர்.

கண்ணகியின் குலமும் நலமும்

அது-தன்னில்,
மாக வான் நிகர் வண் கை மாநாய்கன் குலக் கொம்பர்;
ஈகை வான் கொடி அன்னாள்; ஈர்-ஆறு ஆண்டு அகவையாள்:
அவளும்-தான்,
போதில் ஆர் திருவினாள் புகழ் உடை வடிவு என்றும்,
தீது இலா வடமீனின் திறம் இவள் திறம் என்றும்,
மாதரார் தொழுது ஏத்த வயங்கிய பெரும் குணத்துக்
காதலாள்; பெயர் மன்னும் கண்ணகி என்பாள் மன்னோ.

கோவலனது பெருநலம்

ஆங்கு,
பெரு நிலம் முழுது ஆளும் பெருமகன் தலை வைத்த
ஒரு தனிக் குடிகளோடு உயர்ந்து ஓங்கு செல்வத்தான்;
வரு நிதி பிறர்க்கு ஆர்த்தும் மாசாத்துவான் என்பான்:
இரு நிதிக் கிழவன் மகன் ஈர்-எட்டு ஆண்டு அகவையான்:
அவனும்-தான்,
மண் தேய்த்த புகழினன்; மதி முக மடவார் தம்
பண் தேய்த்த மொழியினர் ஆயத்துப் பாராட்டி,
'கண்டு ஏத்தும் செவ்வேள்' என்று இசை போக்கி, காதலால்
கொண்டு ஏத்தும் கிழமையான்; கோவலன் என்பான் மன்னோ.

திருமணச் செய்தியை அறிவித்தல்

அவரை,
இரு பெரும் குரவரும், ஒரு பெரு நாளால்,
மண அணி காண மகிழ்ந்தனர்: மகிழ்ந்துழி,
யானை எருத்தத்து, அணி இழையார், மேல் இரீஇ,
மா நகர்க்கு ஈந்தார் மணம்.

கோவலன் கண்ணகி திருமணம்

அவ்வழி,
முரசு இயம்பின; முருடு அதிர்ந்தன;
முறை எழுந்தன பணிலம்; வெண்குடை
அரசு எழுந்ததொர்படி எழுந்தன;
அகலுள் மங்கல அணி எழுந்தது.

மாலை தாழ் சென்னி வயிர மணித் தூண் அகத்து,
நீல விதானத்து, நித்திலப் பூம் பந்தர்க் கீழ்,
வான் ஊர் மதியம் சகடு அணைய, வானத்துச்
சாலி ஒரு மீன் தகையாளைக் கோவலன்,
மா முது பார்ப்பான் மறை வழி காட்டிட,
தீ வலம் செய்வது காண்பார் கண் நோன்பு என்னே!

மங்கல வாழ்த்தும் மங்கல அமளியில் ஏற்றுதலும்

விரையினர், மலரினர், விளங்கு மேனியர்,
உரையினர், பாட்டினர், ஒசிந்த நோக்கினர்,
சாந்தினர், புகையினர், தயங்கு கோதையர்,
ஏந்து இள முலையினர், இடித்த சுண்ணத்தர்,
விளக்கினர், கலத்தினர், விரிந்த பாலிகை
மூஉக் குடம் நிரையினர், முகிழ்த்த மூரலர்,
போதொடு விரி கூந்தல் பொலன் நறுங் கொடி அன்னர்,
'காதலற் பிரியாமல், கவவுக் கை ஞெகிழாமல்,
தீது அறுக!' என ஏத்தி, சில் மலர் கொடு தூவி,
அம் கண் உலகின் அருந்ததி அன்னஉ
மங்கல நல் அமளி ஏற்றினர்—'தங்கிய
இப்பால் இமயத்து இருத்திய வாள் வேங்கை
உப்பாலப் பொன் கோட்டு உழையதா, எப்பாலும்
செரு மிகு சின வேல் செம்பியன்
ஒரு தனி ஆழி உருட்டுவோன்' எனவே.

2. மணியறம் படுத்த காதை

எழுநிலை மாடத்தின் இடைநிலத்தில் பள்ளிக் கட்டிலின்மீது
கோவலனும் கண்ணகியும் வீற்றிருத்தல்

உரைசால் சிறப்பின், அரைசு விழை திருவின்,
பரதர் மலிந்த, பயம் கெழு, மா நகர்—
முழங்கு கடல் ஞாலம் முழுவதும் வரினும்
வழங்கத் தவாஅ வளத்தது ஆகி,
அரும் பொருள் தரூஉம் விருந்தின் தேஎம்
ஒருங்கு தொக்கன்ன உடைப் பெரும் பண்டம்
கலத்தினும் காலினும் தருவனர் ஈட்ட:
குலத்தில் குன்றாக் கொழுங் குடிச் செல்வர்,
அத்தகு திருவின் அரும் தவம் முடித்தோர்
உத்தர-குருவின் ஒப்பத் தோன்றிய
கய மலர்க் கண்ணியும் காதல் கொழுநனும்
மயன் விதித்தன்ன மணிக் கால் அமளிமிசை,
நெடு நிலை மாடத்து இடை நிலத்து, இருந்துழி—

தென்றலைக் கண்டு மகிழ்ந்து, இருவரும் காதல் கைம்மிக, நிலா-முற்றம் போதல்

கழுநீர், ஆம்பல், முழுநெறிக் குவளை,
அரும்பு பொதி அவிழ்ந்த சுரும்பு இமிர் தாமரை,
வயல் பூ வாசம் அறீஇ; அயல் பூ

மேதகு தாழை விரியல் வெண் தோட்டு,
கோதை மாதவி, சண்பகப் பொதும்பர்,
தாது தேர்ந்து உண்டு; மாதர் வாள் முகத்துப்
புரி குழல் அளகத்துப் புகல் ஏக்கற்று;
திரிதரு சுரும்பொடு செவ்வி பார்த்து,
மாலைத் தாமத்து மணி நிரைத்து வகுத்த
கோலச் சாளரக் குறுங் கண் நுழைந்து,
வண்டொடு புக்க மண வாய்த் தென்றல்
கண்டு, மகிழ்வு எய்தி, காதலின் சிறந்து,
விரை மலர் வாளியொடு வேனில் வீற்றிருக்கும்
நிரை நிலை மாடத்து அரமியம் ஏறி,

இருவரும் இன்புற்றிருத்தல்

சுரும்பு உணக் கிடந்த நறும் பூஞ் சேக்கைக்
கரும்பும் வல்லியும் பெரும் தோள் எழுதி,
முதிர் கடல் ஞாலம் முழுவதும் விளக்கும்
கதிர் ஒருங்கு இருந்த காட்சி போல,
வண்டு வாய் திறப்ப, நெடு நிலா விரிந்த
வெண் தோட்டு மல்லிகை விரியல் மாலையொடு
கழுநீர்ப் பிணையல் முழுநெறி பிறழ,
தாரும் மாலையும் மயங்கி, கையற்று,
தீராக் காதலின் திரு முகம் நோக்கி,
கோவலன் கூறும் ஓர் குறியாக் கட்டுரை:

கண்ணகியின் நலத்தைக் கோவலன் பாராட்டுதல்

அவயவங்களின் அருமையைப் புகழ்தல்

'குழவித் திங்கள் இமையவர் ஏத்த
அழகொடு முடித்த அருமைத்து ஆயினும்,
உரிதின் நின்னோடு உடன் பிறப்பு உண்மையின்,
பெரியோன் தருக—திரு நுதல் ஆக என:
அடையார் முனை அகத்து அமர் மேம்படுநர்க்குப்
படை வழங்குவது ஓர் பண்பு உண்டு ஆகலின்,
உருவிலாளன் ஒரு பெரும் கருப்பு வில்
இரு கரும் புருவம் ஆக ஈக்க:
மூவா மருந்தின் முன்னர்த் தோன்றலின்,
தேவர் கோமான் தெய்வக் காவல்-
படை நினக்கு அளிக்க—அதன் இடை நினக்கு இடை என:
அறுமுக ஒருவன் ஓர் பெறும் முறை இன்றியும்;
இறும் முறை காணும் இயல்பினின் அன்றே—

அம் சுட்டர் நெடு வேல் ஒன்றும் நின் முகத்துச்
செங் கடை மழைக் கண் இரண்டா ஈத்தது?

கண்ணகியின் சாயலையும் நடையையும் மொழியையும் புகழ்தல்

மா இரும் பீலி, மணி நிற மஞ்ஞை, நின்
சாயற்கு இடைந்து, தண் கான் அடையவும்;
அன்னம், நல்-நுதல்! மெல் நடைக்கு அழிந்து,
நல் நீர்ப் பண்ணை நளி மலர்ச் செறியவும்;
அளிய-தாமே, சிறு பசுங் கிளியே—
குழலும், யாழும், அமிழ்தும் குழைத்த நின்
மழலைக் கிளவிக்கு வருந்தினஆகியும்,
மட நடை மாது! நின் மலர்க் கையின் நீங்காது
உடன் உறைவு மரீஇ ஒருவா ஆயின:

கண்ணகியை அணிசெய்வித்தலும் வேண்டுமோ என்று
கோவலன் கூறுதல்

நறு மலர்க் கோதை! நின் நலம் பாராட்டுநர்
மறு இல் மங்கல அணியே அன்றியும்,
பிறிது அணி அணியப் பெற்றதை எவன்கொல்?
பல் இருங் கூந்தல் சில் மலர் அன்றியும்,
எல் அவிழ் மாலையொடு என் உற்றனர்கொல்?
நான நல் அகில் நறும் புகை அன்றியும்,
மான்மதச் சாந்தொடு வந்ததை எவன்கொல்?
திரு முலைத் தடத்திடைத் தொய்யில் அன்றியும்,
ஒரு காழ் முத்தமொடு உற்றதை எவன்கொல்?
திங்கள் முத்து அரும்பவும், சிறுகு இடை வருந்தவும்
இங்கு இவை அணிந்தனர்; என் உற்றனர்கொல்?

காதல் மொழிகள்

மாசு அறு பொன்னே! வலம்புரி முத்தே!
காசு அறு விரையே! கரும்பே! தேனே!
அரும் பெறல் பாவாய்! ஆர் உயிர் மருந்தே!
பெருங்குடி வாணிகன் பெரு மட மகளே!
மலையிடைப் பிறவா மணியே என்கோ?
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ?
யாழிடைப் பிறவா இசையே என்கோ?
தாழ் இருங் கூந்தல் தையால்! நின்னே'—என்று
உலவாக் கட்டுரை பல பாராட்டி,
தயங்கு இணர்க் கோதை-தன்னொடு தருக்கி,
வயங்கு இணர்த் தாரோன் மகிழ்ந்து செல்வுழி நாள்—

கோவலனும் கண்ணகியும் நடத்திய இல்லறம்

வார் ஒலி கூந்தலைப் பேர் இயல் கிழத்தி
மறப்பு-அரும் கேண்மையோடு அறப் பரிசாரமும்,
விருந்து புறந்தரூஉம் பெரும் தண் வாழ்க்கையும்,
வேறுபடு திருவின் வீறு பெறக் காண,
உரிமைச் சுற்றமோடு ஒரு தனிப் புணர்க்க,
யாண்டு சில கழிந்தன, இல் பெருங்கிழமையின்—
காண் தகு சிறப்பின் கண்ணகி-தனக்கு-என்.

வெண்பா

தூமப் பணிகள் ஒன்றித் தோய்ந்தால் என, ஒருவார்
காமர் மனைவி எனக் கைகலந்து, நாமம்
தொலையாத இன்பம் எலாம் துன்னினார்—மண்மேல்
நிலையாமை கண்டவர் போல், நின்று.

3. அரங்கேற்று காதை

மாதவியின் நாட்டியப் பயிற்சி

தெய்வ மால் வரைத் திரு முனி அருள,
எய்திய சாபத்து இந்திர சிறுவனொடு
தலைக்கோல் தானத்து, சாபம் நீங்கிய
மலைப்பு-அரும் சிறப்பின் வானவர் மகளிர்
சிறப்பில் குன்றுச் செய்கையொடு பொருந்திய
பிறப்பில் குன்றுப் பெரும் தோள் மடந்தை
தாது அவிழ் புரி குழல் மாதவி-தன்னை,
ஆடலும் பாடலும் அழகும் என்று இக்
கூறிய மூன்றின் ஒன்று குறை படாமல்,
ஏழ் ஆண்டு இயற்றி, ஓர் ஈர்-ஆறு ஆண்டில்
சூழ் கழல் மன்னற்குக் காட்டல் வேண்டி—

ஆடல் ஆசான்

இரு வகைக் கூத்தின் இலக்கணம் அறிந்து,
பல வகைக் கூத்தும் விலக்கினில் புணர்த்து,
பதினோர் ஆடலும், பாட்டும், கொட்டும்,
விதி மாண் கொள்கையின் விளங்க அறிந்து-ஆங்கு,
ஆடலும், பாடலும், பாணியும், தூக்கும்,
கூடிய நெறியின கொளுத்தும்காலை—
பிண்டியும், பிணையலும், எழில் கையும், தொழில் கையும்,
கொண்ட வகை அறிந்து, கூத்து வரு காலை—
கூடை செய்த கை வாரத்துக் கோதலும்,

வாரம் செய்த கை கூடையில் கோதலும்,
பிண்டி செய்த கை ஆடலில் கோதலும்,
ஆடல் செய்த கை பிண்டியில் கோதலும்,
குரவையும் வரியும் விரவல செலுத்தி,
ஆடற்கு அமைந்த ஆசான்-தன்னெடும்—

இசையோன்

யாழும், குழலும், சீரும், மிடறும்,
தாழ் குரல் தண்ணுமை, ஆடலொடு இவற்றின்
இசைந்த பாடல் இசையுடன் படுத்து,
வரிக்கும் ஆடற்கும் உரிப்பொருள் இயக்கி,
தேசிகத் திருவின் ஓசை கடைப்பிடித்து,
தேசிகத் திருவின் ஓசை எல்லாம்
ஆசு இன்று உணர்ந்த அறிவினன் ஆகி,
கவியது குறிப்பும், ஆடல் தொகுதியும்,
பகுதிப் பாடலும் கொளுத்தும்காலை—
வசை அறு கேள்வி வகுத்தனன் விரிக்கும்
அசையா மரபின் இசையோன்-தானும்—

முத்தமிழ்ப் புலவன்

இமிழ் கடல் வரைப்பில் தமிழகம் அறியத்
தமிழ் முழுது அறிந்த தன்மையன் ஆகி,
வேத்து இயல், பொது இயல், என்று இரு திறத்தின்
நாட்டிய நல் நூல் நன்கு கடைப்பிடித்து,
இசையோன் வக்கிரித்திட்டத்தை உணர்ந்து, ஆங்கு,
அசையா மரபின் அது பட வைத்து,
மாற்றோர் செய்த வசை மொழி அறிந்து,
நாத் தொலைவு இல்லா நல் நூல் புலவனும்—

தண்ணுமை ஆசிரியன்

ஆடல், பாடல், இசையே, தமிழே,
பண்ணே, பாணி, தூக்கே, முடமே,
தேசிகம் என்று இவை ஆசின் உணர்ந்து,
கூடை நிலத்தைக் குறைவு இன்று மிகுத்து, ஆங்கு,
வார நிலத்தை வாங்குபு வாங்கி,
வாங்கிய வாரத்து, யாழும், குழலும்,
ஏங்கிய மிடறும் இசைவன கேட்ப,
கூர் உகிர்க் கரணம் குறி அறிந்து சேர்த்தி,
ஆக்கலும் அடக்கலும் மீத்திறம் படாமை,
சித்திரக் கரணம் சிதைவு இன்று செலுத்தும்
அத்தகு தண்ணுமை அரும் தொழில் முதல்வனும்—

குழலோன்

சொல்லிய இயல்பினில் சித்திர வஞ்சனை
புல்லிய அறிந்து புணர்ப்போன் பண்பின்
வர்த்தனை நான்கும் மயல் அறப் பெய்து, ஆங்கு,
ஏற்றிய குரல், இளி என்று இரு நரம்பின்
ஒப்பக் கேட்கும் உணர்வினன் ஆகி,
பண் அமை முழவின் கண் எறி அறிந்து,
தண்ணுமை முதல்வன்-தன்னொடும் பொருந்தி,
வண்ணப் பட்டடை யாழ்மேல் வைத்து-ஆங்கு,
இசையோன் பாடிய இசையின் இயற்கை
வந்தது வளர்த்து, வருவது ஒற்றி,
இன்புற இயக்கி, இசைபட வைத்து,
வார நிலத்தைக் கேடு இன்று வளர்த்து, ஆங்கு
ஈர நிலத்தின் எழுத்து எழுத்து ஆக,
வழு இன்று இசைக்கும் குழலோன்-தானும்—

யாழ்ப் புலவன்

ஈர்-ஏழ் தொடுத்த செம் முறைக் கேள்வியின்
ஓர் ஏழ் பாலை நிறுத்தல் வேண்டி,
வன்மையின் கிடந்த தார பாகமும்,
மென்மையின் கிடந்த குரலின் பாகமும்,
மெய்க் கிளை நரம்பில் கைக்கிளை கொள்ள,
கைக்கிளை ஒழிந்த பாகமும், பொற்பு உடைத்
தளராத் தாரம் விளரிக்கு ஈத்து,
கிளைவழிப் பட்டனள்; ஆங்கே, கிளையும்
தன் கிளை அழிவு கண்டு அவள்வயின் சேர,
ஏனை மகளிரும் கிளைவழிச் சேர,
மேலது உழையுளி, கீழது கைக்கிளை
வம்பு உறு மரபின் செம்பாலை ஆயது:
இறுதி ஆதி ஆக, ஆங்கு அவை
பெறு முறை வந்த பெற்றியின் நீங்காது,
படுமலை, செவ்வழி, புகர் அரும்பாலை என,
குரல் குரலாகத் தற்கிழமை திரிந்த பின்,
முன்னதன் வகையே முறைமையின் திரிந்து-ஆங்கு,
இளி முதலாகிய எதிர்படு கிழமையும்,
கோடி, விளரி, மேற்செம்பாலை என
நீடிக் கிடந்த கேள்விக் கிடக்கையின்,
இணை நரம்பு உடையன அணைவுறக் கொண்டு-ஆங்கு,
யாழ் மேற்பாலை இட முறை மெலிய,
குழல்மேல் கோடி வல முறை மெலிய,

வலிவும், மெலிவும், சமனும், எல்லாம்
பொலியக் கோத்த புலமையோனுடன்—

நாட்டிய அரங்கின் அமைப்பு

எண்ணிய நூலோர் இயல்பினின் வழாஅது,
மண்ணகம் ஒருவழி வகுத்தனர் கொண்டு,
புண்ணிய நெடு வரைப் போகிய நெடுங் கழைக்
கண்ணிடை ஒரு சாண் வளர்ந்தது கொண்டு,
நூல் நெறி மரபின் அரங்கம் அளக்கும்
கோல் அளவு இருபத்து நால் விரல் ஆக,
எழு கோல் அகலத்து, எண் கோல் நீளத்து,
ஒரு கோல் உயரத்து, உறுப்பினது ஆகி,
உத்தரப் பலகையோடு அரங்கின் பலகை.
வைத்த இடை நிலம் நால் கோல் ஆக,
ஏற்ற வாயில் இரண்டுடன் பொலிய,
தோற்றிய அரங்கில்—தொழுதனர் ஏத்த,
பூதரை எழுதி, மேல் நிலை வைத்து;
தூண் நிழல் புறப்பட, மாண் விளக்கு எடுத்து; ஆங்கு,
ஒரு முக எழினியும், பொரு முக எழினியும்,
கரந்து வரல் எழினியும், புரிந்துடன் வகுத்து-ஆங்கு;
ஓவிய விதானத்து, உரை பெறு நித்திலத்து
மாலைத் தாமம் வலையுடன் நாற்றி;
விருந்துபடக் கிடந்த அரும் தொழில் அரங்கத்து—

தலைக்கோல் அமைதி

பேர் இசை மன்னர் பெயர்புறத்து எடுத்த
சீர் இயல் வெண்குடைக் காம்பு நனி கொண்டு,
கண் இடை நவ மணி ஒழுக்கி, மண்ணிய
நாவல் அம் பொலம் தகட்டு இடை நிலம் போக்கி,
காவல் வெண்குடை மன்னவன் கோயில்
இந்திர சிறுவன் சயந்தன் ஆக என
வந்தனை செய்து, வழிபடு தலைக்கோல்
புண்ணிய நல் நீர் பொன்குடத்து ஏந்தி
மண்ணிய பின்னர், மாலை அணிந்து,
நலம் தரு நாளால், பொலம் பூண் ஓடை
அரசு உவாத் தடக் கையில் பரசினர் கொண்டு,
முரசு எழுந்து இயம்ப, பல் இயம் ஆர்ப்ப,
அரைசொடு பட்ட ஐம் பெருங்குழுவும்
தேர் வலம் செய்து, கவி கைக் கொடுப்ப,
ஊர் வலம் செய்து புகுந்து, முன் வைத்து-ஆங்கு—

மாதவியின் நாட்டியம்

மங்கலப் பாடல்

இயல்பினின் வழாஅ இருக்கை முறைமையின்,
குயிலுவ மாக்கள் நெறிப்பட நிற்ப,
வலக் கால் முன் மிதித்து ஏறி, அரங்கத்து,
வலத் தூண் சேர்தல் வழக்கு எனப் பொருந்தி,
இந் நெறி வகையால் இடத் தூண் சேர்ந்த
தொல் நெறி இயற்கைத் தோரிய மகளிரும்,
சீர் இயல் பொலிய, நீர் அல நீங்க,
வாரம் இரண்டும் வரிசையின் பாட,
பாடிய வாரத்து ஈற்றில் நின்று இசைக்கும்—
கூடிய குயிலுவக் கருவிகள் எல்லாம்.

இசைக் கருவிகள் ஒலித்த முறை

குழல் வழி நின்றது யாழே; யாழ் வழித்
தண்ணுமை நின்றது தகவே; தண்ணுமைப்
பின் வழி நின்றது முழவே; முழவொடு
கூடி நின்று இசைத்தது ஆமந்திரிகை.

அந்தரக் கொட்டு

ஆமந்திரிகையோடு அந்தரம் இன்றி,
கொட்டு இரண்டு உடையது ஓர் மண்டிலம் ஆகக்
கட்டிய மண்டிலம் பதினொன்று போக்கி,
வந்த முறையின் வழிமுறை வழாமல்,
அந்தரக் கொட்டுடன் அடங்கிய பின்னர்,

தேசிக் கூத்து

மீத்திறம் படாமை வக்காணம் வகுத்து,
பாற்பட நின்ற பாலைப்பண் மேல்
நான்கின் ஒரீஇய நன்கனம் அறிந்து,
மூன்று அளந்து, ஒன்று கொட்டி, அதனை
ஐது மண்டிலத்தால் கூடை போக்கி,
வந்த வாரம் வழி மயங்கிய பின்றை,

மார்க்கக் கூத்து

ஆறும் நாலும் அம்முறை போக்கி,
கூறிய ஐந்தின் கொள்கை போல,
பின்னையும், அம்முறை பேரிய பின்றை,
பொன் இயல் பூங்கொடி புரிந்துடன் வகுத்தென,
நாட்டிய நல் நூல் நன்கு கடைப்பிடித்துக்
காட்டினள் ஆதலின்,

மாதவி மன்னனிடம் பெற்ற பரிசு

காவல் வேந்தன்

இலைப் பூங் கோதை, இயல்பினின் வழாமை,
தலைக்கோல் எய்தி, தலை அரங்கு ஏறி,
விதி முறைக் கொள்கையின் ஆயிரத்து எண் கழஞ்சு
ஒரு முறையாகப் பெற்றனள்—

மாதவியின் மாலையைப் பெற்று, கோவலன் அவளுடன் இருத்தல்

'அதுவே
நூறு பத்து அடுக்கி எட்டுக் கடை நிறுத்த,
வீறு உயர் பசும் பொன் பெறுவது; இம் மாலை,
மாலை வாங்குநர் சாலும் நம் கொடிக்கு' என,
மான் அமர் நோக்கி ஓர் கூனி கைக் கொடுத்து,
நகர நம்பியர் திரிதரு மறுகில்,
பகர்வனர் போல்வதோர் பான்மையின் நிறுத்த—
மா மலர் நெடுங் கண் மாதவி மாலை
கோவலன் வாங்கி, கூனி-தன்னொடு
மணமனை புக்கு, மாதவி-தன்னொடு
அணைவுறு வைகலின் அயர்ந்தனன் மயங்கி,
விடுதல்-அறியா விருப்பினன் ஆயினன்—
வடு நீங்கு சிறப்பின் தன் மனை, அகம் மறந்து-என்.

வெண்பா

எண்ணும், எழுத்தும், இயல் ஐந்தும், பண் நான்கும்,
பண் நின்ற கூத்துப் பதினொன்றும், மண்ணின்மேல்
போக்கினாள்—பூம் புகார்ப் பொன் தொடி மாதவி, தன்
வாக்கினால் ஆடு அரங்கின் வந்து.

4. அந்திமாலைச் சிறப்புச் செய் காதை

மாலைப் பொழுதின் வரவு

'விரி கதிர் பரப்பி, உலகம் முழுது ஆண்ட
ஒரு தனித் திகிரி உரவோன் காணேன்;
அம் கண் வானத்து, அணி நிலா விரிக்கும்
திங்கள் அம் செல்வன் யாண்டு உளன்கொல்?' என,
திசை முகம் பசந்து, செம் மலர்க் கண்கள்
முழு நீர் வார, முழு மெயும் பனித்து,
திரை நீர் ஆடை இரு நில மடந்தை
அரைசு கெடுத்து, அலம்வரும் அல்லல்காலை—

கறை கெழு குடிகள் கை தலை வைப்ப,
அறைபோகு குடிகளொடு ஒரு திறம் பற்றி,
வலம்படு தானை மன்னர் இல்வழி,
புலம்பட இறுத்த விருந்தின் மன்னரின்,
தாழ் துணை துறந்தோர் தனித் துயர் எய்த;
காதலர்ப் புணர்ந்தோர் களி மகிழ்வு எய்த;
குழல் வளர் முல்லையில் கோவலர்-தம்மொடு
மழலைத் தும்பி வாய் வைத்து ஊத;
அறுகால் குறும்பு எறிந்து, அரும்பு பொதி வாசம்
சிறுகால் செல்வன் மறுகில் தூற்ற;
எல் வளை மகளிர் மணி விளக்கு எடுப்ப,
மல்லல் மூதூர் மாலை வந்து இறுத்தென——

நிலா-முற்றத்தில் கோவலனும் மாதவியும் களித்திருத்தல்

இளையர் ஆயினும் பகை அரசு கடியும்,
செரு மாண் தென்னர் குலமுதல் ஆகலின்,
அந்தி வானத்து, வெண் பிறை தோன்றி,
புன்கண் மாலைக் குறும்பு எறிந்து ஓட்டி,
பான்மையின் திரியாது பால் கதிர் பரப்பி,
மீன்-அரசு ஆண்ட வெள்ளி விளக்கத்து——
இல் வளர் முல்லையொடு மல்லிகை அவிழ்ந்த
பல் பூஞ் சேக்கைப் பள்ளியுள் பொலிந்து,
செந் துகிர்க் கோவை சென்று ஏந்து அல்குல்
அம் துகில் மேகலை அசைந்தன வருந்த,
நிலவுப் பயன் கொள்ளும் நெடு நிலா-முற்றத்து——
கலவியும் புலவியும் காதலற்கு அளித்து, ஆங்கு,
ஆர்வ நெஞ்சமொடு கோவலற்கு எதிரி,
கோலம் கொண்ட மாதவி அன்றியும்——

காதலரைக் கூடிய மகளிரின் களி மகிழ்வு

குட திசை மருங்கின் வெள் அயிர்-தன்னொடும்
குண திசை மருங்கின் கார் அகில் துறந்து;
வடமலைப் பிறந்த வான் கேழ் வட்டத்து,
தென்மலைப் பிறந்த சந்தனம் மறுக;
தாமரைக் கொழு முறி, தாதுபடு செழு மலர்,
காமரு குவளை, கழுநீர் மா மலர்,
பைந் தளிர்ப் படலை; பரூஉக் காழ் ஆரம்;
சுந்தரச் சுண்ணத் துகளொடும் அளைஇச்
சிந்துபு பரிந்த செழும் பூஞ் சேக்கை,
மந்த-மாருதத்து மயங்கினர் மலிந்து, ஆங்கு,

ஆவியங் கொழுநர் அகலத்து ஒடுங்கி,
காவி அம் கண்ணூர் களித் துயில் எய்த—

கணவனைப் பிரிந்து வாழும் கண்ணகியின் துயர நிலை

அம் செஞ் சீறடி அணி சிலம்பு ஒழிய,
மென் துகில் அல்குல் மேகலை நீங்க,
கொங்கை முன்றில் குங்குமம் எழுதாள்,
மங்கல அணியின் பிறிது அணி மகிழாள்,
கொடுங் குழை துறந்து வடிந்து வீழ் காதினள்,
திங்கள் வாள் முகம் சிறு வியர்ப் பிரிய,
செங் கயல் நெடுங் கண் அஞ்சனம் மறப்ப,
பவள வாள் நுதல் திலகம் இழப்ப,
தவள வாள் நகை கோவலன் இழப்ப,
மை இருங் கூந்தல் நெய் அணி மறப்ப,
கையறு நெஞ்சத்துக் கண்ணகி அன்றியும்—

காதலரைப் பிரிந்த மாதர்களுடைய நிலை

காதலர்ப் பிரிந்த மாதர் நோதக,
ஊது உலைக் குருகின் உயிர்த்தனர் ஒடுங்கி,
வேனில்-பள்ளி மேவாது கழிந்து,
கூதிர்ப் பள்ளிக் குறுங்கண் அடைத்து,
மலயத்து ஆரமும் மணி முத்து ஆரமும்
அலர் முலை ஆகத்து அடையாது வருந்த,
தாழிக் குவளையொடு தண் செங்கழுநீர்
வீழ் பூஞ் சேக்கை மேவாது கழிய,
துணை புணர் அன்னத் தூவியின் செறித்த
இணை அணை மேம்படத் திருந்து துயில் பெறுஅது,
உடைப் பெரும் கொழுநரோடு ஊடல் காலத்து
இடைக் குமிழ் எறிந்து, கடைக் குழை ஓட்டி,
கலங்கா உள்ளம் கலங்க, கடை சிவந்து
விலங்கி நிமிர் நெடுங் கண் புலம்பு முத்து உறைப்ப—

வைகறை வரையில் காமன் திரிதல்

அன்னம் மெல் நடை—நல் நீர்ப் பொய்கை—
ஆம்பல் நாறும் தேம் பொதி நறு விரைத்
தாமரைச் செவ் வாய், தண் அறல் கூந்தல்:
பாண் வாய் வண்டு நோதிறம் பாட,
காண்வரு குவளைக் கண்மலர் விழிப்ப;
புள் வாய் முரசமொடு, பொறி மயிர் வாரணத்து
முள் வாய்ச் சங்கம் முறை முறை ஆர்ப்ப;

உரவுநீர்ப் பரப்பின் ஊர் துயில் எடுப்பி,
இரவுத் தலைப்பெயரும் வைகறைகாறும்—
அரை இருள் யாமத்தும் பகலும் துஞ்சார்,
விரை மலர் வாளியொடு கருப்பு வில் ஏந்தி,
மகர வெல் கொடி மைந்தன், திரிதர—
நகரம் காவல் நனி சிறந்தது-என்.

வெண்பா

கூடினுர்பால் நிழல் ஆய், கூடார்பால் வெய்யது ஆய்,
காவலன் வெண்குடை போல் காட்டிற்றே—கூடிய
மாதவிக்கும், கண்ணகிக்கும், வான் ஊர் மதி விரிந்து
போது அவிழ்க்கும் கங்குல்-பொழுது.

5. இந்திரவிழவு ஊர் எடுத்த காதை

ரூரியன் உதித்தல்

அலைநீர் ஆடை, மலை முலை ஆகத்து,
ஆரப் பேரியாற்று, மாரிக் கூந்தல்,
கண் அகன் பரப்பின் மண்ணக மடந்தை
புதை இருள்-படாஅம் போக நீக்கி,
உதைய மால் வரை உச்சித் தோன்றி,
உலகு விளங்கு அவிர் ஒளி மலர் கதிர் பரப்பி—

மருவூர்ப் பாக்கம்

வேயா மாடமும்; வியன் கல இருக்கையும்;
மான் கண் காலதர் மாளிகை இடங்களும்;
கயவாய் மருங்கில் காண்போர்த் தடுக்கும்
பயன் அறவு அறியா யவனர் இருக்கையும்;
கலம் தரு திருவின் புலம் பெயர் மாக்கள்
கலந்து, இருந்து உறையும் இலங்கு நீர் வரைப்பும்;
வண்ணமும், சுண்ணமும், தண் நறுஞ் சாந்தமும்,
பூவும், புகையும், மேவிய விரையும்
பகர்வனர் திரிதரும் நகர வீதியும்;
பட்டினும், மயிரினும், பருத்தி நூலினும்,
கட்டும் நுண்வினைக் காருகர் இருக்கையும்;
தூசும், துகிரும், ஆரமும், அகிலும்,
மாசு அறு முத்தும், மணியும், பொன்னும்,
அருங்கல வெறுக்கையோடு அளந்து கடை அறியா

வளம் தலைமயங்கிய நனந்தலை மறுகும்;
பால் வகை தெரிந்த பகுதிப் பண்டமொடு
கூலம் குவித்த கூல வீதியும்;
காழியர், கூவியர், கள் நொடை ஆட்டியர்,
மீன் விலைப் பரதவர், வெள் உப்புப் பகருநர்,
பாசவர், வாசவர், பல் நிண விலைஞரோடு
ஓசுநர் செறிந்த ஊன் மலி இருக்கையும்;
கஞ்சகாரரும், செம்பு செய்குநரும்,
மரம் கொல் தச்சரும், கருங் கைக் கொல்லரும்,
கண்ணுள் வினைஞரும், மண்ணீட்டு ஆளரும்,
பொன் செய் கொல்லரும், நன்கலம் தருநரும்,
துன்னகாரரும், தோலின் துன்னரும்,
கிழியினும் கிடையினும் தொழில் பல பெருக்கி,
பழுது இல் செய்வினைப் பால் கெழு மாக்களும்;
குழலினும் யாழினும், குரல் முதல் ஏழும்,
வழு இன்றி இசைத்து, வழித் திறம் காட்டும்
அரும் பெறல் மரபின் பெரும்பாண் இருக்கையும்;
சிறுகுறுங் கைவினைப் பிறர்வினையாளரொடு
மறு இன்றி விளங்கும் மருவூர்ப் பாக்கமும்—

பட்டினப் பாக்கம்

கோ வியன் வீதியும்; கொடித் தேர் வீதியும்;
பீடிகைத் தெருவும்; பெருங்குடி வாணிகர்
மாட மறுகும்; மறையோர் இருக்கையும்;
வீழ்குடி, உழவரொடு விளங்கிய கொள்கை
ஆயுள் வேதரும், காலக் கணிதரும்,
பால் வகை தெரிந்த பல் முறை இருக்கையும்;
திரு மணி குயிற்றுநர், சிறந்த கொள்கையொடு
அணி வளை போழுநர் அகன் பெரு வீதியும்;
சூதர், மாகதர், வேதாளிகரொடு
நாழிகைக் கணக்கர், நலம் பெறு கண்ணுளர்,
காவல் கணிகையர், ஆடல் கூத்தியர்,
பூ விலை மடந்தையர், ஏவல் சிலதியர்,
பயில் தொழில் குயிலுவர், பல் முறைக் கருவியர்,
நகை-வேழம்பரொடு வகை தெரி இருக்கையும்;
கடும் பரி கடவுநர், களிற்றின் பாகர்,
நெடுந் தேர் ஊருநர், கடுங் கண் மறவர்,
இருந்து புறம் சுற்றிய பெரும் பாய் இருக்கையும்;
பீடு கெழு சிறப்பின் பெரியோர் மல்கிய
பாடல் சால் சிறப்பின் பட்டினப் பாக்கமும்—

நாள்-அங்காடிப் பூதத்தை மறக் குடி மகளிர் வழிபடுதல்

இரு பெரு வேந்தர் முனையிடம் போல
இரு பால் பகுதியின் இடை நிலம் ஆகிய
கடை கால் யாத்த மிடை மரச் சோலை,
கொடுப்போர் ஓதையும், கொள்வோர் ஓதையும்,
நடுக்கு இன்றி நிலைஇய நாள்-அங்காடியில்—
சித்திரைச் சித்திரைத் திங்கள் சேர்ந்தென,
'வெற்றி வேல் மன்னற்கு உற்றதை ஒழிக்க' என,
தேவர் கோமான் ஏவலின் போந்த
காவல் பூதத்துக் கடை கெழு பீடிகை—
புழுக்கலும், நோலையும், விழுக்கு உடை மடையும்,
பூவும், புகையும், பொங்கலும், சொரிந்து;
துணங்கையர், குரவையர், அணங்கு எழுந்து ஆடி;
'பெரு நில மன்னன் இரு நிலம் அடங்கலும்
பசியும், பிணியும், பகையும், நீங்கி;
வசியும், வளனும், சுரக்க' என வாழ்த்தி;
மாதர்க் கோலத்து, வலவையின் உரைக்கும்,
மூதில் பெண்டிர் ஓதையின் பெயர—

பூதத்திற்கு வீரர்கள் உயிர்ப் பலி கொடுத்தல்

மருவூர் மருங்கின் மறம் கொள் வீரரும்,
பட்டின மருங்கின் படை கெழு மாக்களும்,
முந்தச் சென்று, முழுப் பலி-பீடிகை,
''வெந் திறல் மன்னற்கு உற்றதை ஒழிக்க'' எனப்
பலிக் கொடை புரிந்தோர் வலிக்கு வரம்பு ஆக' என—
கல் உமிழ் கவணினர், கழிப் பிணிக் கறைத் தோல்,
பல் வேல் பரப்பினர் மெய் உறத் தீண்டி,
ஆர்த்து, களம் கொண்டோர் ஆர் அமர் அழுவத்து,
சூர்த்து, கடை சிவந்த சுடு நோக்குக் கருந் தலை,
'வெற்றி வேந்தன் கொற்றம் கொள்க' என,
நல் பலி-பீடிகை நலம் கொள வைத்து, ஆங்கு,
உயிர்ப் பலி உண்ணும் உருமுக் குரல் முழக்கத்து
மயிர்க் கண் முரசொடு வான் பலி ஊட்டி—

மண்டபத்தில் பலி இடல்

இரு நில மருங்கின் பொருநரைப் பெருஅ,
செரு வெங் காதலின், திருமாவளவன்
வாளும், குடையும், மயிர்க் கண் முரசும்,
நாளொடு பெயர்த்து, 'நண்ணூர்ப் பெறுக—இம்
மண்ணக மருங்கின், என் வலி கெழு தோள்' என,

புண்ணிய திசைமுகம் போகிய அந் நாள்—
'அசைவு இல் ஊக்கத்து நசை பிறக்கு ஒழிய,
பகை விலக்கியது இப் பயம் கெழு மலை' என,
இமையவர் உறையும் சிமையப் பிடர்த்தலை,
கொடுவரி ஒற்றி, கொள்கையின் பெயர்வோற்கு,
மா நீர் வேலி வச்சிர நல் நாட்டுக்
கோன் இறை கொடுத்த கொற்றப் பந்தரும்,
மகத நல் நாட்டு வாள் வாய் வேந்தன்
பகைபுறத்துக் கொடுத்த பட்டி மண்டபமும்,
அவந்தி வேந்தன் உவந்தனன் கொடுத்த
நிவந்து ஓங்கு மரபின் தோரண வாயிலும்,
பொன்னினும் மணியினும் புனைந்தன ஆயினும்,
நுண்வினைக் கம்மியர் காணு மரபின;
துயர் நீங்கு சிறப்பின் அவர் தொல்லோர் உதவிக்கு
மயன் விதித்துக் கொடுத்த மரபின: இவை-தாம்
ஒருங்குடன் புணர்ந்து, ஆங்கு, உயர்ந்தோர் ஏத்தும்
அரும் பெறல் மரபின் மண்டபம்—

ஐவகை மன்றங்களில் அரும் பலி இடுதல்

அன்றியும்,
வம்ப மாக்கள் தம் பெயர் பொறித்த
கண்ணெழுத்துப் படுத்த எண்ணுப் பல் பொதிக்
கடைமுக வாயிலும், கருந் தாழ்க் காவலும்,
உடையோர் காவலும் ஓரீஇய ஆகி,
கட்போர் உளர் எனின், கடுப்பத் தலை ஏற்றி,
கொட்பின் அல்லது கொடுத்தலீயாது,
உள்ளுநர்ப் பனிக்கும் வெள் இடை மன்றமும்—
கூனும், குறளும், ஊமும், செவிடும்,
அழுகு மெய்யாளரும் முழுகினர் ஆடி,
பழுது இல் காட்சி நல் நிறம் பெற்று,
வலம் செயாக் கழியும் இலஞ்சி மன்றமும்—
வஞ்சம் உண்டு மயல்-பகை உற்றோர்,
நஞ்சம் உண்டு நடுங்கு துயர் உற்றோர்,
அழல் வாய் நாகத்து ஆர் எயிறு அழுந்தினர்,
கழல் கண் கூளிக் கடு நவைப் பட்டோர்,
சுழல வந்து, தொழ, துயர் நீங்கும்,
நிழல் கால் நெடுங் கல் நின்ற மன்றமும்—
'தவம் மறைந்து ஒழுகும் தன்மை இலாளர்,
அவம் மறைந்து ஒழுகும் அலவல் பெண்டிர்,
அறைபோகு அமைச்சர், பிறர் மனை நயப்போர்,
பொய்க் கரியாளர், புறங்கூற்றாளர், என்

கைக் கொள் பாசத்துக்கைப் படுவோர்' என,
காதம் நான்கும் கடுங் குரல் எடுப்பி,
பூதம் புடைத்து உணும் பூத-சதுக்கமும்—
அரைசு கோல் கோடினும், அறம் கூறு அவையத்து,
உரை நூல் கோடி ஒரு திறம் பற்றினும்,
நாவொடு நவிலாது, நவை நீர் உகுத்து,
பாவை நின்று அழூஉம் பாவை மன்றமும்—
மெய் வகை உணர்ந்த விழுமியோர் ஏத்தும்
ஐ-வகை மன்றத்தும் அரும் பலி உறீஇ—

விழாவின் தொடக்கமும் முடிவும் முரசு அறைந்து அறிவித்தல்

வச்சிரக் கோட்டத்து மணம் கெழு முரசம்
கச்சை யானைப் பிடர்த்தலை ஏற்றி,
வால் வெண் களிற்று-அரசு வயங்கிய கோட்டத்து,
கால்கோள், விழவின், கடைநிலை, சாற்றி—

கொடி ஏற்றம்

தங்கிய கொள்கைத் தரு நிலைக் கோட்டத்து,
மங்கல நெடுங் கொடி வான் உற எடுத்து—

வீதியின் மங்கலத் தோற்றம்

மரகதமணியொடு வயிரம் குயிற்றி,
பவளத் திரள் கால், பைம் பொன் வேதிகை,
நெடு நிலை மாளிகைக் கடைமுகத்து யாங்கணும்,
கிம்புரி, பகு வாய்க் கிளர் முத்து ஒழுக்கத்து,
மங்கலம் பொறித்த மகர வாசிகைத்
தோரணம் நிலைஇய, தோம் அறு பசும் பொன்
பூரண கும்பத்து, பொலிந்த பாலிகை,
பாவை விளக்கு, பசும் பொன் படாகை,
தூ மயிர்க் கவரி, சுந்தரச் சுண்ணத்து,
மேவிய கொள்கை வீதியில் செறிந்து-ஆங்கு—

இந்திரனை நீராட்டுதல்

ஐம் பெருங்குழுவும், எண் பேர் ஆயமும்,
அரச குமரரும், பரத குமரரும்;
கவர் பரிப் புரவியர், களிற்றின் தொகுதியர்,
இவர் பரித் தேரினர், இயைந்து ஒருங்கு ஈண்டி;
அரைசு மேம்படூஇய, அகநிலை மருங்கில்,
'உரைசால் மன்னன் கொற்றம் கொள்க' என,
மா இரு ஞாலத்து மன் உயிர் காக்கும்

ஆயிரத்து ஓர் எட்டு அரசு தலைக்கொண்ட
தண் நறுங் காவிரி, தாது மலி பெரும் துறை,
புண்ணிய நல் நீர் பொன்குடத்து ஏந்தி,
மண்ணகம் மருள, வானகம் வியப்ப,
விண்ணவர் தலைவனை விழு நீர் ஆட்டி—

கோயில்களில் வேள்வி

பிறவா யாக்கைப் பெரியோன் கோயிலும்,
அறு முகச் செவ்வேள் அணி திகழ் கோயிலும்,
வால் வளை மேனி வாலியோன் கோயிலும்,
நீல மேனி நெடியோன் கோயிலும்,
மாலை வெண்குடை மன்னவன் கோயிலும்,
மா முது முதல்வன் வாய்மையின் வழாஅ
நான்மறை மரபின் தீமுறை ஒருபால்—

கடவுளர் திருவிழா

நால் வகைத் தேவரும், மூ-அறு கணங்களும்,
பால் வகை தெரிந்த பகுதித் தோற்றத்து
வேறு வேறு கடவுளர் சாறு சிறந்து ஒருபால்—

அறவுரை பகர்தல்

அறவோர் பள்ளியும், அறன் ஓம்படையும்,
புறநிலைக் கோட்டத்துப் புண்ணியத் தானமும்,
திறவோர் உரைக்கும் செயல் சிறந்து ஒருபால்—

சிறைவீடு செய்தல்

கொடித் தேர் வேந்தனொடு கூடா மன்னர்
அடித் தளை நீக்க அருள் சிறந்து ஒருபால்—

இசை முழக்கம்

கண்ணுளாளர், கருவிக் குயிலுவர்,
பண் யாழ்ப் புலவர், பாடல் பாணரொடு,
எண்-அரும் சிறப்பின் இசை சிறந்து ஒருபால்—

விழா மகிழ்ச்சி

முழவுக் கண் துயிலாது, முடுக்கரும், வீதியும்,
விழவுக் களி சிறந்த வியலுள் ஆங்கண்—

இளவேனிலும் மலயத் தென்றலும் உலவும் வீதி

காதல் கொழுநனை பிரிந்து அலர் எய்தா
மாதர்க் கொடுங் கூழை மாதவி-தன்னொடு

இல் வளர் முல்லை, மல்லிகை, மயிலை,
தாழிக் குவளை, சூழ் செங்கழுநீர்,
பயில் பூங் கோதைப் பிணையலின் பொலிந்து,
காமக் களி மகிழ்வு எய்தி, காமர்
பூம் பொதி நறு விரைப் பொழில் ஆட்டு அமர்ந்து,
நாள் மகிழ் இருக்கை நாள்-அங்காடியில்
பூ மலி கானத்துப் புது மணம் புக்கு,
புகையும் சாந்தும் புலராது சிறந்து,
நகை ஆடு ஆயத்து நல் மொழி தூஉத்து,
குரல் வாய்ப் பாணரொடு, நகரப் பரத்தரொடு,
திரிதரு மரபின் கோவலன் போல,
இளி வாய் வண்டிணெடு, இன் இளவேனிலொடு,
மலய மாருதம் திரிதரு மறுகில்—

வீதியில் உலவும் பரத்தையரை ஆடவர் புகழ்தல்

கரு முகில் சுமந்து, குறு முயல் ஒழித்து-ஆங்கு,
இரு கருங் கயலோடு இடைக் குமிழ் எழுதி,
அம் கண் வானத்து அரவுப் பகை அஞ்சி,
திங்களும் ஈண்டுத் திரிதலும் உண்டுகொல்!—
நீர் வாய் திங்கள் நீள் நிலத்து அமுதின்
சீர் வாய் துவலைத் திரு நீர் மாந்தி,
மீன் ஏற்றுக் கொடியோன், மெய் பெற, வளர்த்த,
வான-வல்லி வருதலும் உண்டுகொல்!—
'இரு நில மன்னற்குப் பெரு வளம் காட்ட,
திருமகள் புகுந்தது இச் செழும் பதி ஆம்' என,
எரி நிறத்து இலவமும், முல்லையும், அன்றியும்
கரு நெடுங் குவளையும், குமிழும், பூத்து, ஆங்கு,
உள்வரிக் கோலத்து உறு துணை தேடி,
கள்ளக் கமலம் திரிதலும் உண்டுகொல்!—
மன்னவன் செங்கோல் மறுத்தல் அஞ்சி,
பல் உயிர் பருகும் பகு வாய்க் கூற்றம்
ஆண்மையில் திரிந்து, தன் அரும் தொழில் திரியாது,
நாண் உடைக் கோலத்து நகை முகம் கோட்டி,
பண் மொழி நரம்பின் திவவு யாழ் மிழற்றி,
பெண்மையில் திரியும் பெற்றியும் உண்டு!—என,
உருவிலாளன் ஒரு பெரும் சேணை
இகல் அமர் ஆட்டி, எதிர் நின்று விலக்கி, அவர்
எழுது வரிக் கோலம் முழு மெயும் உறீஇ,
விருந்தொடு புக்க பெரும் தோள் கணவரொடு—

மீன புகுந்த ஆடவர் தம் மனைவியரின்
ஊடலைத் தீர்க்க அறியாது நடுங்குதல்

உடன் உறைவு மரீஇ, ஒழுக்கொடு புணர்ந்த,
வடமீன் கற்பின், மனை உறை மகளிர்;
'மாதர் வாள் முகத்து, மணித் தோட்டுக் குவளைப்
போது புறங்கொடுத்துப் போகிய செங் கடை
விருந்தின் தீர்ந்திலது ஆயின், யாவதும்
மருந்தும் தருங்கொல், இம் மா நில வரைப்பு?' என,
கையற்று நடுங்கும் நல் வினை நடு நாள்—

கண்ணகிக்கும் மாதவிக்கும் கண் துடித்தல்

உள்ளக நறுந் தாது உறைப்ப, மீது அழிந்து,
கள் உக நடுங்கும் கழுநீர் போல;
கண்ணகி கருங் கணும், மாதவி செங் கணும்,
உள் நிறை கரந்து, அகத்து ஒளித்து, நீர் உகுத்தன;
எண்ணு முறை, இடத்தினும் வலத்தினும் துடித்தன—
விண்ணவர் கோமான் விழவு நாள் அகத்து-என்.

6. கடல் ஆடு காதை

விஞ்சை வீரன் காமக் கடவுளுக்கு விழா எடுத்தல்

வெள்ளி மால் வரை, வியன் பெரும் சேடி,
கள் அவிழ் பூம் பொழில் காமக் கடவுட்கு,
கருங் கயல் நெடுங் கண் காதலி-தன்னொடு
விருந்தாட்டு அயரும் ஓர் விஞ்சை வீரன்—

இந்திர விழாவைப் பற்றியும், புகார்க் காட்சிகளைப் பற்றியும்,
விஞ்சை வீரன் தன் காதலிக்கு உரைத்தல்

'தென் திசை மருங்கின் ஓர் செழும் பதி-தன்னுள்
இந்திர விழவு கொண்டு எடுக்கும் நாள் இது' என—
'கடு விசை அவுணர் கணம் கொண்டு ஈண்டி,
கொடுவரி ஊக்கத்துக் கோ-நகர் காத்த
தொடு கழல் மன்னற்குத் தொலைந்தனர் ஆகி,
நெஞ்சு இருள் கூர நிகர்த்து மேல்விட்ட
வஞ்சம் பெயர்த்த மா பெரும் பூதம்
திருந்து வேல் அண்ணற்குத் தேவன் ஏவ
இருந்து, பலி உண்ணும் இடனும் காண்கும்:
அமராபதி காத்து, அமரனின் பெற்று,
தமரின் தந்து, தகைசால் சிறப்பின்

பொய் வகை இன்றிப் பூமியில் புணர்த்த
ஐ-வகை மன்றத்து அமைதியும் காண்குதும்:
நாரதன் வீணை நயம் தெரி பாடலும்,
தோரிய மடந்தை வாரம் பாடலும்,
ஆயிரம்கண்ணோன் செவிஅகம் நிறைய
நாடகம் உருப்பசி நல்காள் ஆகி,
மங்கலம் இழப்ப வீணை, ''மண்மிசைத்
தங்குக இவள்'' எனச் சாபம் பெற்ற
மங்கை மாதவி வழிமுதல் தோன்றிய,
அங்கு, அரவு-அல்குல் ஆடலும் காண்குதும்:
துவர் இதழ்ச் செவ் வாய்த் துடி இடையோயே!
அமரர் தலைவனை வணங்குதும் யாம்' என——

விஞ்சை வீரன் காதலியுடன் புகார் வந்து விழாக் காண்டல்

சிமையத்து இமையமும், செழு நீர்க் கங்கையும்,
உஞ்சை அம் பதியும், விஞ்சத்து அடவியும்,
வேங்கட மலையும், தாங்கா வினையுள்
காவிரி நாடும், காட்டி; பின்னர்,
பூ விரி படப்பைப் புகார் மருங்கு எய்தி,
சொல்லிய முறைமையின் தொழுதனன் காட்டி;
மல்லல் மூதூர் மகிழ் விழாக் காண்போன்,

மாதவி ஆடிய பதினேர் ஆடலைக் காதலிக்குக் காட்டி,
விஞ்சை வீரன் மகிழ்தல்

'மாயோன் பாணியும், வருணப் பூதர்
நால் வகைப் பாணியும், நலம் பெறு கொள்கை
வான் ஊர் மதியமும் பாடி, பின்னர்——
சீர் இயல் பொலிய, நீர் அல நீங்க——
பாரதி ஆடிய பாரதி-அரங்கத்து,
திரிபுரம் எரியத் தேவர் வேண்ட,
எரி முகப் பேர் அம்பு ஏவல் கேட்ப,
உமையவள் ஒரு திறன் ஆக, ஓங்கிய
இமையவன் ஆடிய கொடுகொட்டி ஆடலும்;
தேர் முன் நின்ற திசைமுகன் காண,
பாரதி ஆடிய வியன் பாண்டரங்கமும்;
கஞ்சன் வஞ்சம் கடத்தற்காக
அஞ்சன-வண்ணன் ஆடிய ஆடலுள்,
அல்லியத் தொகுதியும்; அவணன் கடந்த
மல்லின் ஆடலும்; மாக் கடல் நடுவண்,
நீர்த் திரை அரங்கத்து, நிகர்த்து முன் நின்ற

சூர்த் திறம் கடந்தோன் ஆடிய துடியும்;
படை வீழ்த்து அவுணர் பையுள் எய்த,
குடை வீழ்த்து, அவர் முன் ஆடிய குடையும்;
வாணன் பேர் ஊர் மறுகிடை நடந்து,
நீள் நிலம் அளந்தோன் ஆடிய குடமும்;
ஆண்மை திரிந்த பெண்மைக் கோலத்துக்
காமன் ஆடிய பேடி ஆடலும்;
காய் சின அவுணர் கடுந் தொழில் பொருஅள்,
மாயவள் ஆடிய மரக்கால் ஆடலும்;
செரு வெங் கோலம் அவுணர் நீங்க,
திருவின் செய்யோள் ஆடிய பாவையும்;
வயலுழை நின்று, வடக்கு வாயிலுள்,
அயிராணி மடந்தை ஆடிய கடையமும்—
அவரவர் அணியுடன்; அவரவர் கொள்கையின்;
நிலையும், படிதமும், நீங்கா மரபின்;
பதினோர் ஆடலும், பாட்டின் பகுதியும்,
விதி மாண் கொள்கையின் விளங்கக் காணாய்:
தாது அவிழ் பூம் பொழில் இருந்து யான் கூறிய
மாதவி மரபின் மாதவி இவள்' எனக்
காதலிக்கு உரைத்து, கண்டு, மகிழ்வு எய்திய
மேதகு சிறப்பின் விஞ்சையன்—

விழா முடிந்தபின் மாதவி கோலம் புனைந்து, கோவலனுடன் கூடியும் ஊடியும் இருத்தல்

அன்றியும்,
அந்தரத்துள்ளோர், அறியா மரபின்,
வந்து காண்குறூஉம் வானவன் விழவும்,
ஆடலும், கோலமும், அணியும், கடைக்கொள—
ஊடல் கோலமோடு இருந்தோன் உவப்ப;
பத்துத் துவரினும், ஐந்து விரையினும்,
முப்பத்து-இரு வகை ஓமாலிகையினும்,
ஊறின நல் நீர், உரைத்த நெய் வாச,
நாறு இருங் கூந்தல் நலம் பெற ஆட்டி;
புகையின் புலர்த்திய பூ மென் கூந்தலை
வகைதொறும் மான்மதக் கொழுஞ் சேறு ஊட்டி;
அலத்தகம் ஊட்டிய அம் செஞ் சீறடி
நலத்தகு மெல் விரல் நல் அணி செறீஇ;
பரியகம், நூபுரம், பாடகம், சதங்கை,
அரியகம், காலுக்கு அமைவுற அணிந்து;
குறங்குசெறி திரள் குறங்கினில் செறித்து;

பிறங்கிய முத்தரை முப்பத்து-இரு காழ்
நிறம் கிளர் பூந் துகில் நீர்மையின் உடீஇ;
காமர் கண்டிகை-தன்னொடு பின்னிய
தூ மணித் தோள்வளை தோளுக்கு அணிந்து;
மத்தக மணியொடு வயிரம் கட்டிய
சித்திரச் சூடகம், செம் பொன் கைவளை,
பரியகம், வால் வளை, பவழப் பல் வளை,
அரி மயிர் முன்கைக்கு அமைவுற அணிந்து;
வாளைப் பகு வாய் வணக்கு உறு மோதிரம்,
கேழ் கிளர் செங் கேழ் கிளர் மணி மோதிரம்,
வாங்கு வில் வயிரத்து மரகதத் தாள்செறி,
காந்தள் மெல் விரல் கரப்ப அணிந்து;
சங்கிலி, நுண்-தொடர், பூண் ஞாண், புனைவினை,
அம் கழுத்து அகவயின் ஆரமோடு அணிந்து;
கயிற்கடை ஒழுகிய காமர் தூ மணி
செயத்தகு கோவையின் சிறுபுறம் மறைத்து-ஆங்கு;
இந்திர-நீலத்து இடைஇடை திரண்ட
சந்திர பாணித் தகை பெறு கடிப்பு இணை
அம் காது அகவயின் அழகுற அணிந்து;
தெய்வ உத்தியொடு, செழு நீர் வலம்புரி,
தொய்யகம், புல்லகம் தொடர்ந்த தலைக்கு-அணி,
மை ஈர் ஓதிக்கு மாண்புற அணிந்து;
கூடலும் ஊடலும் கோவலற்கு அளித்து,
பாடு அமை சேக்கைப் பள்ளியுள் இருந்தோள்—

கடற்கரைப் பயணம்

உரு கெழு மூதூர் உவவுத் தலைவந்தென,
பெருநீர் போகும் இரியல் மாக்களொடு
மடல் அவிழ் கானல் கடல்-விளையாட்டுக்
காண்டல் விருப்பொடு வேண்டினள் ஆகி—
பொய்கைத் தாமரைப் புள் வாய் புலம்ப,
வைகறை யாமம் வாணம் காட்ட,
வெள்ளி விளக்கம் நள் இருள் கடிய;
தார் அணி மார்பனொடு பேர் அணி அணிந்து,
வான வண் கையன் அத்திரி ஏற,
மான் அமர் நோக்கியும் வையம் ஏறி—
கோடி பல அடுக்கிய கொழு நிதிக் குப்பை
மாடம் மலி மறுகின், பீடிகைத் தெருவின்,
மலர் அணி விளக்கத்து மணி விளக்கு எடுத்து, ஆங்கு,
அலர், கொடி-அறுகும், நெல்லும், வீசி,

மங்கலத் தாசியர் தம் கலன் ஒலிப்ப,
இருபுடை மருங்கினும் திரிவனர் பெயரும்
திருமகள் இருக்கை செவ்வனம் கழிந்து;
மகர வாரி வளம் தந்து ஓங்கிய
நகர வீதி நடுவண் போகி;
கலம் தரு திருவின் புலம் பெயர் மாக்கள்
வேலை வாலுகத்து, விரி திரைப் பரப்பின்,
கூல மறுகில் கொடி எடுத்து நுவலும்
மாலைச் சேரி மருங்கு சென்று எய்தி—

வைகறையில் கடற்கரைக் காட்சி

வண்ணமும், சாந்தும், மலரும், சுண்ணமும்,
பண்ணியப் பகுதியும் பகர்வோர் விளக்கமும்;
செய்வினைக் கம்மியர் கைவினை விளக்கமும்;
காழியர் மோதகத்து ஊழ் உறு விளக்கமும்;
கூவியர் கார் அகல் கூடக்கால் விளக்கமும்;
நொடை நவில் மகடூஉக் கடை கெழு விளக்கமும்;
இடை இடை, மீன் விலை பகர்வோர் விளக்கமும்;
இலங்கு நீர் வரைப்பின் கலங்கரை-விளக்கமும்;
விலங்கு வலைப் பரதவர் மீன் திமில் விளக்கமும்;
மொழி பெயர் தேத்தோர் ஓழியா விளக்கமும்;
கழி பெரும் பண்டம்காவலர் விளக்கமும்;
எண்ணு வரம்பு அறியா இயைந்து, ஒருங்கு ஈண்டி;
இடிக் கலப்பு அன்ன ஈர் அயிர் மருங்கில்
கடிப்பகை காணும் காட்சி-அது ஆகி;
விரை மலர்த் தாமரை வீங்கு நீர்ப் பரப்பில்
மருத வேலியின் மாண்புறத் தோன்றும்
கைதை வேலி நெய்தல் அம் கானல்—
பொய்தல் ஆயமொடு பூங்கொடி பொருந்தி:

நகர மக்கள் கடற்கரையில் களித்திருக்கும் காட்சி

நிரைநிரை எடுத்த புரை தீர் காட்சிய
மலைப் பல் தாரமும், கடல் பல் தாரமும்,
வளம் தலைமயங்கிய துளங்கு கல-இருக்கை—
அரசு இளங் குமரரும், உரிமைச் சுற்றமும்;
பரத குமரரும், பல் வேறு ஆயமும்;
ஆடு கள மகளிரும்; பாடு கள மகளிரும்;
தோடு கொள் மருங்கில் சூழ்தரல் எழினியும்—
விண் பொரு பெரும் புகழ்க் கரிகால் வளவன்
தண்பதம் கொள்ளும் தலை நாள் போல,

வேறு வேறு கோலத்து, வேறு வேறு கம்பலை,
சாறு அயர் களத்து வீறு பெறத் தோன்றி—
கடற்கரை மெலிக்கும் காவிரிப் பேர் யாற்று
இடம் கெட ஈண்டிய நால் வகை வருணத்து
அடங்காக் கம்பலை உடங்கு இயைந்து ஒலிப்ப—

மாதவி கோவலனுடன் வீற்றிருத்தல்

கடல் புலவு கடிந்த மடல் பூந் தாழைச்
சிறை செய் வேலி அகவயின், ஆங்கு, ஓர்
புன்னை நீழல், புது மணல் பரப்பில்,
ஓவிய எழினி சூழ உடன் போக்கி,
விதானித்துப் படுத்த வெண் கால் அமளி மிசை,
வருந்துபு நின்ற வசந்தமாலை கை,
திருந்து கோல் நல் யாழ் செவ்வனம் வாங்கி,
கோவலன்-தன்னெடும் கொள்கையின் இருந்தனள்—
மா மலர் நெடுங் கண் மாதவி-தான்-என்.

வெண்பா

வேலை மடல் தாழை உட்பொதிந்த வெண் தோட்டு
மாலைத் துயின்ற மணி வண்டு காலைக்
களி நறவம் தாது ஊத, தோன்றிற்றே—காமர்
தெளி நிற வெங் கதிரோன் தேர்.

7. கானல் வரி

வயந்தமாலை கையிலிருந்த நல் யாழை மாதவி தொழுது வாங்கி,
திருத்தி, கோவலனிடம் நீட்ட, அவன் அதை வாங்கி,
கானல் வரி பாடத் தொடங்குதல்

கட்டுரை

சித்திரப் படத்துள் புக்கு, செழுங் கோட்டின் மலர் பூணந்து,
மைத் தடங் கண் மஞ்ஞை மகளிர் கோலம் போல் வனப்பு எய்தி;
பத்தரும், கோடும், ஆணியும், நரம்பும் என்று
இத் திறத்துக் குற்றம் நீங்கிய யாழ் கையில் தொழுது வாங்கி—
பண்ணல், பரிவட்டணை, ஆராய்தல், தைவரல்,
கண்ணிய செலவு, விளையாட்டு, கையூழ்,
நண்ணிய குறும்போக்கு, என்று நாட்டிய
எண் வகையால் இசை எழீஇ;
பண் வகையான் பரிவு தீர்ந்து;

மரகதமணித் தாள் செறிந்த மணிக் காந்தள் மெல் விரல்கள்,
பயிர் வண்டின் கிளை போல, பல் நரம்பின்மிசைப் படர;
வார்தல், வடித்தல், உந்தல், உறழ்தல்,
சீருடன் உருட்டல், தெருட்டல், அள்ளல்,
ஏர் உடைப் பட்டடை, என இசையோர் வகுத்த
எட்டு வகையின் இசைக் கரணத்துப்
பட்ட வகை தன் செவியின் ஓர்த்து—
'ஏவலன்; பின், பாணி யாது?' என,
கோவலன் கை யாழ் நீட்ட—அவனும்,
காவிரியை நோக்கினவும், கடல் கானல் வரிப் பாணியும்,
மாதவி-தன் மனம் மகிழ, வாசித்தல் தொடங்கும்-மன். 1

முகம் உடை வரி — ஆற்று வரி

காவிரியை நோக்கிப் பாடியன

திங்கள் மாலை வெண்குடையான்,
சென்னி, செங்கோல்-அது ஓச்சி,
கங்கை-தன்னைப் புணர்ந்தாலும்,
புலவாய்; வாழி, காவேரி!
கங்கை-தன்னைப் புணர்ந்தாலும்,
புலவாதொழிதல், கயல் கண்ணாய்!
மங்கை மாதர் பெரும் கற்பு என்று
அறிந்தேன்; வாழி, காவேரி! 2

மன்னும் மாலை வெண்குடையான்
வளையாச் செங்கோல்-அது ஓச்சி,
கன்னி-தன்னைப் புணர்ந்தாலும்,
புலவாய்; வாழி, காவேரி!
கன்னி-தன்னைப் புணர்ந்தாலும்,
புலவாதொழிதல், கயல் கண்ணாய்!
மன்னும் மாதர் பெரும் கற்பு என்று
அறிந்தேன்; வாழி, காவேரி! 3

உழவர் ஓதை, மதகு ஓதை,
உடை நீர் ஓதை, தண்பதம் கொள்
விழவர் ஓதை, சிறந்து ஆர்ப்ப,
நடந்தாய்; வாழி, காவேரி!
விழவர் ஓதை சிறந்து ஆர்ப்ப
நடந்த எல்லாம் வாய் காவா
மழவர் ஓதை வளவன்-தன்
வளனே; வாழி, காவேரி! 4

சார்த்து வரி — முகச் சார்த்து

புகார் நகரைச் சிறப்பித்துப் பாடுதல் — தோழி தலைமகன் முன் நின்று வரைவு கடாதல்

கரிய மலர் நெடுங் கண் காரிகைமுன் கடல்-தெய்வம்
காட்டிக் காட்டி,
அரிய சூள் பொய்த்தார் அறன் இலர் என்று, ஏழையம் யாங்கு
அறிகோம், ஐய?
விரி கதிர் வெண் மதியும் மீன் கணமும் ஆம் என்றே,
விளங்கும் வெள்ளைப்
புரி வளையும் முத்தும் கண்டு— ஆம்பல் பொதி அவிழ்க்கும்
புகாரே, எம் ஊர். 5

காதலர் ஆகி, கழிக் கானல், கையுறை கொண்டு,
எம் பின் வந்தார்
ஏதிலர்-தாம் ஆகி, யாம் இரப்ப, நிற்பதை யாங்கு
அறிகோம், ஐய?
மாதரார் கண்ணும், மதி நிழல் நீர் இணை கொண்டு
மலர்ந்த நீலப்
போதும், அறியாது— வண்டு ஊசலாடும்
புகாரே, எம் ஊர். 6

மோது முது திரையான் மொத்துண்டு, போந்து அசைந்த
முரல் வாய்ச் சங்கம்
மாதர் வரி மணல்மேல் வண்டல் உழுது அழிப்ப,
மாழ்கி, ஐய!
கோதை பரிந்து அசைய, மெல் விரலால் கொண்டு ஒச்சும்
குவளை மாலைப்
போது சிறங்கணிப்ப, போவார் கண் போகாப்
புகாரே, எம் ஊர். 7

முகம் இல் வரி

குறியிடத்துச் சென்ற பாங்கன் தலைமகளது காதல் மிகுதியைக் குறிப்பினால் அறிந்து கூறுதல்

துறை மேய் வலம்புரி தோய்ந்து மணல், உழுத
தோற்றம் மாய்வான்,
பொறை மலி பூம் புன்னைப் பூ உதிர்ந்து, நுண் தாது
போர்க்கும் கானல்,
நிறை மதி வாள் முகத்து நேர் கயல் கண் செய்த
உறை மலி உய்யா நோய் ஊர் சுணங்கு மென் முலையே
தீர்க்கும் போலும். 8

கானல் வரி

கழற்று எதிர்மறை

நிணம் கொள் புலால் உணங்கல் நின்று, புள்
ஒப்புதல் தலைக்கீடு ஆக,
கணம் கொள் வண்டு ஆர்த்து உலாம், கன்னி
நறு ஞாழல் கையில் ஏந்தி,
மணம் கமழ் பூங் கானல் மன்னி, மற்று ஆண்டு ஓர்
அணங்கு உறையும் என்பது அறியேன்; அறிவேனேல்,
அடையேன் மன்னே. 9

வலை வாழ்நர் சேரி வலை உணங்கும் முன்றில்,
மலர் கை ஏந்தி,
விலை மீன் உணங்கல் பொருட்டாக
வேண்டு உருவம் கொண்டு, வேறு ஓர்
கொலை வேல் நெடுங் கண் கொடுங் கூற்றம் வாழ்வது
அலை நீர்த் தண் கானல் அறியேன்; அறிவேனேல்,
அடையேன் மன்னே. 10

நிலை வரி

தமியளாக இடத்து எதிர்ப்பட்ட தலைவியை நோக்கித்
தலைமகன் கூறுதல்

கயல் எழுதி, வில் எழுதி, கார் எழுதி, காமன்
செயல் எழுதி, நீர்ந்த முகம் திங்களோ, காணீர்!
திங்களோ, காணீர்—திமில் வாழ்நர் சீறூர்க்கே
அம் கண் ஏர் வானத்து அரவு அஞ்சி வாழ்வதுவே! 11

எறி வலைகள் ஆர்ப்ப, இரு மருங்கும் ஓடும்,
கறை கெழு வேல் கண்ணே கடுங் கூற்றம், காணீர்!
கடுங் கூற்றம், காணீர்—கடல் வாழ்நர் சீறூர்க்கே
மடம் கெழு மென் சாயல் மகள் ஆயதுவே! 12

புலவு மீன் வெள் உணங்கல் புள் ஒப்பி, கண்டார்க்கு
அலவ நோய் செய்யும் அணங்கு இதுவோ, காணீர்!
அணங்கு இதுவோ, காணீர்—அடும்பு அமர் தண் கானல்
பிணங்கு நேர் ஐம்பால் ஓர் பெண் கொண்டதுவே! 13

முரி வரி

பாங்கன் கேட்பத் தலைமகன் உற்றது உரைத்தல்

பொழில் தரு நறு மலரே, புது மணம் விரி மணலே,
பழுது அறு திரு மொழியே, பணை இள வன முலையே,
முழு மதி புரை முகமே, முரி புரு வில் இணையே,
எழுது-அரு மின் இடையே—எனை இடர் செய்தவையே. 14

திரை விரிதரு துறையே, திரு மணல் விரி இடமே,
விரை விரி நறு மலரே, மிடைதரு பொழில் இடமே,
மரு விரி புரி குழலே, மதி புரை திரு முகமே,
இரு கயல் இணை விழியே—எனை இடர் செய்தவையே. 15

வளை வளர்தரு துறையே, மணம் விரிதரு பொழிலே,
தளை அவிழ் நறு மலரே, தனியவள் திரி இடமே,
முளை வளர் இள நகையே, முழு மதி புரை முகமே,
இளையவள் இணை முலையே—எனை இடர் செய்தவையே. 16

திணைநிலை வரி

புணர்ச்சி நீட, இடந்தலைப்பாட்டில் புணர்தலுறுவான்
ஆற்றுமையால் கூறுதல்

கடல் புக்கு, உயிர் கொன்று, வாழ்வர் நின் ஐயர்;
உடல் புக்கு, உயிர் கொன்று, வாழ்வைமன் நீயும்:
மிடல் புக்கு அடங்காத வெம் முலையோ பாரம்;
இடர் புக்கு இடுகும் இடை இழவல் கண்டாய்! 17

கொடுங் கண் வலையால் உயிர் கொல்வான் நுந்தை;
நெடுங் கண் வலையால் உயிர் கொல்வைமன் நீயும்:
வடம் கொள் முலையான் மழை மின்னுப் போல
நுடங்கி உகும் மென் நுசுப்பு இழவல் கண்டாய்! 18

ஓடும் திமில் கொண்டு உயிர் கொல்வர் நின் ஐயர்;
கோடும் புருவத்து உயிர் கொல்வைமன் நீயும்:
பீடும் பிறர் எவ்வம் பாராய்; முலை சுமந்து
வாடும் சிறு மென் மருங்கு இழவல் கண்டாய்! 19

குறியிடத்துத் தலைமகளைக் கண்ட பாங்கன் கூற்று

அல்லது

தலைவியைப் புணர்ந்து நீங்கும் தலைமகன்,
அவளை விடுத்தல் அருமையால், ஆற்றுளைய்த்
தன் நெஞ்சிற்குச் சொல்லுதல்

பவள உலக்கை கையால் பற்றி,
தவள முத்தம் குறுவாள் செங் கண்,
தவள முத்தம் குறுவாள் செங் கண்
குவளை அல்ல! கொடிய, கொடிய! 20

புன்னை நீழல் புலவுத் திரைவாய்
அன்னம் நடப்ப, நடப்பாள் செங் கண்,
அன்னம் நடப்ப, நடப்பாள் செங் கண்
கொன்னே வெய்ய! கூற்றம், கூற்றம்! 21

கள் வாய் நீலம் கையின் ஏந்தி,
புள் வாய் உணங்கல் கடிவாள் செங் கண்,
புள் வாய் உணங்கல் கடிவாள் செங் கண்
வெள் வேல் அல்ல! வெய்ய, வெய்ய! 22

காமம் சாலா இளமையோள்வயின் ஏமம் சாலா
இடும்பை எய்தியோன் சொல்லுதல்

சேரல், மட அன்னம்! சேரல், நடை ஒவ்வாய்;
சேரல், மட அன்னம்! சேரல், நடை ஒவ்வாய்:
ஊர் திரை நீர் வேலி உழக்கித் திரிவாள் பின்
சேரல், மட அன்னம்! சேரல், நடை ஒவ்வாய். 23

கட்டுரை

மாதவி, கலவியால் மகிழ்ந்தாள்போல்,
கோவலனிடம் இருந்த யாழை வாங்கி,
புலவியால் கானல் வரி பாடத் தொடங்குதல்

ஆங்கு, கானல் வரிப் பாடல் கேட்ட மான் நெடுங் கண் மாதவியும், 'மன்னும் ஓர் குறிப்பு உண்டு; இவன் தன் நீலை மயங்கினன்' என, கலவியால் மகிழ்ந்தாள் போல், புலவியால் யாழ் வாங்கி, தானும் ஓர் குறிப்பினள் போல், கானல் வரிப் பாடல்-பாணி, நிலத் தெய்வம் வியப்பு எய்த, நீள் நிலத்தோர் மனம் மகிழ, கலத்தொடு புணர்ந்து அமைந்த கண்டத்தால் பாடத் தொடங்கும்மன்.

ஆற்று வரி
காவிரியை நோக்கிப் பாடியன

மருங்கு வண்டு சிறந்து ஆர்ப்ப,
மணிப் பூ ஆடை-அது போர்த்து,
கருங் கயல்-கண் விழித்து, ஒல்கி,
நடந்தாய்; வாழி, காவேரி!
கருங் கயல்-கண் விழித்து, ஒல்கி,
நடந்த எல்லாம் நின் கணவன்
திருந்து செங்கோல் வளையாமை;
அறிந்தேன்; வாழி, காவேரி! 25

பூவர் சோலை மயில் ஆல,
புரிந்து குயில்கள் இசை பாட,
காமர் மாலை அருகு அசைய,
நடந்தாய்; வாழி, காவேரி!
காமர் மாலை அருகு அசைய,
நடந்த எல்லாம் நின் கணவன்
நாம வேலின் திறம் கண்டே;
அறிந்தேன்; வாழி, காவேரி! 26

வாழி அவன்-தன் வள நாடு
மகவாய், வளர்க்கும் தாய் ஆகி,
ஊழி உய்க்கும் பேர் உதவி
ஒழியாய்; வாழி, காவேரி!
ஊழி உய்க்கும் பேர் உதவி
ஒழியாது ஒழுகல் உயிர் ஓம்பும்
ஆழி ஆள்வான், பகல் வெய்யோன்
அருளே; வாழி, காவேரி! 27

சார்த்து வரி

புகாரைப் பற்றிய பாடல்கள்
கையுறை மறுத்தல்

தீம்-கதிர் வாள் முகத்தாள் செவ் வாய் மணி முறுவல்
ஒவ்வாவேனும்,
'வாங்கும் நீர், முத்து' என்று, வைகலும், மால்-மகன் போல்
வருதிர், ஐய!
வீங்கு ஓதம் தந்து, விளங்கு ஒளிய வெண் முத்தம்;
விரை சூழ் கானல்
பூங் கோதை கொண்டு; விலைஞர் போல் மீளும்
புகாரே; எம் ஊர். 28

தோழியிற் கூட்டம் கூடி, பின்பு வந்து வரைவல்
என்ற தலைவனுக்குத் தோழி கூறுதல்

மறையின் மணந்தாரை வன் பரதர் பாக்கத்து
மடவார் செங் கை
இறை வளைகள் தூற்றுவதை ஏழையம் எங்ஙனம்-யாங்கு
அறிகோம்? ஐய!
நிறை மதியும் மீனும் என, அன்னம் நீள் புனை
அரும்பிப் பூத்த
பொறை மலி பூங் கொம்பு ஏற, வண்டு ஆம்பல் ஊதும்
புகாரே, எம் ஊர். 29

உண்டாரை வெல் நரு ஊண் ஒளியாப் பாக்கத்துள்,
உறை ஒன்று இன்றித்
தண்டா நோய் மாதர் தலைத் தருதி என்பது யாங்கு
அறிகோம்? ஐய!
வண்டால் திரை அழிப்ப, கையான் மணல் முகந்து,
மதிமேல் நீண்ட,
புண் தோய் வேல் நீர் மல்க, மாதர் கடல் தூர்க்கும்
புக்காரே, எம் ஊர். 30

திணைநிலை வரி

அறியேன் என்று வலிதாகச் சொல்லி, பாங்கி குறைநயப்பித்தல்

புணர் துணையோடு ஆடும் பொறி அலவன் நோக்கி,
இணர் ததையும் பூங் கானல் என்னையும் நோக்கி,
உணர்வு ஒழியப் போன, ஒலி திரை நீர்ச் சேர்ப்பன்,
வணர் சுரி ஐம்பாலோய்! வண்ணம் உணரேனுல். 31

காமம் மிக்க கழிபடர் கிளவி

தம்முடைய தண்ணளியும், தாமும், தம் மான் தேரும்,
எம்மை நினையாது, விட்டாரோ? விட்டு அகல்க;
அம் மென் இணர அடும்புகாள்! அன்னங்காள்!
நம்மை மறந்தாரை நாம் மறக்க மாட்டேமால். 32

புன்கண் கூர் மாலைப் புலம்பும் என் கண்ணே போல்,
துன்பம் உழவாய், துயிலப் பெறுதியால்;
இன் கள் வாய் நெய்தால்! நீ எய்தும் கனவினுள்
வன்கணர் கானல் வரக் கண்டறிதியோ? 33

புள் இயல் மான் தேர்-ஆழி போன வழி எல்லாம்,
தெள்ளு நீர் ஓதம்! சிதைத்தாய்; மற்று என் செய்கோ?
தெள்ளு நீர் ஓதம்! சிதைத்தாய்; மற்று எம்மோடு ஈங்கு
உள்ளாரோடு உள்ளாய்; உணராய்; மற்று என் செய்கோ? 34

நேர்ந்த நம் காதலர் நேமி நெடுந் திண் தேர்
ஊர்ந்த வழி சிதைய ஊர்கின்ற, ஓதமே;
பூந் தண் பொழிலே! புணர்ந்து ஆடும் அன்னமே!
ஈர்ந் தண் துறையே! 'இது தகாது' என்னீரே. 35

நேர்ந்த நம் காதலர் நேமி நெடுந் திண் தேர்
ஊர்ந்த வழி சிதைய ஊர்ந்தாய்; வாழி, கடல் ஓதம்!
ஊர்ந்த வழி சிதைய ஊர்ந்தாய்; மற்று எம்மொடு
தீர்ந்தாய் போல் தீர்ந்திலையால்; வாழி, கடல் ஓதம்! 36

மயங்கு திணைநிலை வரி

அலர் அறிவுறுத்தி வரைவுகடாதல்

நல் நித்திலத்தின் பூண் அணிந்து,
நலம் சார் பவளக் கலை உடுத்து,
செந்நெல் பழனக் கழனிதொறும்
திரை உலாவு கடல் சேர்ப்ப!
புன்னைப் பொதும்பர் மகரத் திண்
கொடியோன் எய்த புதுப் புண்கள்
என்னைக் காண்வகை மறைத்தால்,
அன்னை காணின், என் செய்கோ? 37

வாரித் தரள நகை செய்து,
வண் செம் பவள வாய் மலர்ந்து,
சேரிப் பரதர் வலை முன்றில்
திரை உலாவு கடல் சேர்ப்ப!
மாரிப் பீரத்து அலர் வண்ணம்
மடவாள் கொள்ள, கடவுள் வரைந்து,
'ஆர் இக் கொடுமை செய்தார்?' என்று
அன்னை அறியின், என் செய்கோ? 38

புலவு உற்று, இரங்கி, அது நீங்க,
பொழில்-தண்டலையில் புகுந்து உதிர்ந்த
கலவைச் செம்மல் மணம் கமழ,
திரை உலாவு கடல் சேர்ப்ப!
பல உற்று, ஒரு நோய் துணியாத
படர் நோய் மடவாள் தனி உழப்ப,
அலவுற்று, இரங்கி, அறியா நோய்
அன்னை அறியின், என் செய்கோ? 39

பொழுது கண்டு ஆற்றுளாகிய தலைமகள் தோழிக்கு
உரைத்தல்

இனை இருள் பரந்ததுவே; எல் செய்வான் மறைந்தனனே;
கனைவு-அரும் புலம்பு நீர் கண் பொழிஇ உகுத்தனவே;
தனை அவிழ் மலர்க் குழலாய்! தணந்தார் நாட்டு உளதாம்கொல்—
வினை நெகிழ, எரி சிந்தி, வந்த இம் மருள் மாலை? 40

கதிரவன் மறைந்தனனே; கார் இருள் பரந்ததுவே;
எதிர் மலர் புரை உண் கண் எவ்வ நீர் உகுத்தனவே;
புது மதி புரை முகத்தாய்! போனார் நாட்டு உளதாம்கொல்—
மதி உமிழ்ந்து, கதிர் விழுங்கி, வந்த இம் மருள் மாலை? 41

பறவை பாட்டு அடங்கினவே; பகல் செய்வான் மறைந்தனனே;
நிறை நிலா நோய் கூர, நெடுங் கண் நீர் உகுத்தனவே;
துறு மலர் அவிழ் குழலாய்! துறந்தார் நாட்டு உளதாம்கொல்—
மறவை ஆய், என் உயிர்மேல் வந்த இம் மருள் மாலை? 42

சாயல் வரி

மெலிதாகச் சொல்லிக் குறைநயப்பித்தல்
அல்லது
ஆற்றுவிக்கும் பொருட்டுத் தோழி இயற்பழிக்க,
தலைமகள் இயற்பட மொழிதல்

கைதை வேலிக் கழிவாய் வந்து, எம்
பொய்தல் அழித்துப் போனார் ஒருவர்:
பொய்தல் அழித்துப் போனார், அவர் நம்
மையல் மனம் விட்டு அகல்வார் அல்லர். 43

கானல் வேலிக் கழிவாய் வந்து,
'நீ நல்கு' என்றே நின்ரூர் ஒருவர்:
'நீ நல்கு' என்றே நின்ரூர், அவர் நம்
மான் நேர் நோக்கம் மறப்பார் அல்லர். 44

அன்னம் துணையோடு ஆடக் கண்டு,
நென்னல் நோக்கி நின்ரூர் ஒருவர்:
நென்னல் நோக்கி நின்ரூர், அவர் நம்
பொன் நேர் சுணங்கின் போவார் அல்லர். 45

முகம் இல் வரி

காமம் மிக்க கழிபடர் கிளவி

அடையல், குருகே! அடையல் எம் கானல்,
அடையல், குருகே! அடையல் எம் கானல்,
உடை திரை நீர்ச் சேர்ப்பற்கு உறு நோய் உரையாய்;
அடையல், குருகே! அடையல் எம் கானல். 46

கட்டுரை

மாதவி பண்ணுப் பெயர்த்துப் பாடத் தொடங்குதல்

ஆங்கனம் பாடிய ஆய்-இழை, பின்னரும்,
காந்தள் மெல் விரல் கைக்கிளை சேர் குரல்
தீம் தொடைச் செவ்வழிப்பாலை இசை எழீஇ,
பாங்கினில் பாடி, ஓர் பண்ணுப் பெயர்த்தாள். 47

முகம் இல் வரி

தலைவி மாலைப் பொழுது கண்டு கூறுதல்

நுளையர் விளரி நொடிதரும் தீம் பாலை
இளி கிளையில் கொள்ள இறுத்தாயால், மாலை!
இளி கிளையில் கொள்ள இறுத்தாய்மன் நீயேல்,
கொலை வல்லாய்! என் ஆவி கொள்; வாழி, மாலை! 48

பிரிந்தார் பரிந்து உரைத்த பேர் அருளின் நீழல்
இருந்து, ஏங்கி, வாழ்வார் உயிர்ப் புறத்தாய், மாலை!
உயிர்ப் புறத்தாய் நீ ஆகில், உள் ஆற்ரு வேந்தன்
எயில்-புறத்து வேந்தனெடு என் ஆதி, மாலை? 49

பையுள் நோய் கூர, பகல் செய்வான் போய் வீழ,
வையமோ கண் புதைப்ப, வந்தாய், மருள் மாலை!
மாலை நீ ஆயின், மணந்தார் அவர் ஆயின்,
ஞாலமோ நல்கூர்ந்தது; வாழி, மாலை! 50

வரைவு நீட்டித்த இடத்துத் தலைமகன்
சிறைப்புறத்தானகத் தோழி கூறுதல்

'தீத் துழைஇ வந்த இச் செல்லல் மருள் மாலை
தூக்காது துணிந்த இத் துயர் எஞ்சு கிளவியால்,
பூக் கமழ் கானலில் பொய்ச் சூள் பொறுக்க' என்று,
மாக் கடல்-தெய்வம்! நின் மலர் அடி வணங்குதும். 51

கட்டுரை

கோவலன் ஊழ்வினையால் மனம் மாறுபட்டு,
மாதவியைப் பிரிந்து போதல்

எனக் கேட்டு,
'கானல் வரி யான் பாட, தான் ஒன்றின்மேல் மனம் வைத்து,
மாயப் பொய் பல கூட்டும் மாயத்தாள் பாடினுள்' என,
யாழ்-இசைமேல் வைத்து, தன் ஊழ்வினை வந்து உருத்ததுஆகலின்,
உவவு உற்ற திங்கள் முகத்தாளைக் கவவுக் கை ஞெகிழ்ந்தனனுய்,
'பொழுது ஈங்குக் கழிந்ததுஆகலின், எழுதும்' என்று உடன் எழாது,
ஏவலாளர் உடன் சூழ்தர, கோவலன்-தான் போன பின்னர்—

மாதவி, கோவலனுடன் இன்றி, தனியளாய்
ஆயத்துடன் தன் மனை புகுதல்

தாது அவிழ் மலர்ச் சோலை, ஓதை ஆயத்து ஒலி அவித்து,
கையற்ற நெஞ்சினளாய், வையத்தின் உள் புக்கு,
காதலனுடன் அன்றியே, மாதவி தன் மனை புக்காள்—
'ஆங்கு,
மா இரு ஞாலத்து அரசு தலை வணக்கும்,
சூழி யானை, சுடர் வாள் செம்பியன்
மாலை வெண்குடை கவிப்ப,
ஆழி மால் வரை அகவையா' எனவே.

8. வேனில் காதை

இளவேனிலின் வருகை

''நெடியோன் குன்றமும், தொடியோள் பௌவமும்,
தமிழ் வரம்பு அறுத்த தண் புனல் நல் நாட்டு,
மாட மதுரையும், பீடு ஆர் உறந்தையும்,
கலி கெழு வஞ்சியும், ஒலி புனல் புகாரும்,
அரைசு வீற்றிருந்த, உரைசால் சிறப்பின், 5

மன்னன் மாரன் மகிழ் துணை ஆகிய
இன் இளவேனில் வந்தது இவண்'' என,
வளம் கெழு பொதியில் மா முனி பயந்த
இளங்கால்-தூதன் இசைத்தனன். ஆதலின்,
மகர வெல் கொடி மைந்தன் சேண !
புகர் அறு கோலம் கொள்ளும்' என்பது போல்,
கொடி மிடை சோலைக் குயிலோன் என்னும்
படையுள்படுவோன் பணி மொழி கூற—

மாதவி நிலா-முற்றத்தில் தனியளாய் அமர்ந்து,
மதுர கீதம் பாடுதல்

மடல் அவிழ் கானல் கடல் விளையாட்டினுள்
கோவலன் ஊட, கூடாது ஏகிய,
மா மலர் நெடுங் கண் மாதவி விரும்பி;
வான் உற நிவந்த மேல்நிலை மருங்கின்
வேனில்-பள்ளி ஏறி; மாண்-இழை,
தென் கடல் முத்தும், தென் மலைச் சந்தும்,
தன் கடன் இறுக்கும் தன்மையஆதலின்,
கொங்கை முன்றில் குங்கும வளாகத்து,
மை அறு சிறப்பின் கையுறை ஏந்தி;
அதிரா மரபின் யாழ் கை வாங்கி,
மதுர கீதம் பாடினள், மயங்கி—
ஒன்பான் விருத்தியுள் தலைக்கண் விருத்தி
நன்பால் அமைந்த இருக்கையள் ஆகி:

யாழ் மீட்டிப் பாடி, புறத்து ஒரு பாணியில்
மாதவி மயங்குதல்

வலக்கைப் பதாகை கோட்டொடு சேர்த்தி,
இடக்கை நால் விரல் மாடகம் தழீஇ,
செம்பகை, ஆர்ப்பே, கூடம், அதிர்வே,
வெம் பகை நீக்கும் விரகுளி அறிந்து,
பிழையா மரபின் ஈர்-ஏழ் கோவையை
உழை முதல் கைக்கிளை இறுவாய் கட்டி,
இணை, கிளை, பகை, நட்பு, என்று இந் நான்கின்
இசை புணர் குறிநிலை எய்த நோக்கி,
குரல்வாய், இளிவாய், கேட்டனள்; அன்றியும்,
வரன்முறை மருங்கின் ஐந்தினும் ஏழினும்,
உழை முதல் ஆகவும், உழை ஈறு ஆகவும்,
குரல் முதல் ஆகவும், குரல் ஈறு ஆகவும்;
அகநிலை மருதமும், புறநிலை மருதமும்,

அருகியல் மருதமும், பெருகியல் மருதமும்:
நால் வகைச் சாதியும் நலம் பெற நோக்கி,
மூ-வகை இயக்கமும் முறையுளிக் கழிப்பி,
திறத்து வழிப்படூஉம் தெள் இசைக் கரணத்து,
புறத்து ஒரு பாணியில் பூங்கொடி மயங்கி—

மாதவி கோவலனுக்குத் திருமுகம் வரைந்து,
வசந்தமாலையிடம் கொடுத்து அனுப்புதல்

சண்பகம், மாதவி, தமாலம், கருமுகை,
வெண் பூ மல்லிகை, வேரொடு மிடைந்த
அம் செங்கழுநீர், ஆய் இதழ்க் கத்திகை
எதிர் பூஞ் செவ்வி இடைநிலத்து யாத்த
முதிர் பூந் தாழை முடங்கல் வெண் தோட்டு—
விரை மலர் வாளியின் வியல் நிலம் ஆண்ட
ஒரு தனிச் செங்கோல் ஒரு மகன் ஆணையின்,
ஒரு முகம் அன்றி, உலகு தொழுது இறைஞ்சும்
திருமுகம் போக்கும் செவ்வியள் ஆகி—
அலத்தகக் கொழுஞ் சேறு அஃகி, அயலது
பித்திகைக் கொழு முகை ஆணி கைக்கொண்டு,
'மன் உயிர் எல்லாம் மகிழ் துணை புணர்க்கும்
இன் இளவேனில் இளவரசாளன்;
அந்திப் போதகத்து அரும் பிடர்த் தோன்றிய
திங்கள் செல்வனும் செவ்வியன் அல்லன்;
புணர்ந்த மாக்கள் பொழுது இடைப்படுப்பினும்,
தணந்த மாக்கள் தம் துணை மறப்பினும்,
நறும் பூ வாளியின் நல் உயிர் கோடல்
இறும்பூது அன்று; அஃது அறிந்தீமின்' என,
எண்-எண் கலையும் இசைந்து உடன் போக,
பண்ணும் திறனும் புறங்கூறு நாவில்
தளை வாய் அவிழ்ந்த தனிப்படு காமத்து
விளையா மழலையின் விரித்து உரை எழுதி;
பசந்த மேனியள் படர் உறு மாலையின்,
வசந்தமாலையை, 'வருக' எனக் கூஉய்,
'தூ மலர் மாலையின் துணி பொருள் எல்லாம்
கோவலற்கு அளித்து, கொணர்க ஈங்கு' என—

வசந்தமாலை கடைவீதியில் கோவலனைக் கண்டு,
மாதவி எழுதிய திருமுகத்தைச் சேர்த்தல்

மாலை வாங்கிய வேல் அரி நெடுங் கண்,
கூல மறுகின், கோவலற்கு அளிப்ப—

'திலகமும், அளகமும், சிறு கருஞ் சிலையும்,
குவளையும், குமிழும், கொவ்வையும், கொண்ட
மாதர் வாள் முகத்து, மதைஇய நோக்கமொடு,
காதலின் தோன்றிய கண்கூடு வரியும்;
புயல் சுமந்து வருந்தி, பொழி கதிர் மதியத்து,
கயல் உலாய்த் திரிதரும் காமர் செவ்வியின்,
பாகு பொதி பவளம் திறந்து, நிலா உதவிய
நாகு இள முத்தின் நகை நலம் காட்டி,
''வருக'' என வந்து, ''போக'' எனப் போகிய
கரு நெடுங் கண்ணி காண் வரிக் கோலமும்;
அந்தி-மாலை வந்ததற்கு இரங்கி,
நிந்தை நோய் கூரும் என் சிறுமை நோக்கி,
கிளி புரை கிளவியும், மட அன நடையும்,
களி மயில் சாயலும், கரந்தனள் ஆகி,
செரு வேல் நெடுங் கண் சிலதியர் கோலத்து
ஒரு தனி வந்த உள் வரி ஆடலும்;
சிலம்பு வாய் புலம்பவும், மேகலை ஆர்ப்பவும்,
கலம் பெரு நுசுப்பினள் காதல் நோக்கமொடு
திறத்து வேறு ஆய என் சிறுமை நோக்கியும்,
புறத்து நின்று ஆடிய புன்புற வரியும்;
கோதையும், குழலும், தாது சேர் அளகமும்,
ஒரு காழ் முத்தமும், திரு முலைத் தடமும்,
மின் இடை வருத்த நல்-நுதல் தோன்றி,
சிறுகுறுந் தொழிலியர் மறு மொழி உய்ப்ப,
புணர்ச்சி உட்பொதிந்த கலாம் தரு கிளவியின்
இரு புற மொழிப் பொருள் கேட்டனள் ஆகி,
தளர்ந்த சாயல், தகை மென் கூந்தல்
கிளர்ந்து வேறு ஆகிய கிளர் வரிக் கோலமும்;
பிரிந்து உறை காலத்து, பரிந்தனள் ஆகி,
என் உறு கிளைகட்குத் தன் உறு துயரம்
தேர்ந்துதேர்ந்து உரைத்த தேர்ச்சி வரி; அன்றியும்,
வண்டு அலர் கோதை மாலையுள் மயங்கி,
கண்டவர்க்கு உரைத்த காட்சி வரியும்;
அடுத்துஅடுத்து, அவர் முன் மயங்கிய மயக்கம்
எடுத்து அவர் தீர்த்த எடுத்துக்கோள் வரியும்;
ஆடல் மகளேஆதலின், ஆய்-இழை!
பாடு பெற்றன அப் பைந்தொடி-தனக்கு' என—

திருமுகத்தைக் கோவலன் மறுத்த செய்தியை வசந்தமாலை
மாதவிக்கு உரைத்தல்

அணித் தோட்டுத் திரு முகத்து ஆய்-இழை எழுதிய
மணித் தோட்டுத் திருமுகம் மறுத்ததற்கு இரங்கி,
வாடிய உள்ளத்து வசந்தமாலை
தோடு அலர் கோதைக்குத் துணைந்து சென்று உரைப்ப—

மாதவி செயலற்ற உள்ளத்துடன் மலர்-அமளியில்
கண் துயிலாது கிடத்தல்

'மாலை வாரார்ஆயினும், மாண்-இழை! 115
காலை காண்குவம்' என, கையறு நெஞ்சமொடு
பூ மலர்-அமளிமிசைப் பொருந்தாது வதிந்தனள்—
மா மலர் நெடுங் கண் மாதவி-தான்-என்.

வெண்பா

செந்தாமரை விரிய, தேமாங் கொழுந்து ஒழுக,
மைந்து ஆர் அசோகம் மடல் அவிழ, கொந்து ஆர்
இளவேனல் வந்ததால்; என் ஆம்கொல்—இன்று,
வள வேல் நல் கண்ணி மனம்?

'ஊடினீர் எல்லாம், உருவிலான்-தன் ஆணை!
கூடுமின்' என்று குயில் சாற்ற, நீடிய
வேனல்-பாணிக் கலந்தாள் மென் பூந் திருமுகத்தை,
கானல்-பாணிக்கு அலந்தாய்! காண்.

9. கனாத் திறம் உரைத்த காதை

மகளிர் இரவிற்கு ஏற்ற கோலம் கொண்டு,
இல் உறை தெய்வத்தை வழிபடுதல்

அகல் நகர் எல்லாம் அரும்பு அவிழ் முல்லை
நிகர் மலர் நெல்லொடு தூஉய், பகல் மாய்ந்த
மாலை மணி விளக்கம் காட்டி, இரவிற்கு ஓர்
கோலம் கொடி-இடையார்-தாம் கொள்ள—

மாலதியின் வரலாறு

மாலதி இறந்த மகவைக் கொண்டு
தெய்வக்கோட்டங்களுக்குச் சென்று, வரம் வேண்டுதல்

மேல் ஓர் நாள்,
மாலதி மாற்றுள் மகவுக்குப் பால் அளிக்க, 5

பால் விக்கி, பாலகன்-தான் சோர, மாலதியும்,
'பார்ப்பானெடு மனையாள் என்மேல் படாதன விட்டு
ஏற்பன கூறூர்' என்று ஏங்கி, மகக் கொண்டு,
அமரர் தருக் கோட்டம், வெள்யானைக் கோட்டம்,
புகர் வெள்ளைநாகர்-தம் கோட்டம், பகல் வாயில்
உச்சிக்கிழான் கோட்டம், ஊர்க் கோட்டம், வேல்கோட்டம்,
வச்சிரக் கோட்டம், புறம்பணையான் வாழ் கோட்டம்,
நிக்கந்தக் கோட்டம், நிலாக் கோட்டம், புக்கு எங்கும்,
'தேவிர்காள்! எம் உறு நோய் தீர்ம்' என்று மேவி—

சாத்தன் கோயிலில் மாலதி பாடுகிடக்க, இடாகினிப்பேய்
அவள் கையிலிருந்த பிணத்தைப் பிடுங்கித் தின்னுதல்

ஓர்
பாசண்டச் சாத்தற்குப் பாடுகிடந்தாளுக்கு,
ஏசும் படி ஓர் இளங்கொடி ஆய், 'ஆசு இலாய்!
செய் தவம் இல்லோர்க்குத் தேவர் வரம் கொடார்;
பொய் உரையே அன்று; பொருள் உரையே; கையில்
படு பிணம் தா' என்று, பறித்து, அவள் கைக் கொண்டு,
சுடுகாட்டுக் கோட்டத்து, தூங்கு இருளில் சென்று, ஆங்கு
இடு பிணம் தின்னும் இடாகினிப்பேய் வாங்கி,
மடிஅகத்து இட்டாள், மகவை—

சாத்தன் மகவாய் வருதல்

இடியுண்ட
மஞ்ஞை போல் ஏங்கி அழுதாளுக்கு, அச் சாத்தன்
'அஞ்ஞை! நீ ஏங்கி அழல்' என்று, 'முன்னை
உயிர்க் குழவி காணாய்' என்று, அக் குழவி ஆய், ஓர்
குயில்-பொதும்பர் நீழல் குறுக, அயிர்ப்பு இன்றி,
மாயக் குழவி எடுத்து, மடித் திரைத்து,
தாய் கைக் கொடுத்தாள், அத் தையலாள்.

தேவந்தியின் வரலாறு

சாத்தன் கலை பல பயின்று, தேவந்தியுடன் எட்டு யாண்டு
இல்லறம் புரிந்து நீங்குதல்

தூய
மறையோன் பின் மாணி ஆய், வான் பொருள் கேள்வித்
துறை போய், அவர் முடிந்தபின்னர், இறையோனும்
தாயத்தாரோடும் வழக்கு உரைத்து, தந்தைக்கும்
தாயர்க்கும் வேண்டும் கடன் கழித்து, மேய நாள்,

தேவந்தி என்பாள் மனைவி, அவளுக்கு,
'பூ வந்த உண் கண் பொறுக்க' என்று மேவி, தன்
மூவா இள நலம் காட்டி, 'எம் கோட்டத்து
நீ வா' என உரைத்து, நீங்குதலும்—

தேவந்தி சாத்தன் கோட்டத்தை வழிபட்டிருத்தல்

தூ-மொழி,
'ஆர்த்த கணவன் அகன்றனன், ''போய் எங்கும்
தீர்த்தத் துறை படிவேன்'' என்று; அவனைப் பேர்த்து இங்ஙன்
மீட்டுத் தருவாய்' என ஒன்றன்மேல் இட்டு,
கோட்டம் வழிபாடு கொண்டிருப்பாள்,

தேவந்தி கண்ணகியிடம் சென்று ஆசி கூறுதல்

வாட்டு-அரும் சீர்க்
கண்ணகி-நல்லாளுக்கு உற்ற குறை உண்டு என்று
எண்ணிய நெஞ்சத்து இனையளாய் நண்ணி;
அறுகு, சிறு பூளை, நெல்லொடு தூஉய்ச் சென்று;
'பெறுக, கணவனோடு!' என்றுள்—

கண்ணகி தான் கண்ட கனவினைத் தேவந்திக்கு உரைத்தல்

'பெறுகேன்;
கடுக்கும் என் நெஞ்சம்; கனவினுல், என் கை
பிடித்தனன் போய் ஓர் பெரும் பதியுள் பட்டேம்;
பட்ட பதியில், படாதது ஒரு வார்த்தை
இட்டனர் ஊரார், இடுதேள் இட்டு, என்-தன்மேல்;
''கோவலற்கு உற்றது ஓர் தீங்கு'' என்று அது கேட்டு,
காவலன் முன்னர் யான் கட்டுரைத்தேன்; காவலனோடு
ஊர்க்கு உற்ற தீங்கும் ஒன்று உண்டால்; உரையாடேன்;
தீக் குற்றம் போலும், செறி-தொடீஇ! தீக் குற்றம்
உற்றேனொடு உற்ற உறுவனோடு யான் உற்ற
நல் திறம் கேட்கின் நகை ஆகும்'—

தேவந்தி கூறிய தேறுதல் உரை

'பொன்-தொடீஇ!
கைத்தாயும் அல்லை; கணவற்கு ஒரு நோன்பு
பொய்த்தாய் பழம் பிறப்பில்; போய்க் கெடுக! உய்த்துக்
கடலொடு காவிரி சென்று அலைக்கும் முன்றில்,
மடல் அவிழ் நெய்தல் அம் கானல், தடம் உள,
சோம குண்டம், சூரிய குண்டம்; துறை மூழ்கி,

காமவேள் கோட்டம் தொழுதார், கணவரொடு
தாம் இன்புறுவர் உலகத்து, தையலார்;
போகம் செய் பூமியினும் போய்ப் பிறப்பர்; யாம் ஒரு நாள்
ஆடுதும்' என்ற அணி-இழைக்கு—

கண்ணகியின் மறுமொழி

அவ் ஆய்-இழையாள்,
'பீடு அன்று' என இருந்தபின்னரே—

கோவலன் வருகையும், அவன் நிகழ்ந்ததற்கு இரங்கிக் கூறுதலும்

'நீடிய
காவலன் போலும், கடைத்தலையான் வந்து—நம்
கோவலன்!' என்றுள் ஓர் குற்றிளையாள். கோவலனும்
பாடு அமை சேக்கையுள் புக்கு, தன் பைந்தொடி
வாடிய மேனி வருத்தம் கண்டு, 'யாவும்
சலம் புணர் கொள்கைச் சலதியொடு ஆடி,
குலம் தரு வான் பொருள்-குன்றம் தொலைந்த;
இலம்பாடு நாணுத் தரும் எனக்கு' என்ன—

கண்ணகியின் விடை

நலம் கேழ் முறுவல் நகை முகம் காட்டி,
'சிலம்பு உள; கொண்மின்' என—

கோவலன் மதுரை சென்று பொருள் ஈட்ட எண்ணியுள்ள
தனது கருத்தை வெளியிட்டு, விடியுமுன் கண்ணகியுடன்
மதுரைக்குப் புறப்பட்டுச் செல்லுதல்

'சேயிழை! கேள்; இச்
சிலம்பு முதல் ஆக, சென்ற கலனொடு
உலந்த பொருள் ஈட்டுதல் உற்றேன், மலர்ந்த சீர்
மாட மதுரைஅகத்துச் சென்று; என்னொடு இங்கு,
ஏடு அலர் கோதாய்! எழுக' என்று, நீடி
வினை கடைக்கூட்ட வியம் கொண்டான்—கங்குல்
கனை சுடர் கால் சீயாமுன்.

வெண்பா

காதலி கண்ட கனவு கரு நெடுங் கண்
மாதவி-தன் சொல்லை வறிதாக்க, மூதை-
வினை கடைக்கூட்ட வியம் கொண்டான்—கங்குல்
கனை சுடர் கால் சீயாமுன்.

10. நாடு காண் காதை

கோவலனும் கண்ணகியும் வீட்டின் நெடு வாயிலைக் கடந்து செல்லுதல்

வான்கண் விழியா வைகறை யாமத்து,
மீன் திகழ் விசும்பின் வெண் மதி நீங்க,
கார் இருள் நின்ற கடை நாள் கங்குல்—
ஊழ்வினை கடைஇ உள்ளம் துரப்ப,
ஏழகத் தகரும், எகினக் கவரியும்,
தூ மயிர் அன்னமும், துணை எனத் திரியும்,
தாளொடு குயின்ற தகைசால் சிறப்பின்
நீள் நெடு வாயில் நெடுங் கடை கழிந்து-ஆங்கு—

மணிவண்ணன் கோயிலை வலம் செய்து போதல்

அணி கிளர் அரவின் அறிதுயில் அமர்ந்த
மணிவண்ணன் கோட்டம் வலம் செயாக் கழிந்து—

இந்திரவிகாரங்களை வணங்கிப் போதல்

பணை ஐந்து ஓங்கிய பாசிலைப் போதி
அணி திகழ் நீழல் அறவோன் திருமொழி
அந்தர-சாரிகள் அறைந்தனர் சாற்றும்
இந்திர-விகாரம் ஏழ்உடன் போகி—

சிலாதலத்தைத் தொழுது வலம் கொள்ளல்

புலவு ஊண் துறந்து, பொய்யா விரதத்து,
அவலம் நீத்து, அறிந்து, அடங்கிய கொள்கை,
மெய் வகை உணர்ந்த விழுமியோர் குழீஇய
ஐ-வகை நின்ற அருகத்தானத்துச்
சந்தி ஐந்தும் தம்முடன் கூடி
வந்து, தலைமயங்கிய வான் பெரு மன்றத்து,
பொலம் பூம் பிண்டி நலம் கிளர் கொழு நிழல்,
நீர் அணி விழவினும், நெடுந் தேர் விழவினும்,
சாரணர் வரூஉம் தகுதி உண்டாம் என,
உலக நோன்பிகள் ஒருங்குடன் இட்ட
இலகு ஒளிச் சிலாதலம் தொழுது, வலம் கொண்டு—

புகார் நகரின் வாயிலைக் கடத்தல்

மலை தலைக்கொண்ட பேர் யாறு போலும்
உலக இடைகழி ஒருங்குடன் நீங்கி—

இலவந்திகைப் பள்ளியின் எயிலின் புறத்தே போதல்

கலியிலாளன் காமர் வேணிலொடு
மலய மாருதம் மன்னவற்கு இறுக்கும்,
பல் மலர் அடுக்கிய, நல் மரப் பந்தர்
இலவந்திகையின் எயில் புறம் போகி—

காவிரியின் கடைமுகம் கழிந்து, வட கரையின் வழியாக
மேற்கு நோக்கி வழிக்கொள்ளல்

தாழ் பொழில் உடுத்த, தண்பதப் பெருவழிக்
காவிரி வாயில் கடைமுகம் கழிந்து,
குட திசைக் கொண்டு, கொழும் புனல் காவிரி
வட பெரும் கோட்டு மலர்ப் பொழில் நுழைந்து—

கவுந்திஅடிகள் வாழும் பள்ளியை அடைதல்

காவதம் கடந்து, கவுந்திப் பள்ளிப்
பூ மரப் பொதும்பர்ப் பொருந்தி—

கண்ணகியின் வினவும், கோவலன் உரைத்த விடையும்

ஆங்கண்,
இறும் கொடி நுசுப்போடு இனைந்து, அடி வருந்தி,
நறும் பல் கூந்தல் குறும் பல உயிர்த்து,
முதிராக் கிளவியின், முள் எயிறு இலங்க,
'மதுரை மூதூர் யாது?' என வினவ—
'ஆறு-ஐங் காதம் நம் அகல் நாட்டு உம்பர்;
நாறு ஐங் கூந்தல்! நணித்து' என நக்கு—

கோவலனும் கண்ணகியும் அறப்பள்ளியில் இருந்த
கவுந்திஅடிகளைத் தொழுதல்

தேமொழி-தன்னொடும், சிறைஅகத்து இருந்த
காவுந்திஐயையைக் கண்டு, அடி தொழலும்—

கவுந்தி அடிகளின் வினவும் கோவலனது மறுமொழியும்

'உருவும், குலனும், உயர் பேர் ஒழுக்கமும்,
பெருமகன் திருமொழி பிறழா நோன்பும்,
உடையீர்! என்னை, உறுகணுளரின்
கடை கழிந்து இங்ஙனம் கருதியவாறு?' என—
'உரையாட்டு இல்லை; உறு தவத்தீர்! யான்
மதுரை மூதூர் வரை பொருள் வேட்கையேன்'—

கவுந்திஅடிகள் ஊழின் வலிமையை எடுத்துக் காட்டியதோடு
மதுரை செல்ல இருக்கும் தமது விருப்பத்தையும் வெளியிடுதல்

'பாடகச் சீறடி பரல் பகை உழவா;
காடு இடையிட்ட நாடு நீர் கழிதற்கு

அரிது; இவள் செவ்வி அறிகுநர் யாரோ?
''உரியது அன்று; ஈங்கு ஒழிக'' என, ஒழியீர்;
மற உரை நீத்த மாசு அறு கேள்வியர்
அற உரை கேட்டு, ஆங்கு அறிவனே ஏத்த,
தென் தமிழ் நல் நாட்டுத் தீது தீர் மதுரைக்கு
ஒன்றிய உள்ளம் உடையேன் ஆகலின்,
போதுவல் யானும்; போதுமின்'

கோவலன் அடிகளின் வருகையை உவந்து கூறல்

என்ற
காவுந்திஐயையைக் கைதொழுது, ஏத்தி,
'அடிகள்! நீரே அருளுதிர் ஆயின், இத்
தொடி வளைத் தோளி துயர் தீர்த்தேன்' என—

மதுரை செல்லும் வழியின் அருமை பற்றிக் கவுந்தி கூறல்
சோலையும் தோட்டமும் ஆகிய கரை வழி

'கோவலன்! காணுய்; கொண்ட இந் நெறிக்கு
ஏதம் தருவன யாங்கும் பல; கேள்மோ:
வெயில் நிறம் பொருஅ மெல்லியல் கொண்டு
பயில் பூந் தண்டலைப் படர்குவம்எனினே,
மண் பக வீழ்ந்த கிழங்கு அகழ் குழியைச்
சண்பகம் நிறைத்த தாது சோர் பொங்கர்
பொய்யறைப் படுத்து, போற்ரு மாக்கட்குக்
கையறு துன்பம் காட்டினும் காட்டும்;
உதிர் பூஞ் செம்மலின் ஒதுங்கினர் கழிவோர்
முதிர் தேம் பழம் பகை முட்டினும் முட்டும்;
மஞ்சளும் இஞ்சியும் மயங்கு அரில் வலயத்துச்
செஞ் சுளைப் பலவின் பரல் பகை உறுக்கும்.

வயல் வழி

கயல் நெடுங் கண்ணி காதல் கேள்வ!
வயல் உழைப் படர்குவம்எனினே, ஆங்கு,
பூ நாறு இலஞ்சிப் பொரு கயல் ஓட்டி,
நீர்நாய் கௌவிய நெடும் புற வாளை
மலங்கு மிளிர் செறுவின் விலங்கப் பாயின்,
கலங்கலும் உண்டு இக் காரிகை; ஆங்கண்,
கரும்பில் தொடுத்த பெரும் தேன் சிதைந்து,
சுரும்பு சூழ் பொய்கைத் தூ நீர் கலக்கும்;
அடங்கா வேட்கையின் அறிவு அஞர் எய்தி,
குடங்கையின் நொண்டு, கொள்ளவும் கூடும்;
குறுநர் இட்ட குவளை அம் போதொடு

பொறி வரி வண்டு இனம் பொருந்திய கிடக்கை,
நெறி செல் வருத்தத்து, நீர் அஞர் எய்தி,
அறியாது அடி ஆங்கு இடுதலும் கூடும்;
எறி நீர் அடை கரை இயக்கம்-தன்னில்
பொறி மாண் அலவனும், நந்தும், போற்றாது,
ஊழ் அடி ஒதுக்கத்து உறு நோய் காணின்,
தாழ்தரு துன்பம் தாங்கவும் ஒண்ணா.
வயலும் சோலையும் அல்லது, யாங்கணும்,
அயல்படக் கிடந்த நெறி ஆங்கு இல்லை;
நெறி இருங் குஞ்சி! நீ வெய்யோளொடு
குறி அறிந்து, அவைஅவை குறுகாது ஒம்பு' என—

மூவரும் வழிக்கொள்ளல்

தோம் அறு கடிஞையும், சுவல்மேல் அறுவையும்,
காவுந்தி ஐயை, கைப் பீலியும், கொண்டு;
'மொழிப் பொருள் தெய்வம் வழித் துணை ஆக' என
பழிப்பு-அரும் சிறப்பின் வழிப் படர் புரிந்தோர்—

காவிரி ஆற்றின் ஒலியும், பறவைகளின் ஓசையும்

கரியவன் புகையினும், புகைக்கொடி தோன்றினும்,
விரி கதிர் வெள்ளி தென் புலம் படரினும்,
கால் பொரு நிவப்பின் கடுங் குரல் ஏற்றெடும்
சூல் முதிர் கொண்மூப் பெயல் வளம் சுரப்ப,
குட மலைப் பிறந்த கொழும் பல் தாரமொடு
கடல் வளன் எதிரக் கயவாய் நெரிக்கும்
காவிரிப் புது நீர்க் கடு வரல் வாய்த்தலை
ஓ இறந்து ஒலிக்கும் ஒலியே அல்லது,
ஆம்பியும், கிழாரும், வீங்கு இசை ஏத்தமும்,
ஓங்கு நீர்ப் பிழாவும், ஒலித்தல் செல்லா:
கழனிச் செந்நெல், கரும்பு சூழ் மருங்கின்
பழனத் தாமரைப் பைம் பூங் கானத்து,
கம்புள்கோழியும், கூன குரல் நாரையும்,
செங் கால் அன்னமும், பைங் கால் கொக்கும்,
கானக் கோழியும், நீர் நிறக் காக்கையும்,
உள்ளும், ஊரலும், புள்ளும், புதாவும்,
வெல் போர் வேந்தர் முனையிடம் போல,
பல் வேறு குழூஉக் குரல் பிரந்த ஓதையும்;

உழவரின் ஒலியும் பாட்டும்

உழாஅ நுண் தெளியுள் புக்கு அழுந்திய
கழாஅ மயிர் யாக்கைச் செங் கண் காரான்

சொரி புறம் உரிஞ்ச, புரி ஞெகிழ்பு உற்ற
குமரிக் கூட்டில் கொழும் பல் உணவு
கவரிச் செந்நெல் காய்த்தலைச் சொரிய,
கருங் கை வினைஞரும் களமரும் கூடி
ஒருங்கு நின்று ஆர்க்கும் ஒலியே அன்றியும்;
கடி மலர் கஸ்ந்து, முடி நாறு அழுத்தி,
தொடி வஸ்த் தோளும் ஆகமும் தோய்ந்து,
சேறு ஆடு கோலமொடு வீறு பெறத் தோன்றி,
செங் கயல் நெடுங் கண் சில் மொழிக் கடைசியர்
வெங் கள் தொலைச்சிய விருந்தின் பாணியும்;
கொழுங் கொடி அறுகையும் குவளையும் கலந்து,
விளங்கு கதிர்த் தொடுத்த விரியல் சூட்டி,
பார் உடைப்பனர் போல், பழிச்சினர் கைதொழ
ஏரொடு நின்றோர் ஏர் மங்கலமும்;
அரிந்து கால் குவித்தோர் அரி கடாவுறுத்த
பெருஞ் செய்ந் நெல்லின் முகவைப் பாட்டும்;
தெண் கிணைப் பொருநர் செருக்குடன் எடுத்த
மண் கணை முழவின் மகிழ் இசை ஓதையும்;
பேர் யாற்று அடைகரை நீரின் கேட்டு, ஆங்கு,
ஆர்வ நெஞ்சமோடு அவலம் கொள்ளார்—

மறையோர் இருக்கையும் உழவர் இருக்கையும் ஆகிய
ஊர்கள் இடையிட்ட நாட்டின் வழியாகச் செல்லுதல்

உழைப் புலிக் கொடித் தேர் உரவோன் கொற்றமொடு
மழைக் கரு உயிர்க்கும் அழல் திகழ் அட்டில்,
மறையோர் ஆக்கிய ஆவுதி நறும் புகை
இறை உயர் மாடம் எங்கணும் போர்த்து,
மஞ்சு சூழ் மலையின் மாணத் தோன்றும்
மங்கல மறையோர் இருக்கை; அன்றியும்,
பரப்பு நீர்க் காவிரிப் பாவை-தன் புதல்வர்,
இரப்போர் சுற்றமும் புரப்போர் கொற்றமும்
உழவிடை விளைப்போர், பழ விறல் ஊர்களும்,
பொங்கழி ஆலைப் புகையொடும் பரந்து,
மங்குல் வானத்து மலையின் தோன்றும்,
ஊர் இடையிட்ட நாடுடன் கண்டு,
காவதம் அல்லது கடவார் ஆகி,
பல் நாள் தங்கி, செல் நாள் ஒரு நாள்—

திருவரங்கத்தில் சாரணர் தோன்றுதல்

ஆற்று வீ அரங்கத்து, வீற்று வீற்று ஆகி,
குரங்கு அமை உடுத்த மரம் பயில் அடுக்கத்து,

வானவர் உறையும் பூ நாறு ஒரு சிறை—
பட்டினப் பாக்கம் விட்டனர் நீங்கா,
பெரும் பெயர் ஐயர் ஒருங்குடன் இட்ட
இலங்கு ஒளிச் சிலாதலம் மேல் இருந்தருளி,
பெருமகன் அதிசயம் பிறழா வாய்மைத்
தருமம் சாற்றும் சாரணர் தோன்ற—

மூவரும் சாரணரை வழிபடுதலும், அச் சாரணர் அறிவுரை பகர்தலும்

'பண்டைத் தொல் வினை பாறுக' என்றே
கண்டு அறி கவுந்தியொடு கால் உற வீழ்ந்தோர்
வந்த காரணம், வயங்கிய கொள்கைச்
சிந்தை விளக்கின், தெரிந்தோன் ஆயினும்,
ஆர்வமும் செற்றமும் அகல நீக்கிய
வீரன் ஆகலின், விழுமம் கொள்ளான்—
'கழி பெரும் சிறப்பின் கவுந்தி! காணுய்,
ஒழிக என ஒழியாது ஊட்டும் வல் வினை;
இட்ட வித்தின் எதிர்ந்துவந்து எய்தி,
ஒட்டும்காலை ஒழிக்கவும் ஒண்ணு;
கடுங் கால் நெடு வெளி இடும் சுடர் என்ன
ஒருங்குடன் நில்லா உடம்பிடை உயிர்கள்;
அறிவன், அறவோன், அறிவு வரம்பு இகந்தோன்,
செறிவன், சினேந்திரன், சித்தன், பகவன்,
தரும முதல்வன், தலைவன், தருமன்,
பொருளன், புனிதன், புராணன், புலவன்,
சினவரன், தேவன், சிவகதி நாயகன்,
பரமன், குணவதன், பரத்தில் ஒளியோன்,
தத்துவன், சாதுவன், சாரணன், காரணன்,
சித்தன், பெரியவன், செம்மல், திகழ் ஒளி,
இறைவன், குரவன், இயல் குணன், எம் கோன்,
குறைவு இல் புகழோன், குணப் பெரும் கோமான்,
சங்கரன், ஈசன், சயம்பு, சதுமுகன்,
அங்கம் பயந்தோன், அருகன், அருள் முனி•
பண்ணவன், எண் குணன், பாத்து இல் பழம் பொருள்,
விண்ணவன், வேத முதல்வன், விளங்கு ஒளி,
ஓதிய வேதத்து ஒளி உறின் அல்லது,
போதார், பிறவிப் பொதி-அறையோர்' என—

சாரணரது அறிவுரையைக் கேட்டு, கவுந்தி கூறிய புகழ்மாலை

சாரணர் வாய்மொழி கேட்டு, தவ முதல்
காவுந்திகை தன் கை தலைமேல் கொண்டு,

'ஒரு மூன்று அவித்தோன் ஓதிய ஞானத்
திருமொழிக்கு அல்லது, என் செவிஅகம் திறவா;
காமனை வென்றோன் ஆயிரத்து எட்டு
நாமம் அல்லது, நவிலாது, என் நா;
ஐவரை வென்றோன் அடி இணை அல்லது,
கைவரைக் காணினும், காணு, என் கண்;
அருள் அறம் பூண்டோன் திரு மெய்க்கு அல்லது, என்
பொருள் இல் யாக்கை பூமியில் பொருந்தாது;
அருகர், அறவன், அறிவோற்கு அல்லது, என்
இரு கையும் கூடி ஒரு வழிக் குவியா;
மலர்மிசை நடந்தோன் மலர் அடி அல்லது, என்
தலைமிசை உச்சி தான் அணிப்பொரு அது;
இறுதி இல் இன்பத்து இறை மொழிக்கு அல்லது,
மறுதர ஒதி என் மனம் புடைபெயராது'

சாரணர் மறைதல்

என்று அவன் இசை மொழி ஏத்தக் கேட்டு, அதற்கு
ஒன்றிய மாதவர் உயர்மிசை ஓங்கி,
நிவந்து, ஆங்கு ஒரு முழம் நீள் நிலம் நீங்கி,
'பவம் தரு பாசம் கவுந்தி கெடுக' என்று,
அந்தரம் ஆரூப் படர்வோர்த் தொழுது,
'பந்தம் அறுக' எனப் பணிந்தனர் போந்து—

காவிரியைக் கடந்து, தென் கரை அடைந்து,
மூவரும் ஒரு பொழிலில் இருத்தல்

கார் அணி பூம் பொழில் காவிரிப் பேர் யாற்று
நீரணி-மாடத்து நெடுந் துறை போகி,
மாதரும், கணவனும், மாதவத்து ஆட்டியும்,
தீது தீர் நியமத் தென் கரை எய்தி,
போது சூழ் கிடக்கை ஓர் பூம் பொழில் இருந்துழி—

வம்பப் பரத்தையும் வறுமொழியாளனும்

வம்பப் பரத்தை வறுமொழியாளனொடு
கொங்கு அலர் பூம் பொழில் குறுகினர் சென்றோர்,
'காமனும் தேவியும் போலும் ஈங்கு இவர்
ஆர்? எனக் கேட்டு, ஈங்கு அறிகுவம்' என்றே—
'நோற்று உணல் யாக்கை நொசி தவத்தீர்! உடன்
ஆற்று வழிப்பட்டோர் ஆர்?' என வினவ—

கவுந்தியின் மறுமொழி

'என்
மக்கள் காணீர்; மானிட யாக்கையர்;
பக்கம் நீங்குமின்; பரி புலம்பினர்' என—

தூர்த்தர்கள் பழிப்புரை

'உடன் வயிற்றோர்கள் ஒருங்குடன் வாழ்க்கை
கடவதும் உண்டோ? கற்றறிந்தீர்!' என—

கவுந்தி அடிகள் சாபம்

தீ மொழி கேட்டு, செவி அகம் புதைத்து,
காதலன் முன்னர்க் கண்ணகி நடுங்க—
'எள்ளுநர் போலும் இவர், என் பூங்கோதையை;
முள்ளுடைக் காட்டின் முது நரி ஆக' என—

கண்ணகியும் கோவலனும் கவுந்தி அடிகளை வணங்கி, சாபத்தை நீக்கியருள வேண்டுதல்

கவுந்தி இட்டது தவம் தரு சாபம்;
கட்டியது ஆதலின், பட்டதை அறியார்,
குறு நரி நெடுங் குரல் கூ விளி கேட்டு,
நறு மலர்க் கோதையும் நம்பியும் நடுங்கி,
'நெறியின் நீங்கியோர் நீர் அல கூறினும்,
அறியாமை என்று அறியல் வேண்டும்;
செய் தவத்தீர்! நும் திருமுன் பிழைத்தோர்க்கு
உய்திக் காலம் உரையீரோ!' என—

கவுந்தி அடிகள் சாபத்துக்கு எல்லை கூறுதல்

'அறியாமையின் இன்று இழி பிறப்பு உற்றோர்
உறையூர் நொச்சி ஒரு புடை ஒதுங்கி,
பன்னிரு மதியம் படர் நோய் உழந்தபின்,
முன்னை உருவம் பெறுக, ஈங்கு இவர்' என—

உறையூர் சென்று சேர்தல்

சாபவிடை செய்து, தவப் பெரும் சிறப்பின்
காவுந்தி ஐயையும், தேவியும், கணவனும்,
முறம் செவி வாரணம் முன் சமம் முருக்கிய
புறம் சிறை வாரணம் புக்கனர் புரிந்து-என்.

கட்டுரை

முடி உடை வேந்தர் மூவருள்ளும்
தொடி விளங்கு தடக்கைச் சோழர் குலத்து உதித்தோர்
அறனும், மறனும், ஆற்றலும், அவர்-தம்
பழ விறல் மூதூர்ப் பண்பு மேம்படுதலும்,
விழவு மலி சிறப்பும், விண்ணவர் வரவும்,
ஒடியா இன்பத்து அவர் உறை நாட்டுக்

குடியும், கூழின் பெருக்கமும், அவர்-தம்
தெய்வக் காவிரித் தீது தீர் சிறப்பும்,
பொய்யா வானம் புதுப் புனல் பொழிதலும்:
அரங்கும், ஆடலும், தூக்கும், வரியும்
பரந்து இசை எய்திய பாரதி-விருத்தியும்,
திணைநிலை வரியும் இணைநிலை வரியும்
அணைவுறக் கிடந்த யாழின் தொகுதியும்,
ஈர்-ஏழ் சகோடமும், இடைநிலைப்பாலையும்,
தாரத்து ஆக்கமும், தான் தெரி பண்ணும்,
ஊர்அகத்து ஏரும், ஒளி உடைப் பாணியும்
என்று இவை அனைத்தும் பிற பொருள் வைப்போடு
ஒன்றித் தோன்றும் தனிக்கோள் நிலைமையும்;
ஒரு பரிசா நோக்கிக் கிடந்த
புகார்க் காண்டம் முற்றிற்று.

வெண்பா

காலை அரும்பி மலரும் கதிரவனும்,
மாலை மதியமும் போல் வாழியரோ—வேலை
அகழால் அமைந்த அவனிக்கு மாலைப்
புகழால் அமைந்த புகார்.

இரண்டாவது

மதுரைக் காண்டம்

11. காடு காண் காதை

உறையூரில் தங்கிய கவுந்தி முதலிய மூவரும் வைகறையில் புறப்பட்டுத்
தென் திசை நோக்கிச் செல்லுகின்ற வழியில்
உதயகாலத்தில் ஓர் இள மரக் காவில் புகுதல்

திங்கள் மூன்று அடுக்கிய திரு முக் குடைக் கீழ்,
செங் கதிர் ஞாயிற்றுத் திகழ் ஒளி சிறந்து,
கோதை தாழ் பிண்டிக் கொழு நிழல் இருந்த,
ஆதி இல் தோற்றத்து அறிவனே வணங்கி,
கந்தன் பள்ளிக் கடவுளர்க்கு எல்லாம்
அந்தில் அரங்கத்து அகன் பொழில் அகவயின்
சாரணர் கூறிய தகைசால் நல் மொழி
மாதவத்து ஆட்டியும் மாண்புற மொழிந்து, ஆங்கு,
அன்று, அவர் உறைவிடத்து அல்கினர் அடங்கி,
தென் திசை மருங்கில் செலவு விருப்புற்று,
வைகறை யாமத்து வாரணம் கழிந்து,
வெய்யவன் குண திசை விளங்கித் தோன்ற,
வள நீர்ப் பண்ணையும் வாவியும் பொலிந்தது ஓர்
இள மரக் கானத்து இருக்கை புக்குழி—

மாங்காட்டு மறையோன் தென்னவன் வாழ்த்தியவண்ணம்
இள மரக் காவில் புகுதல்

'வாழ்க, எம் கோ, மன்னவர் பெருந்தகை!
ஊழிதொறு ஊழிதொறு உலகம் காக்க!
அடியில் தன் அளவு அரசர்க்கு உணர்த்தி,
வடி வேல் எறிந்த வான் பகை பொருது,
பஃறுளி யாற்றுடன் பல் மலை அடுக்கத்துக்
குமரிக் கோடும் கொடுங் கடல் கொள்ள
வட திசைக் கங்கையும் இமயமும் கொண்டு,
தென் திசை ஆண்ட தென்னவன் வாழி!
திங்கள் செல்வன் திருக் குலம் விளங்க,
செங் கண் ஆயிரத்தோன் திறல் விளங்கு ஆரம்
பொங்கு ஒளி மார்பில் பூண்டோன் வாழி!
''முடிவினை உடைத்தோன் முதல்வன் சென்னி'' என்று,
இடி உடைப் பெரு மழை எய்தாது ஏக,

பிழையா விளையுள் பெரு வளம் சுரப்ப,
மழை பிணித்து ஆண்ட மன்னவன் வாழ்க!' என,
தீது தீர் சிறப்பின் தென்னனை வாழ்த்தி,
மா முது மறையோன் வந்திருந்தோனை—

கோவலன் மறையோனுடைய வருகை பற்றி வினவுதல்

'யாது நும் ஊர்? ஈங்கு என் வரவு?' எனக்
கோவலன் கேட்ப—

மறையோன் தன் வரவின் நோக்கத்தை எடுத்துரைத்தல்

குன்றுச் சிறப்பின்
மா மறையாளன் வருபொருள் உரைப்போன்:

திருவரங்கத்தில் திரு அமர் மார்பன் கிடந்த வண்ணம்

'நீல மேகம் நெடும் பொன் குன்றத்துப்
பால் விரிந்து அகலாது படிந்தது போல,
ஆயிரம் விரித்து எழு தலை உடை அரும் திறல்
பாயல்-பள்ளி, பலர் தொழுது ஏத்த,
விரி திரைக் காவிரி வியன் பெரும் துருத்தி,
திரு அமர் மார்பன் கிடந்த வண்ணமும்—

திருவேங்கடத்தில் நெடியோன் நின்ற வண்ணம்

வீங்கு நீர் அருவி வேங்கடம் என்னும்
ஓங்கு உயர் மலையத்து உச்சி மீமிசை—
விரி கதிர் ஞாயிறும் திங்களும் விளங்கி,
இரு மருங்கு ஓங்கிய இடைநிலைத் தானத்து,
மின்னுக் கோடி உடுத்து, விளங்கு வில் பூண்டு,
நல் நிற மேகம் நின்றது போல—
பகை அணங்கு ஆழியும், பால் வெண் சங்கமும்,
தகை பெறு தாமரைக் கையின் ஏந்தி.
நலம் கிளர் ஆரம் மார்பில் பூண்டு,
பொலம் பூ ஆடையின் பொலிந்து தோன்றிய
செங் கண் நெடியோன் நின்ற வண்ணமும்—
என் கண் காட்டு என்று என் உளம் கவற்ற
வந்தேன்.

மறையோன் தனது ஊரையும், தான் தென்னனை வாழ்த்திய காரணத்தையும் உரைத்தல்

குட மலை மாங்காட்டு உள்ளேன்;
தென்னவன் நாட்டுச் சிறப்பும் செய்கையும்
கண்மணி குளிர்ப்பக் கண்டேன் ஆதலின்,

வாழ்த்தி வந்திருந்தேன்; இது என் வரவு' என,
தீத்திறம் புரிந்தோன் செப்பக் கேட்டு—

மதுரைக்குச் செல்வதற்கு உரிய நல்ல வழியைப் பற்றி
மறையவனிடம் கோவலன் வினவுதல்

'மா மறை முதல்வ! மதுரைச் செந் நெறி
கூறு நீ' என—

மாங்காட்டு மறையோன் கூறிய மதுரை வழி

கால நிலைமையையும் வழியின் அருமையையும் உணர்த்தல்

கோவலற்கு உரைக்கும்:
'கோத்தொழிலாளரொடு கொற்றவன் கோடி,
வேத்தியல் இழந்த வியல் நிலம் போல,
வேனல் அம் கிழவனொடு வெங் கதிர் வேந்தன்
தான் நலம் திருக, தன்மையில் குன்றி,
முல்லையும் குறிஞ்சியும் முறைமையின் திரிந்து,
நல் இயல்பு இழந்து, நடுங்கு துயர் உறுத்து,
பாலை என்பது ஓர் படிவம் கொள்ளும்
காலை எய்தினிர் காரிகை-தன்னுடன்;
அறையும், பொறையும், ஆர் இடை மயக்கமும்,
நிறை நீர் வேலியும் முறைபடக் கிடந்த இந்
நெடும் பேர் அத்தம் நீந்திச் சென்று—

கொடும்பாளூரை அடுத்த நெடுங் குளக்கரையில்
வழி மூப் பிரிவாகப் பிரிதல்

கொடும்பை நெடுங் குளக் கோட்டகம் புக்கால்—
பிறை முடிக் கண்ணிப் பெரியோன் ஏந்திய
அறை வாய்ச் சூலத்து அரு நெறி கவர்க்கும்—

வலப் பக்கம் செல்லும் வழி

வலம்படக் கிடந்த வழி நீர் துணியின்,
அலறு தலை மராமும், உலறு தலை ஓமையும்,
பொரி அரை உழிஞ்சிலும், புல் முளி மூங்கிலும்,
வரி மரல் திரங்கிய கரி புறக் கிடக்கையும்;
நீர் நசை இ வேட்கையின் மான் நின்று விளிக்கும்
கானமும்; எயினர் கடமும்: கடந்தால்,
ஐவன வெண்ணெலும், அறைக் கண் கரும்பும்,
கொய் பூந் தினையும், கொழும் புன வரகும்,
காயமும், மஞ்சளும், ஆய் கொடிக் கவலையும்,
வாழையும், கமுகும், தாழ் குலைத் தெங்கும்,
மாவும், பலாவும், சூழ் அடுத்து ஓங்கிய
தென்னவன் சிறுமலை திகழ்ந்து தோன்றும்:
அம் மலை வலம் கொண்டு அகன் பதிச் செல்லுமின்—

இடப் பக்கத்துச் செல்லும் வழி

அவ் வழிப் படரீர் ஆயின், இடத்து,
செவ்வழிப் பண்ணின் சிறை வண்டு அரற்றும்
தடம் தாழ் வயலொடு தண் பூங் காவொடு
கடம் பல கிடந்த காடுடன் கழிந்து,
திருமால் குன்றத்துச் செல்குவிர் ஆயின்,
பெரு மால் கெடுக்கும் பிலம் உண்டு: ஆங்கு,
விண்ணோர் ஏத்தும் வியத்தகு மரபின்
புண்ணியசரவணம், பவகாரணியோடு,
இட்டசித்தி, எனும் பெயர் போகி,
விட்டு நீங்கா விளங்கிய பொய்கை
முட்டாச் சிறப்பின் மூன்று உள: ஆங்கு,
புண்ணியசரவணம் பொருந்துவிர் ஆயின்,
விண்ணவர் கோமான் விழு நூல் எய்துவிர்;
பவகாரணி படிந்து ஆடுவிர் ஆயின்,
பவ காரணத்தின் பழம் பிறப்பு எய்துவிர்;
இட்டசித்தி எய்துவிர் ஆயின்,
இட்ட சித்தி எய்துவிர் நீரே.
ஆங்குப் பிலம் புக வேண்டுதிர் ஆயின்,
ஓங்கு உயர் மலையத்து உயர்ந்தோன் தொழுது,
சிந்தையில் அவன்-தன் சேவடி வைத்து,
வந்தனை மும் முறை மலை வலம் செய்தால்,
நிலம் பக வீழ்ந்த சிலம்பாற்று அகன்தலை,
பொலங் கொடி மின்னின் புயல் ஐங் கூந்தல்,
கடி மலர் அவிழ்ந்த கன்னிகாரத்து,
தொடி வனைத் தோளி ஒருத்தி தோன்றி,
''இம்மைக்கு இன்பமும், மறுமைக்கு இன்பமும்,
இம்மையும் மறுமையும் இரண்டும் இன்றி ஓர்
செம்மையில் நிற்பதும், செப்புமின், நீயிர்? இவ்
வரைத் தாள் வாழ்வேன்; வரோத்தமை என்பேன்;
உரைத்தார்க்கு உரியேன்; உரைத்தீர் ஆயின்,
திருத்தக்கீர்க்குத் திறந்தேன் கதவு'' எனும்.
கதவம் திறந்து, அவள் காட்டிய நல் நெறிப்
புதவம் பல உள, போகு இடைகழியன;
ஒட்டுப் புதவம் ஒன்று உண்டு; அதன் உம்பர்
வட்டிகைப் பூங்கொடி வந்து தோன்றி,
''இறுதி இல் இன்பம் எனக்கு ஈங்கு உரைத்தால்,
பெறுதிர் போலும் நீர் பேணிய பொருள்'' எனும்;
''உரையீர் ஆயினும் உறுகண் செய்யேன்;
நெடு வழிப் புறத்து நீக்குவல் நும்'' எனும்.

உரைத்தார் உளர் எனின், உரைத்த மூன்றின்
கரைப்படுத்து, ஆங்குக் காட்டினள் பெயரும்.
அரு மறை மருங்கின், ஐந்தினும், எட்டினும்,
வரு முறை எழுத்தின் மந்திரம் இரண்டும்
ஒரு முறையாக உளம் கொண்டு ஓதி,
வேண்டியது ஒன்றின் விரும்பிணர் ஆடின்,
காண்தகு மரபின அல்ல மற்றவை.
மற்றவை நீயாது மலிமிசை நின்றோன்
பொன் தாமரைத் தாள் உள்ளம் பொருந்துமின்.
உள்ளம் பொருந்துவிர் ஆயின், மற்று அவன்
புள் அணி நீள் கொடி புணர்நிலை தோன்றும்;
தோன்றியபின், அவன் தூணை மலர்த் தாள் இணை
ஏன்று துயர் கெடுக்கும் இன்பம் எய்தி,
மாண்பு உடை மரபின் மதுரைக்கு ஏகுமின்;
காண்தகு பிலத்தின் காட்சி ஈது.

இடைப்பட்ட வழி

'ஆங்கு
அந் நெறிப் படரீர் ஆயின், இடையது
செந் நெறி ஆகும்; தேம் பொழில் உடுத்த
ஊர் இடையிட்ட காடு பல கடந்தால்,
ஆர் இடை உண்டு, ஓர் ஆர் அஞர்த் தெய்வம்;
நடுக்கம் சாலா நயத்தின் தோன்றி,
இடுக்கண் செய்யாது இயங்குநர்த் தாங்கும்.
மடுத்து உடன் கிடக்கும் மதுரைப் பெருவழி.
நீள் நிலம் கடந்த நெடு முடி அண்ணல்
தாள் தொழு தகையேன் போகுவல் யான்' என—

கவுந்தி அடிகளின் கட்டுரை

மா மறையோன் வாய் வழித் திறம் கேட்ட
காவுந்தி ஐயை ஓர் கட்டுரை சொல்லும்:
'நலம் புரி கொள்கை நான்மறையாள!
பிலம் புக வேண்டும் பெற்றி ஈங்கு இல்லை;
கப்பத்து இந்திரன் காட்டிய நூலின்
மெய்ப்பாட்டு-இயற்கையின் விளங்கக் காணுய்;
இறந்த பிறப்பின் எய்திய எல்லாம்
பிறந்த பிறப்பில் காணுயோ, நீ?
வாய்மையின் வழாது மன் உயிர் ஓம்புநர்க்கு
யாவதும் உண்டோ, எய்தா அரும் பொருள்?
காமுறு தெய்வம் கண்டு அடி பணிய
நீ போ; யாங்களும் நீர் நெறிப் படர்குதும்'
என்று அம் மறையோற்கு இசை மொழி உணர்த்தி—

மூவரும் மேற்செல்லும் போது, வழிநடந்த வருத்தத்தால்
கவுந்தி அடிகளும் கண்ணகியும் வழிமருங்கு இருப்ப, கோவலன்
அண்மையிலுள்ள ஒரு பொய்கைக்கு நீர் அருந்தச் செல்லுதல்

குன்றுக் கொள்கைக் கோவலன்-தன்னுடன்
அன்றைப் பகல் ஓர் அரும் பதித் தங்கி,
பின்றையும் அவ் வழிப் பெயர்ந்து செல் வழிநாள்—
கருந் தடங் கண்ணியும் கவுந்தி அடிகளும்
வகுந்து செல் வருத்தத்து வழிமருங்கு இருப்ப—
இடை நெறிக் கிடந்த இயவு கொள் மருங்கின்,
புடை நெறிப் போய், ஓர் பொய்கையில் சென்று,
நீர் நசைஇ வேட்கையின் நெடுந் துறை நிற்ப—

வனதேவதை வசந்தமாலையின் உருவில் தோன்றி,
கோவலனிடம் முறையிடுதல்

கான் உறை தெய்வம் காதலின் சென்று,
'நயந்த காதலின் நல்குவன் இவன்' என,
வயந்தமாலை வடிவில் தோன்றி,
கொடி நடுக்கு உற்றது போல, ஆங்கு-அவன்
அடிமுதல் வீழ்ந்து, ஆங்கு, அரும் கணீர் உகுத்து,
''வாச மாலையின் எழுதிய மாற்றம்
தீது இலேன்; பிழை மொழி செப்பினை; ஆதலின்,
கோவலன் செய்தான் கொடுமை'' என்று, என் முன்
மாதவி மயங்கி, வான் துயர் உற்று,
''மேலோர் ஆயினும், நூலோர் ஆயினும்,
பால் வகை தெரிந்த பகுதியோர் ஆயினும்,
பிணி எனக் கொண்டு, பிறக்கிட்டு ஒழியும்
கணிகையர் வாழ்க்கை கடையே போன்ம்'' என,
செவ் வரி ஒழுகிய செழுங் கடை மழைக் கண்
வெண் முத்து உதிர்த்து, வெண் நிலாத் திகழும்
தண் முத்து ஒரு காழ் தன் கையால் பரிந்து,
துனி உற்று என்னையும் துறந்தனள்; ஆதலின்,
மதுரை மூதூர் மா நகர்ப் போந்தது
எதிர் வழிப் பட்டோர் எனக்கு ஆங்கு உரைப்ப,
சாத்தொடு போந்து தனித் துயர் உழந்தேன்;
பாத்து-அரும் பண்ப! நின் பணி மொழி யாது? என—

கோவலன் மந்திரத்தால் உண்மையை அறிய முயலுதல்

'மயக்கும் தெய்வம் இவ் வன் காட்டு உண்டு' என
வியத்தகு மறையோன் விளம்பினன்; ஆதலின்,
வஞ்சம் பெயர்க்கும் மந்திரத்தால் இவ்
ஐஞ் சில் ஓதியை அறிகுவென் யான்' என—

தெய்வம் மந்திர வலிமைக்கு ஆற்றாது, உண்மை உரைத்து நீங்குதல்

கோவலன் நாவில் கூறிய மந்திரம்
பாய் கலைப் பாவை மந்திரம் ஆதலின்,
'வன-சாரிணி யான்; மயக்கம் செய்தேன்;
புன மயில் சாயற்கும், புண்ணிய முதல்விக்கும்,
என் திறம் உரையாது ஏகு' என்று ஏக—

கோவலன் தாமரை இலையில் தண்ணீர் கொணர்ந்து,
கண்ணகியின் தாகத்தைத் தீர்த்தல்

தாமரைப் பாசடைத் தண்ணீர் கொணர்ந்து, ஆங்கு,
அயா உற்று மடந்தை அரும் துயர் தீர்த்து—

வெயிலின் வெம்மை மிகுதலால் கானத்தில் செல்லுதல் அரிது என்று,
அண்மையிலுள்ள ஐயை கோட்டத்தை மூவரும் அடைதல்

மீது செல் வெங் கதிர் வெம்மையின் தொடங்க,
'தீது இயல் கானம் செலவு அரிது' என்று,
கோவலன்-தன்னொடும் கொடுங் குழை மாதொடும்
மாதவத்து ஆட்டியும் மயங்கு அதர் அழுவத்து,
குரவமும் மரவமும் கோங்கமும் வேங்கையும்
விரவிய பூம் பொழில் விளங்கிய இருக்கை,
ஆர் இடை அத்தத்து இயங்குநர் அல்லது,
மாரி வளம் பெரு வில் ஏர் உழவர்
கூற்று உறழ் முன்பொடு கொடு வில் ஏந்தி,
வேற்றுப் புலம் போகி, நல் வெற்றம் கொடுத்து,
கழி பேர் ஆண்மைக் கடன் பார்த்து இருக்கும்
விழி நுதல் குமரி, விண்ணோர் பாவை,
மை அறு சிறப்பின் வான நாடி,
ஐயை-தன் கோட்டம் அடைந்தனர் ஆங்கு-என்.

12. வேட்டுவ வரி

ஐயையின் கோட்டத்தில் ஒரு பக்கத்திலே
கோவலன் முதலிய மூவரும் இளைப்பாறி இருத்தல்

கடுங் கதிர் திருகலின், நடுங்கு அஞர் எய்தி,
ஆறு செல் வருத்தத்துச் சீறடி சிவப்ப,
நறும் பல் கூந்தல் குறும் பல உயிர்த்து-ஆங்கு,
ஐயை கோட்டத்து எய்யா ஒரு சிறை
வருந்து நோய் தணிய இருந்தனர். உப்பால்—

சாலினி ஆவேசம் கொண்டு மறக் குடி மக்களுக்கு அறிவுறுத்தல்

வழங்கு வில் தடக்கை மறக் குடித் தாயத்துப்
பழங் கடன் உற்ற முழங்கு வாய்ச் சாலினி

தெய்வம் உற்று, மெய்ம் மயிர் நிறுத்து,
கை எடுத்து ஒச்சி, கானவர் வியப்ப,
இடு முள் வேலி எயினர் கூட்டுண்ணும்
நடு ஊர் மன்றத்து அடி பெயர்த்து ஆடி,
'கல் என் பேர் ஊர்க் கண நிரை சிறந்தன;
வல் வில் எயினர் மன்று பாழ்பட்டன;
மறக் குடித் தாயத்து வழி வளம் சுரவாது,
அறக் குடி போல் அவிந்து அடங்கினர் எயினரும்;
கலை அமர் செல்வி கடன் உணின் அல்லது,
சிலை அமர் வென்றி கொடுப்போள் அல்லள்;
மட்டு உண் வாழ்க்கை வேண்டுதிர் ஆயின்,
கட்டு உண் மாக்கள்! கடம் தரும்' என-ஆங்கு—

மறக் குடி மக்கள் குமரி ஒருத்திக்குக் கொற்றவையின் கோலம் புனைவித்து, வழிபடு பொருள்களுடன் ஐயையின் கோட்டம் செல்லுதல்

இட்டுத் தலை எண்ணும் எயினர் அல்லது
சுட்டுத் தலைபோகாத் தொல் குடிக் குமரியை—
சிறு வெள் அரவின் குருளை நாண் சுற்றி,
குறு நெறிக் கூந்தல் நெடு முடி கட்டி,
இளை சூழ் படப்பை இழுக்கிய ஏனத்து
வளை வெண் கோடு பறித்து, மற்று அது
முளை வெண் திங்கள் என்னச் சாத்தி;
மறம் கொள் வயப் புலி வாய் பிளந்து பெற்ற
மாலை வெண் பல் தாலி நிரை பூட்டி;
வரியும் புள்ளியும் மயங்கு வான் புறத்து
உரிவை மேகலை உடீஇ; பரிவொடு
கரு வில் வாங்கி, கைஅகத்துக் கொடுத்து;
திரிதரு கோட்டுக் கலைமேல் ஏற்றி;
பாவையும், கிளியும், தூவி அம் சிறைக்
கானக்கோழியும், நீல் நிற மஞ்ஞையும்,
பந்தும், கழங்கும், தந்தனர் பரசி;
வண்ணமும், சுண்ணமும், தண் நறுஞ் சாந்தமும்,
புழுக்கலும், நோலையும், விழுக்கு உடை மடையும்,
பூவும், புகையும், மேவிய விரையும்,
ஏவல் எயிற்றியர் ஏந்தினர் பின் வர;
ஆறு எறி பறையும், சூறைச் சின்னமும்,
கோடும், குழலும், பீடு கெழு மணியும்,
கணம் கொண்டு துவைப்ப; அணங்கு முன் நிறீஇ—
விலைப் பலி உண்ணும் மலர் பலி-பீடிகை,
கலைப் பரி ஊர்தியைக் கைதொழுது ஏத்தி—

ஆவேசமுற்ற சாலினி கண்ணகியைப் புகழ்தல்

இணை மலர்ச் சீறடி இனைந்தனள் வருந்தி,
கணவனொடு இருந்த மணம் மலி கூந்தலை,
'இவளோ, கொங்கச் செல்வி; குடமலை ஆட்டி;
தென் தமிழ்ப் பாவை; செய்த தவக் கொழுந்து;
ஒரு மா மணி ஆய், உலகிற்கு ஓங்கிய
திரு மா மணி' எனத் தெய்வம் உற்று உரைப்ப—

கண்ணகி நாணமுற்று, புன்முறுவல் பூத்து நிற்றல்

'பேதுறவு மொழிந்தனள் மூதறிவு ஆட்டி' என்று,
அரும் பெறல் கணவன் பெரும் புறத்து ஒடுங்கி,
விருந்தின் மூரல் அரும்பினள் நிற்ப—

மறக் குடிக் குமரியின் வரிக்கோலத்திற்கு ஐயை அருள்புரிதல்

மதியின் வெண் தோடு சூடும் சென்னி,
நுதல் கிழித்து விழித்த இமையா நாட்டத்து,
பவள வாய்ச்சி; தவள வாள் நகைச்சி;
நஞ்சு உண்டு கறுத்த கண்டி; வெஞ் சினத்து
அரவு நாண் பூட்டி, நெடு மலை வளைத்தோள்;
துளை எயிற்று உரகக் கச்சு உடை முலைச்சி;
வளை உடைக் கையில் சூலம் ஏந்தி;
கரியின் உரிவை போர்த்து, அணங்கு ஆகிய
அரியின் உரிவை மேகலை ஆட்டி;
சிலம்பும் கழலும் புலம்பும் சீறடி,
வலம் படு கொற்றத்து வாய் வாள் கொற்றவை;
இரண்டு வேறு உருவின், திரண்ட தோள் அவுணன்
தலைமிசை நின்ற தையல்; பலர் தொழும்
அமரி, குமரி, கவுரி, சமரி,
சூலி, நீலி; மால்-அவற்கு இளங்கிளை;
ஐயை, செய்யவள், வெய்ய வாள் தடக்கைப்
பாய் கலைப் பாவை; பைந் தொடிப் பாவை;
ஆய் கலைப் பாவை, அருங்கலப் பாவை;
தமர் தொழ வந்த குமரிக் கோலத்து
அமர் இளங் குமரியும் அருளினள்—
வரி உறு செய்கை வாய்ந்ததால் எனவே.

உரைப் பாட்டு மடை

முன்றிலின் சிறப்பு

நாகம், நாறு நரந்தை, நிரந்தன;
ஆவும் ஆரமும் ஓங்கின; எங்கணும்,

சேவும் மாவும் செறிந்தன—கண்ணுதல்
பாகம் ஆளுடையாள் பலி முன்றிலே. 1

செம் பொன் வேங்கை சொரிந்தன; சேயிதழ்,
கொம்பர் நல் இலவங்கள், குவிந்தன;
பொங்கர் வெண் பொரி சிந்தின புன்கு—இளந்
திங்கள் வாழ் சடையாள் திரு முன்றிலே. 2

மரவம், பாதிரி, புன்னை, மணம் கமழ்,
குரவம், கோங்கம், மலர்ந்தன; கொம்பர்மேல்,
அரவ வண்டு இனம் ஆர்த்து, உடன் யாழ்செயும்—
திருவ மாற்கு இளையாள் திரு முன்றிலே. 3

வள்ளிக் கூத்து

கொற்றவை கொண்ட அணி கொண்டு நின்ற இப்
பொன் தொடி மாதர் தவம் என்னைகொல்லோ?
பொன் தொடி மாதர் பிறந்த குடிப் பிறந்த
வில் தொழில் வேடர் குலனே குலனும்! 4

ஐய திருவின் அணி கொண்டு நின்ற இப்
பை அரவு அல்குல் தவம் என்னைகொல்லோ?
பை அரவு அல்குல் பிறந்த குடிப் பிறந்த
எய் வில் எயினர் குலனே குலனும்! 5

பாய் கலைப் பாவை அணி கொண்டு நின்ற இவ்
ஆய் தொடி நல்லாள் தவம் என்னைகொல்லோ?
ஆய் தொடி நல்லாள் பிறந்த குடிப் பிறந்த
வேய் வில் எயினர் குலனே குலனும்! 6

முன்னிலைப் பரவல்

ஆனைத் தோல் போர்த்து, புலியின் உரி உடுத்து,
கானத்து எருமைக் கருந் தலைமேல் நின்றுயால்—
வானோர் வணங்க, மறைமேல் மறை ஆகி,
ஞானக் கொழுந்து ஆய், நடுக்கு இன்றியே நிற்பாய்! 7

வரி வளைக் கை வாள் ஏந்தி, மா மயிடன் செற்று,
கரிய திரி கோட்டுக் கலைமிசைமேல் நின்றுயால்—
அரி, அரன், பூமேலோன், அக-மலர்மேல் மன்னும்
விரி கதிர் அம் சோதி விளக்கு ஆகியே நிற்பாய்! 8

சங்கமும் சக்கரமும் தாமரைக் கை ஏந்தி,
செங் கண் அரிமான் சின விடைமேல் நின்றுயால்—
கங்கை முடிக்கு அணிந்த கண்ணுதலோன் பாகத்து,
மங்கை உரு ஆய், மறை ஏத்தவே நிற்பாய்! 9

வென்றிக் கூத்து

ஆங்கு,
கொன்றையும் துளவமும் குழுமத் தொடுத்த,
துன்று மலர்ப் பிணையல் தோள்மேல் இட்டு-ஆங்கு,
அசுரர் வாட, அமரர்க்கு ஆடிய
குமரிக் கோலத்துக் கூத்து உள்படுமே. 10

கூத்து உள்படுதல்

ஆய் பொன் அரிச் சிலம்பும் சூடகமும் மேகலையும்
ஆர்ப்பஆர்ப்ப,
மாயம் செய் வாள் அவுணர் வீழ, நங்கை மரக் கால்மேல்
வாள்-அமலை ஆடும் போலும்;
மாயம் செய் வாள் அவுணர் வீழ, நங்கை மரக் கால்மேல்
வாள்-அமலை ஆடும்ஆயின்,
காயா மலர் மேனி ஏத்தி, வானோர் கை பெய் மலர்-மாரி
காட்டும் போலும். 11

வெட்சி

உட்கு உடைச் சீறூர் ஒரு மகன் ஆன் நிரை கொள்ள
உற்றகாலை,
வெட்சி மலர் புனைய, வெள் வாள் உழத்தியும்
வேண்டும் போலும்;
வெட்சி மலர் புனைய, வெள் வாள் உழத்தியும்
வேண்டின், வேற்றூர்க்
கட்சியுள் காரி கடிய குரல் இசைத்து,
காட்டும் போலும். 12

வெட்சிப் புறநடை

கள் விலைஆட்டி மறுப்ப, பொரு மறவன்
கை வில் ஏந்தி,
புள்ளும் வழிப் படர, புல்லார் நிரை கருதி,
போகும் போலும்;
புள்ளும் வழிப் படர, புல்லார் நிரை கருதி,
போகும்காலை,
கொள்ளும் கொடி எடுத்து, கொற்றவையும் கொடுமரம் முன்
செல்லும் போலும். 13

கொடை

இள மா எயிற்றி! இவை காண், நின் ஐயர்
தலைநாள் வேட்டத்துத் தந்த நல் ஆன் நிரைகள்;
கொல்லன், துடியன், கொள் புணர் சீர் வல்ல
நல் யாழ்ப் பாணர்தம் முன்றில் நிறைந்தன. 14

முருந்து ஏர் இள நகை! காணுய், நின் ஐயர்
கரந்தை அலறக் கவர்ந்த இன நிரைகள்;
கள் விலை ஆட்டி, நல் வேய் தெரி கானவன்,
புள் வாய்ப்புச் சொன்ன கணி, முன்றில் நிறைந்தன. 15

கய மலர் உண் கண்ணுய்! காணுய், நின் ஐயர்,
அயல் ஊர் அலற, எறிந்த நல் ஆன் நிரைகள்;
நயன் இல் மொழியின் நரை முது தாடி
எயினர், எயிற்றியர், முன்றில் நிறைந்தன. 16

துறைப் பாட்டு மடை

அவிப் பலி

சுடரொடு திரிதரு முனிவரும் அமரரும்
இடர் கெட அருளும் நின் இணை அடி தொழுதேம்;
அடல் வலி எயினர் நின் அடி தொடு கடன் இது,
மிடறு உகு குருதி; கொள், விறல் தரு விலையே. 17

அணி முடி அமரர் தம் அரசொடு பணிதரு
மணி உருவினை! நின மலர் அடி தொழுதேம்;
கண நிரை பெறு விறல் எயின் இடு கடன் இது,
நிணன் உகு குருதி; கொள், நிகர் அடு விலையே. 18

துடியொடு, சிறு பறை, வயிரொடு துவைசெய,
வெடி பட வருபவர் எயினர்கள் அரை இருள்;
அடு புலி அனையவர், குமரி! நின் அடி தொடு
படு கடன் இது, உகு பலி முக மடையே. 19

பலிக் கொடை

வம்பலர் பல்கி, வழியும் வளம் பட;
அம்பு உடை வல் வில் எயின் கடன் உண்குவாய்—
சங்கரி, அந்தரி, நீலி, சடாமுடிச்
செங் கண் அரவு பிறையுடன் சேர்த்துவாய்! 20

துண் என் துடியொடு துஞ்சு ஊர் எறிதரு,
கண் இல் எயினர் இடு கடன் உண்குவாய்—
விண்ணோர் அமுது உண்டும் சாவ, ஒருவரும்
உண்ணுத நஞ்சு உண்டு, இருந்து, அருள் செய்குவாய்! 21

பொருள் கொண்டு புண் செயின் அல்லதை, யார்க்கும்
அருள் இல் எயினர் இடு கடன் உண்குவாய்—
மருதின் நடந்து, நின் மாமன் செய் வஞ்ச
உருளும் சகடம் உதைத்து, அருள்செய்குவாய்! 22

பாண்டிய மன்னனை வாழ்த்துதல்

மறை முது முதல்வன் பின்னர் மேய
பொறை உயர் பொதியில் பொருப்பன், பிறர் நாட்டுக்
கட்சியும் கரந்தையும் பாழ்பட,
வெட்சி சூடுக—விறல் வெய்யோனே! 23

13. புறஞ்சேரி இறுத்த காதை

'இரவில் வழிச் செல்லுதல் நன்று' என்று கோவலன் கவுந்தி அடிகளிடம் கூறுதல்

பெண் அணி கோலம் பெயர்ந்த பிற்பாடு,
புண்ணிய முதல்வி திருந்து அடி பொருந்தி,
'கடுங் கதிர் வேனில் இக் காரிகை பொருஅள்;
படிந்தில சீறடி பரல் வெங் கானத்து;
''கோள் வல் உளியமும் கொடும் புற்று அகழா;
வாள் வரி வேங்கையும் மான் கணம் மறலா;
அரவும், சூரும், இரை தேர் முதலையும்,
உருமும், சார்ந்தவர்க்கு உறுகண் செய்யா—
செங்கோல் தென்னவர் காக்கும் நாடு'' என,
எங்கணும் போகிய இசையோ பெரிதே;
பகல் ஒளி-தன்னினும், பல் உயிர் ஓம்பும்
நில ஒளி விளக்கின், நீள் இடை மருங்கின்,
இரவிடைக் கழிதற்கு ஏதம் இல்' என—

அடிகள் ஒருப்படுதல்

குரவரும் நேர்ந்த கொள்கையின் அமர்ந்து,
கொடுங்கோல் வேந்தன் குடிகள் போல,
படும் கதிர் அமையம் பார்த்திருந்தோர்க்கு—

பார்மகள் கண்ணகியின் நிலைக்கு இரங்கித் துயிலுதல்

'பல் மீன் தானையொடு பால் கதிர் பரப்பி,
தென்னவன் குலமுதல் செல்வன் தோன்றி,
தாரகைக் கோவையும் சந்தின் குழம்பும்
சீர் இள வன முலை சேராது ஒழியவும்,
தாது சேர் கழுநீர்த் தண் பூம் பிணையல்
போது சேர் பூங் குழல் பொருந்தாது ஒழியவும்,
பைந் தளிர் ஆரமொடு பல் பூங் குறு முறி
செந் தளிர் மேனி சேராது ஒழியவும்,
மலயத்து ஒங்கி, மதுரையின் வளர்ந்து,
புலவர் நாவில் பொருந்திய தென்றலொடு

பால் நிலா வெண் கதிர் பாவைமேல் சொரிய,
வேனில் திங்களும் வேண்டுதி' என்றே
பார்மகள் அயா உயிர்த்து, அடங்கிய பின்னர்—

அடிகளின் அறவுரையைக் கேட்டுக் கோவலன் வழிநடத்தல்

ஆர் இடை உழந்த மாதரை நோக்கி,
'கொடுவரி மறுகும்; குடிஞை கூப்பிடும்;
இடிதரும் உளியமும்; இனையாது ஏகு' என,
தொடி வளைச் செங் கை தோளில் காட்டி,
மறவுரை நீத்த மாசு அறு கேள்வி
அறவுரை கேட்டு, ஆங்கு, ஆர் இடை கழிந்து—

வரி நவில் அந்தணர் வாழும் பதியை வைகறையில் சார்தல்

வேனல் வீற்றிருந்த வேய் கரி கானத்து,
கான வாரணம் கதிர் வரவு இயம்ப,
வரிநவில் கொள்கை மறைநூல் வழுக்கத்துப்
புரிநூல் மார்பர் உறை பதிச் சேர்ந்து—

கோவலன் நீர்நிலை நோக்கிச் செல்லுதல்

மாதவத்து ஆட்டியொடு காதலி-தன்னை ஓர்
தீது தீர் சிறப்பின் சிறை அகத்து இருத்தி,
இடு முள் வேலி நீங்கி, ஆங்கு, ஓர்
நெடு நெறி மருங்கின் நீர் தலைப்படுவோன்,

கோவலனது உருவ மாறுபாட்டால் ஐயுற்ற கௌசிகன், உண்மை தெளிய, மாதவிப் பந்தரை நோக்கிக் கூறுதல்

காதலி-தன்னொடு கானகம் போந்ததற்கு
ஊது உலைக் குருகின் உயிர்த்தனன் கலங்கி,
உள் புலம்புறுதலின், உருவம் திரிய;
கண்-புல மயக்கத்துக் கௌசிகன் தெரியான்,
'கோவலன் பிரியக் கொடுந் துயர் எய்திய,
மா மலர் நெடுங் கண் மாதவி போன்று, இவ்
அரும் திறல் வேனிற்கு அலர் கலைந்து, உடனே,
வருந்தினை போலும் நீ, மாதவி!' என்று, ஓர்
பாசிலைக் குருகின் பந்தரில் பொருந்தி,
கோசிக மாணி கூறக் கேட்டே—

அதைக் கேட்ட கோவலன் கௌசிகனை அடுத்துக் கூறுதல்

'யாது நீ கூறிய உரை ஈது, இங்கு?' என—
'தீது இலன், கண்டேன்' எனச் சென்று எய்தி—

புகாரில் நிகழ்ந்தவற்றைக் கௌசிகன் அறிவித்தல்

கோசிக மாணி கொள்கையின் உரைப்போன்:
இரு நிதிக் கிழவனும் பெரு மனைக் கிழத்தியும்
அரு மணி இழந்த நாகம் போன்றதும்;
இன் உயிர் இழந்த யாக்கை என்ன,
துன்னிய சுற்றம் துயர்க் கடல் வீழ்ந்ததும்;
'ஏவலாளர்! யாங்கணும் சென்று,
கோவலன் தேடிக் கொணர்க' எனப் பெயர்ந்ததும்;
'பெருமகன் ஏவல் அல்லது, யாங்கணும்,
அரசே தஞ்சம்' என்று, அரும் கான் அடைந்த
அருந்திறல் பிரிந்த அயோத்தி போல,
பெரும் பெயர் மூதூர் பெரும் பேது உற்றதும்;
வசந்தமாலிவாய் மாதவி கேட்டு,
பசந்த மேனியள், படர் நோய் உற்று,
நெடு நிலை மாடத்து இடை நிலத்து-ஆங்கு, ஓர்
படை அமை சேக்கைப் பள்ளியுள் வீழ்ந்ததும்;
வீழ் துயர் உற்றோள் விழுமம் கேட்டு,
தாழ் துயர் எய்தி, தான் சென்று இருந்ததும்;
இருந் துயர் உற்றோள், 'இணை அடி தொழுதேன்;
வரும் துயர் நீக்கு' என, மலர்க் கையின் எழுதி,
'கண் மணி அனையாற்குக் காட்டுக' என்றே,
மண் உடை முடங்கல் மாதவி ஈத்ததும்;
ஈத்த ஓலை கொண்டு, இடைநெறித் திரிந்து,
தீத்திறம் புரிந்தோன் சென்ற தேயமும்;
வழி மருங்கு இருந்து மாசு அற உரைத்து—

மாதவியின் முடங்கலைப் பார்த்துக் கோவலன் உண்மை உணர்தல்

ஆங்கு,
அழிவு உடை உள்ளத்து ஆர் அஞர் ஆட்டி,
போது அவிழ் புரி குழல் பூங் கொடி நங்கை,
மாதவி ஓலை மலர்க் கையின் நீட்ட,
உடன் உறை காலத்து உரைத்த நெய் வாசம்
குறு நெறிக் கூந்தல் மண் பொறி உணர்த்திக்
காட்டியது; ஆதலின் கை விடலீயான்,
ஏட்டுஅகம் விரித்து, ஆங்கு எய்தியது உணர்வோன்,
'அடிகள் முன்னர் யான் அடி வீழ்ந்தேன்;
வடியாக் கிளவி மனக்கொளல் வேண்டும்;
குரவர் பணி அன்றியும், குலப்பிறப்பு-ஆட்டியோடு
இரவிடைக் கழிதற்கு, என் பிழைப்பு அறியாது,
கையறு நெஞ்சம் கடியல் வேண்டும்;

பொய் தீர் காட்சிப் புரையோய், போற்றி!'
என்று அவள் எழுதிய இசைமொழி உணர்ந்து,
'தன் தீது இலள்' என, தளர்ச்சி நீங்கி,
'என் தீது' என்றே எய்தியது உணர்ந்து-ஆங்கு—

மாதவியின் திருமுகத்தைத் தன் தந்தைக்குக் கோவலன் அனுப்புதல்

'என் பயந்தோற்கு இம் மண் உடை முடங்கல்,
பொற்பு உடைத்தாக, பொருள் உரை பொருந்தியது:
மாசு இல் குரவர் மலர் அடி தொழுதேன்;
கோசிக மாணி! காட்டு' எனக் கொடுத்து,
'நடுக்கம் கூர்ந்து, அவர் நல் அகம் பொருந்திய
இடுக்கண் கூர்தற்கு ஈண்டு' எனப் போக்கி—

கோவலன் மீண்டு வந்து, பாணர்களுடன் இசை பாடிப் பொழுது போக்குதல்

மாசு இல் கற்பின் மனைவியொடு இருந்த
ஆசு இல் கொள்கை அறவிபால் அணைந்து, ஆங்கு,
ஆடு இயல் கொள்கை அந்தரி கோலம்
பாடும் பாணரில் பாங்குறச் சேர்ந்து,
செந்திறம் புரிந்த செங்கோட்டு-யாழில்,
தந்திரிகரத்தொடு திவவு உறுத்து யாஅத்து,
ஒற்று உறுப்பு உடைமையின் பற்றுவழிச் சேர்த்தி,
உழை முதல் கைக்கிளை இறுவாய்க் கட்டி,
வரன்முறை வந்த மூ-வகைத் தானத்து,
பாய் கலைப் பாவை பாடல்-பாணி
ஆசான் திறத்தின் அமைவரக் கேட்டு,
பாடல்-பாணி அளைஇ, அவரொடு—

மதுரைப் பதிக்கு இன்னும் எஞ்சியுள்ள வழி பற்றிப் பாணரிடம்
கோவலன் விளவுதலும், அவர் விடை பகர்தலும்

'கூடல் காவதம் கூறுமின் நீர்' என—
'காழ் அகில் சாந்தம், கமழ் பூங் குங்குமம்,
நாவிக் குழம்பு, நலம் கொள் தேய்வை,
மான்மதச் சாந்தம், மணம் கமழ் தெய்வத்
தே மென் கொழுஞ் சேறு ஆடி; ஆங்கு,
தாது சேர் கழுநீர், சண்பகக் கோதையொடு,
மாதவி, மல்லிகை, மனை வளர் முல்லைப்
போது விரி தொடையல் பூ அணை பொருந்தி;
அட்டில் புகையும், அகல் அங்காடி
முட்டாக் கூவியர் மோதகப் புகையும்,
மைந்தரும் மகளிரும் மாடத்து எடுத்த
அம் தீம் புகையும், ஆகுதிப் புகையும்,

பல் வேறு பூம் புகை அளீஇ; வெல் போர்
விளங்கு பூண் மார்பின் பாண்டியன் கோயிலின்
அளந்து உணர்வு-அறியா ஆர் உயிர் பிணிக்கும்
கலவைக் கூட்டம் காண்வரத் தோன்றி;
புலவர் செந் நாப் பொருந்திய நிவப்பின்
பொதியில் தென்றல் போலாது, ஈங்கு,
மதுரைத் தென்றல் வந்தது; காணீர்!
நனி சேய்த்து அன்று அவன் திரு மலி மூதூர்;
தனி, நீர் கழியினும் தகைக்குநர் இல்' என—

முந்திய நாளில் போல, மூவரும் இரவில் வழிநடத்தல்

முன் நாள் முறைமையின், இருந்த தவ முதல்வியொடு
பின்னியும் அல்லிடைப் பெயர்ந்தனர்—

வைகறைப்போதில் மதுரையின் பேரொலி கேட்டு வருத்தம் நீங்குதல்

பெயர்ந்து, ஆங்கு,
அரும் தெறல் கடவுள் அகன் பெரும் கோயிலும்,
பெரும் பெயர் மன்னவன் பேர் இசைக் கோயிலும்,
பால் கெழு சிறப்பின் பல் இயம் சிறந்த
காலை முரசக் கனை குரல் ஓதையும்;
நான்மறை அந்தணர் நவின்ற ஓதையும்;
மாதவர் ஓதி மலிந்த ஓதையும்;
மீளா வென்றி வேந்தன் சிறப்பொடு
வாளோர் எடுத்த நாள் அணி முழவமும்;
போரில் கொண்ட பொரு கரி முழக்கமும்;
வாரிக் கொண்ட வயக் கரி முழக்கமும்;
பணை நிலைப் புரவி ஆலும் ஓதையும்;
கிணை நிலைப் பொருநர் வைகறைப் பாணியும்;
கார்க் கடல் ஒலியின், கலி கெழு கூடல்
ஆர்ப்பு ஒலி எதிர்கொள, ஆர் அஞர் நீங்கி—

வையை ஆற்றின் காட்சி

குரவமும், வகுளமும், கோங்கமும், வேங்கையும்,
மரவமும், நாகமும், திலகமும், மருதமும்,
சேடலும், செருந்தியும், செண்பக ஓங்கலும்,
பாடலம்-தன்னொடு பல் மலர் விரிந்து;
குருகும், தளவமும், கொழுங் கொடி முசுண்டையும்,
விரி மலர் அதிரலும், வெண் கூதாளமும்,
குடசமும், வெதிரமும், கொழுங் கொடிப் பகன்றையும்,
பிடவமும், மயிலையும், பிணங்கு அரில் மணந்த
கொடுங் கரை மேகலைக் கோவை யாங்கணும்

மிடைந்து, சூழ்போகிய அகன்று ஏந்து அல்குல்:
வாலுகம் குவைஇய மலர்ப் பூந் துருத்தி,
பால்புடைக் கொண்டு, பல் மலர் ஓங்கி,
எதிர்எதிர் விளங்கிய கதிர் இள வன முலை:
கரைநின்று உதிர்த்த கவிர் இதழ்ச் செவ் வாய்:
அருவி முல்லை அணி நகைஆட்டி—
விலங்கு நிமிர்ந்து ஒழுகிய கருங் கயல் நெடுங் கண்;
விரை மலர் நீங்கா அவிர் அறல் கூந்தல்;
உலகு புரந்து ஊட்டும் உயர் பேர் ஒழுக்கத்துப்
புலவர் நாவில் பொருந்திய பூங்கொடி—
வையை என்ற பொய்யாக் குலக்கொடி—
தையற்கு உறுவது தான் அறிந்தனள் போல்,
புண்ணிய நறு மலர் ஆடை போர்த்து,
கண் நிறை நெடு நீர் கரந்தனள், அடக்கி—

வையையைக் கடந்து, மூவரும் தென் கரை சேர்தல்

'புனல் யாறு அன்று; இது பூம் புனல் யாறு!' என,
அன நடை மாதரும் ஐயனும் தொழுது;
பரி முக அம்பியும், கரி முக அம்பியும்,
அரி முக அம்பியும், அரும் துறை இயக்கும்
பெரும் துறை மருங்கின் பெயராது; ஆங்கண்,
மாதவத்து ஆட்டியொடு மரப் புணை போகி;
தே மலர் நறும் பொழில் தென் கரை எய்தி—

மதுரை மா நகரின் புறஞ்சேரியை அடைதல்

'வானவர் உறையும் மதுரை வலம் கொளத்
தான் நனி பெரிதும் தகவு உடைத்து' என்று, ஆங்கு,
அரு மிளை உடுத்த அகழி சூழ்போகி;
கரு நெடுங் குவளையும், ஆம்பலும், கமலமும்,
தையலும் கணவனும் தனித்து உறு துயரம்
ஐயம் இன்றி அறிந்தன போல,
பண் நீர் வண்டு பரிந்து இனைந்து ஏங்கி,
கண்ணீர் கொண்டு கால் உற நடுங்க;
போர் உழந்து எடுத்த ஆர் எயில் நெடுங் கொடி,
'வாரல்' என்பன போல், மறித்துக் கை காட்ட;
புள் அணி கழனியும் பொழிலும் பொருந்தி,
வெள்ள நீர்ப் பண்ணையும், விரி நீர் ஏரியும்,
காய்க் குலைத் தெங்கும், வாழையும், கமுகும்,
வேய்த் திரள் பந்தரும், விளங்கிய இருக்கை;
அறம் புரி மாந்தர் அன்றிச் சேராப்
புறஞ்சிறை மூதூர்; புக்கனர் புரிந்து-என்.

14. ஊர் காண் காதை

சூரியன் உதித்தல்

புறஞ்சிறைப் பொழிலும், பிறங்கு நீர்ப் பண்ணையும்,
இறங்கு கதிர்க் கழனியும், புள் எழுந்து ஆர்ப்ப;
புலரி வைகறைப் பொய்கைத் தாமரை
மலர் பொதி அவிழ்த்த உலகு தொழு மண்டிலம்
வேந்து தலை பனிப்ப, ஏந்து வாள் செழியன்
ஓங்கு உயர் கூடல் ஊர் துயில் எடுப்ப—

காலை முரசத்தின் ஒலி

நுதல் விழி நாட்டத்து இறையோன் கோயிலும்,
உவணச் சேவல் உயர்த்தோன் நியமமும்,
மேழி வலன் உயர்த்த வெள்ளை நகரமும்,
கோழிச் சேவல் கொடியோன் கோட்டமும்,
அறத்துறை விளங்கிய அறவோர் பள்ளியும்,
மறத்துறை விளங்கிய மன்னவன் கோயிலும்,
வால் வெண் சங்கொடு வகை பெற்று ஓங்கிய
காலை முரசம் கனை குரல் இயம்ப—

மதுரை நகரைக் காணவேண்டும் என்னும் தனது விருப்பத்தைக் கவுந்தி அடிகளிடம் கோவலன் தெரிவித்தல்

கோவலன் சென்று, கொள்கையின் இருந்த
காவுந்தி ஐயையைக் கைதொழுது ஏத்தி,
'நெறியின் நீங்கியோர் நீர்மையேன் ஆகி,
நறு மலர் மேனி நடுங்கு துயர் எய்த,
அறியாத் தேயத்து ஆர் இடை உழந்து,
சிறுமை உற்றேன், செய் தவத்தீர்! யான்:
தொல் நகர் மருங்கின் மன்னர் பின்னோர்க்கு
என் நிலை உணர்த்தி, யான் வரும்காறும்,
பாதக் காப்பினள் பைந்தொடி; ஆகலின்,
ஏதம் உண்டோ, அடிகள்! ஈங்கு?' என்றலும்—

கவுந்தி ஆறுதல் மொழி கூறி, ஊர் கண்டு வருமாறு பணித்தல்

கவுந்தி கூறும்: 'காதலி-தன்னொடு
தவம் தீர் மருங்கின் தனித் துயர் உழந்தோய்!
''மறத்துறை நீங்குமின்; வல் வினை ஊட்டும்'' என்று,
அறத்துறை மாக்கள் திறத்தின் சாற்றி,
நாக் கடிப்பு ஆக வாய்ப்பறை அறையினும்,
யாப்பு அறை மாக்கள் இயல்பின் கொள்ளார்;

தீது உடை வெவ் வினை உருத்தகாலை,
பேதைமை கந்தாப் பெரும் பேது உறுவர்;
ஒய்யா வினைப் பயன் உண்ணும்காலை,
கையாறு கொள்ளார் கற்று அறி மாக்கள்;
பிரிதல் துன்பமும், புணர்தல் துன்பமும்,
உருவிலாளன் ஒறுக்கும் துன்பமும்,
புரி குழல் மாதர்ப் புணர்ந்தோர்க்கு அல்லது,
ஒரு தனி வாழ்க்கை உரவோர்க்கு இல்லை;
பெண்டிரும் உண்டியும் இன்பம் என்று உலகில்
கொண்டோர் உறூஉம் கொள்ளாத் துன்பம்
கண்டனர் ஆகி, கடவுளர் வரைந்த
காமம் சார்பாக் காதலின் உழந்து, ஆங்கு,
ஏமம் சாரா இடும்பை எய்தினர்
இன்றே அல்லால், இறந்தோர் பலரால்;
தொன்றுபட வரூஉம் தொன்மைத்து, ஆதலின்:
தாதை ஏவலின் மாதுடன் போகி,
காதலி நீங்கக் கடுந் துயர் உழந்தோன்
வேதமுதல்வன் பயந்தோன் என்பது
நீ அறிந்திலையோ? நெடுமொழி அன்றே?
வல் ஆடு ஆயத்து, மண், அரசு, இழந்து;
மெல்லியல்-தன்னுடன் வெங் கான் அடைந்தோன்
காதலின் பிரிந்தோன் அல்லன்: காதலி
தீதொடு படூஉம் சிறுமையள் அல்லள்:
அடவிக் கானகத்து ஆய்-இழை-தன்னை
இடை இருள் யாமத்து இட்டு நீக்கியது
வல் வினை அன்றே? மடந்தை-தன் பிழை எனச்
சொல்லலும் உண்டோ, சொல்லாயோ? நீ
அனையையும் அல்லை; ஆய்-இழை-தன்னொடு
பிரியா வாழ்க்கை பெற்றனை அன்றே?
வருந்தாது ஏகி, மன்னவன் கூடல்;
பொருந்து உழி அறிந்து போது ஈங்கு' என்றலும்—

சுருங்கை வீதி வழியாகச் செல்லுதல்

இலை சூழ் மலையொடு வலைவுடன் கிடந்த
இலங்கு நீர்ப் பரப்பின் வலம் புணர் அகழியில்
பெரும் கை யானை இன நிரை பெயரும்
சுருங்கை வீதி மருங்கில் போகி—

மதில் வாயிலைக் கடந்து, அகநகரின் எல்லையைச் சார்தல்

கடி மதில் வாயில் காவலின் சிறந்த
அடல் வாள் யவனர்க்கு அயிராது புக்கு—ஆங்கு,

ஆயிரம்கண் ணுேன் அருங்கலச் செப்பு
வாய் திறந்தன்ன மதில் அக வரைப்பில்—

கடை கழி மகளிரின் பொழுது போக்கு

காலைப்பொழுதைக் கழித்தல்

குட காற்று எறிந்து, கொடி நுடங்கு மறுகின்
கடை கழி மகளிர் காதல் அம் செல்வரொடு
வரு புனல் வையை மருது ஓங்கு முன் துறை
விரி பூந் துருத்தி வெண் மணல் அடைகரை
ஓங்கு நீர்மாடமொடு நாவாய் இயக்கி,
பூம் புணை தழீஇ, புனல் ஆட்டு அமர்ந்து—

நண்பகலில் பொழுதுபோக்கு

தண் நறு முல்லையும், தாழ் நீர்க் குவளேயும்,
கண் அவிழ் நெய்தலும், கதுப்பு உற அடைச்சி;
வெண் பூ மல்லிகை விரியலொடு தொடர்ந்த
தண் செங்கழுநீர்த் தாது விரி பிணேயல்
கொற்கை அம் பெரும் துறை முத்தொடு பூண்டு;
தெக்கண மலயகச் செழுஞ் சேறு ஆடி,
பொன் கொடி மூதூர்ப் பொழில் ஆட்டு அமர்ந்து-ஆங்கு—

அந்திப் பொழுதைக் கழித்தல்

எல் படு பொழுதின் இள நிலா முன்றில்,
தாழ்தரு கோலம் தகை பாராட்ட,
வீழ் பூஞ் சேக்கைமேல் இனிது இருந்து-ஆங்கு—

கடை கழி மகளிர் காலத்திற்கு ஏற்ற இன்பங்களில் ஈடுபடுதல்

கார் காலம்

அரத்தப் பூம் பட்டு அரைமிசை உடீஇ,
குரல் தலேக் கூந்தல் குடசம் பொருந்தி,
சிறுமலேச் சிலம்பின் செங் கூதாளமொடு
நறு மலர்க் குறிஞ்சி நாள் மலர் வேய்ந்து,
குங்கும வருணம் கொங்கையின் இழைத்து,
செங் கொடுவேரிச் செழும் பூம் பிணேயல்
சிந்துரச் சுண்ணம் சேர்ந்த மேனியில்
அம் துகிர்க் கோவை அணியொடு பூண்டு,
மலேச் சிறகு அரிந்த வச்சிர வேந்தற்குக்
கலி கெழு கூடல் செவ்வணி காட்ட,
கார் அரசாளன் வாடையொடு வரூஉம்
காலம் அன்றியும்—

கூதிர்க் காலம்

நூலோர் சிறப்பின்,
முகில் தோய் மாடத்து; அகில் தரு விறகின்
மடவரல் மகளிர் தடவு நெருப்பு அமர்ந்து;
நறுஞ் சாந்து அகலத்து நம்பியர்-தம்மொடு
குறுங்கண் அடைக்கும் கூதிர்க் காலேயும்—

முன்பனிக் காலம்

வள மனை மகளிரும் மைந்தரும் விரும்பி,
இள நிலா முன்றிலின் இள வெயில் நுகர,
விரி கதிர் மண்டிலம் தெற்கு ஏர்பு, வெண் மழை
அரிதின் தோன்றும் அச்சிரக் காலேயும்—

பின்பனிக் காலம்

ஆங்கு அது அன்றியும், 'ஓங்கு இரும் பரப்பின்
வங்க ஈட்டத்துத் தொண்டியோர் இட்ட
அகிலும், துகிலும், ஆரமும், வாசமும்,
தொகு கருப்பூரமும், சுமந்துடன் வந்த
கொண்டலொடு புகுந்து, கோமகன் கூடல்
வெங் கண் நெடு வேள் வில்விழாக் காணும்
பங்குனி முயக்கத்துப் பனி அரசு யாண்டு உளன்?—

இளவேனிலே வரவேற்றல்

கோதை மாதவி கொழுங் கொடி எடுப்ப,
காவும் கானமும் கடி மலர் ஏந்த,
தென்னவன் பொதியில் தென்றலொடு புகுந்து,
மன்னவன் கூடல் மகிழ் துணை தழூஉம்
இன் இளவேனில் யாண்டு உளன்கொல்?' என்று,
உருவக் கொடியோர் உடைப் பெரும் கொழுநரொடு
பருவம் எண்ணும் படர் தீர் காலை—

வேனில் காலக் கடை நாளில் பொழுதுபோக்கு

கன்று அமர் ஆயமொடு களிற்றினம் நடுங்க
என்றூழ் நின்ற குன்று கெழு நல் நாட்டுக்
காடு தீப் பிறப்ப, கனை எரி பொத்தி,
கோடையொடு புகுந்து, கூடல் ஆண்ட
வேனில் வேந்தன் வேற்றுப் புலம் படர,
ஓசனிக்கின்ற உறு வெயில் கடை நாள்—
வையமும், சிவிகையும், மணிக் கால் அமளியும்,
உய்யானத்தின் உறு துணை மகிழ்ச்சியும்,
சாமரைக் கவரியும், தமனிய அடைப்பையும்,

கூர் நுனை வாளும், கோமகன் கொடுப்ப;
பெற்ற செல்வம் பிறழா வாழ்க்கைப்
பொன் தொடி மடந்தையர் புது மணம் புணர்ந்து;
செம் பொன் வள்ளத்து, சிலதியர் ஏந்திய
அம் தீம் தேறல் மாந்தினர் மயங்கி;
பொறி வரி வண்டு இனம் புல்லுவழி அன்றியும்
நறு மலர் மாலையின் வறிது இடம் கடிந்து-ஆங்கு:
இலவு இதழ்ச் செவ் வாய் இள முத்து அரும்ப,
புலவிக் காலத்துப் போற்றுது உரைத்த
காவி அம் கண்ணுர் கட்டுரை எட்டுக்கு
நாவொடு நவிலா நகைபடு கிளவியும்;
அம் செங்கழுநீர் அரும்பு அவிழ்த்தன்ன,
செங் கயல், நெடுங் கண் செழுங் கடைப் பூசலும்;
கொலை வில் புருவத்துக் கொழுங் கடை சுருள,
திலகச் சிறு நுதல் அரும்பிய வியரும்;
செவ்வி பார்க்கும் செழுங் குடிச் செல்வரொடு
வையம் காவலர் மகிழ்தரு வீதியும்—

பதியிலாரின் இரு பெரு வீதிகள்

சுடுமண் ஏரு வடு நீங்கு சிறப்பின்
முடி அரசு ஒடுங்கும் கடி மனை வாழ்க்கை,
வேத்தியல், பொதுவியல், என இரு திறத்து,
மாத்திரை அறிந்து, மயங்கா மரபின்
ஆடலும், வரியும், பாணியும், தூக்கும்,
கூடிய குயிலுவக் கருவியும் உணர்ந்து,
நால் வகை மரபின் அவினயக் களத்தினும்
ஏழ் வகை நிலத்தினும் எய்திய விரிக்கும்
மலைப்பு-அரும் சிறப்பின் தலைக்கோல் அரிவையும்;
வாரம் பாடும் தோரிய மடந்தையும்;
தலைப் பாட்டுக் கூத்தியும்; இடைப் பாட்டுக் கூத்தியும்;
நால் வேறு வகையின் நயத்தகு மரபின்
எட்டுக் கடை நிறுத்த ஆயிரத்து எண் கழஞ்சு
முட்டா வைகல் முறைமையின் வழாஅத்
தாக்கு அணங்கு அனையார் நோக்கு வலைப்பட்டு, ஆங்கு,
அரும் பெறல் அறிவும் பெரும்பிறிது ஆக,
தவத்தோர் ஆயினும், தகை மலர் வண்டின்
நகைப் பதம் பார்க்கும் இளையோர் ஆயினும்,
காம விருந்தின் மடவோர் ஆயினும்,
ஏம வைகல் இன் துயில் வதியும்
பண்ணும் கிளையும் பழித்த தீம் சொல்
எண்-எண் கலையோர் இரு பெரு வீதியும்—

அங்காடி வீதி

வையமும், பாண்டிலும், மணித் தேர்க் கொடுஞ்சியும்,
மெய் புகு கவசமும், வீழ் மணித் தோட்டியும்,
அதள் புனை அரணமும், அரியாயோகமும்,
வளைதரு குழியமும், வால் வெண் கவரியும்,
ஏனப் படமும், கிடுகின் படமும்,
கானப் படமும், காழ் ஊன்று கடிகையும்,
செம்பின் செய்நவும், கஞ்சத் தொழிலவும்,
வம்பின் முடிநவும், மாலையின் புனைநவும்,
வேதினத் துப்பவும், கோடு கடை தொழிலவும்,
புகையவும், சாந்தவும், பூவின் புனைநவும்,
வகை தெரிவு-அறியா வளம் தலைமயங்கிய,
அரசு விழை திருவின் அங்காடி வீதியும்—

இரத்தினக் கடைத்தெரு

காகபாதமும், களங்கமும், விந்துவும்,
ஏகையும் நீங்கி, இயல்பின் குன்று
நூலவர் நொடிந்த நுழை நுண் கோடி
நால் வகை வருணத்து நலம் கேழ் ஒளியவும்;
ஏகையும் மாலையும் இருளொடு துறந்த
பாசு ஆர் மேனிப் பசுங் கதிர் ஒளியவும்;
பதுமமும், நீலமும், விந்தமும், படிதமும்,
விதி முறை பிழையா விளங்கிய சாதியும்;
பூச உருவின் பொலம் தெளித்தனையவும்;
தீது அறு கதிர் ஒளித் தெண் மட்டு உருவவும்;
இருள் தெளித்தனையவும்; இரு வேறு உருவவும்;
ஒருமைத் தோற்றத்து ஐ-வேறு வனப்பின்
இலங்கு கதிர் விடூஉம் நலம் கெழு மணிகளும்;
காற்றினும், மண்ணினும், கல்லினும், நீரினும்,
தோற்றிய குற்றம் துகள் அறத் துணிந்தவும்;
சந்திர-குருவே, அங்காரகன், என
வந்த நீர்மைய வட்டத் தொகுதியும்;
கருப்பத் துளையவும், கூல்லிடை முடங்கலும்,
திருக்கும், நீங்கிய செங் கொடி வல்லியும்;
வகை தெரி மாக்கள் தொகைபெற்று ஓங்கிப்
பகை தெறல் அறியாப் பயம் கெழு வீதியும்—

பொன் கடைத்தெரு

சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம்,
சாம்பூநதம் என ஓங்கிய கொள்கையின்
பொலம் தெரி மாக்கள் கலங்கு அளுர் ஒழித்து, ஆங்கு,
இலங்கு கொடி எடுக்கும் நலம் கிளர் வீதியும்—

அறுவை வீதி

நூலினும், மயிரினும், நுழை நூல் பட்டினும்
பால் வகை தெரியாப் பல் நூறு அடுக்கத்து,
நறு மடி செறிந்த அறுவை வீதியும்—

கூல வீதி

நிறைக் கோல் துலாத்தர், பறைக் கண் பராரையர்,
அம்பண அளவையர், எங்கணும் திரிதர,
காலம் அன்றியும், கருங் கறி மூடையொடு
கூலம் குவித்த கூல வீதியும்—

பற்பல வீதிகளையும் கண்டு, கோவலன் புறஞ்சேரிக்கு மீளுதல்

பால் வேறு தெரிந்த நால் வேறு தெருவும்,
அந்தியும், சதுக்கமும், ஆவண வீதியும்,
மன்றமும், கவலையும், மறுகும்—திரிந்து,
விசும்பு அகடு திருகிய வெங் கதிர் நுழையாப்
பசுங் கொடிப் படாகைப் பந்தர் நீழல்,
காவலன் பேர்ஊர் கண்டு, மகிழ்வு எய்தி,
கோவலன் பெயர்ந்தனன், கொடி மதில் புறத்து-என்.

15. அடைக்கலக் காதை

கவுந்திக்கு மதுரையின் காட்சியையும் அரசனின் கொற்றத்தையும் கோவலன் உரைத்தல்

நிலம் தரு திருவின் நிழல் வாய் நேமி
கடம் பூண்டு உருட்டும் கௌரியர் பெரும் சீர்க்
கோலின் செம்மையும், குடையின் தண்மையும்,
வேலின் கொற்றமும், விளங்கிய கொள்கை,
பதி எழு அறியாப் பண்பு மேம்பட்ட
மதுரை மூதூர் மா நகர் கண்டு; ஆங்கு,
அறம் தரு நெஞ்சின் அறவோர் பல்கிய
புறஞ்சிறை மூதூர்ப் பொழிலிடம் புகுந்து;
தீது தீர் மதுரையும், தென்னவன் கொற்றமும்,
மாதவத்துஆட்டிக்குக் கோவலன் கூறுழி—

மாடல மறையவன் வர, கோவலன் அவனை வணங்குதல்

தாழ் நீர் வேலித் தலைச்செங்கானத்து,
நான்மறை முற்றிய நலம் புரி கொள்கை
மா மறை முதல்வன் மாடலன் என்போன்

மா தவ முனிவன் மலே வலம் கொண்டு,
குமரி அம் பெரும் துறை கொள்கையின் படிந்து,
தமர்முதல் பெயர்வோன், தாழ் பொழில் ஆங்கண்,
வகுந்து செல் வருத்தத்து வான் துயர் நீங்க,
கவுந்தி இடவயின் புகுந்தோன்-தன்னே,
கோவலன் சென்று சேவடி வணங்க—

கோவலன் செய்த அறங்களே மாடலன் பாராட்டி,
அவன் மனேவியுடன் தனியாக மதுரை வந்ததற்கு இரங்குதல்

நா வல் அந்தணன் தான் நவின்று, உரைப்போன்—

முதுமறையோனே மத யானேயிடமிருந்து விடுவித்தமை

'வேந்து உறு சிறப்பின் விழுச் சீர் எய்திய,
மாந்தளிர் மேனி, மாதவி மடந்தை
பால் வாய்க் குழவி பயந்தனள் எடுத்து,
வாலாமை நாள் நீங்கிய பின்னர்,
மா முது கணிகையர், ''மாதவி மகட்கு
நாம நல் உரை நாட்டுதும்'' என்று,
தாம் இன்புறூஉம் தகை மொழி கேட்டு, ஆங்கு,
''இடை இருள் யாமத்து எறி திரைப் பெரும் கடல்
உடை கலப்பட்ட எம் கோன் முன் நாள்
புண்ணிய தானம் புரிந்தோன் ஆகலின்,
நண்ணு வழி இன்றி, நாள் சில நீந்த,
'இந்திரன் ஏவலின் ஈங்கு வாழ்வேன்;
வந்தேன்; அஞ்சல்; மணிமேகலே யான்;
உன் பெரும் தானத்து உறுதி ஒழியாது;
துன்பம் நீங்கித் துயர்க் கடல் ஒழிக' என,
விஞ்சையின் பெயர்த்து, விழுமம் தீர்த்த,
எம் குலதெய்வப் பெயர் ஈங்கு இடுக'' என:
அணி மேகலேயார் ஆயிரம் கணிகையர்,
''மணிமேகலே'' என வாழ்த்திய ஞான்று;
மங்கல மடந்தை மாதவி-தன்னெடு
செம் பொன் மாரி செங் கையின் பொழிய;
ஞான நல் நெறி நல் வரம்பு ஆயோன்,
தானம் கொள்ளும் தகைமையின் வருவோன்,
தளர்ந்த நடையின் தண்டு கால் ஊன்றி,
வளேந்த யாக்கை மறையோன்-தன்னே;
பாகு கழிந்து, யாங்கணும் பறை பட, வருஉம்
வேக யானே வெம்மையின் கைக்கொள;
ஓய் எனத் தெழித்து, ஆங்கு, உயர் பிறப்பாளனேக்

கைஅகத்து ஒழித்து, அதன் கைஅகம் புக்கு,
பொய் பொரு முடங்கு கை வெண் கோட்டு அடங்கி,
மை இருங் குன்றின் விஞ்சையன் ஏய்ப்ப,
பிடர்த்தலை இருந்து, பெரும் சினம் பிறழாக்
கடக் களிறு அடக்கிய கருணை மறவ!

கிரியைக் கொன்ற பார்ப்பனியின் துயர் தீர்த்தமை

பிள்ளை நகுலம் பெரும்பிறிது ஆக,
எள்ளிய மனையோள் இனைந்து பின் செல்ல,
வட திசைப் பெயரும் மா மறையாளன்,
''கடவது அன்று நின் கைத்து ஊண் வாழ்க்கை;
வடமொழி வாசகம் செய்த நல் ஏடு
கடன் அறி மாந்தர் கை நீ கொடுக்க''என,
பீடிகைத் தெருவின் பெருங்குடி வாணிகர்
மாட மறுகின் மனைதொறும் மறுகி,
''கருமக் கழி பலம் கொள்மினே'' எனும்
அரு மறைஆட்டியை அணுகக் கூஉய்,
''யாது நீ உற்ற இடர்? ஈது என்?'' என,
மாதர் தான் உற்ற வான் துயர் செப்பி,
''இப் பொருள் எழுதிய இதழ்-இது வாங்கி,
கைப் பொருள் தந்து, என் கடுந் துயர் களைக''என,
''அஞ்சல்! உன்-தன் அரும் துயர் களைகேன்;
நெஞ்சு உறு துயரம் நீங்குக'' என்று, ஆங்கு,
ஒத்து உடை அந்தணர் உரை-நூல் கிடக்கையின்,
தீத் திறம் புரிந்தோள் செய் துயர் நீங்க,
தானம் செய்து, அவள்-தன் துயர் நீக்கி,
கானம் போன கணவனைக் கூட்டி,
ஒல்காச் செல்வத்து உறு பொருள் கொடுத்து,
நல்வழிப் படுத்த செல்லாச் செல்வ!

பூதம் கொன்ற தியோனின் சுற்றத்தாரைப் பாதுகாத்தமை

பத்தினி ஒருத்தி படிற்று உரை எய்த,
மற்று அவள் கணவற்கு வறியோன் ஒருவன்,
அறியாக் கரி பொய்த்து, அறைந்து உணும் பூதத்துக்
கறை கெழு பாசத்துக்கை அகப்படலும்,
பட்டோன் தவ்வை படு துயர் கண்டு,
கட்டிய பாசத்துக் கடிது சென்று எய்தி,
''என் உயிர் கொண்டு, ஈங்கு இவன் உயிர் தா'' என,
நல் நெடும் பூதம் நல்காதாகி,
''நரகன் உயிர்க்கு நல் உயிர் கொண்டு,
பரகதி இழக்கும் பண்பு ஈங்கு இல்லை;

ஒழிக, நின் கருத்து'' என, உயிர் முன் புடைப்ப,
அழிதரும் உள்ளத்து-அவளொடும் போந்து, அவன்
சுற்றத்தோர்க்கும் தொடர்பு உறு கிளைகட்கும்
பற்றிய கிளைஞரின் பசிப்பிணி அறுத்து,
பல் ஆண்டு புரந்த இல்லோர் செம்மல்!
இம்மைச் செய்தன யான் அறி நல்வினை;
உம்மைப் பயன்கொல், ஒரு தனி உழந்து, இத்
திருத்தகு மா மணிக் கொழுந்துடன் போந்தது,
விருத்த கோபால! நீ?' என வினவ—

கோவலன் தான் கண்ட கனவைக் கூறுதல்

கோவலன் கூறும்: 'ஓர் குறுமகன்-தன்னுள்,
காவல் வேந்தன் கடி நகர்-தன்னில்,
நாறு ஐங் கூந்தல் நடுங்கு துயர் எய்த,
கூறை கோள்பட்டுக் கோட்டு மா ஊரவும்;
அணித்தகு புரி குழல் ஆய்-இழை-தன்னெடும்
பிணிப்பு அறுத்தோர்-தம் பெற்றி எய்தவும்;
மா மலர் வாளி வறு நிலத்து எறிந்து,
காமக்கடவுள் கையற்று ஏங்க,
அணி திகழ் போதி அறவோன்-தன் முன்,
மணிமேகலையை மாதவி அளிப்பவும்;
நனவு போல, நள் இருள் யாமத்து,
கனவு கண்டேன்: கடிது ஈங்கு உறும்' என—

கவுந்தியும் மாடலனும் கோவலனுக்குக் கூறிய ஆறுதல் உரைகள்

'அறத்து உறை மாக்கட்கு அல்லது, இந்தப்
புறச்சிறை இருக்கை பொருந்தாது; ஆகலின்,
அரைசர் பின்னோர் அகநகர் மருங்கின் நின்
உரையின் கொள்வர்; இங்கு ஒழிக நின் இருப்பு;
காதலி-தன்னெடு கதிர் செல்வதன்முன்,
மாட மதுரை மா நகர் புகுக' என,
மாதவத்துஆட்டியும் மா மறை முதல்வனும்
கோவலன்-தனக்குக் கூறும்காலை—

மாதரி என்னும் ஆயர் குல முதுமகள் கவுந்தியை வணங்குதல்

அறம் புரி நெஞ்சின் அறவோர் பல்கிய
புறஞ்சிறை மூதூர்ப் பூங் கண் இயக்கிக்குப்
பால்மடை கொடுத்து, பண்பின் பெயர்வோள்,
ஆயர் முதுமகள், மாதரி என்போள்,
காவந்தி ஐயையைக் கண்டு, அடி தொழலும்—

கவுந்தி மாதரியிடம் கண்ணகியை அடைக்கலமாகக் கொடுத்தல்

'ஆ காத்து ஓம்பி, ஆப் பயன் அளிக்கும்
கோவலர் வாழ்க்கை ஓர் கொடும்பாடு இல்லை;
தீது இலள்; முதுமகள்; செவ்வியள்; அளியள்;
மாதரி-தன்னுடன் மடந்தையை இருத்துதற்கு
ஏதம் இன்று' என எண்ணினளாகி,
'மாதரி! கேள்; இம் மடந்தை-தன் கணவன்
தாதையைக் கேட்கின், தன் குலவாணர்
அரும் பொருள் பெறுநரின் விருந்து எதிர்கொண்டு,
கருந் தடங் கண்ணியொடு கடி மனைப் படுத்துவர்;
உடைப் பெரும் செல்வர் மனைப் புகும் அளவும்,
இடைக்குல மடந்தைக்கு அடைக்கலம் தந்தேன்—

கவுந்தி அடிகள் மாதரியிடம் கண்ணகியைப் போற்றும் வகை கூறி, அவளைப் பாராட்டி உரைத்தல்

மங்கல மடந்தையை நல் நீர் ஆட்டி,
செங் கயல் நெடுங் கண் அஞ்சனம் தீட்டி,
தே மென் கூந்தல் சில் மலர் பெய்து,
தூ மடி உடீஇ; தொல்லோர் சிறப்பின்
ஆயமும், காவலும், ஆய்-இழை-தனக்கு,
தாயும், நீயே ஆகித் தாங்கு: ஈங்கு,
என்னொடு போந்த இளங் கொடி நங்கை-தன்
வண்ணச் சீறடி மண்மகள் அறிந்திலள்:
கடுங் கதிர் வெம்மையின் காதலன்-தனக்கு
நடுங்கு துயர் எய்தி, நாப் புலர வாடி,
தன் துயர் காணத் தகைசால் பூங்கொடி,
இன் துணை மகளிர்க்கு இன்றியமையாக்
கற்புக் கடம் பூண்ட இத் தெய்வம் அல்லது,
பொற்பு உடைத் தெய்வம் யாம் கண்டிலமால்:
வானம் பொய்யாது; வளம் பிழைப்பு அறியாது;
நீள் நில வேந்தர் கொற்றம் சிதையாது;
பத்தினிப் பெண்டிர் இருந்த நாடு: என்னும்
அத்தகு நல் உரை அறியாயோ நீ?—

தவத்தோர் தரும் அடைக்கலப் பொருளினால் வரும் இன்பம் பற்றிக் கவுந்தி அடிகள் மாதரிக்கு உரைத்தல்

தவத்தோர் அடைக்கலம்-தான் சிறிது ஆயினும்,
மிகப் பேர் இன்பம் தரும்; அது கேளாய்:
காவிரிப் படப்பைப் பட்டினம்-தன்னுள்
பூவிரி பிண்டிப் போது நீங்கு திரு நிழல்,

உலக நோன்பிகள் ஒருங்குடன் இட்ட
இலகு ஒளிச் சிலாதலமேல் இருந்தருளி,
தருமம் சாற்றும் சாரணர்-தம் முன்;
திருவில் இட்டுத் திகழ்தரு மேனியன்,
தாரன், மாலையன், தமனியப் பூணினன்,
பாரோர் காணுப் பலர் தொழு படிமையன்,
கரு விரல் குரங்கின் கை ஒரு பாகத்துப்
பெரு விறல் வானவன் வந்து நின்றோனே;
சாவகர் எல்லாம் சாரணர்த் தொழுது, ''ஈங்கு
யாது இவன் வரவு?'' என, இறையோன் கூறும்:

சாரணர் கூறிய குரங்குக்கை வானவனது வரலாறு

''எட்டி சாயலன் இருந்தோன்-தனது
பட்டினி நோன்பிகள் பலர் புகு மனையில், ஓர்
மாதவ முதல்வனை மனைப் பெரும் கிழத்தி
ஏதம் நீங்க எதிர்கொள் அமயத்து,
ஊர்ச் சிறு குரங்கு ஒன்று ஒதுங்கி, உள்புக்கு,
பாற்படு மாதவன் பாதம் பொருந்தி,
உண்டு ஒழி மிச்சிலும் உகுத்த நீரும்
தண்டா வேட்கையின் தான் சிறிது அருந்தி,
எதிர் முகம் நோக்கிய இன்பச் செவ்வியை
அதிராக் கொள்கை அறிவனும் நயந்து, 'நின்
மக்களின் ஓம்பு, மனைக்கிழத்தி!' என,
மிக்கோன் கூறிய மெய்ம்மொழி ஓம்பி;
காதல் குரங்கு கடைநாள் எய்தவும்,
தானம் செய்வுழி, அதற்கு ஒரு கூறு
'தீது அறுக' என்றே செய்தனள்: ஆதலின்,
மத்திம நல் நாட்டு வாரணம்-தன்னுள்,
உத்தர-கௌத்தற்கு ஒரு மகன் ஆகி;
உருவினும், திருவினும், உணர்வினும், தோன்றி;
பெரு விறல் தானம் பலவும் செய்து; ஆங்கு,
எண்-நால் ஆண்டின் இறந்த பிற்பாடு;
விண்ணோர் வடிவம் பெற்றனன்: ஆதலின்,
'பெற்ற செல்வப் பெரும் பயன் எல்லாம்
தற்காத்து அளித்தோள் தானச் சிறப்பு' என,
பண்டைப் பிறப்பில் குரங்கின் சிறு கை
கொண்டு, ஒரு பாகத்து; 'கொள்கையின் புணர்ந்த
சாயலன் மனைவி தானம்-தன்னுல்
ஆயினன் இவ் வடிவு; அறிமினே' என,
சாவகர்க்கு எல்லாம் சாற்றினன் காட்டத்
தேவ குமரன் தோன்றினன்'' என்றலும்—

கவுந்தி மாதரியிடம் 'கண்ணகியை அழைத்துச் செல்க' எனல்

சாரணர் கூறிய தகைசால் நல்மொழி
ஆர் அணங்கு ஆக, அறம் தலைப்பட்டோர்
அன்று அப் பதியுள் அரும் தவ மாக்களும்,
தன் தெறல் வாழ்க்கைச் சாவக மாக்களும்,
இட்ட தானத்து எட்டியும், மனைவியும்,
முட்டா இன்பத்து முடிவுலகு எய்தினர்:
கேட்டனை ஆயின், தோட்டு-ஆர் குழலியொடு
நீட்டித்திராது, நீ போக' என்றே
கவுந்தி கூற—

மாதரி கண்ணகியுடன் மாலையில் தன் மனைக்குச் செல்லுதல்

உவந்தனள் ஏத்தி,
வளர் இள வன முலை, வாங்கு அமைப் பணைத் தோள்,
முளை இள வெண் பல், முதுக்குறை நங்கையொடு;
சென்ற ஞாயிற்றுச் செல் சுடர் அமயத்து;
கன்று தேர் ஆவின் கனை குரல் இயம்ப,
மறித் தோள் நவியத்து உறிக் காவாளரொடு
செறி வளை ஆய்ச்சியர் சிலர் புறம் சூழ;
மிளையும், கிடங்கும், வளை வில் பொறியும்,
கரு விரல் ஊகமும், கல் உமிழ் கவணும்,
பரிவுறு வெந் நெயும், பாகு அடு குழிசியும்,
காய் பொன் உலையும், கல் இடு கூடையும்,
தூண்டிலும், தொடக்கும், ஆண்டலை அடுப்பும்,
கவையும், கழுவும், புதையும், புழையும்,
ஐயவித் துலாமும், கை பெயர் ஊசியும்,
சென்று எறி சிரலும், பன்றியும், பணையும்,
எழுவும், சீப்பும், முழு விறல் கணையமும்,
கோலும், குந்தமும், வேலும், பிறவும்,
ஞாயிலும், சிறந்து, நாள் கொடி நுடங்கும்
வாயில் கழிந்து; தன் மனை புக்கனளால்—
கோவலர் மடந்தை கொள்கையின் புணர்ந்து-என்.

16. கொலைக்களக் காதை

மாதரி கண்ணகியைத் தக்கதோர் இல்லத்தில் சேர்த்து,
அவளுக்கு வேண்டும் பணி செய்வதற்கு, ஏற்றவர்களை நியமித்தல்

அரும் பெறல் பாவையை அடைக்கலம் பெற்ற
இரும் பேர் உவகையின் இடைக் குல மடந்தை
அளை விலை உணவின் ஆய்ச்சியர்-தம்மொடு

மிஞை சூழ் கோவலர் இருக்கை அன்றி,
பூவல் ஊட்டிய புனை மாண் பந்தர்க்
காவல் சிற்றில் கடி மனைப் படுத்து;
செறி வளை ஆய்ச்சியர் சிலருடன் கூடி,
நறு மலர்க் கோதையை நாள்-நீர் ஆட்டி;
'கூடல் மகளிர் கோலம் கொள்ளும்
ஆடகப் பைம் பூண் அரு விலை அழிப்ப,
செய்யாக் கோலமொடு வந்தீர்க்கு என் மகள்
ஐயை, காணீர், அடித்தொழில்ஆட்டி;
பொன்னின் பொதிந்தேன், புனை பூங் கோதை!
என்னுடன் நங்கை, ஈங்கு இருக்க' எனத் தொழுது,
'மாதவத்துஆட்டி வழித் துயர் நீக்கி,
ஏதம் இல்லா இடம் தலைப்படுத்தினள்;
நோதகவு உண்டோ, நும் மகனுர்க்கு இனி?—
சாவக நோன்பிகள் அடிகள் ஆதலின்,
நாத்துரண் நங்கையொடு நாள் வழிப்படூஉம்
அடிசில் ஆக்குதற்கு அமைந்த நல் கலங்கள்
நெடியாது அளிமின், நீர்' எனக் கூற—

இடைக்குல மடந்தையர் கண்ணகிக்குக் கொடுத்த பொருள்கள்

இடைக்குல மடந்தையர், இயல்பின் குன்ரு
மடைக்கலம்-தன்னொடு மாண்பு உடை மரபின்
கோளிப் பாகல் கொழுங் கனித் திரள் காய்,
வாள் வரிக் கொடுங் காய், மாதுளம் பசுங் காய்,
மாவின் கனியொடு வாழைத் தீங் கனி,
சாலி அரிசி, தம் பால் பயனொடு,
'கோல் வளை மாதே! கொள்க' எனக் கொடுப்ப—

ஐயையின் உதவியுடன் கண்ணகி அமுது ஆக்கல்

மெல் விரல் சிவப்ப, பல் வேறு பசுங் காய்
கொடு வாய்க் குயத்து விடுவாய்செய்ய,
திரு முகம் வியர்த்தது; செங் கண் சேந்தன;
கரி புற அட்டில் கண்டனள் பெயர,
வை எரி மூட்டிய ஐயை-தன்னொடு
கை அறி மடைமையின் காதலற்கு ஆக்கி—

கோவலனுக்குக் கண்ணகி உணவு படைத்தல்

தாலப் புல்லின் வால் வெண் தோட்டுக்
கை வல் மகடூஉக் குவின் பெறப் புனைந்த
செய் வினைத் தவிசில் செல்வன் இருந்தபின்,

கடி மலர் அங்கையின் காதலன் அடி நீர்
சுடு மண் மண்டையின் தொழுதனள் மாற்றி,
மண்ணக மடந்தையை மயக்கு ஒழிப்பனள்போல்,
தண்ணீர் தெளித்து, தன் கையால் தடவி,
குமரி வாழையின் குருத்துஅகம் விரித்து-ஈங்கு,
'அமுதம் உண்க, அடிகள்! ஈங்கு' என;
அரசர் பின்னோர்க்கு அரு மறை மருங்கின்
உரிய எல்லாம் ஒரு முறை கழித்து—

ஐயையும் மாதரியும் கோவலனையும் கண்ணகியையும் பாராட்டுதல்

'ஆங்கு,
ஆயர் பாடியின் அசோதை பெற்றெடுத்த
பூவைப் புது மலர் வண்ணன்கொல்லோ,
நல் அமுது உண்ணும் நம்பி! ஈங்கு,
பல் வளைத் தோளியும் பண்டு நம் குலத்து,
தொழுனை யாற்றினுள் தூ மணி வண்ணனை
விழுமம் தீர்த்த விளக்குக்கொல்!' என;
ஐயையும் தவ்வையும் விம்மிதம் எய்தி,
'கண் கொளா நமக்கு, இவர் காட்சி, ஈங்கு' என—

கோவலன் கண்ணகியை நோக்கி, கழிந்ததற்கு இரங்கிக் கூறுதல்

உண்டு இனிது இருந்த உயர் பேராளற்கு
அம் மென் திரையலோடு அடைக்காய் ஈத்த
மை ஈர் ஓதியை, 'வருக' எனப் பொருந்தி,
''கல் அதர் அத்தம் கடக்க யாவதும்
வல்லுநகொல்லோ மடந்தை மெல் அடி!'' என,
வெம் முனை அரும் சுரம் போந்ததற்கு இரங்கி,
எம் முதுகுரவர் என் உற்றனர்கொல்?
மாயம்கொல்லோ? வல் வினைகொல்லோ?
யான் உளம் கலங்கி யாவதும் அறியேன்:
வறு மொழியாளரொடு வம்பப் பரத்தரொடு
குறு மொழிக் கோட்டி, நெடு நகை புக்கு,
பொச்சாப்புண்டு, பொருள் உரையாளர்
நச்சுக் கொன்றேற்கு நல் நெறி உண்டோ?
இரு முதுகுரவர் ஏவலும் பிழைத்தேன்;
சிறு முதுக்குறைவிக்குச் சிறுமையும் செய்தேன்;
வழு எனும் பாரேன்; மா நகர் மருங்கு ஈண்டு
எழுக என எழுந்தாய்; என் செய்தனை!' என—

கண்ணகியின் பணிவுரை

'அறவோர்க்கு அளித்தலும், அந்தணர் ஓம்பலும்,
துறவோர்க்கு எதிர்தலும், தொல்லோர் சிறப்பின்

விருந்து எதிர்கோடலும், இழந்த என்னை, நும்
பெருமகள்-தன்னெடும் பெரும் பெயர்த் தலைத் தாள்
மன் பெரும் சிறப்பின் மா நிதிக் கிழவன்
முந்தை நில்லா முனிவு இகந்தனனை,
அற்பு உளம் சிறந்து ஆங்கு, அருள் மொழி அளைஇ,
என் பாராட்ட, யான் அகத்து ஒளித்த
நோயும் துன்பமும் நொடிவது போலும் என்
வாய் அல் முறுவற்கு அவர் உள்அகம் வருந்த,
போற்ரு ஒழுக்கம் புரிந்தீர்; யாவதும்
மாற்ரு உள்ள வாழ்க்கையேன்ஆதலின்,
ஏற்று எழுந்தனன், யான்' என்று அவள் கூற—

கோவலன் கண்ணகியைப் பாராட்டி, 'ஒரு சிலம்பை எடுத்துச்
சென்று விற்று வருவேன்' என்று கூறி, விடைபெற்றுச் செல்லுதல்

'குடி முதல் சுற்றமும், குற்றேவோரும்;
அடியோர் பாங்கும், ஆயமும், நீங்கி;
நாணமும், மடனும், நல்லோர் ஏத்தும்,
பேணிய கற்பும், பெரும் துணை ஆக;
என்னெடு போந்து, ஈங்கு என் துயர் களைந்த
பொன்னே, கொடியே, புனை பூங் கோதாய்,
நாணின் பாவாய், நீள் நில விளக்கே,
கற்பின் கொழுந்தே, பொற்பின் செல்வி!
சீறடிச் சிலம்பின் ஒன்று கொண்டு, யான் போய்,
மாறி வருவன்; மயங்காதொழிக' என—
கருங் கயல் நெடுங் கண் காதலி-தன்னை
ஒருங்குடன் தழீஇ, உழையோர் இல்லா
ஒரு தனி கண்டு, தன் உள்அகம் வெதும்பி,
வரு பனி கரந்த கண்ணன் ஆகி,
பல் ஆன் கோவலர் இல்லம் நீங்கி,
வல்லா நடையின் மறுகில் செல்வோன்,

தீய நிமித்தம்

இமில் ஏறு எதிர்ந்தது, இழுக்கு என அறியான்,
தன் குலம் அறியும் தகுதி அன்று ஆதலின்—

கடைத் தெருவில் பொற்கொல்லனைக் கண்டு, கோவலன் வினவுதல்

தாது எரு மன்றம் தான் உடன் கழிந்து,
மாதர் வீதி மறுகிடை நடந்து,
பீடிகைத் தெருவில் பெயர்வோன்— ஆங்கண்,
கண்ணுள் வினைஞர், கைவினை முற்றிய
நுண்வினைக் கொல்லர், நூற்றுவர் பின் வர,

மெய்ப்பை புக்கு, விலங்கு நடைச் செலவின்
கைக் கோல் கொல்லனைக் கண்டனனாகி,
'தென்னவன் பெயரொடு சிறப்புப் பெற்ற
பொன் வினைக் கொல்லன் இவன்' எனப் பொருந்தி,
'காவலன் தேவிக்கு ஆவதோர் காற்கு அணி
நீ விலையிடுதற்கு ஆதியோ?' என—

பொற்கொல்லன் உரைத்த விடை

'அடியேன் அறியேன் ஆயினும், வேந்தர்
முடி முதல் கலன்கள் சமைப்பேன் யான்' என,
கூற்றத் தூதன் கைதொழுது ஏத்த—

கோவலன் சிலம்பைக் காட்ட, பொற்கொல்லன் அதன் தகுதி பற்றிக் கூறுதல்

போற்று-அரும் சிலம்பின் பொதி வாய் அவிழ்த்தனன்:
மத்தக மணியொடு வயிரம் கட்டிய
பத்திக் கேவணப் பசும் பொன் குடைச் சூல்
சித்திரச் சிலம்பின் செய்வினை எல்லாம்
பொய்த் தொழில் கொல்லன் புரிந்துடன் நோக்கி,
'கோப்பெருந்தேவிக்கு அல்லதை, இச் சிலம்பு
யாப்புறவு இல்லை' என—

வேந்தனுக்குச் சிலம்பு பற்றித் தெரிவித்து வருமளவும்
தன் குடிலில் தங்கியிருக்க என்று பொற்கொல்லன் சொல்ல, கோவலன்
அதன் அயலில் உள்ள தேவ கோட்டத்தின் மதில் புறத்துச் செல்லுதல்

'முன் போந்து,
விறல் மிகு வேந்தற்கு விளம்பி யான் வர, என்
சிறு குடில் அங்கண் இருமின் நீர்' என,
கோவலன் சென்று, அக் குறுமகன் இருக்கை ஓர்
தேவ கோட்டச் சிறை அகம் புக்கபின்—

பொற்கொல்லன் நிய எண்ணத்துடன் செல்லுதல்

'கரந்து யான் கொண்ட கால்-அணி ஈங்கு,
பரந்து வெளிப்படா முன்னம் மன்னற்கு,
புலம் பெயர் புதுவனின் போக்குவன் யான்' என,
கலங்கா உள்ளம் கரந்தனன் செல்வோன்—

கோப்பெருந்தேவியின் கோயில் நோக்கி மன்னவன் செல்லுதல்

'கூடல் மகளிர் ஆடல் தோற்றமும்,
பாடல் பகுதியும், பண்ணின் பயங்களும்,
காவலன் உள்ளம் கவர்ந்தன' என்று, தன்
ஊடல் உள்ளம் உள் கரந்து ஒளித்து,
தலை நோய் வருத்தம் தன்மேல் இட்டு,

குலமுதல் தேவி கூடாது ஏக,
மந்திரச் சுற்றம் நீங்கி, மன்னவன்
சிந்து அரி நெடுங் கண் சிலதியர்-தம்மொடு
கோப்பெருந்தேவி கோயில் நோக்கி,
காப்பு உடை வாயில் கடை காண் அகவையின்—

மன்னனைக் கண்டு பொற்கொல்லன் செய்தி தெரிவித்தல்

வீழ்ந்தனன் கிடந்து, தாழ்ந்து, பல ஏத்தி,
'கன்னகம் இன்றியும், கவைக்கோல் இன்றியும்,
துன்னிய மந்திரம் துணை எனக் கொண்டு,
வாயிலாளரை மயக்கு துயில் உறுத்து,
கோயில் சிலம்பு கொண்ட கள்வன்
கல்லென் பேர்ஊர்க் காவலர்க் கரந்து, என்
சில்லைச் சிறு குடில்அகத்து இருந்தோன்' என—

மன்னவன் வினவசத்தால் மயங்கி, காவலர்க்கு இட்ட கட்டளை

வினை விளை காலம்ஆதலின், யாவதும்
சினை அலர் வேம்பன் தேரான் ஆகி,
ஊர் காப்பாளரைக் கூவி, 'ஈங்கு என்
தாழ் பூங் கோதை-தன் கால் சிலம்பு
கன்றிய கள்வன் கையதுஆகின்,
கொன்று, அச் சிலம்பு கொணர்க ஈங்கு' என,
காவலன் ஏவ—

கோவலனிடம் காவலாளருடன் மீண்ட பொற்கொல்லன்,
'இவர் சிலம்பு காண வந்தோர்' என்று, சிலம்பைப் பற்றிக் கூறுதல்

கருந் தொழில் கொல்லனும்,
'ஏவல் உள்ளத்து எண்ணியது முடித்து' என,
தீவினை முதிர் வலைச் சென்று பட்டிருந்த
கோவலன்-தன்னைக் குறுகினனாகி—
'வலம் படு தானை மன்னவன் ஏவ,
சிலம்பு காணிய வந்தோர் இவர்' என,
செய்வினைச் சிலம்பின் செய்தி எல்லாம்
பொய் வினைக் கொல்லன் புரிந்துடன் காட்ட—

'கோவலன் கொலைப்படு மகன் அல்லன்' என்ற காவலாளர்க்குப்
பொற்கொல்லன் கள்வரின் இயல்புகளை எடுத்துரைத்தல்

'இலக்கண முறைமையின் இருந்தோன், ஈங்கு, இவன்
கொலைப்படு மகன் அலன்' என்று கூறும்
அரும் திறல் மாக்களை அகநகைத்து உரைத்து,
கருந் தொழில் கொல்லன் காட்டினன் உரைப்பேன்,

'மந்திரம், தெய்வம், மருந்தே, நிமித்தம்,
தந்திரம், இடனே, காலம், கருவி, என்று
எட்டுடன் அன்றே—இழுக்கு உடை மரபின்
கட்டு உண் மாக்கள் துணை எனத் திரிவது?
மருந்தில் பட்டோர் ஆயின், யாவரும்
பெரும் பெயர் மன்னனின் பெரு நவைப் பட்டோர்:

கள்வரின் எட்டுத் துணைகள்

மந்திரம் நாவிடை வழுத்துவர் ஆயின்,
இந்திர-குமரரின் யாம் காண்குவமோ?
தெய்வத் தோற்றம் தெளிகுவர் ஆயின்,
கைஅகத்து உறு பொருள் காட்டியும் பெயர்குவர்;
மருந்தின் நம்கண் மயக்குவர் ஆயின்,
இருந்தோம் பெயரும் இடனும்-மார் உண்டோ?
நிமித்தம் வாய்த்திடின் அல்லது, யாவதும்
புகற்கிலர், அரும் பொருள் வந்து கைப் புகுதினும்;
தந்திர-கரணம் எண்ணுவர் ஆயின்,
இந்திரன் மார்பத்து ஆரமும் எய்துவர்;
இவ் இடம் இப் பொருள் கோடற்கு இடம் எனின்,
அவ் இடத்து அவரை யார் காண்கிற்பார்?
காலம் கருதி அவர் பொருள் கையுறின்,
மேலோர் ஆயினும் விலக்கலும் உண்டோ?
கருவி கொண்டு அவர் அரும் பொருள் கையுறின்,
இரு நில மருங்கின் யார் காண்கிற்பார்?
இரவே பகலே என்று இரண்டு இல்லை;
கரவு இடம் கேட்பின், ஓர் புகல் இடம் இல்லை.

கள்வன் ஒருவனின் செய்தி

தூதர் கோலத்து வாயிலின் இருந்து,
மாதர் கோலத்து வல் இருள் புக்கு,
விளக்கு நிழலில் துளக்கிலன் சென்று, ஆங்கு,
இளங்கோ வேந்தன் துளங்கு ஒளி ஆரம்
வெயில் இடு வயிரத்து, மின்னின் வாங்க,
துயில்கண் விழித்தோன் தோளில் காணுன்
உடைவாள் உருவ, உறை கை வாங்கி,
எறிதொறும் செறித்த இயல்பிற்கு அரற்றுன்,
மல்லின் காண, மணித் தூண் காட்டி,
கல்வியின் பெயர்ந்த கள்வன்-தன்னைக்
கண்டோர் உளர்எனின் காட்டும்: ஈங்கு இவர்க்கு
உண்டோ உலகத்து ஒப்போர்?' என்று, அக்
கருந் தொழில் கொல்லன் சொல்ல—

காவல் இளைஞன் ஒருவன் கள்வனைப் பற்றிக் கூறிய நிகழ்ச்சி

ஆங்கு, ஓர்
திருந்து வேல் தடக் கை இளையோன் கூறும்:
'நிலன் அகழ் உளியன், நீலத் தானையன்,
கலன் நசை வேட்கையின் கடும் புலி போன்று,
மாரி நடு நாள் வல் இருள் மயக்கத்து,
ஊர் மடி கங்குல் ஒருவன் தோன்ற,
கை வாள் உருவ, என் கை வாள் வாங்க,
எவ்வாய் மருங்கினும் யான் அவன் கண்டிலேன்;
அரிது இவர் செய்தி; அலைக்கும் வேந்தனும்;
உரியது ஒன்று உரைமின், உறு படையீர்!' என—

கல்லாக் களிமகன் ஒருவன் வாளால் எறிய, கோவலன் குருதி சோர, மண்ணின்மேல் மாண்டு விழுதல்

கல்லாக் களிமகன் ஒருவன் கையில்
வெள் வாள் எறிந்தனன்; விலங்கூடு அறுத்தது;
புண் உமிழ் குருதி பொழிந்துடன் பரப்ப,
மண்ணக மடந்தை வான் துயர் கூர,
காவலன் செங்கோல் வளை இய, வீழ்ந்தனன்,
கோவலன் பண்டை ஊழ்வினை உருத்து-என்.

வெண்பா

நண்ணும், இரு வினையும்; நண்ணுமின்கள், நல் அறமே—
கண்ணகி-தன் கேள்வன் காரணத்தான், மண்ணில்
வளையாத செங்கோல் வளைந்ததே; பண்டை
விளைவாகி வந்த வினை.

17. ஆய்ச்சியர் குரவை

கயிறும் மத்தும் கொண்டு, மாதரி தயிர் கடைய முற்படுதல்

'கயல் எழுதிய இமய நெற்றியின்
அயல் எழுதிய புலியும் வில்லும்
நாவல் அம் தண் பொழில் மன்னர்
ஏவல் கேட்ப, பார் அரசு ஆண்ட
மாலை வெண்குடைப் பாண்டியன் கோயிலில்
காலை முரசம் கனை குரல் இயம்பும்: ஆகலின்,
நெய்ம் முறை நமக்கு இன்று ஆம்' என்று,
ஐயை தன் மகளைக் கூஉய்,
கடை கயிறும் மத்தும் கொண்டு,
இடை முதுமகள் வந்து தோன்றும்-மன்.

உரைப் பாட்டு மடை

மாதரி கண்ட உற்பாதங்கள்

குடப் பால் உறையா; குவி இமில் ஏற்றின்
மடக் கண் நீர் சோரும்; வருவது ஒன்று உண்டு! 2

உறி நறு வெண்ணெய் உருகா; உருகும்
மறி, தெறித்து ஆடா; வருவது ஒன்று உண்டு! 3

நால் முலை ஆயம் நடுங்குபு நின்று இரங்கும்;
மால் மணி வீழும்; வருவது ஒன்று உண்டு! 4

கருப்பம்

'குடத்துப் பால் உறையாமையும்,
குவி இமில் ஏற்றின்
மடக் கண் நீர் சோர்தலும்,
உறியில் வெண்ணெய் உருகாமையும்,
மறி முடங்கி ஆடாமையும்,
மால் மணி நிலத்து அற்று வீழ்தலும்,
வருவது ஓர் துன்பம் உண்டு' என,
மகளே நோக்கி, 'மனம் மயங்காதே!
மண்ணின் மாதர்க்கு அணி ஆகிய
கண்ணகியும்-தான் காண,
ஆயர் பாடியில், எரு மன்றத்து,
மாயவனுடன் தம்முன் ஆடிய
வால சரிதை நாடகங்களில்,
வேல் நெடுங் கண் பிஞ்ஞையோடு ஆடிய
குரவை ஆடுதும் யாம்' என்றாள்—
'கறவை, கன்று, துயர் நீங்குக எனவே.' 5

கொளு

'காரி கதன் அஞ்சான் பாய்ந்தானைக் காமுறும், இவ்
வேரி மலர்க் கோதையாள்; சுட்டு. 6

நெற்றிச் செகிலை அடர்த்தாற்கு உரிய, இப்
பொன் தொடி மாதராள் தோள். 7

மல்லல் மழ விடை ஊர்ந்தாற்கு உரியள், இம்
முல்லை அம் பூங் குழல்-தான். 8

நுண் பொறி வெள்ளை அடர்த்தாற்கே ஆகும், இப்
பெண் கொடி மாதர்-தன் தோள். 9

பொன் பொறி வெள்ளை அடர்த்தாற்கே ஆகும்; இந்
நன் கொடி மென்முலை-தான். 10

வென்றி மழ விடை ஊர்ந்தாற்கு உரியள், இக்
கொன்றை அம் பூங் குழலாள். 11

தூ நிற வெள்ளை அடர்த்தாற்கு உரியள், இப்
பூவைப் புது மலராள். 12

எடுத்துக்காட்டு

ஆங்கு,
தொழுவிடை ஏறு குறித்து வளர்த்தார்
எழுவர் இளங் கோதையார்'—
என்று, தன் மகளை நோக்கி,
தொன்று படு முறையான் நிறுத்தி,
இடை முதுமகள் இவர்க்குப்
படைத்துக் கோள் பெயர் இடுவாள்:
குடமுதல் இடமுறையா, குரல், துத்தம்,
கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம், என,
விரி தரு பூங் குழல் வேண்டிய பெயரே. 13

படைத்துக் கோள் பெயர்

மாயவன் என்றுள், குரலை; விறல் வெள்ளை-
ஆயவன் என்றுள், இளி-தன்னை; ஆய் மகள்
பின்னை ஆம் என்றுள், ஓர் துத்தத்தை; மற்றையார்
முன்னை ஆம் என்றுள் முறை. 14

மாயவன் சீர் உளார், பிஞ்ஞையும் தாரமும்;
வால் வெள்ளை சீரார், உழையும் விளரியும்;
கைக்கிளை பிஞ்ஞை இடத்தாள்; வலத்து உளாள்,
முத்தைக்கு நல் விளரி-தான். 15

அவருள்,
வண் துழாய் மாலையை மாயவன் மேல் இட்டு,
தண்டாக் குரவை-தான் உள்படுவாள், கொண்ட சீர்
வையம் அளந்தான்-தன் மார்பில் திரு நோக்காப்
பெய் வளைக் கையாள் நம் பின்னை-தான் ஆம் என்றே,
'ஐ!' என்றுள், ஆயர் மகள். 16

கூத்து உள்படுதல்

அவர்-தாம்,
செந்நிலை மண்டிலத்தான், கற்கடகக் கை கோஒத்து,
அந் நிலையே ஆடல் சீர் ஆய்ந்துளார், முன்னைக்
குரல்-கொடி தன் கிளையை நோக்கி, 'பரப்பு உற்ற
கொல்லைப் புனத்துக் குருந்து ஒசித்தான் பாடுதும்,
முல்லைத் தீம் பாணி' என்றுள். 17

எனை,
குரல் மந்தம் ஆக; இளி சமன் ஆக,
வரன்முறையே; துத்தம் வலியா, உரன் இலா
மந்தம் விளரி பிடிப்பாள், அவள் நட்பின்
பின்றையைப் பாட்டு எடுப்பாள். 18

பாட்டு

மாயவன்து வருகையையும் குழலோசையையும் பாடுதல்

கன்று குணில்ஆ க்னி உதிர்த்த மாயவன்
இன்று நம் ஆனுள் வருமேல், அவன் வாயில்
கொன்றை அம் தீம் குழல் கேளாமோ, தோழீ! 19

பாம்பு கயிறுக் கடல் கடைந்த மாயவன்
ஈங்கு நம் ஆனுள் வருமேல், அவன் வாயில்
ஆம்பல் அம் தீம் குழல் கேளாமோ, தோழீ! 20

கொல்லை அம் சாரல் குருந்து ஒசித்த மாயவன்
எல்லை நம் ஆனுள் வருமேல், அவன் வாயில்
முல்லை அம் தீம் குழல் கேளாமோ, தோழீ! 21

பின்னையின் அணி நிறத்தையும் மாயவன் வடிவழகையும் பாடுதல்

தொழுனைத் துறைவனோடு ஆடிய பின்னை-
அணி நிறம் பாடுகேம் யாம். 22

இறும் என் சாயல் நுடங்க நுடங்கி
அறுவை ஒளித்தான் வடிவு என்கோ யாம்?
அறுவை ஒளித்தான் அயர, அயரும்
நறு மென் சாயல் முகம் என்கோ யாம்? 23

வஞ்சம் செய்தான் தொழுனைப் புனலுள்
நெஞ்சம் கவர்ந்தாள் நிறை என்கோ யாம்?
நெஞ்சம் கவர்ந்தாள் நிறையும் வளையும்
வஞ்சம் செய்தான் வடிவு என்கோ யாம்? 24

தையல் கலையும் வளையும் இழந்தே
கையில் ஒளித்தாள் முகம் என்கோ யாம்?
கையில் ஒளித்தாள் முகம் கண்டு அழுங்கி,
மையல் உழந்தான் வடிவு என்கோ யாம்? 25

ஒன்றன் பகுதி

கதிர் திகிரியான் மறைத்த கடல் வண்ணன் இடத்து உளாள்,
மதி புரையும் நறு மேனித் தம்முனோன் வலத்து உளாள்,
பொதி அவிழ் மலர்க் கூந்தல் பிஞ்ஞை: சீர் புறங்காப்பார்
முது மறை தேர் நாரதனார் முந்தை முறை நரம்பு உளர்வார். 26

மயில் எருத்து உறழ் மேனி மாயவன் வலத்து உளாள்,
பயில் இதழ் மலர் மேனித் தம்முனோன் இடத்து உளாள்,
கயில் எருத்தம் கோட்டிய நம் பின்னே: சீர் புறங்காப்பார்
குயிலுவருள் நாரதனுர் கொளே புணர் சீர் நரம்பு உளர்வார். 27

ஆடுநர்ப் புகழ்தல்

மாயவன் தம்முன்னினனெடும், வரி வளைக் கைப் பின்னையொடும்,
கோவலர்-தம் சிறுமியர்கள் குழல் கோதை புறம் சோர,
ஆய் வளைச் சீர்க்கு அடி பெயர்த்திட்டு, அசோதையார் தொழுது ஏத்த,
தாது எரு மன்றத்து ஆடும் குரவையோ தகவு உடைத்தே.

எல்லாம் நாம்,
புள் ஊர் கடவுளைப் போற்றுதும், போற்றுதும்—
உள்வரிப் பாணி ஒன்று உற்று. 28

உள்வரி வாழ்த்து

பூவை நிலை

கோவா மலை ஆரம், கோத்த கடல் ஆரம்,
தேவர் கோன் பூண் ஆரம், தென்னர் கோன் மார்பினவே:
தேவர் கோன் பூண் ஆரம் பூண்டான் செழுந் துவரைக்
கோ குலம் மேய்த்து, குருந்து ஒசித்தான் என்பரால். 29

பொன் இமயக் கோட்டுப் புலி பொறித்து மண் ஆண்டான்,
மன்னன் வளவன், மதில் புகார் வாழ் வேந்தன்:
மன்னன் வளவன், மதில் புகார் வாழ் வேந்தன்
பொன் அம் திகிரிப் பொரு படையான் என்பரால். 30

முந்நீரினுள் புக்கு, மூவாக் கடம்பு எறிந்தான்,
மன்னர் கோச் சேரன், வள வஞ்சி வாழ் வேந்தன்:
மன்னர் கோச் சேரன், வள வஞ்சி வாழ் வேந்தன்
கல் நவில் தோள் ஒச்சி, கடல் கடைந்தான் என்பரால். 31

முன்னிலைப் பரவல்

வடவரையை மத்து ஆக்கி, வாசுகியை நாண் ஆக்கி,
கடல் வண்ணன்! பண்டு ஒரு நாள் கடல் வயிறு கலக்கினையே;
கலக்கிய கை அசோதையார் கடை கயிற்றுல் கட்டுண் கை;
மலர்க் கமல உந்தியாய்! மாயமோ? மருட்கைத்தே! 32

'அறு பொருள் இவன்' என்றே, அமரர் கணம் தொழுது ஏத்த,
உறு பசி ஒன்று இன்றியே, உலகு அடைய உண்டனையே;
உண்ட வாய் களவினுன் உறி வெண்ணெய் உண்ட வாய்;
வண் துழாய் மாலையாய்! மாயமோ? மருட்கைத்தே! 33

திரண்டு அமரர் தொழுது ஏத்தும் திருமால்! நின் செங் கமல
இரண்டு அடியான் மூ-உலகும் இருள் தீர நடந்தனையே;
நடந்த அடி பஞ்சவர்க்குத் தூது ஆக நடந்த அடி;
மடங்கலாய்! மாறு அட்டாய்! மாயமோ? மருட்கைத்தே! 34

படர்க்கைப் பரவல்

மூ-உலகும் ஈர் அடியான் முறை நிரம்பாவகை முடியத்
தாவிய சேவடி சேப்ப, தம்பியொடும் கான் போந்து,
சோ அரணும் போர் மடிய, தொல் இலங்கை கட்டு அழித்த
சேவகன் சீர் கேளாத செவி என்ன செவியே?
திருமால் சீர் கேளாத செவி என்ன செவியே? 35

பெரியவனே ; மாயவனே; பேர் உலகம் எல்லாம்
விரி கமல உந்தி உடை விண்ணவனே; கண்ணும்,
திருவடியும், கையும், திரு வாயும், செய்ய
கரியவனே; காணுத கண் என்ன கண்ணே?
கண் இமைத்துக் காண்பார்-தம் கண் என்ன கண்ணே? 36

மடம் தாழும் நெஞ்சத்துக் கஞ்சனூர் வஞ்சம்
கடந்தானே; நூற்றுவர்பால் நால் திசையும் போற்ற,
படர்ந்து ஆரணம் முழங்க, பஞ்சவர்க்குத் தூது
நடந்தானே; ஏத்தாத நா என்ன நாவே?
'நாராயணு!' என்னு நா என்ன நாவே? 37

வாழ்த்து

என்று, யாம்
கோத்த குரவையுள் ஏத்திய தெய்வம் நம்
ஆத்தலைப் பட்ட துயர் தீர்க்க! வேத்தர்
மருள, வைகல் வைகல் மாறு அட்டு,
வெற்றி விளைப்பது மன்னே—கொற்றத்து
இடிப் படை வானவன் முடித்தலை உடைத்த
தொடித் தோள் தென்னவன் கடிப்பு இகு முரசே! 38

18. துன்ப மாலை

குரவையின் முடிவில், ஆயர் மகளிருடன் மாதரி வையைக்கு நீராடப் போதலும், கோவலன் கொலையுண்ட செய்தியை அறிந்து, விரைந்து வருதலும்

ஆங்கு,
ஆயர் முதுமகள், ஆடிய சாயலாள்,
பூவும், புகையும், புனை சாந்தும், கண்ணியும்,
நீடு நீர் வையை நெடு மால் அடி ஏத்த,
தூவி, துறைபடியப் போயினள், மேவிக் 5
குரவை முடிவில்—ஓர் ஊர் அரவம் கேட்டு,
விரைவொடு வந்தாள் உளள்:

கொலைச் செய்தி அறிந்து வந்த ஆய்மகள் பேசாது நிற்க,
கண்ணகி அவளை நோக்கி ஐயுற்றுப் பேசுதல்

அவள்-தான்,
சொல்லாடாள், சொல்லாடா நின்றுள்: அந் நங்கைக்குச்
சொல்லாடும், சொல்லாடும், தான்.

'எல்லா! ஓ!—
காதலன் காண்கிலேன்; கலங்கி நோய் கைம்மிகும்;
ஊது உலை தோற்க உயிர்க்கும் என் நெஞ்சு-அன்றே;
ஊது உலை தோற்க உயிர்க்கும் என் நெஞ்சு ஆயின்,
ஏதிலார் சொன்னது எவன்? வாழியோ, தோழீ!

நன் பகல் போதே நடுக்கு நோய் கைம்மிகும்;
அன்பனைக் காணாது அலவும் என் நெஞ்சு-அன்றே;
அன்பனைக் காணாது அலவும் என் நெஞ்சு ஆயின்,
மன்பதை சொன்னது எவன்? வாழியோ, தோழீ!

தஞ்சமோ, தோழீ! தலைவன் வரக் காணேன்;
வஞ்சமோ உண்டு; மயங்கும் என் நெஞ்சு-அன்றே;
வஞ்சமோ உண்டு; மயங்கும் என் நெஞ்சு ஆயின்,
எஞ்சலார் சொன்னது எவன்? வாழியோ, தோழீ!'

ஆய்மகள் உண்மை உரைத்தல்

சொன்னது:
'அரசு உறை கோயில் அணி ஆர் ஞெகிழம்
கரையாமல் வாங்கிய கள்வனும் என்றே,
கரையாமல் வாங்கிய கள்வனும் என்றே,
குரை கழல் மாக்கள் கொலை குறித்தனரே!'

கண்ணகியின் துயர நிலை

எனக் கேட்டு,
பொங்கி எழுந்தாள்; விழுந்தாள், பொழி கதிர்த்
திங்கள் முகிலோடும் சேண் நிலம் கொண்டென;
செங் கண் சிவப்ப அழுதாள்; தன் கேள்வனை,
'எங்கணுஅ!' என்னு இனைந்து, ஏங்கி, மாழ்குவாள்:

'இன்புறு தம் கணவர் இடர் எரிஅகம் மூழ்க,
துன்புறுவன நோற்றுத் துயர் உறு மகளிரைப் போல்,
மன்பதை அலர் தூற்ற, மன்னவன் தவறு இழைப்ப,
அன்பனை இழந்தேன் யான் அவலம் கொண்டு அழிவலோ?

நறை மலி வியல் மார்பின் நண்பனை இழந்து ஏங்கி,
துறை பல திறம் மூழ்கித் துயர் உறு மகளிரைப் போல்,
மறனெடு திரியும் கோல் மன்னவன் தவறு இழைப்ப,
அறன் எனும் மடவோய்! யான் அவலம் கொண்டு அழிவலோ?

தம் உறு பெரும் கணவன் தழல் எரிஅகம் மூழ்க,
கைம்மை கூர் துறை மூழ்கும் கவலைய மகளிரைப் போல்,
செம்மையின் இகந்த கோல் தென்னவன் தவறு இழைப்ப,
இம்மையும் இசை ஒரீஇ, இனைந்து, ஏங்கி, அழிவலோ?'

ஆய்ச்சியர் முன்னிலையில் கண்ணகி கதிரவனை விளித்து,
'என் கணவன் கள்வனே?' என வினவுதல்

'காணிகா,
வாய்வதின் வந்த குரவையின் வந்து ஈண்டும்
ஆய மட மகளிர் எல்லீரும் கேட்டீமின்;
ஆய மட மகளிர் எல்லீரும் கேட்டைக்க:
பாய் திரை வேலிப் படு பொருள் நீ அறிதி,
காய் கதிர்ச் செல்வனே! கள்வனே, என் கணவன்?'—

அசரீரி வாக்கு

'கள்வனே அல்லன்; கருங் கயல் கண் மாதராய்!
ஒள் எரி உண்ணும், இவ் ஊர்' என்றது ஒரு குரல்.

19. ஊர் சூழ் வரி

கதிரவனது சொல்லைக் கேட்ட கண்ணகி, எஞ்சிய ஒற்றைச் சிலம்பை ஏந்தி,
நகரினுள் புக்கு, நகர மாந்தரை நோக்கி முறையிட்டு, அழுதல்

என்றனன் வெய்யோன்: இலங்கு ஈர் வளைத் தோளி
நின்றிலள்—நின்ற சிலம்பு ஒன்று கை ஏந்தி:
'முறை இல் அரசன்-தன் ஊர் இருந்து வாழும்
நிறை உடைப் பத்தினிப் பெண்டிர்காள்! ஈது ஒன்று:
பட்டேன், படாத துயரம், படுகாலை;
உற்றேன், உறுதது; உறுவனே? ஈது ஒன்று:
கள்வனே அல்லன் கணவன்; என் கால் சிலம்பு
கொள்ளும் விலைப்பொருட்டால் கொன்றுரே! ஈது ஒன்று:
மாதர்த் தகைய மடவார்கள் முன்னரே,
காதல் கணவனைக் காண்பனே, ஈது ஒன்று:
காதல் கணவனைக் கண்டால், அவன் வாயில்
தீது அறு நல் உரை கேட்பனே; ஈது ஒன்று:
தீது அறு நல் உரை கேளாதொழிவனேல்,
நோதக்க செய்தாள் என்று எள்ளல்; இது ஒன்று'—என்று
அல்லல் உற்று, ஆற்றுது, அழுவாளைக் கண்டு, ஏங்கி,
மல்லல் மதுரையார் எல்லாரும் தாம் மயங்கி—

மதுரை மக்கள் கண்ணகியின் அவல நிலைக்கு இரங்கிக் கூறுதல்

'கனையாத துன்பம் இக் காரிகைக்குக் காட்டி,
வனையாத செங்கோல் வளைந்தது! இது என்கொல்?

மன்னவர் மன்னன் மதிக் குடை வாள் வேந்தன்
தென்னவன் கொற்றம் சிதைந்தது! இது என்கொல்?

மண் குளிரச் செய்யும் மற வேல் நெடுந்தகை
தண் குடை வெம்மை விளைத்தது! இது என்கொல்?

செம் பொன் சிலம்பு ஒன்று கை ஏந்தி, நம்பொருட்டால்,
வம்பப் பெரும் தெய்வம் வந்தது! இது என்கொல்?

ஐ அரி உண் கண் அழுது, ஏங்கி, அரற்றுவாள்
தெய்வம் உற்றுள் போலும் தகையள்! இது என்கொல்?'—

என்பன சொல்லி, இனைந்து, ஏங்கி, ஆற்றவும்
வன் பழி தூற்றும் குடியதே மா மதுரை—

கம்பலை மாக்கள் தோவலன் இறந்து கிடந்த இடத்தைக் காட்ட, மாலைப் பொழுதில் கண்ணகி தன் கணவனைக் காணுதல்

கம்பலை மாக்கள் கணவனைத் தாம் காட்ட,
செம் பொன் கொடி அனையாள் கண்டாளைத் தான் காணான்.

மல்லல் மா ஞாலம் இருள் ஊட்டி, மா மலைமேல்,
செவ்வென் கதிர் சுருங்கி, செங் கதிரோன் சென்று ஒளிப்ப,
புல்லென் மருள் மாலைப் பூங் கொடியாள் பூசலிட,
ஒல்லென் ஒலி படைத்தது ஊர்.

கண்ணகி சோகமுற்று அரற்றி அழுதல்

வண்டு ஆர் இருங் குஞ்சி மாலை தன் வார் குழல்மேல்
கொண்டாள், தழீஇ, கொழுநன்பால், காலைவாய்;
புண் தாழ் குருதி புறம் சோர, மாலைவாய்,
கண்டாள், அவன் தன்னைக் காணுக் கடுந் துயரம்!

'என் உறு துயர் கண்டும், ''இடர் உறும் இவள்'' என்னீர்!
பொன் உறு நறு மேனி பொடி ஆடிக் கிடப்பதோ?
மன் உறு துயர் செய்த மறவினை அறியாதேற்கு,
''என் உறு வினை காண்; ஆ! இது'' என உரையாரோ?

யாரும் இல் மருள் மாலை, இடர் உறு தமியேன் முன்,
தார் மலி மணி மார்பம் தரை மூழ்கிக் கிடப்பதோ?
பார் மிகு பழி தூற்ற, பாண்டியன் தவறு இழைப்ப,
''ஈர்வது ஓர் வினை காண்; ஆ! இது'' என உரையாரோ?

கண் பொழி புனல் சோரும் கடு வினை உடையேன்முன்,
புண் பொழி குருதியிராய்ப் பொடி ஆடிக் கிடப்பதோ?
மன்பதை பழி தூற்ற, மன்னவன் தவறு இழைப்ப,
''உண்பதோர் வினை காண்; ஆ! இது'' என உரையாரோ?

பெண்டிரும் உண்டுகொல்? பெண்டிரும் உண்டுகொல்?
கொண்ட கொழுநர் உறு குறை தாங்குறூஉம்
பெண்டிரும் உண்டுகொல்? பெண்டிரும் உண்டுகொல்?

சான்றோரும் உண்டுகொல்? சான்றோரும் உண்டுகொல்?
ஈன்ற குழவி எடுத்து வளர்க்குறூஉம்
சான்றோரும் உண்டுகொல்? சான்றோரும் உண்டுகொல்?

தெய்வமும் உண்டுகொல்? தெய்வமும் உண்டுகொல்?
வை வாளின் தப்பிய மன்னவன் கூடலில்
தெய்வமும் உண்டுகொல்? தெய்வமும் உண்டுகொல்?'—

கண்ணகி கோவலனைத் தழுவுதலும், அவன் உயிர் பெற்று எழுந்து பேசுதலும்

என்று இவை சொல்லி அழுவாள் கணவன்-தன்
பொன் துஞ்சு மார்பம் பொருந்தத் தழீஇக்கொள்ள,
நின்றான், எழுந்து: 'நிறை மதி வாள் முகம்
கன்றியது!' என்று, அவள் கண்ணீர் கையான் மாற்ற—

தன் பாதத்தைக் கண்ணகி பற்ற, கோவலன் வானுலகு செல்லுதல்

அழுது ஏங்கி, நிலத்தின் வீழ்ந்து, ஆய் இழையாள் தன் கணவன்
தொழுதகைய திருந்து அடியைத் துணை வளைக் கையான் பற்ற,
பழுது ஒழிந்து எழுந்திருந்தான் பல் அமரர் குழாத்து உளான்,
'எழுது எழில் மலர் உண் கண்! இருந்தைக்க' எனப் போனான்.

கண்ணகியின் சிந்தனை

'மாயம்கொல்? மற்று என்கொல்? மருட்டியதோர் தெய்வம்கொல்?
போய் எங்கு நாடுகேன்? பொருள் உரையோ இது அன்று;
காய் சினம் தணிந்தன்றிக் கணவனைக் கைகூடேன்;
தீ வேந்தன்-தனைக் கண்டு, இத் திறம் கேட்பல் யான்' என்றாள்—

கண்ணகி சினத்துடன் பாண்டியனது கோயிலின் முன் செல்லுதல்

என்றாள் எழுந்தாள்; இடர் உற்ற தீக் கனி
நின்றாள் நினைந்தாள், நெடுங் கயல் கண் நீர் சோர;
நின்றாள் நினைந்தாள் நெடுங் கயல் கண் நீர் துடையாச்
சென்றாள், அரசன் செழுங் கோயில் வாயில் முன்.

20. வழக்கு உரை காதை

பாண்டியன் பெருந்தேவி தான் கண்ட கனவைத் தோழிக்கு உரைத்தல்

ஆங்கு,
'குடையொடு கோல் வீழ நின்று நடுங்கும்
கடை மணியின் குரல் காண்பென்-காண், எல்லா!

திசை இரு-நான்கும் அதிர்ந்திடும்; அன்றி,
கதிரை இருள் விழுங்கக் காண்பென்-காண், எல்லா!
விடும் கொடி வில் இர; வெம் பகல் வீழும்
கடுங் கதிர் மீன் : இவை காண்பென்-காண், எல்லா!'

கருப்பம்

'செங்கோலும், வெண்குடையும்,
செறி நிலத்து மறிந்து வீழ்தரும்;
நம் கோன்-தன் கொற்ற வாயில்
மணி நடுங்க, நடுங்கும் உள்ளம்;
இரவு வில் இடும்; பகல் மீன் விழும்;
இரு-நான்கு திசையும் அதிர்ந்திடும்;
வருவது ஓர் துன்பம் உண்டு;
மன்னவற்கு யாம் உரைத்தும்' என—

கோப்பெருந்தேவி தான் கண்ட கனவை
அரசவையில் இருந்த மன்னனுக்கு உரைத்தல்

ஆடி ஏந்தினர், கலன் ஏந்தினர்,
அவிர்ந்து விளங்கும் அணி இழையினர்;
கோடி ஏந்தினர், பட்டு ஏந்தினர்,
கொழுந் திரையலின் செப்பு ஏந்தினர்,
வண்ணம் ஏந்தினர், சுண்ணம் ஏந்தினர்,
மான்மதத்தின் சாந்து ஏந்தினர்,
கண்ணி ஏந்தினர், பிணையல் ஏந்தினர்,
கவரி ஏந்தினர், தூபம் ஏந்தினர்;
கூனும், குறளும், ஊமும், கூடிய
குறுந் தொழில் இளைஞர் செறிந்து சூழ்தர;
நரை விரைஇய நறுங் கூந்தலர்,
உரை விரைஇய பலர் வாழ்த்திட;
'ஈண்டு நீர் வையம் காக்கும்
பாண்டியன் பெருந்தேவி! வாழ்க' என,
ஆயமும் காவலும் சென்று
அடியீடு பரசி ஏத்த;
கோப்பெருந்தேவி சென்று, தன்
தீக் கனத் திறம் உரைப்ப—
அரிமான் ஏந்திய அமளிமிசை இருந்தனன்,
திரு வீழ் மார்பின் தென்னவர் கோவே—

கண்ணகி வாயிலோனுக்கு அறிவித்தல்

இப்பால்,
'வாயிலோயே! வாயிலோயே!
அறிவு அறைபோகிய பொறி அறு நெஞ்சத்து,

இறை முறை பிழைத்தோன் வாயிலோயே!
''இணை அரிச் சிலம்பு ஒன்று ஏந்திய கையள்,
கணவனை இழந்தாள், கடைஅகத்தாள்'' என்று
அறிவிப்பாயே! அறிவிப்பாயே!' என—

கண்ணகி வந்ததை வாயிலோன் மன்னனுக்குத் தெரிவித்தல்

வாயிலோன், 'வாழி! எம் கொற்கை வேந்தே, வாழி!
தென்னம் பொருப்பின் தலைவ, வாழி!
செழிய, வாழி! தென்னவ, வாழி!
பழியொடு படராப் பஞ்சவ, வாழி!
அடர்த்து எழு குருதி அடங்காப் பசுந் துணிப்
பிடர்த் தலைப் பீடம் ஏறிய மடக்கொடி,
வெற்றி வேல் தடக்கைக் கொற்றவை, அல்லள்;
அறுவர்க்கு இளைய நங்கை, இறைவனை
ஆடல் கண்டருளிய அணங்கு, சூர் உடைக்
கானகம் உகந்த காளி, தாருகன்
பேர் உரம் கிழித்த பெண்ணும், அல்லள்;
செற்றனள் போலும்; செயிர்த்தனள் போலும்;
பொன் தொழில் சிலம்பு ஒன்று ஏந்திய கையள்;
கணவனை இழந்தாள் கடைஅகத்தாளே;
கணவனை இழந்தாள் கடைஅகத்தாளே' என—

மன்னவன் கட்டளைப்படி கண்ணகி அவையை அணுகுதல்

'வருக, மற்று அவள் தருக, ஈங்கு' என—
வாயில் வந்து, கோயில் காட்ட,
கோயில் மன்னனைக் குறுகினள் சென்றுழி—

பாண்டியன் வினா

'நீர் வார் கண்ணை, எம் முன் வந்தோய்!
யாரையோ, நீ? மடக்கொடியோய்!' என—

கண்ணகியின் மறுமொழி

'தேரா மன்ன! செப்புவது உடையேன்;
எள் அறு சிறப்பின் இமையவர் வியப்ப,
புள் உறு புன்கண் தீர்த்தோன்; அன்றியும்,
வாயில் கடை மணி நடு நா நடுங்க,
ஆவின் கடை மணி உகு நீர் நெஞ்சு சுட, தான் தன்
அரும் பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்;
பெரும் பெயர்ப் புகார் என் பதியே; அவ் ஊர்,
ஏசாச் சிறப்பின், இசை விளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை ஆகி,

வாழ்தல் வேண்டி, ஊழ்வினை துரப்ப,
சூழ் கழல் மன்னு! நின் நகர்ப் புகுந்து, இங்கு
என் கால் சிலம்பு பகர்தல் வேண்டி, நின்பால்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி;
கண்ணகி என்பது என் பெயரே' என—

மன்னவன் உரைத்த விடை

'பெண் அணங்கே!
கள்வனைக் கோறல் கடுங் கோல் அன்று;
வெள் வேல் கொற்றம்-காண்' என—

கண்ணகி தன் சிலம்பின் தன்மையை அறிவித்தல்

ஒள்-இழை,
'நல் திறம் படராக் கொற்கை வேந்தே!
என் கால் பொன் சிலம்பு மணி உடை அரியே' என—

மன்னவன் தனது தேவியின் சிலம்பில் உள்ள அரி முத்து எனக் கூறி,
காவலர் கொணர்ந்த சிலம்பைக் கண்ணகியின் முன் வைத்தல்

'தேமொழி! உரைத்தது செவ்வை நல் மொழி;
யாம் உடைச் சிலம்பு முத்து உடை அரியே;
தருக' எனத் தந்து, தான் முன் வைப்ப—

கண்ணகி சிலம்பை உடைக்க, மன்னவன் முகத்தில் மணி தெறித்தல்

கண்ணகி அணி மணிக் கால் சிலம்பு உடைப்ப,
மன்னவன் வாய்முதல் தெறித்தது, மணியே—

மன்னவன் உண்மை உணர்ந்து, உயிர் துறத்தல்

மணி கண்டு,
தாழ்ந்த குடையன், தளர்ந்த செங்கோலன்,
'பொன் செய் கொல்லன்-தன் சொல் கேட்ட
யானோ அரசன்? யானே கள்வன்;
மன்பதை காக்கும் தென் புலம் காவல்
என் முதல் பிழைத்தது; கெடுக என் ஆயுள்!' என
மன்னவன் மயங்கி வீழ்ந்தனனே—

கோப்பெருந்தேவியும் உடன் மாய்தல்

தென்னவன்
கோப்பெருந்தேவி குலைந்தனள் நடுங்கி,
'கணவனை இழந்தோர்க்குக் காட்டுவது இல்' என்று,
இணை அடி தொழுது வீழ்ந்தனளே, மடமொழி.

வெண்பா

'அல்லவை செய்தார்க்கு அறம் கூற்றம் ஆம்' என்னும்,
பல் அவையோர் சொல்லும் பழுது அன்றே—பொல்லா
வடுவினையே செய்த வய வேந்தன் தேவி!
கடு வினையேன் செய்வதூஉம் காண்.

காவி உகு நீரும், கையில் தனிச் சிலம்பும்,
ஆவி குடிபோன அவ் வடிவும், பாவியேன்!
காடு எல்லாம் சூழ்ந்த கருங் குழலும்—கண்டு, அஞ்சி,
கூடலான் கூடு ஆயினன்.

மெய்யில் பொடியும், விரித்த கருங் குழலும்,
கையில் தனிச் சிலம்பும், கண்ணீரும், வையைக் கோன்
கண்டளவே தோற்றான்; அக் காரிகை-தன் சொல் செவியில்
உண்டளவே தோற்றான், உயிர்.

21. வஞ்சின மாலை

கோப்பெருந்தேவியை நோக்கிக் கண்ணகி கூறுதல்

'கோவேந்தன் தேவி! கொடு வினை ஆட்டியேன்
யாவும் தெரியா இயல்பினேன் ஆயினும்,
முற்பகல் செய்தான் பிறன் கேடு தன் கேடு
பிற்பகல் காண்குறூஉம் பெற்றிய-காண்:

கற்புடை மங்கையர் எழுவர் வரலாறு

நல் பகலே,
வன்னி மரமும் மடைப்பளியும் சான்றாக
முன் நிறுத்திக் காட்டிய மொய் குழலாள்; பொன்னிக்
கரையில், ''மணல் பாவை நின் கணவன் ஆம்'' என்று,
உரைசெய்த மாதரொடும் போகாள், திரை வந்து
அழியாது சூழ்போக, ஆங்கு உந்தி நின்ற
வரி ஆர் அகல் அல்குல் மாதர்; உரைசான்ற
மன்னன் கரிகால் வளவன் மகள் வஞ்சிக் கோன்-
தன்னைப் புனல் கொள்ள, தான் புனலின் பின் சென்று,
''கல் நவில் தோளாயோ!'' என்ன, கடல் வந்து,
முன் நிறுத்திக் காட்ட, அவனைத் தழீஇக்கொண்டு,
பொன் அம் கொடி போலப் போதந்தாள்; மன்னி,
மணல் மலி பூங் கானல் வரு கலன்கள் நோக்கி,
கணவன் வரக் கல் உருவம் நீத்தாள்; இணை ஆய
மாற்றாள் குழவி ஓழ, தன் குழவியும் கிணற்று

வீழ்த்து, ஏற்றுக்கொண்டு எடுத்த வேல் கண்ணுள்; வேற்றெருவன்
நீள் நோக்கம் கண்டு, ''நிறை மதி வாள் முகத்தைத்
தான் ஓர் குரக்கு முகம் ஆக!'' என்று, போன
கொழுநன் வரவே, குரக்கு முகம் நீத்த
பழு மணி அல்குல் பூம் பாவை; ''விழுமிய,
பெண் அறிவு என்பது பேதைமைத்தே என்று உரைத்த
நுண் அறிவினோர் நோக்கம்; நோக்காதே, எண் இலேன்,
வண்டல் அயர்விடத்து, யான் ஓர் மகள் பெற்றேன்,
ஒண்-தொடி! நீ ஓர் மகன் பெறின், கொண்ட
கொழுநன் அவளுக்கு என்று, யான் உரைத்த மாற்றம்
கெழுமியவள் உரைப்பக் கேட்ட விழுமத்தான்
சிந்தை நோய் கூரும், திருவிலேற்கு'' என்று எடுத்து,
தந்தைக்குத் தாய் உரைப்பக் கேட்டாளாய், முந்தி, ஓர்
கோடிக் கலிங்கம் உடுத்து, குழல் கட்டி,
நீடித் தலையை வணங்கி, தலை சுமந்த
ஆடகப் பூம் பாவை-அவள்; போல்வார் நீடிய
மட்டு ஆர் குழலார் பிறந்த பதிப் பிறந்தேன்;

அரசோடு மதுரையையும் ஒழிப்பேன் என்று கண்ணகி கூறி, நீங்குதல்

பட்டாங்கு யானும் ஓர் பத்தினியே ஆமாகில்,
ஒட்டேன்; அரசோடு ஒழிப்பேன் மதுரையும்! என்
பட்டிமையும் காண்குறுவாய் நீ' என்னை, விட்டு அகலா—

கண்ணகி தன் இட முலையைத் திருகி எடுத்து, மதுரையின்மீது எறிதல்

'நான்மாடக் கூடல் மகளிரும் மைந்தரும்,
வானக் கடவுளரும், மாதவரும், கேட்டீமின்:
யான் அமர் காதலன்-தன்னைத் தவறு இழைத்த
கோநகர் சீறினேன்; குற்றமிலேன் யான்' என்று,
இட முலை கையால் திருகி, மதுரை
வலமுறை மும் முறை வாரா, அலமந்து,
மட்டு ஆர் மறுகின் மணி முலையை வட்டித்து,
விட்டாள் எறிந்தாள், விளங்கு இழையாள்—

கண்ணகியின் முன் அக்கினித் தெய்வம் தோன்றி விளைவுதல்

வட்டித்த
நீல நிறத்துத் திரி செக்கர் வார் சடைப்
பால் புரை வெள் எயிற்றுப் பார்ப்பனக் கோலத்து,
மாலை எரி அங்கி வானவன்-தான் தோன்றி,
'மா பத்தினி! நின்னை மாணப் பிழைத்த நாள்
பாய் எரி இந்தப் பதி ஊட்ட, பண்டே ஓர்
ஏவல் உடையேனால்; யார் பிழைப்பார், ஈங்கு?' என்ன—

கண்ணகியின் கட்டழகால் மதுரையில் தீ எழல்

'பார்ப்பார், அறவோர், பசு, பத்தினிப் பெண்டிர்,
மூத்தோர், குழவி, எனும் இவரைக் கைவிட்டு,
தீத் திறத்தார் பக்கமே சேர்க' என்று, காய்த்திய
பொன்-தொடி ஏவ, புகை அழல் மண்டிற்றே—
நல் தேரான் கூடல் நகர்.

வெண்பா

பொற்பு வழுதியும், தன் பூவையரும், மாளிகையும்,
வில் பொலியும் சேனையும், மா வேழமும், கற்பு உண்ண;
தீத் தரு வெங் கூடல் தெய்வக் கடவுளரும்
மாத்துவத்தான் மறைந்தார் மற்று.

22. அழல் படு காதை

மன்னவன் மாண்டதை அறியாமல், அவையோர் அசைவற்றிருத்தல்

ஏவல் தெய்வத்து எரி முகம் திறந்தது;
காவல் தெய்வம் கடைமுகம் அடைத்தன;
அரைசர் பெருமான், அடு போர்ச் செழியன்
வேல் கோல் இழுக்கத்து உயிர் ஆணி கொடுத்து, ஆங்கு,
இரு நில மடந்தைக்குச் செங்கோல் காட்ட,
புரை தீர் கற்பின் தேவி-தன்னுடன்
அரைசுகட்டிலில் துஞ்சியது அறியாது;
ஆசான், பெருங்கணி, அறக்களத்து அந்தணர்,
காவிதி, மந்திரக்கணக்கர்-தம்மொடு.
கோயில் மாக்களும், குறுந் தொடி மகளிரும்,
ஓவியச் சுற்றத்து உரை அவிந்து இருப்ப—

மன்னவன் கோயிலில் தீயைக் கண்டு, காவலர் முதலியோர் நீங்குதல்

காழோர், வாதுவர், கடுந் தேர் ஊருநர்,
வாய் வாள் மறவர், மயங்கினர் மலிந்து,
கோமகன் கோயில் கொற்ற வாயில்
தீ முகம் கண்டு, தாம் விடைகொள்ள—

பிராமண பூதம்

நித்திலப் பைம் பூண் நிலாத் திகழ் அவிர் ஒளி,
[தண் கதிர் மதியத்தன்ன மேனியன்;
ஒண் கதிர் நித்திலம் பூணொடு பூனந்து,

வெண் நிறத் தாமரை, அறுகை, நந்தி, என்று
இன்னவை முடித்த நல் நிறச் சென்னியன்;
நுரை என விரிந்த நுண் பூங் கலிங்கம்
புலராது உடுத்த உடையினன்; மலரா
வட்டிகை, விளம்பொரி, வன்னிகை, சந்தனம்,
கொட்டமோடு அரைத்துக் கொண்ட மார்பினன்;
தேனும், பாலும், கட்டியும், பெட்பச்
சேர்வன பெறூஉம் தீம் புகை மடையினன்;
தீர்த்தக் கரையும், தேவர் கோட்டமும்,
ஓத்தின் சாலையும், ஒருங்குடன் நின்று,
பின்பகல் பொழுதில் பேணினன் ஊர்வோன்;
நன் பகல் வர அடி ஊன்றிய காலினன்;
விரி குடை, தண்டே, குண்டிகை, காட்டம்,
பிரியாத் தருப்பை, பிடித்த கையினன்;
நாவினும் மார்பினும் நவின்ற நூலினன்;]
முத் தீ வாழ்க்கை முறைமையின் வழாஅ,
வேத முதல்வன் வேள்விக் கருவியோடு,
ஆதிப் பூதத்து அதிபதிக் கடவுளும்—

அரச பூதம்

[வென்றி வெங் கதிர் புரையும் மேனியன்;
குன்று மணி புனை பூணினன்; பூணொடு
முடிமுதல் கலன்கள் பூண்டனன்; முடியொடு
சண்பகம், கருவிளை, செங் கூதாளம்,
தண் கமழ் பூ நீர்ச் சாதியோடு இனையவை
கட்டும் கண்ணியும் தொடுத்த மாலையும்,
ஒட்டிய திரளையோடு ஒசிந்த பூவினன்;
அங்குலி கையெறிந்து அஞ்சுமகன் விரித்த
குங்குமம் வருணம் கொண்ட மார்பினன்;
பொங்கு ஒளி அரத்தப் பூம் பட்டு உடையினன்;
முகிழ்த்த கைச்
சாலி அயினி பொன் கலத்து ஏந்தி,
ஏலும் நல் சுவை இயல்புளிக் கொணர்ந்து,
வெம்மையின் கொள்ளும் மடையினன்; செம்மையின்]
பவளச் செஞ் சுடர் திகழ் ஒளி மேனியன்;
ஆழ் கடல் ஞாலம் ஆள்வோன்-தன்னின்,
முரைசொடு வெண்குடை, கவரி, நெடுங் கொடி,
உரைசால் அங்குசம், வடி வேல், வடிகயிறு,
என இவை பிடித்த கையினன் ஆகி,

எண்-அரும் சிறப்பின் மன்னரை ஓட்டி,
மண்ணகம் கொண்டு, செங்கோல் ஓச்சி,
கொடுந் தொழில் கடிந்து, கொற்றம் கொண்டு;
நடும் புகழ் வளர்த்து, நானிலம் புரக்கும்
உரைசால் சிறப்பின் நெடியோன் அன்ன
அரைச பூதத்து அரும் திறல் கடவுளும்—

வணிக பூதம்

செந் நிறப் பசும் பொன் புரையும் மேனியன்;
மன்னிய சிறப்பின் மற வேல் மன்னவர்
அரைசு முடி ஒழிய அமைத்த பூணினன்;
வாணிக மரபின் நீள் நிலம் ஓம்பி,
நாஞ்சிலும் துலாமும் ஏந்திய கையினன்;
[உரைசால் பொன் நிறம் கொண்ட உடையினன்;
வெட்சி, தாழை, கள் கமழ் ஆம்பல்,
சேடல், நெய்தல், பூவை, மருதம்,
கூட முடித்த சென்னியன்; நீடு ஒளிப்
பொன் என விரிந்த நல் நிறச் சாந்தம்-
தன்னொடு புனைந்த மின் நிற மார்பினன்;
கொள்ளும், பயறும், துவரையும், உழுந்தும்,
நள்ளியம் பலவும் நயந்து உடன் அளைஇ,
'கொள்' எனக் கொள்ளும் மடையினன்; புடைதரு
நெல் உடைக் களனே, புள் உடைக் கழனி,
வாணிகப் பீடிகை, நீள் நிழல் காஞ்சி,
பாணி கைக்கொண்டு, முற்பகல் பொழுதின்
உள் மகிழ்ந்து உண்ணுவோனே; அவனே
நாஞ்சில் அம் படையும், வாய்ந்து உறை துலா முன்
சூழ் ஒளித் தாலும், யாழும் ஏந்தி,
விளைந்து பதம் மிகுந்து, விருந்து பதம் தந்து,
மலையவும் கடலவும் அரும் பலம் கொணர்ந்து,
விலைய ஆக வேண்டுநர்க்கு அளித்து, ஆங்கு,]
உழவுதொழில் உதவும் பழுது இல் வாழ்க்கைக்
கிழவன் என்போன் கிளர் ஒளிச் சென்னியின்
இளம் பிறை சூடிய இறையவன் வடிவின் ஓர்
விளங்கு ஒளிப் பூத வியன் பெரும் கடவுளும்—

வேளாண் பூதம்

[கருவிளை புரையும் மேனியன்; அரியொடு
வெள்ளி புனைந்த பூணினன்; தெள் ஒளிக்

காழகம் செறிந்த உடையினன்; காழ் அகில்
சாந்து புலர்ந்து அகன்ற மார்பினன்; ஏந்திய
கோட்டினும், கொடியினும், நீரினும், நிலத்தினும்,
காட்டிய பூவின் கலந்த பித்தையன்;
கம்மியர் செய்வினைக் கலப்பை ஏந்தி,
செம்மையின் வரூஉம் சிறப்புப் பொருந்தி,]
மண்ணுறு திரு மணி புரையும் மேனியன்;
ஒண் நிறக் காழகம் சேர்ந்த உடையினன்;
ஆடற்கு அமைந்த அவற்றொடு பொருந்தி,
பாடற்கு அமைந்த பல துறை போகி,
கலி கெழு கூடல் பலி பெறு பூதத்
தலைவன் என்போன்-தானும்—

நால் வகை வருண பூதமும் நீங்குதல்
தோன்றி,

'கோமுறை பிழைத்த நாளில், இந் நகர்
தீ முறை உண்பது ஓர் திறன் உண்டு என்பது
ஆம் முறையாக அறிந்தனம் ஆதலின்,
யாம் முறை போவது இயல்பு அன்றே?' என,
கொங்கை குறித்த கொற்ற நங்கை முன்
நால் பால் பூதமும் பால்பால் பெயர—

மறவோர் சேரியில் எரி பரவுதல்

கூல மறுகும், கொடித் தேர் வீதியும்,
பால் வேறு தெரிந்த நால் வேறு தெருவும்,
[உரக் குரங்கு உயர்த்த ஒண் சிலை உரவோன்]
கா எரி ஊட்டிய நாள் போல் கலங்க,
அறவோர் மருங்கின் அழல் கொடி விடாது,
மறவோர் சேரி மயங்கு எரி மண்ட—

நெருப்பினுல் நேர்ந்த துன்பம்
மிருகங்களின் நிலை

கறவையும் கன்றும், கூனல் எரி சேரா,
அறவை ஆயர் அகன் தெரு அடைந்தன;
மற வெங் களிறும், மடப் பிடி நிரைகளும்,
விரை பரிக் குதிரையும், புற மதில் பெயர்ந்தன:

மடந்தையரின் நிலை

சாந்தம் தோய்ந்த ஏந்து இள வன முலை
மைத் தடங் கண்ணூர், மைந்தர்-தம்முடன்,
செப்பு வாய் அவிழ்ந்த தேம் பொதி நறு விரை

நறு மலர் அவிழ்ந்த நாறு இரு முச்சித்
துறு மலர்ப் பிணையல் சொரிந்த பூந்துகள்,
குங்குமம் எழுதிய கொங்கை முன்றில்
பைங் காழ் ஆரம், பரிந்தன பரந்த
தூ மென் சேக்கை. துனிப் பதம் பாராக்
காமக் கள்ளாட்டு அடங்கினர் மயங்க:

குழந்தைகளுடன் மகளிர் வெளியேறுதல்

திதலை அல்குல் தேம் கமழ் குழலியர்
குதலைச் செவ் வாய்க் குறு நடைப் புதல்வரொடு
பஞ்சி ஆர் அமளியில் துஞ்சு துயில் எடுப்பி,
வால் நரைக் கூந்தல் மகளிரொடு போத:

இல்லறம் வழுவாத மகளிர்

வரு விருந்து ஓம்பி மனையறம் முட்டாப்
பெரு மனைக் கிழத்தியர் பெரு மகிழ்வு எய்தி,
'இலங்கு பூண் மார்பின் கணவனை இழந்து,
சிலம்பின் வென்ற சேயிழை நங்கை
கொங்கைப் பூசல் கொடிதோ அன்று' என,
பொங்கு எரி வானவன் தொழுதனர் ஏத்தினர்:

நாடக மடந்தையர்

எண்-நான்கு இரட்டி இருங் கலை பயின்ற,
பண் இயல் மடந்தையர் பயம் கெழு வீதி,
தண்ணுமை, முழவம், தாழ்தரு தீம் குழல்,
பண்ணுக் கிளை பயிரும் பண் யாழ்ப் பாணியொடு,
நாடக மடந்தையர் ஆடு அரங்கு இழந்து, ஆங்கு,
'எந் நாட்டாள்கொல்? யார் மகள்கொல்லோ?
இந் நாட்டு இவ் ஊர் இறைவனை இழந்து,
தேரா மன்னனைச் சிலம்பின் வென்று, இவ்
ஊர் தீ ஊட்டிய ஒரு மகள்' என்ன—

நித்திய கருமம் நடைபெறுதொழிதல்

அந்தி விழவும், ஆரண ஓதையும்,
செந் தீ வேட்டலும், தெய்வம் பரவலும்,
மனை விளக்குறுத்தலும், மாலை அயர்தலும்,
வழங்கு குரல் முரசமும், மடிந்த மா நகர்—

கண்ணகியின் முன் மதுராபதி தெய்வம் தோன்றுதல்

காதலன் கெடுத்த நோயொடு உளம் கனன்று,
ஊது உலைக் குருகின் உயிர்த்தனள்; உயிர்த்து,
மறுகிடை மறுகும் கவலையில் கவலும்,

இயங்கலும் இயங்கும், மயங்கலும் மயங்கும்,
ஆர் அஞர் உற்ற வீரபத்தினிமுன்,
கொந்து அழல் வெம்மைக் கூர் எரி பொருஅள்
வந்து தோன்றினள் மதுராபதி-என்.

வெண்பா

மாமகளும், நாமகளும், மா மயிடன் செற்று உகந்த
கோமகளும், தாம் படைத்த கொற்றத்தாள்; நாம
முதிரா முலை குறைத்தாள்; முன்னரே வந்தாள்—
மதுராபதி என்னும் மாது.

23. கட்டுரை காதை

மதுராபதி தெய்வம் கண்ணகியின் பின்புறம் தோன்றிப் பேசுதல்

சடையும் பிறையும் தாழ்ந்த சென்னி,
குவளை உண் கண் தவள வாள் முகத்தி;
கடை எயிறு அரும்பிய பவளச் செவ் வாய்த்தி;
இடை நிலா விரிந்த நித்தில நகைத்தி;
இட மருங்கு இருண்ட நீலம் ஆயினும்,
வல மருங்கு பொன் நிறம் புரையும் மேனியள்;
இடக் கை பொலம் பூந் தாமரை ஏந்தினும்,
வலக் கை அம் சுடர்க் கொடு வாள் பிடித்தோள்;
வலக் கால் புனை கழல் கட்டினும், இடக் கால்
தனிச் சிலம்பு அரற்றும் தகைமையள்; பனித் துறைக்
கொற்கைக் கொண்கன், குமரித் துறைவன்,
பொன்கோட்டு வரம்பன், பொதியில் பொருப்பன்,
குல முதல் கிழத்தி ஆதலின், அலமந்து,
ஒரு முலை குறைத்த திரு மா பத்தினி,
அலமரு திருமுகத்து ஆய் இழை நங்கை-தன்
முன்னிலை ஈயாள் பின்னிலைத் தோன்றி,
'கேட்டிசின் வாழி, நங்கை! என் குறை' என—

கண்ணகியின் வினை

வாட்டிய திரு முகம் வலவயின் கோட்டி,
'யாரை நீ, என் பின் வருவோய்? என்னுடை
ஆர் அஞர் எவ்வம் அறிதியோ?' என—

மதுராபதி சொல்லிய செய்திகள்

தீவினை வந்த வகையைக் கூறுதல்

'ஆர் அஞர் எவ்வம் அறிந்தேன், அணி-இழாஅயீ!
மா பெரும் கூடல் மதுராபதி என்பேன்;

கட்டுரை ஆட்டியேன்; யான் நின் கணவற்குப்
பட்ட கவற்சியேன்; பைந்தொடி! கேட்டி:

பெருந்தகைப் பெண்! ஒன்று கேளாய், என் நெஞ்சம்
வருந்திப் புலம்புறு நோய்.
தோழி! நீ ஈது ஒன்று கேட்டி, எம் கோமகற்கு
ஊழ்வினை வந்தக்கடை.
மாதராய்! ஈது ஒன்று கேள், உன் கணவற்குத்
தீதுற வந்த வினை.

பாண்டியர் குலத்தின் இயல்பு உரைத்தல்

காதின்

மறை நா ஓசை அல்லது, யாவதும்
மணி நா ஓசை கேட்டதும் இலனே;
அடி தொழுது இறைஞ்சா மன்னர் அல்லது,
குடி பழி தூற்றும் கோலனும் அல்லன்:
இன்னும் கேட்டி; நல் நுதல் மடந்தையர்
மடம் கெழு நோக்கின் மத முகம் திறப்புண்டு,
இடங்கழி நெஞ்சத்து இளமை யானை
கல்விப் பாகன் கையகப்படா அது,
ஒல்கா உள்ளத்து ஓடும் ஆயினும்,
ஒழுக்கொடு புணர்ந்த இவ் விழுக் குடிப் பிறந்தோர்க்கு
இழுக்கம் தாராது.

கை குறைத்த கொற்றவன்

இதுவும் கேட்டி:
உதவா வாழ்க்கைக் கீரந்தை மனைவி,
புதவக் கதவம் புடைத்தனன் ஒருநாள்,
''அரைச வேலி அல்லது யாவதும்
புரை தீர் வேலி இல்'' என மொழிந்து,
மன்றத்து இருத்திச் சென்றீர்; அவ்வழி
இன்று அவ் வேலி காவாதோ?' என,
செவிச் சூட்டு ஆணியின், புகை அழல் பொத்தி,
நெஞ்சம் சுடுதலின், அஞ்சி, நடுக்குற்று,
வச்சிரத் தடக் கை அமரர் கோமான்
உச்சிப் பொன் முடி ஒளி வளை உடைத்த கை
குறைத்த செங்கோல், குறையாக் கொற்றத்து,
இறைக் குடிப் பிறந்தோர்க்கு இழுக்கம் இன்மை:

வார்த்திகனுக்கு நீதி செய்த வரலாறு

பராசரன் சேரனைக் காணச் சென்று, பார்ப்பன வாகை சூடி, மீளுதல்

இன்னும் கேட்டி, நன் வாய் ஆகுதல்:
பெருஞ்சோறு பயந்த திருந்து வேல் தடக் கை

திரு நிலைபெற்ற பெருநாள்-இருக்கை,
அறன் அறி செங்கோல், மற நெறி நெடு வாள்,
புறவு நிறை புக்கோன், கறவை முறை செய்தோன்,
பூம் புனல் பழனப் புகார் நகர் வேந்தன்,
தாங்கா விளையுள், நல் நாடு-அதனுள்,
வலவைப் பார்ப்பான், பராசரன் என்போன்,
குலவு வேல் சேரன் கொடைத் திறம் கேட்டு,
''வண் தமிழ் மறையோற்கு வான் உறை கொடுத்த
திண் திறல் நெடு வேல் சேரலன் காண்கு'' என,
காடும், நாடும், ஊரும், போகி,
நீடு நிலை மலயம் பிற்படச் சென்று, ஆங்கு,
ஒன்று புரி கொள்கை இருபிறப்பாளர்
முத்தீச் செல்வத்து நான்மறை முற்றி,
ஐம் பெரு வேள்வியும் செய் தொழில் ஓம்பும்
அறு தொழில் அந்தணர் பெறு முறை வகுக்க,
நா வலம் கொண்டு, நண்ணூர் ஓட்டி,
பார்ப்பன வாகை சூடி, ஏற்புற
நன் கலம் கொண்டு தன் பதிப் பெயர்வோன்—

திருத்தங்காலில் பராசரன் தங்கிய காலத்து நிகழ்ந்தவை

செங்கோல் தென்னன் திருந்து தொழில் மறையவர்
தங்கால் என்பது ஊரே: அவ் ஊர்ப்
பாசிலை பொதுளிய போதி மன்றத்து;
தண்டே, குண்டிகை, வெண்குடை, காட்டம்,
பண்டச் சிறு பொதி, பாதக் காப்பொடு
களைந்தனன் இருப்போன்; ''காவல் வெண்குடை
விளைந்து முதிர் கொற்றத்து விறலோன் வாழி!
கடல் கடம்பு எறிந்த காவலன் வாழி!
விடர்ச் சிலை பொறித்த விறலோன் வாழி!
பூந் தண் பொருநைப் பொறையன் வாழி!
மாந்தரஞ்சேரல் மன்னவன் வாழ்க!'' என;
குழலும், குடுமியும், மழலைச் செவ் வாய்,
தளர் நடை ஆயத்து, தமர் முதல் நீங்கி,
விளையாடு சிறுஅர் எல்லாம் சூழ்தர;
''குண்டப் பார்ப்பீர்! என்னொடு ஓதி, என்
பண்டச் சிறு பொதி கொண்டு போமின்'' என;
சீர்த்தகு சிறப்பின் வார்த்திகன் புதல்வன்,
ஆல் அமர் செல்வன் பெயர் கொண்டு வளர்ந்தோன்,
பால் நாறு செவ் வாய்ப் படியோர் முன்னர்,
தளர் நா ஆயினும், மறைவிளி வழாஅது,

உளம் மலி உவகையோடு ஒப்ப ஓத,
தக்கிணன்-தன்னை மிக்கோன் வியந்து,
முத்தப் பூணூல், அத்தகு புனை கலம்,
கடகம், தோட்டொடு கையுறை ஈத்து,
தன் பதிப் பெயர்ந்தனனுக—

வார்த்திகனைச் சிறையிட, ஐயை கோயிலின் கதவம் திறவாமை

நன் கலன்
புனைபவும் பூண்பவும் பொருஅராகி,
வார்த்திகன்-தன்னைக் காத்தனர் ஓம்பி,
கோத்தொழில் இளையவர் கோமுறை அன்றி,
''படுபொருள் வெளவிய பார்ப்பான் இவன்'' என,
இடு சிறைக் கோட்டத்து இட்டனராக,
வார்த்திகன் மனைவி, கார்த்திகை என்போள்,
அலந்தனள்; ஏங்கி அழுதனள், நிலத்தில்;
புலந்தனள்; புரண்டனள்; பொங்கினள்: அது கண்டு,
மை அறு சிறப்பின் ஐயை கோயில்
செய்வினைக் கதவம் திறவாது ஆகலின்,

வார்த்திகனைச் சிறை விடுத்து, அவனுக்கு இரண்டு ஊர்களை அளித்தல்

திறவாது அடைத்த திண் நிலைக் கதவம்
மற வேல் மன்னவன் கேட்டனன் மயங்கி,
''கொடுங்கோல் உண்டுகொல்? கொற்றவைக்கு உற்ற
இடும்பை யாவதும் அறிந்தீமின்'' என,
ஏவல் இளையவர் காவலன் தொழுது,
வார்த்திகற் கொணர்ந்த வாய்மொழி உரைப்ப,
''நீர்த்து அன்று இது'' என நெடுமொழி கூறி,
''அறியா மாக்களின் முறை நிலை திரிந்த என்
இறை முறை பிழைத்தது: பொறுத்தல் நும் கடன்'' என,
தடம் புனல் கழனித் தங்கால்-தன்னுடன்
மடங்கா விளையுள் வயலூர் நல்கி,
கார்த்திகை கணவன் வார்த்திகன் முன்னர்,
இரு நில மடந்தைக்குத் திரு மார்பு நல்கி, அவள்
தணியா வேட்கையும் சிறிது தணித்தனனே;
நிலை கெழு கூடல் நீள் நெடு மறுகின்
மலை புரை மாடம் எங்கணும் கேட்ப,
கலை அமர் செல்வி கதவம் திறந்தது:
''சிறைப்படு கோட்டம் சீமின், யாவதும்
கறைப்படு மாக்கள் கறை வீடு செய்மின்;

இடு பொருள் ஆயினும், படுபொருள் ஆயினும்,
உற்றவர்க்கு உறுதி, பெற்றவர்க்கு ஆம்'' என
யானே எருத்தத்து, அணி முரசு இரீஇ,
கோன்முறை அறைந்த கொற்ற வேந்தன்
தான் முறை பிழைத்த தகுதியும் கேள், நீ:

சோதிட வார்த்தை

''ஆடித் திங்கள் பேர் இருள் பக்கத்து,
அழல் சேர் குட்டத்து, அட்டமி ஞான்று,
வெள்ளி வாரத்து, ஒள் எரி உண்ண,
உரைசால் மதுரையோடு அரைசு கேடுறும்'' எனும்
உரையும் உண்டே, நிரை தொடியோயே!—

பாண்டியன் முறை பிழைத்த காரணம்

கோவலனது முற்பிறப்பு வரலாறு

கடி பொழில் உடுத்த கலிங்க நல் நாட்டு,
வடி வேல் தடக் கை வசுவும், குமரனும்,
தீம் புனல் பழனச் சிங்கபுரத்தினும்,
காம்பு எழு கானக் கபிலபுரத்தினும்,
அரைசு ஆள் செல்வத்து, நிரை தார் வேந்தர்—
வீயாத் திருவின் விழுக் குடிப் பிறந்த
தாய வேந்தர்—தம்முள் பகையுற,
இரு-முக் காவதத்து இடைநிலத்து யாங்கணும்,
செரு வெல் வென்றியின், செல்வோர் இன்மையின்,
அரும் பொருள் வேட்கையின் பெரும் கலன் சுமந்து,
கரந்து உறை மாக்களின் காதலி-தன்னொடு,
சிங்கா வண் புகழ்ச் சிங்கபுரத்தின் ஓர்
அங்காடிப் பட்டு அருங்கலன் பகரும்
சங்கமன் என்னும் வாணிகன்-தன்னை,
முந்தைப் பிறப்பில், பைந்தொடி! கணவன்—
வெந் திறல் வேந்தற்குக் கோத்தொழில் செய்வோன்,
பரதன் என்னும் பெயரன்; அக் கோவலன்
விரதம் நீங்கிய வெறுப்பினன் ஆதலின்—
''ஒற்றன் இவன்'' எனப் பற்றினன் கொண்டு,
வெற்றி வேல் மன்னற்குக் காட்டிக் கொல்வுழி;
கொலைக்களப் பட்ட சங்கமன் மனைவி,
நிலைக்களம் காணாள், நீலி என்போள்,
''அரசர், முறையோ? பரதர், முறையோ?
ஊரீர், முறையோ? சேரியீர், முறையோ?'' என;

மன்றினும் மறுகினும் சென்றனள் பூசலிட்டு;
எழு நாள் இரட்டி எல்லே சென்றபின்,
''தொழு நாள் இது'' எனத் தோன்ற வாழ்த்தி,
மலைத் தலை ஏறி, ஓர் மால் விசும்பு ஏணியில்
கொலைத் தலைமகனைக் கூடுபு நின்றோள்,
''எம் உறு துயரம் செய்தோர் யாவதும்
தம் உறு துயரம் இற்று ஆகுக'' என்றே
விழுவோள் இட்ட வழு இல் சாபம்
பட்டனிர் ஆதலின், கட்டுரை கேள் நீ:

மதுராபதியின் கட்டுரை

உம்மை வினை வந்து உருத்தகாலை,
செம்மையிலோர்க்குச் செய் தவம் உதவாது:
வார் ஒலி கூந்தல்! நின் மணமகன்-தன்னை
ஈர்-ஏழ் நாள்அகத்து எல்லை நீங்கி,
வானோர்-தங்கள் வடிவின் அல்லதை,
ஈனோர் வடிவில் காண்டல் இல்' என,
மதுரை மா தெய்வம் மா பத்தினிக்கு
விதிமுறை சொல்லி, அழல்வீடு கொண்டபின்—

கண்ணகி மதுரையை விட்டு நீங்கி, திருச்செங்கோடு சேர்தல்

'கருத்து உறு கணவன் கண்டபின் அல்லது,
இருத்தலும் இல்லேன்; நிற்றலும் இலன்' என,
கொற்றவை வாயில் பொன் தொடி தகர்த்து,
'கீழ்த் திசை வாயில் கணவனொடு புகுந்தேன்;
மேல் திசை வாயில் வறியேன் பெயர்கு' என,
இரவும் பகலும் மயங்கினள் கையற்று,
உரவு நீர் வையை ஒரு கரைக்கொண்டு, ஆங்கு,
அவல என்னுள், அவலித்து இழிதலின்;
மிசைய என்னுள், மிசை வைத்து ஏறலின்;
கடல் வயிறு கிழித்து, மலை நெஞ்சு பிளந்து, ஆங்கு,
அவுணரைக் கடந்த சுடர் இலை நெடு வேல்
நெடு வேள் குன்றம் அடி வைத்து ஏறி—

கண்ணகி கோவலனொடு வான ஊர்தியில் செல்லுதல்

பூத்த வேங்கைப் பொங்கர்க் கீழ், 'ஓர்
தீத் தொழில்ஆட்டியேன் யான்' என்று ஏங்கி,
எழு நாள் இரட்டி எல்லை சென்ற பின்,
'தொழு நாள் இது' எனத் தோன்ற வாழ்த்தி,
பீடு கெழு நங்கை பெரும் பெயர் ஏத்தி,

வாடா மா மலர் மாரி பெய்து, ஆங்கு,
அமரர்க்கு அரசன் தமர் வந்து ஏத்த,
கோநகர் பிழைத்த கோவலன்-தன்னொடு
வான ஊர்தி ஏறினள்-மாதோ—
கான் அமர் புரி குழல் கண்ணகி-தான்-என்.

வெண்பா

தெய்வம் தொழாஅள், கொழுநன் தொழுவாளைத்
தெய்வம் தொழும் தகைமை திண்ணிதால்—தெய்வம் ஆய்,
மண்ணக மாதர்க்கு அணி ஆய கண்ணகி
விண்ணக மாதர்க்கு விருந்து.

கட்டுரை

முடி கெழு வேந்தர் மூவருள்ளும்
படை விளங்கு தடக் கைப் பாண்டியர் குலத்தோர்
அறனும், மறனும், ஆற்றலும், அவர்-தம்
பழ விறல் மூதூர்ப் பண்பு மேம்படுதலும்,
விழவு மலி சிறப்பும், விண்ணவர் வரவும்,
ஒடியா இன்பத்து அவருடை நாட்டுக்
குடியும், கூழின் பெருக்கமும், அவர்-தம்
வையைப் பேரியாறு வளம் சுரந்து ஊட்டலும்,
பொய்யா வானம் புதுப் பெயல் பொழிதலும்,
ஆரபடி, சாத்துவதி, என்று இரு விருத்தியும்,
நேரத் தோன்றும் வரியும், குரவையும்,
என்று இவை அனைத்தும் பிற பொருள் வைப்போடு
ஒன்றித் தோன்றும் தனிக் கோள் நிலைமையும்,
வட ஆரியர் படை கடந்து,
தென் தமிழ் நாடு ஒருங்கு காண,
புரை தீர் கற்பின் தேவி-தன்னுடன்
அரைசுகட்டிலில் துஞ்சிய பாண்டியன்
நெடுஞ்செழியனொடு ஒரு பரிசா
நோக்கிக் கிடந்த
மதுரைக் காண்டம் முற்றிற்று.

மூன்றாவது

வஞ்சிக் காண்டம்

24. குன்றக் குரவை

உரைப் பாட்டு மடை

குறவர் கண்ணகியை வினவுதல்

'குருவி ஓபபியும் கிளி கடிந்தும்
குன்றத்துச் சென்று வைகி,
அருவி ஆடியும் சுனை குடைந்தும்
அலவுற்று வருவேம் முன்,
மலை வேங்கை நறு நிழலின்,
வள்ளி போல்வீர்! மனம் நடுங்க,
முலை இழந்து வந்து நின்றீர்;
யாவிரோ?' என—

கண்ணகி உரைத்த விடை

முனியாதே,
'மண மதுரையோடு அரசு கேடுற
வல் வினை வந்து உருத்தகாலை,
கணவினை அங்கு இழந்து போந்த
கடு வினையேன் யான்' என்றாள்.

கண்ணகி தன் கணவனுடன் வான ஊர்தியில் செல்லக் கண்ட குன்றக் குறவர்கள் அவளைத் தெய்வமாகக் கருதி, வழிபடுதல்

என்றலும், இறைஞ்சி, அஞ்சி,
இணை வளைக் கை எதிர் கூப்பி,
நின்ற எல்லையுள், வானவரும்
நெடு மாரி மலர் பொழிந்து,
குன்றவரும் கண்டு நிற்ப,
கொழுநனொடு கொண்டு போயினர்:
'இவள் போலும் நம் குலக்கு ஓர்
இருந் தெய்வம் இல்லை; ஆதலின்,
சிறுகுடியீரே! சிறுகுடியீரே!
தெய்வம் கொள்ளுமின், சிறுகுடியீரே!
நிறம் கிளர் அருவிப் பறம்பின் தாழ்வரை,
நறுஞ் சினை வேங்கை நல் நிழல்கீழ், ஓர்

தெய்வம் கொள்ளுமின், சிறுகுடியீரே!
தொண்டகம் தொடுமின்; சிறுபறை தொடுமின்;
கோடு வாய் வைம்மின்; கொடு மணி இயக்குமின்;
குறிஞ்சி பாடுமின்; நறும் புகை எடுமின்;
பூப் பலி செய்ம்மின்; காப்புக்கடை நிறுமின்;
பரவலும் பரவுமின்; விரவு மலர் தூவுமின்—
ஒரு மூலி இழந்த நங்கைக்கு,
பெரு மலை துஞ்சாது வளம் சுரக்க எனவே.

கொளுச் சொல்

ஆங்கு ஒன்று காணுய், அணி-இழாய்! ஈங்கு இது காண்:
அஞ்சனப் பூழி, அரிதாரத்து இன் இடியல்,
சிந்துரச் சுண்ணம் செறியத் தூய், தேம் கமழ்ந்து,
இந்திரவில்லின் எழில் கொண்டு, இழும் என்று
வந்து, ஈங்கு, இழியும் மலை அருவி ஆடுதுமே.

ஆடுதுமே, தோழி! ஆடுதுமே, தோழி!
'அஞ்சல் ஓம்பு' என்று, நலன் உண்டு நல்காதான்
மஞ்சு சூழ் சோலை மலை அருவி ஆடுதுமே.

தலைவன் சிறைப்புறமாகத் தோழிக்குத் தலைமகள் சொல்லியது

எற்று ஒன்றும் காணேம் புலத்தல், அவர் மலைக்
கல் தீண்டி வந்த புதுப் புனல்;
கல் தீண்டி வந்த புதுப் புனல் மற்றையார்
உற்று ஆடின் நோம், தோழி! நெஞ்சு-அன்றே.

என் ஒன்றும் காணேம் புலத்தல், அவர் மலைப்
பொன் ஆடி வந்த புதுப் புனல்;
பொன் ஆடி வந்த புதுப் புனல் மற்றையார்
முன் ஆடின் நோம், தோழி! நெஞ்சு-அன்றே.

யாது ஒன்றும் காணேம் புலத்தல், அவர் மலைப்
போது ஆடி வந்த புதுப் புனல்;
போது ஆடி வந்த புதுப் புனல் மற்றையார்
மீது ஆடின் நோம், தோழி! நெஞ்சு-அன்றே.

பாட்டு மடை

உரை இனி, மாதராய்! உண் கண் சிவப்ப,
புரை தீர் புனல் குடைந்து ஆடின், நோம் ஆயின்,
உரவுநீர் மா கொன்ற வேல்-ஏந்தி ஏத்தி,
குரவை தொடுத்து, ஒன்று பாடுகம் வா, தோழி!

வரைவு முடிதல் வேண்டித் தெய்வம் பராயது

சீர் கெழு செந்திலும், செங்கோடும், வெண்குன்றும்,
ஏரகமும், நீங்கா இறைவன் கை வேல்-அன்றே—
பார் இரும் பௌவத்தினுள் புக்கு, பண்டு ஒரு நாள்,
சூர் மா தடிந்த சுடர் இலை வெள் வேலே. 8

அணி முகங்கள் ஓர் ஆறும், ஈர்-ஆறு கையும்,
இணை இன்றித் தான் உடையான் ஏந்திய வேல்-அன்றே—
பிணிமுகம் மேற்கொண்டு, அவுணர் பீடு அழியும்வண்ணம்
மணி விசும்பின் கோன் ஏத்த, மாறு அட்ட வெள் வேலே. 9

சரவணப் பூம் பள்ளியறைத் தாய்மார் அறுவர்
திரு முலைப் பால் உண்டான் திருக் கை வேல்-அன்றே—
வரு திகிரி கோல் அவுணன் மார்பம் பிளந்து,
குருகு பெயர்க் குன்றம் கொன்ற நெடு வேலே. 10

தலைவி அறத்தொடு நிற்றல்

இறை வளை நல்லாய்! இது நகை ஆகின்றே—
கறி வளர் தண் சிலம்பன் செய்த நோய் தீர்க்க
அறியாள் மற்று அன்னை; அலர் கடம்பன் என்றே,
வெறியாடல் தான் விரும்பி, 'வேலன், வருக' என்றாள்! 11

ஆய் வளை நல்லாய்! இது நகை ஆகின்றே—
மா மலை வெற்பன் நோய் தீர்க்க வரும் வேலன்!
வரும் ஆயின் வேலன் மடவன்; அவனின்
குருகு பெயர்க் குன்றம் கொன்றான் மடவன். 12

செறி வளைக் கை நல்லாய்! இது நகை ஆகின்றே—
வெறி கமழ் வெற்பன் நோய் தீர்க்க வரும் வேலன்!
வேலன் மடவன்; அவனினும் தான் மடவன்,
ஆல் அமர் செல்வன் புதல்வன் வரும் ஆயின். 13

நேர் இழை நல்லாய்! நகை ஆம்—மலை நாடன்
மார்பு தரு வெந் நோய் தீர்க்க வரும் வேலன்!
தீர்க்க வரும் வேலன்-தன்னினும் தான் மடவன்,
கார்க் கடப்பந் தார் எம் கடவுள் வரும் ஆயின். 14

தலைவன் சிறைப்புறத்தானைத் தோழி கூறியது

வேலனார் வந்து வெறியாடும் வெங் களத்து,
நீலப் பறவை மேல் நேர்-இழை-தன்னோடும்
ஆல் அமர் செல்வன் புதல்வன் வரும்: வந்தால்,
மால் வரை வெற்பன் மண அணி வேண்டுதுமே. 15

கயிலை நல் மலை இறை மகனே! நின் மதி நுதல்
மயில் இயல் மடவரல் மலையர்-தம் மகளார்,
செயலைய மலர் புரை திருவடி தொழுதேம்—
அயல்-மணம் ஒழி; அருள், அவர் மணம் எனவே. 16

மலைமகள் மகனே! நின் மதி நுதல் மடவரல்
குல மலை உறைதரு குறவர்-தம் மகளார்,
நிலை உயர் கடவுள்! நின் இணை அடி தொழுதேம்—
பலர் அறி மணம் அவர் படுகுவர் எனவே. 17

குறமகள் அவள் எம குலமகள் அவளொடும்,
அறுமுக ஒருவ! நின் அடி இணை தொழுதேம்—
துறைமிசை நினது இரு திருவடி தொடுநர்
பெறுக நல் மணம்; விடு பிழை மணம் எனவே. 18

தோழி தலைமகனுக்கு அலர் அறிவுறுத்தி, வரைவுகடாதல்

என்று யாம் பாட, மறை நின்று கேட்டருளி,
மன்றல் அம் கண்ணி மலைநாடன் போவான் முன்
சென்றேன்; அவன்-தன் திருவடி கைதொழுது
நின்றேன் உரைத்தது கேள்; வாழி, தோழி! 19

'கடம்பு சூடி, உடம்பிடி ஏந்தி,
மடந்தைபொருட்டால் வருவது இவ் ஊர்:
அறுமுகம் இல்லை; அணி மயில் இல்லை;
குறமகள் இல்லை; செறி தோள் இல்லை;
கடம் பூண் தெய்வமாக நேரார்,
மடவர் மன்ற, இச் சிறுகுடியோரே.' 20

தலைமகளுக்குத் தோழி வரைவு கூறுதல்

என்று, ஈங்கு,
அலர் பாடு பெற்றமை யான் உரைப்பக் கேட்டு,
புலர் வாடு நெஞ்சம் புறங்கொடுத்துப் போன
மலர் தலை வெற்பன் வரைவானும் போலும்;
முலையினுல் மா மதுரை கோள் இழைத்தாள் காதல்
தலைவனே வானோர் தமராரும் கூடி,
பலர் தொழு பத்தினிக்குக் காட்டிக் கொடுத்த
நிலை ஒன்று பாடுதும் யாம். 21

பாடுகம் வா, வாழி, தோழி! யாம் பாடுகம்;
பாடுகம் வா, வாழி, தோழி! யாம் பாடுகம்;
கோமுறை நீங்கக் கொடி மாடக் கூடலுள்
தீ முறை செய்தாளை ஏத்தி யாம் பாடுகம்;
தீ முறை செய்தாளை ஏத்தி யாம் பாடுங்கால்,
மா மலை வெற்பன் மண அணி வேண்டுதுமே. 22

பாடு உற்று,
பத்தினிப் பெண்டிர் பரவித் தொழுவாள் ஓர்
பைத்தரவு அல்குல் நம் பைம் புனத்து உள்ளாளே:
பைத்தரவு அல்குல் கணவனே வானோர்கள்
உய்த்துக் கொடுத்தும் உரையோ ஒழியாரே. 23

வானக வாழ்க்கை அமரர் தொழுது ஏத்த,
கான நறு வேங்கைக் கீழாள் ஓர் காரிகையே:
கான நறு வேங்கைக் கீழாள் கணவனெடும்
வானக வாழ்க்கை மறுதரவோ இல்லாளே. 24

மறுதரவு இல்லாளே ஏத்தி, நாம் பாட,
பெறுகதில் அம்ம, இவ் ஊரும் ஓர் பெற்றி!
பெற்றி உடையதே, பெற்றி உடையதே,
பொன் தொடி மாதர் கணவன் மணம் காணப்
பெற்றி உடையது, இவ் ஊர். 25

சேரனே வாழ்த்துதல்

என்று, யாம்
கொண்டுநிலை பாடி, ஆடும் குரவையைக்
கண்டு, நம் காதலர் கைவந்தார்; ஆனது
உண்டு மகிழ்ந்து, ஆனை வைகலும் வாழியர்—
வில் எழுதிய இமயத்தொடு
கொல்லி ஆண்ட குடவர் கோவே! 26

25. காட்சிக் காதை

இலவந்தி வெள்ளி மாடத்தில் தன் தேவி இளங்கோவேண்மாளுடன்
இருந்த செங்குட்டுவன் மலைவளம் காணச் சுற்றத்தோடு பெயர்தல்

மாநீர் வேலிக் கடம்பு எறிந்து, இமயத்து,
வானவர் மருள, மலை வில் பூட்டிய
வானவர் தோன்றல், வாய் வாள் கோதை,
விளங்கு இலவந்தி வெள்ளி மாடத்து,
இளங்கோவேண்மாளுடன் இருந்தருளி, 5
'துஞ்சா முழவின், அருவி ஒலிக்கும்
மஞ்சு சூழ் சோலை மலை காண்குவம்' என,
பைந் தொடி ஆயமொடு பூரந்து ஒருங்கு ஈண்டி,
வஞ்சி முற்றம் நீங்கிச் செல்வோன்,

பேரியாற்றங்கரையில் தங்குதல்

வள மலர்ப் பூம் பொழில் வானவர் மகளிரொடு 10
விளையாட்டு விரும்பிய விறல் வேல் வானவன்

பொலம் பூங் காவும், புனல் யாற்றுப் பரப்பும்,
இலங்கு நீர்த் துருத்தியும், இள மரக் காவும்,
அரங்கும், பள்ளியும், ஒருங்குடன் பரப்பி;
ஒரு நூற்று நாற்பது யோசனை விரிந்த
பெரு மால் களிற்றுப் பெயர்வோன் போன்று;
கோங்கம், வேங்கை, தூங்கு இணர்க் கொன்றை,
நாகம், திலகம், நறுங் காழ் ஆரம்,
உதிர் பூம் பரப்பின் ஒழுகு புனல் ஒளித்து,
மதுகரம், ஞிமிறொடு வண்டு இனம் பாட,
நெடியோன் மார்பில் ஆரம் போன்று
பெரு மலை விலங்கிய பேரியாற்று அடைகரை
இடு மணல் எக்கர் இயைந்து, ஒருங்கு இருப்ப—

மலைப்பக்கத்தில் எழும் பல் வேறு ஓசைகளைக் கேட்டல்

குன்றக் குரவையொடு கொடிச்சியர் பாடலும்,
வென்றிச் செவ்வேள் வேலன் பாணியும்,
தினைக் குறு வள்ளையும், புனத்து எழு விளியும்,
நறவுக் கண் உடைத்த குறவர் ஓதையும்,
பறை இசை அருவிப் பயம் கெழும் ஓதையும்,
புலியொடு பொரூஉம் புகர்முக ஓதையும்,
கலி கெழு மீமிசைச் சேணோன் ஓதையும்,
பயம்பில் வீழ் யானைப் பாகர் ஓதையும்,
இயங்கு படை அரவமோடு, யாங்கணும், ஒலிப்ப—

குறவர் மலைபடு பொருள்களுடன் வந்து, செங்குட்டுவனை வணங்குதல்

அளந்து கடை அறியா அருங்கலம் சுமந்து,
வளம் தலைமயங்கிய வஞ்சி முற்றத்து,
இறைமகன் செவ்வி யாங்கணும் பெறூஉ,
திறை சுமந்து நிற்கும் தெவ்வர் போல;
யானை வெண் கோடும், அகிலின் குப்பையும்,
மான் மயிர்க் கவரியும், மதுவின் குடங்களும்,
சந்தனக் குறையும், சிந்துரக் கட்டியும்,
அஞ்சனத் திரளும், அணி அரிதாரமும்;
ஏல வல்லியும், இருங் கறி வல்லியும்,
கூவை நூறும், கொழுங் கொடிக் கவலையும்,
தெங்கின் பழனும், தேமாங் கனியும்,
பைங் கொடிப் படலையும், பலவின் பழங்களும்,
காயமும், கரும்பும், பூ மலி கொடியும்,
கொழுந் தாள் கமுகின் செழுங் குலைத் தாறும்,
பெரும் குலை வாழையின் இருங் கனித் தாறும்;
ஆளியின் அணங்கும், அரியின் குருளையும்,

வாள்வரிப் பறழும், மத கரிக் களபமும்,
குரங்கின் குட்டியும், குடா அடி உளியமும்,
வரை ஆடு வருடையும், மட மான் மறியும்,
காசறைக் கருவும், ஆசு அறு நகுலமும்,
பீலி மஞ்ஞையும், நாவியின் பிள்ளையும்,
கானக்கோழியும், தேன் மொழிக் கிள்ளையும்;
மலைமிசை மாக்கள் தலைமிசைக் கொண்டு—

மலைக் குறவர் சொல்லிய செய்தி

ஆங்கு,
'ஏழ் பிறப்பு அடியேம்; வாழ்க, நின் கொற்றம்!
கான வேங்கைக் கீழ் ஓர் காரிகை
தான் முலை இழந்து, தனித் துயர் எய்தி,
வானவர் போற்ற மன்னெடும் கூடி,
வானவர் போற்ற, வானகம் பெற்றனள்;
எந் நாட்டாள்கொல்? யார் மகள்கொல்லோ?
நின் நாட்டு யாங்கள் நினைப்பினும் அறியேம்;
பல் நூறுயிரத்து ஆண்டு வாழியர்!' என—

செங்குட்டுவனுடன் இருந்த சாத்தனர் உரைத்த புதுமைகள்

மண் களி நெடு வேல் மன்னவன் கண்டு
கண் களி மயக்கத்துக் காதலோடு இருந்த
தண் தமிழ் ஆசான் சாத்தன் இஃது உரைக்கும்:
'ஒண் தொடி மாதர்க்கு உற்றதை எல்லாம்,
திண் திறல் வேந்தே! செப்பக் கேளாய்:
தீவினைச் சிலம்பு காரணமாக,
ஆய் தொடி அரிவை கணவற்கு உற்றதும்;
வலம் படு தானை மன்னன் முன்னர்,
சிலம்பொடு சென்ற சேயிழை வழக்கும்;
செஞ் சிலம்பு எறிந்து, தேவி முன்னர்,
வஞ்சினம் சாற்றிய மா பெரும் பத்தினி,
''அம் சில் ஓதி! அறிக'' எனப் பெயர்ந்து,
முதிரா முலைமுகத்து எழுந்த தீயின்
மதுரை மூதூர் மா நகர் சுட்டதும்;
''அரிமான் ஏந்திய அமளிமிசை இருந்த
திரு வீழ் மார்பின் தென்னர் கோமான்
தயங்கு இணர்க் கோதை தன் துயர் பொருஅன்,
மயங்கினன்கொல்'' என மலர் அடி வருடி,
தலைத்தாள் நெடுமொழி தன் செவி கேளாள்,
கலக்கம் கொள்ளாள், கடுந் துயர் பொருஅள்,
''மன்னவன் செல்வுழிச் செல்க யான்'' என

தன் உயிர்கொண்டு அவன் உயிர் தேடினள்போல்,
பெருங்கோப் பெண்டும் ஒருங்குடன் மாய்ந்தனள்;
''கொற்ற வேந்தன் கொடுங்கோல் தன்மை
இற்று'' எனக் காட்டி, இறைக்கு உரைப்பனள்போல்,
தன் நாட்டு ஆங்கண் தனிமையின் செல்லாள்,
நின் நாட்டு அகவயின் அடைந்தனள் நங்கை' என்று,
ஒழிவு இன்றி உரைத்து, 'ஈண்டு ஊழி ஊழி
வழிவழிச் சிறக்க, நின் வலம் படு கொற்றம்' என—

தென்னவனது மறைவை அறிந்த செங்குட்டுவன் வருந்தி உரைத்தல்

தென்னர் கோமான் தீத் திறம் கேட்ட
மன்னர் கோமான் வருந்தினன் உரைப்போன்:
'எம்மோரன்ன வேந்தற்கு, உற்ற
செம்மையின் இகந்த சொல், செவிப்புலம் படாமுன்,
'உயிர் பதிப் பெயர்த்தமை உறுக, ஈங்கு' என,
வல் விரை வலீத்த கோலை மன்னவன்
செல் உயிர் நிமிர்த்துச் செங்கோல் ஆக்கியது:
மழைவளம் கரப்பின், வான் பேர் அச்சம்;
பிழை உயிர் எய்தின், பெரும் பேர் அச்சம்;
குடி புரவுண்டும் கொடுங்கோல் அஞ்சி,
மன்பதை காக்கும் நன் குடிப் பிறத்தல்
துன்பம் அல்லது, தொழுதகவு இல்' என,
துன்னிய துன்பம் துணிந்து வந்து உரைத்த
நல் நூல் புலவற்கு நன்கனம் உரைத்து—

செங்குட்டுவன் வேண்மாளிடம் வினவுதல்

'ஆங்கு,
உயிருடன் சென்ற ஒரு மகள்-தன்னினும்,
செயிருடன் வந்த இச் சேயிழை-தன்னினும்,
நல்-நுதல்! வியக்கும் நலத்தோர் யார்?' என,
மன்னவன் உரைப்ப—

பெருந்தேவியின் மறுமொழி

மா பெருந்தேவி,
'காதலன் துன்பம் காணது கழிந்த
மாதரோ பெரும் திரு உறுக, வானகத்து;
அத்திறம் நிற்க, நம் அகல் நாடு அடைந்த இப்
பத்தினிக் கடவுளைப் பரசல் வேண்டும்' என—

அரசனது நோக்கத்தை அறிந்து அமைச்சர் கூறுதல்

மாலை வெண்குடை மன்னவன் விரும்பி,
நூல் அறி புலவரை நோக்க, ஆங்கு அவர்,

'ஒற்கா மரபின் பொதியில் அன்றியும்,
வில் தலைக்கொண்ட வியன் பேர் இமயத்துக்
கல் கால்கொள்ளினும் கடவுள் ஆகும்;
கங்கைப் பேர் யாற்றினும், காவிரிப் புனலினும்,
தங்கிய நீர்ப்படை தகவோ உடைத்து' என—

செங்குட்டுவன் தனது கருத்தை வெளியிடுதல்

'பொதியில் குன்றத்துக் கல் கால்கொண்டு,
முது நீர்க் காவிரி முன்துறைப் படுத்தல்,
மறத் தகை நெடு வாள் எம் குடிப் பிறந்தோர்க்கு,
சிறப்பொடு வரூஉம் செய்கையோ அன்று;
புன் மயிர்ச் சடைமுடி, புலரா உடுக்கை,
முந்நூல் மார்பின், முத்தீச் செல்வத்து
இருபிறப்பாளரொடு பெரு மலை அரசன்
மடவதின் மாண்ட மா பெரும் பத்தினிக்
கடவுள் எழுத ஓர் கல் தாரான்எனின்,
வழி நின்று பயவா மாண்பு இல் வாழ்க்கை
கழிந்தோர் ஒழிந்தோர்க்குக் காட்டிய காஞ்சியும்,
முது குடிப் பிறந்த முதிராச் செல்வியை
மதிமுடிக்கு அளித்த மகட்பால் காஞ்சியும்,
தென் திசை என்-தன் வஞ்சியொடு வட திசை
நின்று எதிர் ஊன்றிய நீள் பெருங் காஞ்சியும்,
நிலவுக் கதிர் அலைந்த நீள் பெரும் சென்னி
அலர் மந்தாரமோடு ஆங்கு அயல் மலர்ந்த
வேங்கையொடு தொடுத்த விளங்கு விறல் மாலை
மேம்பட மலைதலும், காண்குவல் ஈங்கு' என,
'குடைநிலை வஞ்சியும், கொற்ற வஞ்சியும்,
நெடு மாராயம் நிலைஇய வஞ்சியும்
வென்றோர் விளங்கிய வியன் பெரு வஞ்சியும்,
பின்றூச் சிறப்பின் பெருஞ்சோற்று வஞ்சியும்,
குன்றூச் சிறப்பின் கொற்றவள்ளையும்,
வட்கர் போகிய வான் பனந் தோட்டுடன்,
புட்கைச் சேஎன் பொலிய, சூட்டி;
பூவா வஞ்சிப் பொன் நகர்ப் புறத்து, என்
வாய் வாள் மலைந்த வஞ்சி சூடுதும்' என—

வில்லவன்கோதை வேந்தனுக்கு உரைத்தவை

'பல் யாண்டு வாழ்க, நின் கொற்றம், ஈங்கு!' என,
வில்லவன்கோதை வேந்தற்கு உரைக்கும்:
'நும் போல் வேந்தர் நும்மோடு இகலி,

கொங்கர் செங் களத்துக் கொடுவரிக் கயல் கொடி
பகைபுறத்துத் தந்தனர்; ஆயினும், ஆங்கு அவை
திகைமுக வேழத்தின் செவிஅகம் புக்கன;
கொங்கணர், கலிங்கர், கொடுங் கருநாடர்,
பங்களர், கங்கர், பல் வேல் கட்டியர்,
வட ஆரியரொடு, வண்தமிழ் மயக்கத்து, உன்
கடமலை வேட்டம் என் கண்-புலம் பிரியாது;
கங்கைப் பேர் யாற்றுக் கடும் புனல் நீத்தம்,
எம் கோமகனை ஆட்டிய அந் நாள்,
ஆரிய மன்னர் ஈர்-ஐஞ்ஞூற்றுவர்க்கு
ஒரு நீ ஆகிய செரு வெங் கோலம்
கண் விழித்துக் கண்டது, கடுங் கண் கூற்றம்:
இமிழ் கடல் வேலியைத் தமிழ்நாடு ஆக்கிய
இது நீ கருதினை ஆயின், ஏற்பவர்
முதுநீர் உலகின் முழுவதும் இல்லை;
இமய மால் வரைக்கு எம் கோன் செல்வது
கடவுள் எழுத ஓர் கற்கை; ஆதலின்,
வட திசை மருங்கின் மன்னர்க்கு எல்லாம்
தென் தமிழ் நல் நாட்டுச் செழு வில், கயல், புலி,
மண் தலை ஏற்ற வரைக, ஈங்கு' என——

அழும்பில் வேளின் கூற்று

'நாவல் அம் தண் பொழில் நண்ணூர் ஒற்று நம்
காவல் வஞ்சிக் கடைமுகம் பிரியா;
வம்பு அணி யானை வேந்தர் ஒற்றே
தம் செவிப் படுக்கும் தகைமைய அன்றே?
அறை பறை' என்றே அழும்பில் வேள் உரைப்ப——

வஞ்சி மா நகர் திரும்பிய பின், வட திசை செல்வது குறித்து, செங்குட்டுவன் பறை அறைவித்தல்

நிறை-அரும் தானை வேந்தனும் நேர்ந்து,
கூடார் வஞ்சிக் கூட்டுண்டு சிறந்த
வாடா வஞ்சி மா நகர் புக்கபின்——
'வாழ்க, எம் கோ, மன்னவர் பெருந்தகை!
ஊழிதொறு ஊழி உலகம் காக்க' என,
'வில் தலைக் கொண்ட வியன் பேர் இமயத்து, ஓர்
கல் கொண்டு பெயரும் எம் காவலன்; ஆதலின்,
வட திசை மருங்கின் மன்னர் எல்லாம்
இடு திறை கொடுவந்து எதிரீர்ஆயின்,
கடல் கடம்பு எறிந்த கடும் போர் வார்த்தையும்,

விடர்ச் சிலை பொறித்த வியன் பெரு வார்த்தையும்,
கேட்டு வாழுமின்; கேளீர் ஆயின்,
தோள்-துணை துறக்கும் துறவொடு வாழுமின்;
தாழ் கழல் மன்னன்-தன் திருமேனி,
வாழ்க, சேஞ்முகம்!' என வாழ்த்தி,
இறை இகல் யானை எருத்தத்து ஏற்றி,
அறை பறை எழுந்ததால், அணி நகர் மருங்கு-என்.

26. கால்கோள் காதை

அரசவையில் செங்குட்டுவன் நெடுமொழி கூறுதல்

அறை பறை எழுந்தபின், அரிமான் ஏந்திய
முறை முதல் கட்டில் இறைமகன் ஏற;
ஆசான், பெருங்கணி, அரும் திறல் அமைச்சர்,
தானைத் தலைவர்-தம்மொடு குழீஇ,
'மன்னர்-மன்னன் வாழ்க!' என்று ஏத்தி,
முன்னிய திசையின் முறை மொழி கேட்ப—
வியம் படு தானை விறலோர்க்கு எல்லாம்
உயர்ந்து ஓங்கு வெண்குடை உரவோன் கூறும்:
'இமயத் தாபதர் எமக்கு ஈங்கு உணர்த்திய
அமையா வாழ்க்கை அரைசர் வாய்மொழி
நம்பால் ஒழிகுவது ஆயின், ஆங்கு அஃது
எம்போல் வேந்தர்க்கு இகழ்ச்சியும் தரூஉம்:
வட திசை மருங்கின் மன்னர்-தம் முடித் தலைக்
கடவுள் எழுத ஓர் கல் கொண்டு அல்லது,
வறிது மீளும், என் வாய் வாள், ஆகின்;
செறி கழல் புனைந்த செரு வெங் கோலத்துப்
பகை அரசு நடுக்காது, பயம் கெழு வைப்பின்
குடி நடுக்குறூஉம் கோலேன் ஆக' என—

ஆசானது உரை

'ஆர் புனை தெரியலும், அலர் தார் வேம்பும்,
சீர் கெழு மணி முடிக்கு அணிந்தோர் அல்லால்,
அஞ்சினர்க்கு அளிக்கும் அடு போர் அண்ணல்! நின்
வஞ்சினத்து எதிரும் மன்னரும் உளரோ?
இமயவரம்ப! நின் இகழ்ந்தோர் அல்லர்;
அமைக நின் சினம்' என, ஆசான் கூற—

தக்க முகூர்த்தம் இது என்று நிமித்திகன் கூறல்

ஆறு-இரு மதியினும் காருக அடிப் பயின்று,
ஐந்து கேள்வியும் அமைந்தோன் எழுந்து,

'வெந் திறல் வேந்தே, வாழ்க, நின் கொற்றம்!
இரு நில மருங்கின் மன்னர் எல்லாம் நின்
திரு மலர்த் தாமரைச் சேவடி பணியும்
முழுத்தம் ஈங்கு இது; முன்னிய திசைமேல்
எழுச்சிப்பாலை ஆக' என்று ஏத்த—

வேந்தன் கட்டளைப்படி, வாளும் குடையும் வட திசைப் பெயர்த்து வைத்தல்

மீளா வென்றி வேந்தன் கேட்டு,
'வாளும் குடையும் வட திசைப் பெயர்க்க' என—
உரவு மண் சுமந்த அரவுத் தலை பனிப்ப,
பொருநர் ஆர்ப்பொடு முரசு எழுந்து ஒலிப்ப;
இரவு இடங்கெடுத்த நிரை மணி விளக்கின்
விரவுக் கொடி அடுக்கத்து நிரயத் தானையோடு
ஐம் பெருங்குழுவும், எண் பேர் ஆயமும்,
வெம் பரி யானை வேந்தற்கு ஓங்கிய
கரும வினைஞரும், கணக்கியல் வினைஞரும்,
தரும வினைஞரும், தந்திர வினைஞரும்;
'மண் திணி ஞாலம் ஆள்வோன் வாழ்க!' என,
பிண்டம் உண்ணும் பெரும் களிற்று எருத்தின்
மறம் மிகு வாளும், மாலை வெண்குடையும்,
புறநிலைக் கோட்டப் புரிசையில் புகுத்தி;
புரை தீர் வஞ்சி போந்தையின் தொடுப்போன்
அரைசு விளங்கு அவையம் முறையின் புகுதர—

பெரும் படைத் தலைவர்க்குச் செங்குட்டுவன் பெருஞ்சோறு அளித்தல்

அரும் படைத் தானை அமர் வேட்டுக் கலித்த
பெரும் படைத் தலைவர்க்குப் பெருஞ்சோறு வகுத்து—

செங்குட்டுவன் வஞ்சி சூடி, தெய்வம் பரவி, காலையில் யானையின்மேல் எழுதல்

பூவா வஞ்சியில் பூத்த வஞ்சி
வாய் வாள் நெடுந்தகை மணி முடிக்கு அணிந்து,
ஞாலம் காவலர் நாள் திறை பயிரும்
காலை-முரசம் கடைமுகத்து எழுதலும்,
நிலவுக் கதிர் முடித்த நீள் இருஞ் சென்னி,
உலகு பொதி உருவத்து, உயர்ந்தோன் சேவடி
மறம் சேர் வஞ்சிமாலையொடு புனைந்து,
இறைஞ்சாச் சென்னி இறைஞ்சி, வலம் கொண்டு,
மறையோர் ஏந்திய ஆவுதி நறும் புகை
நறை கெழு மாலையின் நல் அகம் வருத்த,
கடக் களி யானைப் பிடர்த்தலை ஏறினன்—

ஆடகமாடத்துப் பெருமானது சேடத்துடன் வந்து சிலர் ஏத்த,
செங்குட்டுவன் அதனைப் பெற்றுத் தன் புயத்து அணிதல்

'குடக்கோக் குட்டுவன் கொற்றம் கொள்க' என,
ஆடகமாடத்து அறிதுயில் அமர்ந்தோன்
சேடம் கொண்டு, சிலர் நின்று ஏத்த,
தெண்-நீர் கரந்த செஞ் சடைக் கடவுள்
வண்ணச் சேவடி மணி முடி வைத்தலின்,
ஆங்கு-அது வாங்கி, அணி மணிப் புயத்துத்
தாங்கினன் ஆகி, தகைமையின் செல்வுழி—

நாடக மடந்தையர் வாழ்த்துதல்

நாடக மடந்தையர் ஆடு அரங்கு யாங்கணும்
கூடையின் பொலிந்து, 'கொற்ற வேந்தே!
வாகை, தும்பை, மணித் தோட்டுப் போந்தையோடு
ஓடை யானையின் உயர் முகத்து ஓங்க,
வெண்குடை நீழல் எம் வெள் வளை கவர்ந்து,
கண் களிகொள்ளும் காட்சியை ஆக' என—

மாகதர் முதலியோர் வாழ்த்துதல்

மாகதப் புலவரும், வைதாளிகரும்,
சூதரும், நல் வலம் தோன்ற, வாழ்த்த;
யானை வீரரும், இவுளித் தலைவரும்,
வாய் வாள் மறவரும் வாள் வலன் ஏத்த—

வஞ்சி மா நகரை விடுத்து, நீலகிரியை அடைந்து, பாடி வீட்டில் அமர்தல்

தானவர்-தம்மேல் தம் பதி நீங்கும்
வானவன் போல, வஞ்சி நீங்கி;
தண்டலைத் தலைவரும் தலைத் தார்ச் சேனையும்
வெண் தலைப் புணரியின் விளிம்பு சூழ் போத,
மலை முதுகு நெளிய, நிலை நாடு அதர்பட,
உலக மன்னவன் ஒருங்குடன் சென்று-ஆங்கு;
ஆலும் புரவி, அணித் தேர்த் தானையொடு
நீலகிரியின் நெடும் புறத்து இறுத்து-ஆங்கு;
ஆடு இயல் யானையும், தேரும், மாவும்,
பீடு கெழு மறவரும் பிறழாக் காப்பின்
பாடி இருக்கை, பகல் வெய்யோன் தன்
இரு நிலமடந்தைக்குத் திருவடி அளித்து-ஆங்கு,
அரும் திறல் மாக்கள் அடியீடு ஏத்த,
பெரும் பேர் அமளி ஏறிய பின்னர்—

விசும்பு இயங்கும் முனிவர்கள் தோன்ற, செங்குட்டுவன் அவர்களை வணங்குதல்

இயங்கு படை அரவத்து ஈண்டு ஒலி இசைப்ப,
விசும்பு இயங்கு முனிவர், 'வியல் நிலம் ஆளும்
இந்திர திருவனைக் காண்குதும்' என்றே,
அந்தரத்து இழிந்து-ஆங்கு, அரசு விளங்கு அவையத்து,
மின் ஒளி மயக்கும் மேனியொடு தோன்ற;
மன்னவன் எழுந்து வணங்கி நின்றனனே—

முனிவர்கள் செங்குட்டுவனை வாழ்த்தி நீங்குதல்

'செஞ் சடை வானவன் அருளினில் விளங்க
வஞ்சித் தோன்றிய வானவ! கேளாய்;
மலயத்து ஏகுதும்; வான் பேர் இமய
நிலயத்து ஏகுதல் நின் கருத்து ஆகலின்,
அரு மறை அந்தணர் ஆங்குளர் வாழ்வோர்;
பெரு நில மன்ன! காத்தல் நின் கடன்' என்று,
ஆங்கு அவர் வாழ்த்திப் போந்ததன் பின்னர்—

கொங்கணக் கூத்தரும் கருநாடரும் வரிப் பாடல் பாடித் தொழுதல்

'வீங்குநீர் ஞாலம் ஆள்வோன் வாழ்க!' என,
கொங்கணக் கூத்தரும் கொடுங் கருநாடரும்
தம் குலக்கு ஓதிய தகைசால் அணியினர்;
இருள் படப் பொதுளிய சுருள் இருங் குஞ்சி
மருள் படப் பரப்பிய ஒலியல் மாலையர்;
வடம் சுமந்து ஓங்கிய வளர் இள வன முலை,
கருங் கயல் நெடுங் கண் காரிகையாரோடு;
'இருங் குயில் ஆல, இன வண்டு யாழ்செய,
அரும்பு அவிழ் வேனில் வந்தது; வாரார்
காதலர்' என்னும் மேதகு சிறப்பின்
மாதர்ப் பாணி வரியொடு தோன்ற—

குடகர் தம் மகளிருடன் கோலம் புனைந்து, வந்து வணங்குதல்

'கோல் வளை மாதே! கோலம் கொள்ளாய்;
காலம் காணாய்; கடிது இடித்து உரறிக்
காரோ வந்தது! காதலர் ஏறிய
தேரோ வந்தது, செய்வினை முடித்து!' என,
காஅர்க் குரவையொடு கருங் கயல் நெடுங் கண்
கோல் தொடி மாதரொடு குடகர் தோன்ற—

ஏத்தாளர் தமரொடு வந்து மன்னவனை ஏத்துதல்

தாழ்தரு கோலத்துத் தமரொடு சிறந்து,
'வாள்வினை முடித்து மற வாள் வேந்தன்
ஊழி வாழி!' என்று ஓவர் தோன்ற—

தம்மைப் பணிந்த கூத்தர் முதலியோர்க்கு மன்னன் பரிசு அளித்தல்

கூத்துள்படுவோன் காட்டிய முறைமையின்
ஏத்தினர் அறியா இருங் கலன் நல்கி,
வேத்தினம் நடுக்கும் வேலோன் இருந்துழி—

சஞ்சயன் முதலியோர் திறைகளுடன் வந்தமையை வாயிலோன் தெரிவித்தல்

'நாடக மகளிர் ஈர்-ஐம்பத்திருவரும்,
கூடு இசைக் குயிலுவர் இருநூற்று எண்மரும்,
தொண்ணூற்று அறுவகைப் பாசண்டத் துறை
நண்ணிய நூற்றுவர் நகை-வேழம்பரும்,
கொடுஞ்சி நெடுந் தேர் ஐம்பதிற்று இரட்டியும்,
கடுங் களி யானை ஓர் ஐஞ்ஞூறும்,
ஐ-ஈராயிரம் கொய் உளைப் புரவியும்
எய்யா வட வளத்து இரு பதினாயிரம்
கண்ணெழுத்துப் படுத்தன கைபுனை சகடமும்,
சஞ்சயன் முதலாத் தலைக்கீடு பெற்ற
கஞ்சுக முதல்வர் ஈர்-ஐஞ்ஞூற்றுவரும்,
சேய் உயர் வில் கொடிச் செங்கோல் வேந்தே!
வாயிலோர்' என வாயில் வந்து இசைப்ப—

மன்னவன் கட்டளைப்படி, சஞ்சயன் முதலியோர் அவன்முன் வருதல்

'நாடக மகளிரும், நலத்தகு மாக்களும்,
கூடு இசைக் குயிலுவக் கருவியாளரும்,
சஞ்சயன்-தன்னொடு வருக ஈங்கு' என—
செங்கோல் வேந்தன் திரு விளங்கு அவையத்து,
சஞ்சயன் புகுந்து, தாழ்ந்து பல ஏத்தி,
ஆணையின் புகுந்த ஈர்-ஐம்பத்திருவரொடு
மாண் வினையாளரை வகை பெறக் காட்டி—

சஞ்சயன் உரைத்த செய்தி

'வேற்றுமை இன்றி நின்னொடு கலந்த
நூற்றுவர்-கன்னரும், கோல் தொழில் வேந்தே!
''வட திசை மருங்கின் வானவன் பெயர்வது
கடவுள் எழுத ஓர் கற்கே ஆயின்,
ஓங்கிய இமயத்துக் கல் கால்கொண்டு
வீங்கு நீர்க் கங்கை நீர்ப்படை செய்து-ஆங்கு,
யாம் தரும் ஆற்றலம்'' என்றனர்' என்று,
'வீங்குநீர் ஞாலம் ஆள்வோய், வாழ்க!' என—

செங்குட்டுவன் சஞ்சயனுக்கு இட்ட கட்டளை

அடல் வேல் மன்னர் ஆர் உயிர் உண்ணும்
கடல் அம் தானைக் காவலன் உரைக்கும்:

'பாலகுமரன் மக்கள், மற்று அவர்
காவா நாவின் கனகனும் விசயனும்,
விருந்தின் மன்னர்-தம்மொடும் கூடி,
அருந்தமிழ் ஆற்றல் அறிந்திலர்-ஆங்கு என,
கூற்றக் கொண்டிச் சேஎ செல்வது;
நூற்றுவர்-கன்னர்க்குச் சாற்றி, ஆங்கு,
கங்கைப் பேர் யாறு கடத்தற்கு ஆவன
வங்கப் பெரு நிரை செய்க-தாம்' என,
சஞ்சயன் போனபின்—

பாண்டியன் அனுப்பிய தூதுவர் வருதல்

கஞ்சுக மாக்கள்,
எஞ்சா நாவினர், ஈர்-ஐஞ்ஞூற்றுவர்;
சந்தின் குப்பையும் தாழ் நீர் முத்தும்
தென்னர் இட்ட திறையொடு கொணர்ந்து;
கண்ணெழுத்தாளர் காவல் வேந்தன்
மண் உடை முடங்கல் அம் மன்னவர்க்கு அளித்து-ஆங்கு,
ஆங்கு, அவர் ஏகிய பின்னர்—

செங்குட்டுவன் நீலகிரிப் பாடியை விட்டுச் சென்று, கங்கையைக் கடந்து, பகைப் புலத்தில் பாசறையில் வீற்றிருத்தல்

மன்னிய
வீங்குநீர் ஞாலம் ஆள்வோன், ஓங்கிய
நாடு ஆள் செல்வர் நல் வலன் ஏத்த,
பாடி இருக்கை நீங்கிப் பெயர்ந்து;
கங்கைப் பேரியாற்றுக் கன்னரின் பெற்ற
வங்கப் பரப்பின் வட மருங்கு எய்தி;
ஆங்கு அவர் எதிர்கொள, அந் நாடு கழிந்து-ஆங்கு,
ஓங்கு நீர் வேலி உத்தரம் மரீஇ,
பகைப் புலம் புக்கு, பாசறை இருந்த
தகைப்பு-அரும் தானை மறவோன்-தன் முன்—

வடநாட்டு அரசர் சிலருடன் கூடி, கனக விசயர் எதிர்த்தல்

உத்தரன், விசித்திரன், உருத்திரன், பைரவன்,
சித்திரன், சிங்கன், தனுத்தரன், சிவேதன்,
வட திசை மருங்கின் மன்னவர் எல்லாம்,
'தென்தமிழ் ஆற்றல் காண்குதும் யாம்' என,
கலந்த கேண்மையின் கனக விசயர்
நிலம் திரைத் தானையொடு நிகர்த்து மேல்வர—

செங்குட்டுவன் பகைவர்மேல் படையொடு பொருதல்

இரை தேர் வேட்டத்து எழுந்த அரிமா
கரிமாப் பெரு நிரை கண்டு, உளம் சிறந்து
பாய்ந்த பண்பின், பல் வேல் மன்னர்
காஞ்சித் தானையொடு காவலன் மலைப்ப;
வெயில் கதிர் விழுங்கிய துகில் கொடிப் பந்தர்,
வடித் தோல் கொடும் பறை, வால் வளை, நெடு வயிர்,
இடிக் குரல் முரசம், இழும் என் பாண்டில்,
உயிர்ப் பலி உண்ணும் உருமுக் குரல் முழக்கத்து
மயிர்க் கண் முரசமொடு, மாதிரம் அதிர;
சிலைத் தோள் ஆடவர், செரு வேல் தடக் கையர்,
கறைத் தோல் மறவர், கடுந் தேர் ஊருநர்,
வெண் கோட்டு யானையர், விரை பரிக் குதிரையர்,
மண் கண் கெடுத்த இம் மா நிலப் பெரும் துகள்,
களம் கொள் யானைக் கவிழ் மணி நாவும்
விளங்கு கொடி நந்தின் வீங்கு இசை நாவும்
நடுங்கு தொழில் ஒழிந்து, ஆங்கு ஒடுங்கி, உள் செறிய;
தாரும் தாரும் தாம் இடை மயங்க;
தோளும் தலையும் துணிந்து வேருகிய
சிலைத் தோள் மறவர் உடல் பொறை அடுக்கத்து,
எறி பிணம் இடறிய குறை உடல் கவந்தம்
பறைக் கண் பேய்மகள் பாணிக்கு ஆட;
பிணம் சுமந்து ஒழுகிய நிணம்படு குருதியில்
கணம் கொள் பேய்மகள் கதுப்பு இகுத்து ஆட;
அரும் தேர்த் தானை ஆரிய அரசர்
கடும் படை மாக்களைக் கொன்று, களம் குவித்து;
நெடுந் தேர்க் கொடுஞ்சியும், கடுங் களிற்று எருத்தமும்,
விடும் பரிக் குதிரையின் வெரிநும், பாழ்பட;
'எருமைக் கடும் பரி ஊர்வோன் உயிர்த் தொகை,
ஒரு பகல் எல்லையின், உண்ணும்' என்பது
ஆரிய அரசர் அமர்க்களத்து அறிய,
நூழிலாட்டிய சூழ் கழல் வேந்தன்,
போந்தையொடு தொடுத்த பருவத் தும்பை
ஓங்கு இருஞ் சென்னி மேம்பட மலைய—

கனக விசயர் சிறைப்படுதலும், வடவரின் படைகள் சிதறுதலும்

வாய் வாள் ஆண்மையின், வண்தமிழ் இகழ்ந்த
காய் வேல் தடக்கைக் கனகனும் விசயனும்,
ஐம்பத் திருவர் கூந்த தேராளரொடு,
செங்குட்டுவன்-தன் சின வலைப் படுதலும்—
சடையினர், உடையினர், சாம்பல் பூச்சினர்,

பீடிகைப் பீலிப் பெரு நோன்பாளர்,
பாடு பாணியர், பல் இயத் தோளினர்,
ஆடு கூத்தர், ஆகி; எங்கணும்,
ஏந்து வாள் ஒழிய, தாம் துறைபோகிய
விச்சைக் கோலத்து வேண்டுவயின் படர்தர—

பேய்கள் கூத்து ஆடி, உண்டு, மகிழ்ந்து, வாழ்த்துதல்

கச்சை யானைக் காவலர் நடுங்க,
கோட்டுமாப் பூட்டி, வாள் கோல் ஆக,
ஆள் அழி வாங்கி, அதரிதிரித்த
வாள் ஏர் உழவன் மறக்களம் வாழ்த்தி;
தொடி உடை நெடுங் கை தூங்கத் தூக்கி,
முடி உடைக் கருந் தலை முந்துற ஏந்தி;
கடல் வயிறு கலக்கிய ஞாட்பும், கடல் அகழ்
இலங்கையில் எழுந்த சமரமும், கடல்வண்ணன்
தேர் ஊர் செருவும், பாடி; பேர் இசை
முன் தேர்க் குரவை முதல்வனை வாழ்த்தி;
பின் தேர்க் குரவைப் பேய் ஆடு பறந்தலை—
முடித் தலை அடுப்பில், பிடர்த் தலைத் தாழி,
தொடித் தோள் துடுப்பின் துழைஇய ஊன் சோறு
மறப் பேய் வாலுவன் வயின் அறிந்து ஊட்ட,
சிறப்பு ஊண் கடி இனம், 'செங்கோல் கொற்றத்து
அறக்களம் செய்தோன் ஊழி வாழ்க!' என—

செங்குட்டுவன் படை வீரரை அனுப்பி, இமயத்திலிருந்து கல் கொணர்ந்து, வடிவம் எழுதச் செய்தல்

மறக்களம் முடித்த வாய் வாள் குட்டுவன்,
'வட திசை மருங்கின் மறை காத்து ஓம்புநர்
தடவுத் தீ அவியாத் தண் பெரு வாழ்க்கை,
காற்றுதாளரை, போற்றிக் காமின்' என,
வில்லவன்-கோதையொடு வென்று வினை முடித்த
பல் வேல் தானைப் படை பல ஏவி,
பொன் கோட்டு இமயத்து, பொரு அறு பத்தினிக்
கல் கால்கொண்டனன், காவலன் ஆங்கு-என்.

27. நீர்ப்படைக் காதை

கனக விசயர் தலைமேல் பத்தினிக் கல்லை ஏற்றி, கங்கையில் நீர்ப்படை செய்தல்

வட பேர் இமயத்து வான் தரு சிறப்பின்
கடவுள் பத்தினிக் கல் கால்கொண்ட பின்,

சின வேல் முன்பின் செரு வெங் கோலத்துக்
கனக-விசயர்-தம் கதிர் முடி ஏற்றி,
செறி கழல் வேந்தன் தென்தமிழ் ஆற்றல்
அறியாது மலைந்த ஆரிய மன்னரை,
செயிர்த் தொழில் முதியோன் செய் தொழில் பெருக
உயிர்த் தொகை உண்ட ஒன்பதிற்று இரட்டி என்று,
யாண்டும், மதியும், நாளும், கடிகையும்,
ஈண்டு நீர் ஞாலம் கூட்டி எண்கொள;
வரு பெரும் தானை மறக்கள மருங்கின்,
ஒரு பகல் எல்லை, உயிர்த் தொகை உண்ட
செங்குட்டுவன் தன் சின வேல் தானையொடு
கங்கைப் பேர் யாற்றுக் கரைஅகம் புகுந்து;
பால் படு மரபின் பத்தினிக் கடவுளை
நூல் திறன் மாக்களின் நீர்ப்படை செய்து—

கங்கையின் தென் கரையில் ஆரிய மன்னர் அமைத்த பாடியில் புகுதல்

மன் பெரும் கோயிலும், மணி மண்டபங்களும்,
பொன் புனை அரங்கமும், புனை பூம் பந்தரும்,
உரிமைப் பள்ளியும், விரி பூஞ் சோலையும்,
திரு மலர்ப் பொய்கையும், வரி காண் அரங்கமும்,
பேர் இசை மன்னர்க்கு ஏற்பவை பிறவும்,
ஆரிய மன்னர் அழகுற அமைத்த
தெள்ளு நீர்க் கங்கைத் தென் கரை ஆங்கண்,
வெள்ளிடைப் பாடி வேந்தன் புக்கு—

போரில் இறந்தோரது மைந்தர்க்கும் மற்றையோர்க்கும்
பொன்னாலான வாகைப் பூவைச் செங்குட்டுவன் அளித்தல்

நீள் நில மன்னர் நெஞ்சு புகல் அழித்து,
வானவ மகளிரின் வதுவை சூட்டு அயர்ந்தோர்;
உலையா வெஞ் சமம் ஊர்ந்து அமர் உழக்கி,
தலையும் தோளும் விலைபெறக் கிடந்தோர்;
நாள் விலைக் கிளையுள், நல் அமர் அழுவத்து,
வாள் வினை முடித்து, மறத்தொடு முடிந்தோர்;
குழிக் கண் பேய்மகள் குரவையின் தொடுத்து,
வழி மருங்கு ஏத்த, வாளொடு மடிந்தோர்;
கிளைகள்-தம்மொடு, கிளர் பூண் ஆகத்து
வளையோர் மடிய, மடிந்தோர்; மைந்தர்—
மலைத்துத் தலைவந்தோர் வாளொடு மடிய,
தலைத் தார் வாகை தம் முடிக்கு அணிந்தோர்;
திண் தேர்க் கொடுஞ்சியொடு தேரோர் வீழ,

புண் தோய் குருதியின் பொலிந்த மைந்தர்;
மாற்று-அரும் சிறப்பின் மணி முடிக் கருந் தலை,
கூற்றுக் கண்ணேட, அரிந்து களம் கொண்டோர்;
நிறம் சிதை கவயமொடு நிறப் புண் கூர்ந்து,
புறம்பெற, வந்த போர் வாள் மறவர்—
'வருக தாம்' என, வாகைப் பொலந் தோடு
பெருநாள் அமயம் பிறக்கிடக் கொடுத்து,
தோடு ஆர் போந்தை தும்பையொடு முடித்து,
பாடு துறை முற்றிய கொற்ற வேந்தன்,
ஆடு கொள் மார்போடு, அரசு விளங்கு இருக்கையின்—

மாடலன் வந்து வணங்கி, மன்னனை வாழ்த்துதல்

மாடல மறையோன் வந்து தோன்றி,
'வாழ்க, எம் கோ! மாதவி மடந்தை
கானல்-பாணி கனக-விசயர்-தம்
முடித் தலை நெரித்தது; முதுநீர் ஞாலம்
அடிப்படுத்து ஆண்ட அரசே, வாழ்க!' என—

மாடலன் கூறிய உரையின் பொருளை விளக்க மன்னவன் வேண்டுதல்

'பகைப் புலத்து அரசர் பலர் ஈங்கு அறியா
நகைத் திறம் கூறினை, நான்மறையாள!
யாது, நீ கூறிய உரைப் பொருள் ஈங்கு?' என—

மாடலன் கூறிய செய்திகள்

மாடல மறையோன் மன்னவற்கு உரைக்கும்:
'கானல் அம் தண் துறைக் கடல் விளையாட்டினுள்
மாதவி மடந்தை வரி நவில் பாணியோடு,
ஊடல் காலத்து, ஊழ்வினை உருத்து எழ,
கூடாது பிரிந்து, குலக்கொடி-தன்னுடன்
மாட மூதூர் மதுரை புக்கு, ஆங்கு,
இலைத் தார் வேந்தன் எழில் வான் எய்த,
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி,
குடவர் கோவே! நின் நாடு புகுந்து
வட திசை மன்னர் மணி முடி ஏறினள்.
இன்னும் கேட்டருள், இகல் வேல் தடக் கை
மன்னர் கோவே! யான் வரும் காரணம்:
மா முனி பொதியில் மலை வலம் கொண்டு,
குமரி அம் பெரும் துறை ஆடி மீள்வேன்,
ஊழ்வினைப் பயன்சுகால்? உரைசால் சிறப்பின்
வாய் வாள் தென்னவன் மதுரையில் சென்றேன்;

''வலம் படு தானை மன்னவன்-தன்னைச்
சிலம்பின் வென்றனள் சேயிழை'' என்றலும்,
தாது எரு மன்றத்து, மாதரி எழுந்து,
''கோவலன் தீது இலன்; கோமகன் பிழைத்தான்;
அடைக்கலம் இழந்தேன்; இடைக் குல மாக்காள்!
குடையும் கோலும் பிழைத்தவோ?'' என,
இடை இருள் யாமத்து, எரிஅகம் புக்கதும்:
தவம் தரு சிறப்பின் கவுந்தி சீற்றம்
நிவந்து ஓங்கு செங்கோல் நீள் நில வேந்தன்
போகு உயிர் தாங்க, பொறைசால்ஆட்டி,
''என்னோடு இவர் வினை உருத்ததோ?'' என,
உண்ணு நோன்போடு உயிர் பதிப் பெயர்த்ததும்;
பொன் தேர்ச் செழியன் மதுரை மா நகர்க்கு
உற்றதும்—எல்லாம் ஒழிவு இன்றி உணர்ந்து, ஆங்கு
என் பதிப் பெயர்ந்தேன். என் துயர் போற்றி,
செம்பியன் மூதூர்ச் சிறந்தோர்க்கு உரைக்க;
மைந்தற்கு உற்றதும், மடந்தைக்கு உற்றதும்,
செங்கோல் வேந்தற்கு உற்றதும் கேட்டு;
கோவலன் தாதை கொடுந் துயர் எய்தி,
மா பெரும் தானமா வான் பொருள் ஈத்து, ஆங்கு,
இந்திர-விகாரம் ஏழுடன் புக்கு, ஆங்கு,
அந்தர-சாரிகள் ஆறு-ஐம்பதின்மர்
பிறந்த யாக்கைப் பிறப்பு அற முயன்று,
துறந்தோர்-தம் முன் துறவி எய்தவும்;
துறந்தோன் மனைவி, மகன் துயர் பொரூஅள்,
இறந்த துயர் எய்தி, இரங்கி மெய் விடவும்;
கண்ணகி தாதை கடவுளர் கோலத்து
அண்ணல் அம் பெரும் தவத்து ஆசீவகர்முன்
புண்ணிய தானம் புரிந்து, அறம் கொள்ளவும்;
தானம் புரிந்தோன்-தன் மனைக்கிழத்தி
நாள் விடூஉ, நல் உயிர் நீத்து, மெய் விடவும்;
மற்று அது கேட்டு, மாதவி மடந்தை
நற்றாய்-தனக்கு, ''நல் திறம் படர்கேன்:
மணிமேகலையை வான் துயர் உறுக்கும்
கணிகையர் கோலம் காணுதொழிக'' என,
கோதைத் தாமம் குழலொடு களைந்து,
போதித் தானம் புரிந்து, அறம் கொள்ளவும்;
என் வாய்க் கேட்டோர் இறந்தோர் உண்மையின்,
நல் நீர்க் கங்கை ஆடப் போந்தேன்;
மன்னர் கோவே, வாழ்க, ஈங்கு!' என—

தென்னவனது நாட்டின் நிலைமையைச் செங்குட்டுவன் வினவுதல்

தோடு ஆர் போந்தை தும்பையொடு முடித்த
வாடா வஞ்சி வானவர் பெருந்தகை,
'மன்னவன் இறந்த பின், வளம் கெழு சிறப்பின்
தென்னவன் நாடு செய்தது ஈங்கு உரை' என—

மாடலனது கூற்று

'நீடு வாழியரோ, நீள் நில வேந்து!' என,
மாடல மறையோன் மன்னவற்கு உரைக்கும்: 'நின்
மைத்துன வளவன் கிள்ளியொடு பொருந்தா,
ஒத்த பண்பினர், ஒன்பது மன்னர்
இளவரசு பொருஅர்; ஏவல் கேளார்;
வள நாடு அழிக்கும் மாண்பினர்; ஆதலின்,
ஒன்பது குடையும் ஒரு பகல் ஒழித்து, அவன்
பொன் புனை திகிரி ஒருவழிப்படுத்தோய்!
பழையன் காக்கும் குழை பயில் நெடுங் கோட்டு
வேம்பு முதல் தடிந்த, ஏந்து வாள் வலத்து,
போந்தைக் கண்ணிப் பொறைய! கேட்டருள்:
கொற்கையில் இருந்த வெற்றிவேல் செழியன்
பொன் தொழில் கொல்லர் ஈர்-ஐஞ்ஞூற்றுவர்
ஒரு முலை குறைத்த திரு மா பத்தினிக்கு,
ஒரு பகல் எல்லை, உயிர்ப் பலி ஊட்டி,
உரை செல வெறுத்த மதுரை மூதூர்
அரைசு கெடுத்து அலம்வரும் அல்லல்காலை,
தென் புல மருங்கின், தீது தீர் சிறப்பின்,
மன்பதை காக்கும் முறை முதல் கட்டிலின்,
நிரை மணிப் புரவி ஓர் ஏழ் பூண்ட
ஒரு தனி ஆழிக் கடவுள் தேர்மிசைக்
காலைச் செங் கதிர்க் கடவுள் ஏறினன் என,
மாலைத் திங்கள் வழியோன் ஏறினன்;
ஊழிதொறு ஊழி உலகம் காத்து,
வாழ்க, எம் கோ! வாழிய, பெரிது! என—

மாலைப் பிறை கண்டு மன்னவன் நோக்க, கணி எழுந்து உரைத்தல்

மறையோன் கூறிய மாற்றம் எல்லாம்
இறையோன் கேட்டு, ஆங்கு, இருந்த எல்லையுள்;
அகல் வாய் ஞாலம் ஆர் இருள் விழுங்க,
பகல் செல, முதிர்ந்த படர் கூர் மாலை,
செந் தீப் பரந்த திசை முகம் விளங்க,
அந்திச் செக்கர், வெண் பிறை தோன்ற;

பிறை ஏர் வண்ணம் பெருந்தகை நோக்க;
இறையோன் செவ்வியின் கணி எழுந்து உரைப்போன்,
'எண்-நான்கு மதியம், வஞ்சி நீங்கியது;
மண் ஆள் வேந்தே, வாழ்க!' என்று ஏத்த—

மாடலனைத் தனி இடத்து அழைத்து,
சோழ நாட்டின் நிலை பற்றிச் செங்குட்டுவன் வினவுதல்

நெடுங் காழ்க் கண்டம் நிரல் பட நிரைத்த
கொடும் பட நெடு மதில் கொடித் தேர் வீதியுள்,
குறியவும் நெடியவும் குன்று கண்டன்ன
உறையுள் முடுக்கர் ஒரு திறம் போகி,
வித்தகர் கைவினை விளங்கிய கொள்கைச்
சித்திர விதானத்து, செம் பொன் பீடிகை,
கோயில், இருக்கைக் கோமகன் ஏறி,
வாயிலாளரின் மாடலன் கூஉய்,
'இளங்கோ வேந்தர் இறந்ததன் பின்னர்,
வளம் கெழு நல் நாட்டு மன்னவன் கொற்றமொடு
செங்கோல் தன்மை தீது இன்றோ?' என—

மாடலன் உரைத்த விடை

'எம் கோ வேந்தே, வாழ்க!' என்று ஏத்தி,
மங்கல மறையோன் மாடலன் உரைக்கும்:
'வெயில் விளங்கு மணிப் பூண் விண்ணவர் வியப்ப,
எயில் மூன்று எறிந்த இகல் வேல் கொற்றமும்;
குறு நடைப் புறவின் நெடுந் துயர் தீர,
எறிதரு பருந்தின் இடும்பை நீங்க,
அரிந்து உடம்பு இட்டோன் அறம் தரு கோலும்;
திரிந்து வேறாகும் காலமும் உண்டோ?
தீதோ இல்லை, செல்லல் காலையும்,
காவிரி புரக்கும் நாடு கிழவோற்கு' என்று
அரு மறை முதல்வன் சொல்லக் கேட்டே—

மாடலனுக்குப் பொன்னும், நூற்றுவர்-கன்னர்க்கு நாடு செல்ல
விடையும் அளித்தல்

பெருமகன் மறையோன் பேணி, ஆங்கு, அவற்கு
ஆடகப் பெரு நிறை ஐ-ஐந்து இரட்டி,
தோடு ஆர் போந்தை வேலோன், 'தன் நிறை
மாடல மறையோன் கொள்க' என்று அளித்து—ஆங்கு,
ஆரிய மன்னர் ஐ-இருபதின்மரை,
'சீர் கெழு நல் நாட்டுச் செல்க' என்று ஏவி—

ஓடி உயிர் தப்பிய அரசரையும், கனக விசயரையும், ஆரியப் பேடியையும், சோழ பாண்டியர்க்குக் காட்டி வருமாறு கஞ்சுக முதல்வரைச் செங்குட்டுவன் ஏவுதல்

தாபத வேடத்து உயிர் உய்ந்து பிழைத்த
மா பெரும் தானை மன்ன-குமரர்;
சுருளிடு தாடி, மருள் படு பூங் குழல்,
அரி பரந்து ஒழுகிய செழுங் கயல் நெடுங் கண்,
விரி வெண் தோட்டு, வெண் நகை, துவர் வாய்,
சூடக வரி வளை, ஆடு அமைப் பணைத் தோள்,
வளர் இள வன முலை, தளர் இயல் மின் இடை,
பாடகச் சீறடி, ஆரியப் பேடியோடு;
எஞ்சா மன்னர் இறை மொழி மறுக்கும்
கஞ்சுக முதல்வர் ஈர்-ஐஞ்ஞூற்றுவர்,
அரி இல் போந்தை அருந்தமிழ் ஆற்றல்
தெரியாது மலைந்த கனக விசயரை
இரு பெரு வேந்தர்க்குக் காட்டிட ஏவி—

கதிரவன் தோன்ற, சேனையுடன் தென் திசை நோக்கித் திரும்புதல்

திருந்து துயில் கொள்ளாஅளவை, யாங்கணும்,
பரம்பு நீர்க் கங்கைப் பழனப் பாசடைப்
பயில் இளந் தாமரை, பல் வண்டு யாழ்செய,
வெயில் இளஞ் செல்வன் விரி கதிர் பரப்பி,
குண திசைக் குன்றத்து உயர்மிசைத் தோன்ற;
குட திசை ஆளும் கொற்ற வேந்தன்
வட திசைத் தும்பை வாகையொடு முடித்து,
தென் திசைப் பெயர்ந்த வென்றித் தானையொடு—

செங்குட்டுவன் பிரிவினால் அவனது தேவி வஞ்சி மா நகரில் வருந்தியிருக்கும் நிலை

நிதி துஞ்சு வியல் நகர், நீடு நிலை நிவந்து
கதிர் செலவு ஒழித்த கனக மாளிகை,
முத்து நிரைக் கொடித் தொடர் முழுவதும் வளைஇய
சித்திர விதானத்து, செய் பூங் கைவினை,
இலங்கு ஒளி மணி நிரை இடைஇடை வகுத்த
விலங்கு ஒளி வயிரமொடு பொலந் தகடு போகிய,
மடை அமை செறிவின், வான் பொன் கட்டில்,
புடை திரள் தமனியப் பொன் கால் அமளிமிசை,
இணை புணர் எகினத்து இள மயிர் செறித்த
துணை அணைப் பள்ளித் துயில் ஆற்றுப்படுத்து—

அரசியை ஆயச் செவிலியர் ஆற்றுவித்தல்

ஆங்கு,
எறிந்து களம் கொண்ட இயல் தேர்க் கொற்றம்
அறிந்து உரை பயின்ற ஆயச் செவிலியர்,

'தோள்-துணை துறந்த துயர் ஈங்கு ஒழிக' என,
பாட்டொடு தொடுத்து, பல் யாண்டு, வாழ்த்த—

கூனும் குறளும் சென்று வாழ்த்துதல்

சிறு குறுங் கூனும் குறளும் சென்று,
'பெறுக நின் செவ்வி; பெருமகன் வந்தான்;
நறு மலர்க் கூந்தல் நாள் அணி பெறுக' என—

நால் வகை நிலப் பாடல்களையும் கேட்டுக் கோப்பெருந்தேவி மகிழ,
செங்குட்டுவன் வஞ்சி மா நகர் வந்து சேர்தல்

குறிஞ்சிப் பாணி

அமை விளை தேறல் மாந்திய கானவன்
கவண் விடு புடையூஉக் காவல் கைவிட,
வீங்கு புனம் உணீஇய வேண்டி வந்த
ஓங்கு இயல் யானை தூங்கு துயில் எய்த,
'வாகை, தும்பை, வட திசைச் சூடிய
வேக யானையின் வழியோ, நீங்கு' என,
திறத்திறம் பகர்ந்து, சேண் ஓங்கு இதணத்து,
குறத்தியர் பாடிய குறிஞ்சிப் பாணியும்—

உழவர் பாணி

'வட திசை மன்னர் மன் எயில் முருக்கி,
கவடி வித்திய கழுதை ஏர் உழவன்,
குடவர் கோமான், வந்தான்; நாளை,
படு நுகம் பூணாய், பகடே! மன்னர்
அடித் தளை நீக்கும் வெள்ளணி ஆம்' எனும்
தொடுப்பு ஏர் உழவர் ஓதைப் பாணியும்—

கோவலர் பாணி

தண் ஆன்பொருநை ஆடுநர் இட்ட,
வண்ணமும், சுண்ணமும், மலரும், பரந்து;
விண் உறை வில் போல் விளங்கிய பெரும் துறை,
வண்டு உண மலர்ந்த, மணித் தோட்டுக் குவளை
முண்டகக் கோதையொடு முடித்த குஞ்சியின்
முருகு விரி தாமரை முழு மலர் தோய,
குருகு அலர் தாழைக் கோட்டுமிசை இருந்து,
'வில்லவன் வந்தான்; வியன் பேர் இமயத்துப்
பல் ஆன் நிரையொடு படர்குவிர் நீர்' என,
காவலன் ஆன் நிரை நீர்த்துறை படீஇ,
கோவலர் ஊதும் குழலின் பாணியும்—

நெய்தல் நிலப் பாணி

வெண் திரை பொருத வேலை வாலுகத்து,
குண்டு நீர் அடைகரைக் குவை இரும் புன்னை,
வலம்புரி ஈன்ற நலம் புரி முத்தம்
கழங்கு ஆடு மகளிர் ஓதை ஆயத்து
வழங்கு தொடி முன்கை மலர ஏந்தி,
'வானவன் வந்தான், வளர் இள வன முலை
தோள் நலம் உணீஇய; தும்பை போந்தையொடு
வஞ்சி பாடுதும், மடவீர்! யாம்' எனும்
அம் சொல் கிளவியர் அம் தீம் பாணியும்—

அரசி மகிழ, நகரினர் எதிர்கொள, செங்குட்டுவன் வஞ்சியுள் புகுதல்

ஓர்த்து உடன் இருந்த கோப்பெருந்தேவி
வால் வளை செறிய, வலம்புரி வலன் ஏழ,
மாலை வெண்குடைக்கீழ், வாகைச் சென்னியன்
வேக யானையின் மீமிசைப் பொலிந்து,
குஞ்சர ஒழுகையின் கோநகர் எதிர்கொள,
வஞ்சியுள் புகுந்தனன், செங்குட்டுவன்-என்.

28. நடுகல் காதை

மாலைக் காலத்தின் வருகை

தண் மதி அன்ன தமனிய நெடுங் குடை
மண்ணகம் நிழல் செய, மற வாள் ஏந்திய,
நிலம் தரு திருவின் நெடியோன்-தஞ்சு
வலம் படு சிறப்பின் வஞ்சி மூதூர்—
ஒண் தொடித் தடக் கையின் ஒண் மலர்ப் பலி தூஉய்,
வெண் திரி விளக்கம் ஏந்திய மகளிர்,
'உலக மன்னவன் வாழ்க!' என்று ஏத்தி,
பலர் தொழ, வந்த மலர் அவிழ் மாலை—
போந்தைக் கண்ணிப் பொலம் பூந் தெரியல்
வேந்து விளை முடித்த ஏந்து வாள் வலத்தர்
யானை வெண் கோடு அழுத்திய மார்பும்,
நீள் வேல் கிழித்த நெடும் புண் ஆகமும்,
எய் கணை கிழித்த பகட்டு எழில் அகலமும்,
வை வாள் கிழித்த மணிப் பூண் மார்பமும்,
மைம்மலர் உண் கண் மடந்தையர் அடங்காக்
கொம்மை வரி முலை வெம்மை வேது உறீஇ;
'அகில் உணா விரித்த, அம் மென் கூந்தல்
முகில் நுழை மதியத்து, முரி கருஞ் சிலைக் கீழ்,

மகரக் கொடியோன் மலர்க் கணை துரந்து,
சிதர் அரி பரந்த செழுங் கடைத் தூது
மருந்தும் ஆயது, இம் மாலை' என்று ஏத்த,
இருங் கனித் துவர் வாய் இள நிலா விரிப்ப,
கருங் கயல் பிறழும் காமர் செவ்வியின்
திருந்து எயிறு அரும்பிய விருந்தின் மூரலும்,
மாந்தளிர் மேனி மடவோர்-தம்மால்
ஏந்து பூண் மார்பின் இளையோர்க்கு அளித்து;
காசறைத் திலகக் கருங் கறை கிடந்த
மாசு இல் வாள் முகத்து, வண்டொடு சுருண்ட
குழலும், கோதையும், கோலமும், காண்மார்,
நிழல் கால் மண்டிலம் தம் எதிர் நிறுத்தி;
வணர் கோட்டுச் சீறியாழ் வாங்குபு தழீஇ,
புணர் புரி நரம்பின் பொருள் படு பத்தர்,
குரல் குரலாக வரு முறைப் பாலையின்,
துத்தம் குரலாத் தொல் முறை இயற்கையின்,
அம் தீம் குறிஞ்சி அகவல் மகளிரின்,
மைந்தர்க்கு ஓங்கிய வரு விருந்து அயர்ந்து;
முடி புறம் உரிஞ்சும் கழல் கால் குட்டுவன்
குடி புறந்தருங்கால் திரு முகம் போல,
உலகு தொழ, தோன்றிய மலர் கதிர் மதியம்
பலர் புகழ் மூதூர்க்குக் காட்டி நீங்க—

நிலாவின் ஒளி

மைந்தரும் மகளிரும் வழிமொழி கேட்ப,
ஐங் கணை நெடு வேள் அரசு வீற்றிருந்த
வெண் நிலா-முன்றிலும், வீழ் பூஞ் சேக்கையும்,
மண்ணீட்டு அரங்கமும், மலர்ப் பூம் பந்தரும்,
வெண் கால் அமளியும், விதான வேதிகைகளும்,
தண் கதிர் மதியம்-தான் கடிகொள்ள—

செங்குட்டுவன் வேண்மாளின் இருப்பிடம் செல்லுகையில் நிகழ்ந்த சிறப்புக்கள்

படு திரை சூழ்ந்த பயம் கெழு மா நிலத்து
இடை நின்று ஓங்கிய நெடு நிலை மேருவின்,
கொடி மதில் மூதூர் நடு நின்று ஓங்கிய
தமனிய மாளிகைப் புனை மணி அரங்கின்,
வதுவை வேண்மாள் மங்கல மடந்தை
மதி ஏர் வண்ணம் காணிய வருவழி—
எல் வளை மகளிர் ஏந்திய விளக்கம்,
பல்லாண்டு ஏத்த, பரந்தன, ஒருசார்;
மண் கணை முழவும், வணர் கோட்டு யாழும்,

பண் கனி பாடலும், பரந்தன, ஒருசார்;
மான்மதச் சாந்தும், வரி வெண் சாந்தும்,
கூனும் குறளும் கொண்டன, ஒருசார்;
வண்ணமும், சுண்ணமும், மலர்ப் பூம் பிணையலும்,
பெண் அணிப் பேடியர் ஏந்தினர், ஒருசார்;
பூவும், புகையும், மேவிய விரையும்,
தூவி அம் சேக்கை சூழ்ந்தன, ஒருசார்;
ஆடியும், ஆடையும், அணிதரு கலன்களும்,
சேடியர் செவ்வியின் ஏந்தினர், ஒரு சார்—

செங்குட்டுவன் வேண்மாளுடன் சாக்கைக் கூத்தைக் கண்டு மகிழ்தல்

ஆங்கு, அவள்-தன்னுடன் அணி மணி அரங்கம்
வீங்கு நீர் ஞாலம் ஆள்வோன் ஏறி;
திரு நிலைச் சேவடிச் சிலம்பு வாய்புலம்பவும்,
பரிதரு செங் கையில் படு பறை ஆர்ப்பவும்,
செங் கண் ஆயிரம் திருக் குறிப்பு அருளவும்,
செஞ் சடை சென்று திசைமுகம் அலம்பவும்;
பாடகம் பதையாது, சூடகம் துளங்காது,
மேகலை ஒலியாது, மென் முலை அசையாது,
வார் குழை ஆடாது, மணிக் குழல் அவிழாது,
உமையவள் ஒரு திறன் ஆக, ஒங்கிய
இமையவன் ஆடிய கொட்டிச் சேதம்
பாத்து-அரு நால் வகை மறையோர் பறையூர்க்
கூத்தச் சாக்கையன் ஆடலின் மகிழ்ந்து; அவன்
ஏத்தி நீங்க—

செங்குட்டுவன் ஓலக்க மண்டபத்தில் இருக்க, சோழ பாண்டியரின் நாடு சென்ற நீலன் முதலியோர் வந்து வணங்குதல்

இரு நிலம் ஆள்வோன்
வேத்தியல் மண்டபம் மேவிய பின்னர்—
நீலன் முதலிய கஞ்சுக மாக்கள்
மாடல மறையோன்-தன்னெடும் தோன்றி,
வாயிலாளரின் மன்னவற்கு இசைத்தபின்,
கோயில் மாக்களின் கொற்றவன் தொழுது—

சோழ பாண்டியர் சொன்னவற்றை நீலன் செங்குட்டுவனிடம் தெரிவித்தல்

'தும்பை வெம் போர்ச் சூழ் கழல் வேந்தே!
செம்பியன் மூதூர்ச் சென்று புக்கு, ஆங்கு,
வச்சிரம், அவந்தி, மகதமொடு, குழீஇய
சித்திர மண்டபத்து இருக்க வேந்தன்,
அமர்அகத்து உடைந்த ஆரிய மன்னரொடு

தமரின் சென்று, தகை அடி வணங்க,
''நீள் அமர் அழுவத்து, நெடும் பேர் ஆண்மையொடு
வாளும் குடையும் மறக்களத்து ஒழித்து,
கொல்லாக் கோலத்து உயிர் உய்ந்தோரை
வெல் போர்க் கோடல் வெற்றம் அன்று' என,
தலைத் தேர்த் தானைத் தலைவற்கு உரைத்தனன்,
சிலைத் தார் அகலத்துச் செம்பியர் பெருந்தகை''—
ஆங்கு நின்று அகன்றபின், அறக்கோல் வேந்தே!
ஓங்கு சீர் மதுரை மன்னவன் காண,
''ஆரிய மன்னர் அமர்க்களத்து எடுத்த
சீர் இயல் வெண்குடைக் காம்பு நனி சிறந்த
சயந்தன் வடிவின் தலைக்கோல், ஆங்கு,
கயந் தலை யானையின் கவிகையின் காட்டி,
இமையச் சிமயத்து, இருங் குயிலாலுவத்து,
உமை ஒரு பாகத்து ஒருவனை வணங்கி,
அமர்க்களம் அரசனது ஆக, துறந்து,
தவப் பெரும் கோலம் கொண்டோர்-தம்மேல்
கொதி அழல் சீற்றம் கொண்டோன் கொற்றம்
புதுவது'' என்றனன் போர் வேல் செழியன்' என்று,
ஏனை மன்னர் இருவரும் கூறிய
நீள்-மொழி எல்லாம் நீலன் கூற—

செங்குட்டுவனது சீற்றம்

தாமரைச் செங் கண் தழல் நிறம் கொள்ளக்
கோமகன் நகுதலும்—

மாடலன் மன்னனைப் போற்றி, சீற்றம் தணிய வேண்டுதல்

குறையாக் கேள்வி

மாடலன் எழுந்து, 'மன்னவர் மன்னே,
வாழ்க! நின் கொற்றம் வாழ்க!' என்று ஏத்தி,
கறி வளர் சிலம்பில் துஞ்சும் யானையின்,
சிறு குரல் நெய்தல், வியலூர் எறிந்தபின்;
ஆர் புனை தெரியல் ஒன்பது மன்னரை
நேரிவாயில் நிலைச் செரு வென்று;
நெடுந் தேர்த் தானையொடு இடும்பில் புறத்து இறுத்து,
கொடும் போர் கடந்து; நெடுங் கடல் ஓட்டி;
உடன்று மேல்வந்த ஆரிய மன்னரை,
கடும் புனல் கங்கைப் பேர் யாற்று, வென்றோய்!
நெடுந் தார் வேய்ந்த பெரும் படை வேந்தே!
புரையோர்-தம்மொடு பொருந்த உணர்ந்த

அரைசர் ஏறே! அமைக, நின் சீற்றம்!
மண் ஆள் வேந்தே! நின் வாழ்நாட்கள்
தண் ஆன்பொருநை மணலினும் சிறக்க!
அகழ் கடல் ஞாலம் ஆள்வோய், வாழி!
இகழாது என் சொல் கேட்டல் வேண்டும்—

யாக்கை முதலியவற்றின் நிலையாமையை மாடலன் எடுத்துரைத்தல்

வையம் காவல் பூண்ட நின் நல் யாண்டு
ஐ-ஐந்து இரட்டி சென்றதன்பின்னும்,
அறக்கள வேள்வி செய்யாது, யாங்கணும்,
மறக்கள வேள்வி செய்வோய் ஆயினை;
வேந்து விளை முடித்த ஏந்து வாள் வலத்து,
போந்தைக் கண்ணி, நின் ஊங்கணோர் மருங்கின்,
கடல் கடம்பு எறிந்த காவலன் ஆயினும்,
விடர்ச் சிலை பொறித்த விறலோன் ஆயினும்,
நான்மறையாளன் செய்யுள் கொண்டு,
மேல் நிலை உலகம் விடுத்தோன் ஆயினும்,
''போற்றி மன் உயிர் முறையின் கொள்க'' என,
கூற்று வரை நிறுத்த கொற்றவன் ஆயினும்,
வன் சொல் யவனர் வள நாடு ஆண்டு,
பொன் படு நெடு வரை புகுந்தோன் ஆயினும்,
மிகப் பெரும் தானையோடு இருஞ் செரு ஓட்டி,
அகப்பா எறிந்த அருந்திறல் ஆயினும்,
உரு கெழு மரபின் அயிரை மண்ணி,
இரு கடல் நீரும் ஆடினென் ஆயினும்,
சதுக்கப் பூதரை வஞ்சியுள் தந்து,
மதுக் கொள் வேள்வி வேட்டோன் ஆயினும்,
மீக்கூற்றாளர் யாவரும் இன்மையின்,
யாக்கை நில்லாது என்பதை உணர்ந்தோய்—
மல்லல் மா ஞாலத்து வாழ்வோர் மருங்கின்
செல்வம் நிலாது என்பதை வெல் போர்த்
தண்தமிழ் இகழ்ந்த ஆரிய மன்னரின்
கண்டனை அல்லையோ, காவல் வேந்தே?—
இளமை நில்லாது என்பதை எடுத்து ஈங்கு
உணர்வு உடை மாக்கள் உரைக்கல் வேண்டா,
திரு ஞெமிர் அகலத்துச் செங்கோல் வேந்தே!
நரை முதிர் யாக்கை நீயும் கண்டனை—

உயிரின் தன்மையை அறிவுறுத்தல்

விண்ணோர் உருவின் எய்திய நல் உயிர்
மண்ணோர் உருவின் மறிக்கினும் மறிக்கும்;

மக்கள் யாக்கை பூண்ட மன் உயிர்,
மிக்கோய்! விலங்கின் எய்தினும் எய்தும்;
விலங்கின் யாக்கை விலங்கிய இன் உயிர்
கலங்கு அஞர் நரகரைக் காணினும் காணும்;
ஆடும் கூத்தர்போல், ஆர் உயிர் ஒருவழி,
கூடிய கோலத்து, ஒருங்கு நின்று, இயலாது;
''செய் வினை வழித்தாய் உயிர் செலும்'' என்பது
பொய் இல் காட்சியோர் பொருள் உரை ஆதலின்,
எழு முடி மார்ப! நீ ஏந்திய திகிரி
வழிவழிச் சிறக்க, வய வாள் வேந்தே!—

பெரு வேள்வியை விரைந்து செய்யவேண்டும் என்று வலியுறுத்திக் கூறுதல்

அரும் பொருள் பரிசிலேன் அல்லேன், யானும்;
பெரும் பேர் யாக்கை பெற்ற நல் உயிர்
மலர் தலை உலகத்து உயிர் போகு பொது நெறி,
புல வரை இறந்தோய்! போகுதல் பொறைஎன்;
வானவர் போற்றும் வழி நினக்கு அளிக்கும்,
நான்மறை மருங்கின் வேள்விப் பார்ப்பான்
அரு மறை மருங்கின் அரசர்க்கு ஓங்கிய,
பெரு நல் வேள்வி நீ செயல் வேண்டும்;
''நாளைச் செய்குவம் அறம்'' எனின், இன்றே
கேள்வி நல் உயிர் நீங்கினும் நீங்கும்;
இது என வரைந்து வாழுநாள் உணர்ந்தோர்
முதுநீர் உலகின் முழுவதும் இல்லை;
வேள்விக் கிழத்தி இவளொடும் கூடி,
தாழ் கழல் மன்னர் நின் அடி போற்ற,
ஊழியோடு ஊழி உலகம் காத்து,
நீடு வாழியரோ, நெடுந்தகை!' என்று
மறையோன் மறை நா உழுது, வான் பொருள்
இறையோன் செவி செறு ஆக வித்தலின்—

வேள்வி செய்யச் செங்குட்டுவன் பணித்தல்

வித்திய பெரும் பதம் விளைந்து, பதம் மிகுத்து,
துய்த்தல் வேட்கையின், சூழ் கழல் வேந்தன்
நான்மறை மரபின் நயம் தெரி நாவின்,
கேள்வி முடித்த, வேள்வி மாக்களை
மாடல மறையோன் செல்லிய முறைமையின்
வேள்விச் சாந்தியின் விழாக் கொள ஏவி—

ஆரிய மன்னரைச் சிறைவிடுத்து, வேள்வி முடிந்தபின் நாடு திரும்பலாம்எனச் சொல்லி, அவர்களுக்குச் சிறப்புச் செய்ய வில்லவன்-கோதையை ஏவுதல்

ஆரிய அரசரை அரும் சிறை நீக்கி,
பேர் இசை வஞ்சி மூதூர்ப் புறத்து,

தாழ் நீர் வேலித் தண் மலர்ப் பூம் பொழில்
வேளாவிக்கோ மாளிகை காட்டி,
நன் பெரு வேள்வி முடித்ததன் பின்நாள்,
தம் பெரு நெடு நகர்ச் சார்வதும் சொல்லி, 'அம்
மன்னவர்க்கு ஏற்பன செய்க, நீ' என,
வில்லவன்-கோதையை விருப்புடன் ஏவி—

சிறைக் கோட்டம் நீக்கி, வரி தவிர்க்கும்படி அழும்பில் வேளை அனுப்புதல்

சிறையோர் கோட்டம் சீமின்; யாங்கணும்,
கறை கெழு நாடு கறைவீடு செய்ம்மின்' என,
அழும்பில் வேளோடு ஆயக்கணக்கரை
முழங்கு நீர் வேலி மூதூர் ஏவி—

பத்தினிக் கோட்டத்தில் கண்ணகிக்குக் கடவுள்-மங்கலம் செய்ய, தக்காரை ஏவுதல்

'அரும் திறல் அரசர் முறை செயின் அல்லது,
பெரும் பெயர்ப் பெண்டிர்க்குக் கற்புச் சிறவாது' என,
பண்டையோர் உரைத்த தண் தமிழ் நல் உரை,
பார் தொழுது ஏத்தும் பத்தினி ஆதலின்,
ஆர் புனை சென்னி அரசற்கு அளித்து;
'செங்கோல் வளைய உயிர் வாழாமை'
தென் புலம் காவல் மன்னவற்கு அளித்து;
'வஞ்சினம் வாய்த்தபின் அல்லதை, யாவதும்
வெஞ் சினம் விளியார் வேந்தர்' என்பதை
வட திசை மருங்கின் மன்னவர் அறிய,
குட திசை வாழும் கொற்றவற்கு அளித்து;
மதுரை மூதூர் மா நகர் கேடுற,
கொதி அழல் சீற்றம் கொங்கையின் விளைத்து;
நல் நாடு அணைந்து, நளிர் சினை வேங்கைப்
பொன் அணி புது நிழல் பொருந்திய நங்கையை—
'அறக்களத்து அந்தணர், ஆசான், பெருங்கணி,
சிறப்புடைக் கம்மியர்-தம்மொடும் சென்று;
மேலோர் விழையும் நூல் நெறி மாக்கள்
பால் பெற வகுத்த பத்தினிக் கோட்டத்து,
இமையவர் உறையும் இமையச் செவ் வரைச்
சிமையச் சென்னித் தெய்வம் பரசி,
கைவினை முற்றிய தெய்வப் படிமத்து,
வித்தகர் இயற்றிய, விளங்கிய கோலத்து,
முற்றிழை நன்கலம் முழுவதும் பூட்டி,
பூப் பலி செய்து, காப்புக் கடை நிறுத்தி,
வேள்வியும் விழாவும் நாள்தொறும் வகுத்து,
கடவுள்-மங்கலம் செய்க' என ஏவினன்—
வட திசை வணக்கிய மன்னவர் ஏறு-என்.

29. வாழ்த்துக் காதை

உரைப் பாட்டு மடை

குமரியொடு வட இமயத்து
ஒருமொழி வைத்து உலகு ஆண்ட
சேரலாதற்குத் திகழ் ஒளி ஞாயிற்றுச்
சோழன் மகள் ஈன்ற மைந்தன்,
கொங்கர் செங் களம் வேட்டு,
கங்கைப் பேர் யாற்றுக் கரை போகிய
செங்குட்டுவன், சினம் செருக்கி
வஞ்சியுள் வந்து இருந்தகாலை;
வட ஆரிய மன்னர், ஆங்கு ஓர்
மடவரலை மாலை சூட்டி
உடன் உறைந்த இருக்கை-தன்னில்,
ஒன்று மொழி நகையினராய்,
'தென் தமிழ் நாடு ஆளும் வேந்தர்
செரு வேட்டு, புகன்று எழுந்து,
மின் தவழும் இமய நெற்றியில்
விளங்கு வில், புலி, கயல், பொறித்த நாள்,
எம் போலும் முடி மன்னர்
ஈங்கு இல்லை போலும்' என்ற வார்த்தை,
அங்கு வாழும் மாதவர் வந்து
அறிவுறுத்த இடத்து ஆங்கண்,
உருள்கின்ற மணி வட்டைக்
குணில் கொண்டு துரந்ததுபோல்,
'இமய மால் வரைக் கல் கடவுள் ஆம்'
என்ற வார்த்தை இடம் துரப்ப;
ஆரிய நாட்டு அரசு ஓட்டி,
அவர் முடித்தலை அணங்கு ஆகிய
பேர் இமயக் கல் சுமத்தி,
பெயர்ந்து போந்து; நயந்த கொள்கையின்,
கங்கைப் பேர் யாற்று இருந்து,
நங்கை-தன்னை நீர்ப்படுத்தி,
வெஞ் சினம் தரு வெம்மை நீங்கி;
வஞ்சி மா நகர் புகுந்து;
நில அரசர் நீள் முடியால்
பலர் தொழு படிமம் காட்டி,
தட முலைப் பூசல்ஆட்டியைக்
கடவுள்-மங்கலம் செய்த பின்னுள்—
கண்ணகி-தன் கோட்டத்து
மண்ணரசர் திறை கேட்புழி—

அலம்வந்த மதி முகத்தில்
சில செங் கயல் நீர் உமிழ,
பொடி ஆடிய கரு முகில் தன்
புறம் புதைப்ப, அறம் பழித்து;
கோவலன், தன் வீன உருத்து,
குறுமகனுல் கொலையுண்ண;
காவலன்-தன் இடம் சென்ற
கண்ணகி-தன் கண்ணீர் கண்டு,
மண்ணரசர் பெரும் தோன்றல்
உள் நீர் அற்று, உயிர் இழந்தமை
மா மறையோன்வாய்க் கேட்டு;
மாசாத்துவான் தான் துறப்பவும்,
மனைக்கிழத்தி உயிர் இழப்பவும்,
எனைப் பெரும் துன்பம் எய்தி,
காவற்பெண்டும், அடித் தோழியும்,
கடவுள் சாத்தனுடன் உறைந்த
தேவந்தியும் உடன் கூடி,
'சேயிழையைக் காண்டும்' என்று,
மதுரை மா நகர் புகுந்து;
முதிரா முலைப் பூசல் கேட்டு, ஆங்கு,
அடைக்கலம் இழந்து, உயிர் இழந்த
இடைக்குல மகள் இடம் எய்தி;
ஐயை அவள் மகளோடும்
வையை ஒருவழிக்கொண்டு;
மா மலை மீமிசை ஏறி,
கோமகள்-தன் கோயில் புக்கு;
நங்கைக்குச் சிறப்பு அயர்ந்த
செங்குட்டுவற்குத் திறம் உரைப்பர்-மன். 1

தேவந்தியின் சொல்

முடி மன்னர் மூவரும் காத்து ஓம்பும் தெய்வ
வட பேர் இமய மலையில் பிறந்து,
கடு வரல் கங்கைப் புனல் ஆடிப் போந்த
தொடி வனைத் தோளிக்குத் தோழி நான் கண்டீர்,
சோணுட்டார் பாவைக்குத் தோழி நான் கண்டீர். 2

காவற்பெண்டின் சொல்

மடம் படு சாயலாள் மாதவி-தன்னைக்
கடம்படாள், காதல் கணவன் கைப் பற்றி,
குடம் புகாக் கூவல் கொடுங் கானம் போந்த
தடம் பெரும் கண்ணிக்குத் தாயர் நான் கண்டீர்,
தண் புகார்ப் பாவைக்குத் தாயர் நான் கண்டீர். 3

அடித் தோழியின் சொல்

தன் பயந்தாட்கு இல்லை; தன்னைப் புறங்காத்த
என் பயந்தாட்கும் எனக்கும் ஓர் சொல் இல்லை;
கற்புக் கடம் பூண்டு, காதலன் பின் போந்த
பொன் தொடி நங்கைக்குத் தோழி நான் கண்டீர்;
பூம் புகார்ப் பாவைக்குத் தோழி நான் கண்டீர். 4

தேவந்தியின் அரற்று

செய் தவம் இல்லாதேன் தீக் கனாக் கேட்ட நாள்,
எய்த உணராது இருந்தேன், மற்று என் செய்தேன்?
மொய் குழல் மங்கை முலைப் பூசல் கேட்ட நாள்,
அவ்வை உயிர் வீவும் கேட்டாயோ, தோழீ?
அம்மாமி-தன் வீவும் கேட்டாயோ, தோழீ? 5

காவற்பெண்டின் அரற்று

கோவலன்-தன்னைக் குறுமகன் கோள் இழைப்ப,
காவலன் தன் உயிர் நீத்தது-தான் கேட்டு, ஏங்கி,
'சாவது-தான் வாழ்வு' என்று, தானம் பல செய்து,
மாசாத்துவான் துறவும் கேட்டாயோ, அன்னை?
மாநாய்கன்-தன் துறவும் கேட்டாயோ, அன்னை? 6

அடித் தோழியின் அரற்று

காதலன்-தன் வீவும், காதலி நீ பட்டதூஉம்,
ஏதிலார்-தாம் கூறும் ஏச்சு உரையும் கேட்டு, ஏங்கி,
போதியின்கீழ் மாதவர்முன் புண்ணிய தானம் புரிந்த
மாதவி-தன் துறவும் கேட்டாயோ, தோழீ?
மணிமேகலை துறவும் கேட்டாயோ, தோழீ? 7

தேவந்தி ஐயையைக் காட்டி அரற்றியது

'ஐயம் தீர் காட்சி அடைக்கலம் காத்து ஓம்ப
வல்லாதேன் பெற்றேன் மயல்' என்று உயிர் நீத்த
அவ்வை மகள் இவள்-தான், அம் மணம் பட்டிலா,
வை எயிற்று ஐயையைக் கண்டாயோ, தோழீ?
மாமி மட மகனைக் கண்டாயோ, தோழீ? 8

செங்குட்டுவன் கூற்று

என்னே! இஃது என்னே! இஃது என்னே! இஃது என்னைகொல்!
பொன் அம் சிலம்பின், புனை மேகலை, வளைக் கை,
நல் வயிரப் பொன் தோட்டு, நாவல் அம் பொன் இழை சோர்,
மின்னுக் கொடி ஒன்று மீவிசும்பில் தோன்றுமால்! 9

கண்ணகி செங்குட்டுவனுக்குக் கடவுள் நல்லணி காட்டியது

தென்னவன் தீது இலன்; தேவர் கோன்-தன் கோயில்
நல் விருந்து ஆயினன்; நான் அவன்-தன் மகள்;
வென் வேலான் குன்றில் விளையாட்டு யான் அகலேன்;
என்னொடும், தோழிமீர்! எல்லீரும், வம், எல்லாம். 10

வஞ்சி மகளிரின் சொல்

வஞ்சியீர், வஞ்சி இடையீர், மற வேலான்
பஞ்சு அடி ஆயத்தீர்! எல்லீரும், வம், எல்லாம்;
கொங்கையான் கூடல் பதி சிதைத்து, கோவேந்தைச்
செஞ் சிலம்பால் வென்றூளப் பாடுதும்; வம், எல்லாம்;
தென்னவன்-தன் மகளைப் பாடுதும்; வம், எல்லாம். 11

'செங்கோல் வளைய, உயிர் வாழார் பாண்டியர்' என்று,
எம் கோ முறை நா இயம்ப, இந் நாடு அடைந்த
பைந் தொடிப் பாவையைப் பாடுதும்; வம், எல்லாம்.
பாண்டியன்-தன் மகளைப் பாடுதும்; வம், எல்லாம். 12

ஆயத்தார் சொல்

'வானவன், எம் கோ, மகள்' என்றும்; வையையார்
கோன்-அவன்-தான் பெற்ற கொடி என்றுள்; வானவனை
வாழ்த்துவோம் நாமாக, வையையார் கோமானை
வாழ்த்துவாள் தேவ மகள். 13

வாழ்த்து

தொல்லை வினையான் துயர் உழந்தாள் கண்ணின் நீர்
கொல்ல, உயிர் கொடுத்த கோவேந்தன் வாழியரோ!
வாழியரோ, வாழி, வரு புனல் நீர் வையை
சூழும் மதுரையார் கோமான்-தன் தொல் குலமே! 14

மலையரையன் பெற்ற மடப் பாவை-தன்னை
நில அரசர் நீள் முடிமேல் ஏற்றினன் வாழியரோ!
வாழியரோ, வாழி, வரு புனல் நீர் ஆன்பொருநை
சூழ்தரும் வஞ்சியார் கோமான்-தன் தொல் குலமே! 15

எல்லா! நாம்—
காவிரி நாடனைப் பாடுதும்; பாடுதும்,
பூ விரி கூந்தல்! புகார். 16

அம்மானை வரி

வீங்கு நீர் வேலி உலகு ஆண்டு, விண்ணவர் கோன்
ஓங்கு அரணம் காத்த உரவோன் யார், அம்மானை?
ஓங்கு அரணம் காத்த உரவோன் உயர் விசும்பில்
தூங்கு எயில் மூன்று எறிந்த சோழன்காண், அம்மானை;
சோழன் புகார் நகரம் பாடேலோர், அம்மானை. 17

புறவு நிறை புக்கு, பொன்னுலகம் ஏத்த,
குறைவு இல் உடம்பு அரிந்த கொற்றவன் யார், அம்மானே?
குறைவு இல் உடம்பு அரிந்த கொற்றவன் முன் வந்த
கறவை முறை செய்த காவலன்காண், அம்மானே;
காவலன் பூம் புகார் பாடேலோர், அம்மானே. 18

கடவரைகள் ஓர் எட்டும் கண் இமையா காண,
வடவரைமேல் வாள் வேங்கை ஒற்றினன் யார், அம்மானே?
வடவரைமேல் வாள் வேங்கை ஒற்றினன் திக்கு எட்டும்
குடை நிழலில் கொண்டு அளித்த கொற்றவன்காண், அம்மானே;
கொற்றவன் பூம் புகார் பாடேலோர், அம்மானே. 19

அம்மனே தம் கையில் கொண்டு, அங்கு அணி இழையார்
தம் மனையில் பாடும் தகையேலோர், அம்மானே;
தம் மனையில் பாடும் தகை எலாம் தார் வேந்தன்
கொம்மை வரி முலைமேல் கூடவே, அம்மானே;
கொம்மை வரி முலைமேல் கூடின், குல வேந்தன்
அம் மென் புகார் நகரம் பாடேலோர், அம்மானே. 20

கந்துக வரி

பொன் இலங்கு பூங்கொடி! பொலம் செய் கோதை வில்லிட,
மின் இலங்கு மேகலைகள் ஆர்ப்பஆர்ப்ப, எங்கணும்,
தென்னன் வாழ்க, வாழ்க! என்று சென்று, பந்து அடித்துமே;
தேவர் ஆர மார்பன் வாழ்க! என்று, பந்து அடித்துமே. 21

பின்னும் முன்னும், எங்கணும், பெயர்ந்து; உவந்து, எழுந்து, உலாய்;
மின்னு மின் இளங் கொடி வியல் நிலத்து இழிந்தென,
தென்னன் வாழ்க, வாழ்க! என்று சென்று, பந்து அடித்துமே;
தேவர் ஆர மார்பன் வாழ்க! என்று, பந்து அடித்துமே. 22

துன்னி வந்து கைத்தலத்து இருந்ததில்லை; நீள் நிலம்-
தன்னில்-நின்றும் அந்தரத்து எழுந்ததில்லை-தான் என,
தென்னன் வாழ்க, வாழ்க! என்று சென்று, பந்து அடித்துமே;
தேவர் ஆர மார்பன் வாழ்க! என்று, பந்து அடித்துமே. 23

ஊசல் வரி

வடம் கொள் மணி ஊசல் மேல் இரீஇ, ஐயை
உடங்கு ஒருவர் கைநிமிர்த்து-ஆங்கு, ஒற்றை மேல் ஊக்க,
கடம்பு முதல் தடிந்த காவலனைப் பாடி,
குடங்கை நெடுங் கண் பிறழ, ஆடாமோ ஊசல்;
கொடு வில் பொறி பாடி, ஆடாமோ ஊசல். 24

ஓர் ஐவர் ஈர்-ஐம்பதின்மர் உடன்று எழுந்த
போரில், பெருஞ்சோறு போற்றுது தான் அளித்த
சேரன், பொறையன், மலையன், திறம் பாடி,
கார் செய் குழல் ஆட, ஆடாமோ ஊசல்;
கடம்பு எறிந்தவா பாடி, ஆடாமோ ஊசல். 25

வன் சொல் யவனர் வள நாடு, வன் பெருங்கல்,
தென் குமரி, ஆண்ட; செரு வில், கயல், புலியான்,
மன்பதை காக்கும் கோமான், மன்னன், திறம் பாடி;
மின் செய் இடை நுடங்க, ஆடாமோ ஊசல்;
விறல் வில் பொறி பாடி, ஆடாமோ ஊசல். 26

வள்ளைப் பாட்டு

தீம் கரும்பு நல் உலக்கை ஆக, செழு முத்தம்
பூங் காஞ்சி நீழல், அவைப்பார் புகார் மகளிர்;
ஆழிக் கொடித் திண் தேர்ச் செம்பியன் வம்பு அலர் தார்ப்
பாழித் தட வரைத் தோள் பாடலே பாடல்;
பாவைமார் ஆர் இரக்கும் பாடலே பாடல். 27

பாடல்சால் முத்தம் பவழ உலக்கையான்
மாட மதுரை மகளிர் குறுவரே;
வானவர் கோன் ஆரம் வயங்கிய தோள் பஞ்சவன்-தன்
மீனக் கொடி பாடும் பாடலே பாடல்;
வேப்பந்தார் நெஞ்சு உணக்கும் பாடலே பாடல். 28

சந்து உரல் பெய்து, தகைசால் அணி முத்தம்,
வஞ்சி மகளிர் குறுவரே, வான் கோட்டால்;
கடந்து அடு தார்ச் சேரன் கடம்பு எறிந்த வார்த்தை
படர்ந்த நிலம் போர்த்த பாடலே பாடல்;
பனந்தோடு உளம் கவரும் பாடலே பாடல். 29

பத்தினிக் கடவுள் செங்குட்டுவனை வாழ்த்துதல்

ஆங்கு,
நீள் நில மன்னர், நெடு வில் பொறையன் நல்
தாள் தொழார், வாழ்த்தல் தமக்கு அரிது; சூழ் ஒளிய
எம் கோமடந்தையும் ஏத்தினள், 'நீடூழி,
செங்குட்டுவன் வாழ்க!' என்று. 30

30. வரம் தரு காதை

செங்குட்டுவன் தேவந்தியிடம் மணிமேகலையின் துறவு பற்றி வினவுதல்

வட திசை வணக்கிய வானவர் பெருந்தகை
கடவுள் கோலம் கண்-புலம் புக்க பின்,

தேவந்திகையைச் செவ்வியின் நோக்கி,
'வாய் எடுத்து அரற்றிய மணிமேகலை யார்?
யாது அவள் துறத்தற்கு ஏது? ஈங்கு, உரை' என—

தேவந்தி மணிமேகலையின் துறவு உரைத்தல்

'கோமகன் கொற்றம் குறைவு இன்று ஓங்கி
நாடு பெரு வளம் சுரக்க' என்று ஏத்தி,
அணி மேகலையார் ஆயத்து ஓங்கிய
மணிமேகலை-தன் வான் துறவு உரைக்கும்:
'மை ஈர் ஒதி வகை பெறு வனப்பின்
ஐ-வகை வகுக்கும் பருவம் கொண்டது;
செவ் வரி ஒழுகிய செழுங் கடை மழைக் கண்
அவ்வியம் அறிந்தன; அது தான் அறிந்திலள்;
ஒத்து ஒளிர் பவளத்துள் ஒளி சிறந்த
நித்தில இள நகை நிரம்பா அளவின;
புணர் முலை விழுந்தன; புல் அகம் அகன்றது;
தளர் இடை நுணுகலும், தகை அல்குல் பரந்தது;
குறங்கு இணை திரண்டன; கோலம் பொருஅ
நிறம் கிளர் சீறடி நெய் தோய் தளிரின;
தலைக்கோல் ஆசான் பின் உளனாக,
குலத் தலை மாக்கள் கொள்கையின் கொள்ளார்;
யாது நின் கருத்து? என் செய்கோ?'' என,
மாதவி நற்றாய் மாதவிக்கு உரைப்ப—
''வருக, என் மட மகள், மணிமேகலை!'' என்று,
உருவிலாளன் ஒரு பெரும் சிலையொடு
விரை மலர் வாளி வெறு நிலத்து எறிய,
கோதைத் தாமம் குழலொடு கூந்து,
போதித் தானம் புரிந்து, அறம்படுத்தனள்—
ஆங்கு, அது கேட்ட அரசனும் நகரமும்
ஓங்கிய நல் மணி உறு கடல் வீழ்த்தோர்-
தம்மின் துன்பம் தாம் நனி எய்த,
செம்மொழி மாதவர், ''சேயிழை நங்கை
தன் துறவு எமக்குச் சாற்றினள்'' என்றே
அன்பு உறு நல் மொழி அருளொடும் கூறினர்:
பருவம் அன்றியும் பைந் தொடி நங்கை
திரு விழை கோலம் நீங்கினள் ஆதலின்,
அரற்றினென்' என்று, ஆங்கு, அரசற்கு உரைத்தபின்—

தேவந்தியின்மேல் சாத்தன் ஆவேசமுற்று எழுதல்

குரல் தலைக் கூந்தல் குலைந்து பின் வீழ;
துடித்தனள் புருவம்; துவர் இதழ்ச் செவ் வாய்

மடித்து, எயிறு அரும்பினள்; வரு மொழி மயங்கினள்;
திரு முகம் வியர்த்தனள்; செங் கண் சிவந்தனள்;
கை விட்டு ஓச்சினள்; கால் பெயர்த்து எழுந்தனள்;
பலர் அறிவாராத் தெருட்சியள், மருட்சியள்;
உலறிய நாவினள்; உயர் மொழி கூறித்
தெய்வம் உற்று எழுந்த தேவந்திகை-தான்—

தெய்வம் உற்ற தேவந்தியின் உரை

'கொய் தளிர்க் குறிஞ்சிக் கோமான்-தன் முன்
கடவுள்-மங்கலம் காணிய வந்த
மடமொழி நல்லார் மாண் இழையோருள்,
அரட்டன் செட்டி-தன் ஆய்-இழை ஈன்ற
இரட்டையம் பெண்கள் இருவரும் அன்றியும்,
ஆடகமாடத்து அரவு-அணைக் கிடந்தோன்
சேடக் குடும்பியின் சிறு மகள் ஈங்கு உளள்:
மங்கல மடந்தை கோட்டத்து-ஆங்கண்
செங் கோட்டு உயர் வரைச் சேண் உயர் சிலம்பில்,
பிணிமுக நெடுங்கல் பிடர்த்தலை, நிரம்பிய
அணி கயம் பல உள; ஆங்கு அவை இடையது,
கடிப்பகை நுண் கலும், கவிர் இதழ்க் குறுங் கலும்,
இடிக் கலப்பு அன்ன இழைந்து உகு நீரும்,
உண்டு ஓர் சுனை; அதனுள் புக்கு ஆடினர்
பண்டைப் பிறவியர் ஆகுவர்; ஆதலின்,
ஆங்கு-அது கொணர்ந்து, ஆங்கு, ஆய்-இழை கோட்டத்து
ஓங்கு இருங் கோட்டி இருந்தோய்! உன் கை,
''குறிக்கோள் தகையது; கொள்க'' எனத் தந்தேன்;
உறித் தாழ் கரகமும் உன் கையது அன்றே;
கதிர் ஒழிகாறும் கடவுள் தன்மை
முதிராது; அந் நீர் முத்து இற மகளிரைத்
தெளித்தனை ஆட்டின், இச் சிறு குறுமகளிர்
ஒளித்த பிறப்பினர் ஆகுவர் காணுய்;
பாசண்டன் யான்; பார்ப்பனி-தன்மேல்,
மாடல மறையோய்! வந்தேன்' என்றலும்—

சாத்தனது வரலாற்றையும், அவன் கரகம் தந்ததையும் மாடலன் கூறுதல்

மன்னவன் விம்மிதம் எய்தி, அம் மாடலன்-
தன் முகம் நோக்கலும்—தான் நனி மகிழ்ந்து,
'கேள் இது, மன்னு! கெடுக நின் தீயது!
மாலதி என்பாள் மாற்றுள் குழவியைப்
பால் சுரந்து ஊட்ட, பழ வினை உருத்து,

கூற்று உயிர் கொள்ள, குழவிக்கு இரங்கி,
ஆற்றுத் தன்மையள், ஆர் அஞர் எய்தி,
பாசண்டன்பால் பாடுகிடந்தாட்கு,
''ஆசு இல் குழவி-அதன் வடிவு ஆகி
வந்தனன்; அன்னே! நீ வான் துயர் ஒழிக'' என,
செந்திறம் புரிந்தோன் செல்லல் நீக்கி,
பார்ப்பனி-தன்னொடு பண்டைத் தாய்பால்
காப்பியத் தொல் குடிக் கவின் பெற வளர்ந்து,
தேவந்திகையைத் தீவலம் செய்து,
நால்-ஈர்-ஆண்டு நடந்ததன் பின்னர்,
மூவா இள நலம் காட்டி, ''என் கோட்டத்து,
நீ வா'' என்றே நீங்கிய சாத்தன்,
மங்கலமடந்தை கோட்டத்து ஆங்கண்,
அங்கு உறை மறையோனைத் தோன்றி,
உறித் தாழ் கரகமும் என் கைத் தந்து,
குறிக்கோள் கூறிப் போயினன்; வாரான்:
ஆங்கு அது கொண்டு போந்தேன் ஆதலின்,
ஈங்கு இம் மறையோள்-தன்மேல் தோன்றி,
''அந் நீர் தெளி'' என்று அறிந்தோன் கூறினன்—

மாடலன் தெய்வம் சுட்டிய மூன்று பெண்களின் மேலும் கரக நீரைத் தெளித்தல்

மன்னர் கோவே! மடந்தையர்-தம்மேல்
தெளித்து ஈங்கு அறிகுவம்' என்று அவன் தெளிப்ப—

பெண்கள் மூவரும் பழம் பிறப்பு உணர்ந்து, கூறிய செய்திகள்

கண்ணகி தாய் கூற்று

ஒளித்த பிறப்பு வந்து உற்றதை ஆதலின்,
'புகழ்ந்த காதலன் போற்ரு ஒழுக்கின்
இகழ்ந்ததற்கு இரங்கும் என்னையும் நோக்காய்;
ஏதில் நல் நாட்டு யாரும் இல் ஒரு தனி,
காதலன்-தன்னொடு கடுந் துயர் உழந்தாய்;
யான் பெறு மகளே! என் துணைத் தோழீ!
வான் துயர் நீக்கும் மாதே, வாராய்!'—

சோவலன் மாதா வார்த்தை

'என்னொடு இருந்த இலங்கு இழை நங்கை-
தன்னொடு இடை இருள் தனித் துயர் உழந்து,
போனதற்கு இரங்கிப் புலம்புறும் நெஞ்சம்;
யான் அது பொறேன்; என் மகன், வாராய்!'—

மாதரி வார்த்தை

'வரு புனல் வையை வான் துறைப் பெயர்ந்தேன்;
உரு கெழு மூதூர் ஊர்க் குறுமாக்களின்
வந்தேன் கேட்டேன்; மனையில் காணேன்;
எந்தாய்! இளையாய்! எங்கு ஒளித்தாயோ?'—
என்று, ஆங்கு அரற்றி, இனைந்துஇனைந்து ஏங்கி,
பொன் தாழ் அகலத்துப் போர் வெய்யோன் முன்,
குதலைச் செவ் வாய்க் குறுந் தொடி மகளிர்
முதியோர் மொழியின் முன்றில் நின்று அழ—

செங்குட்டுவனது மூக்கு குறிப்பை அறிந்து, மாடலன் கூறுதல்

தோடு அலர் போந்தைத் தொடு கழல் வேந்தன்
மாடல மறையோன்-தன் முகம் நோக்க,
'மன்னர் கோவே, வாழ்க!' என்று ஏத்தி,
முந்நூல் மார்பன் முன்னியது உரைப்போன்:
'மறையோன் உற்ற வான் துயர் நீங்க,
உறை கவுள் வேழக் கைஅகம் புக்கு,
வானோர் வடிவம் பெற்றவன் பெற்ற
காதலி-தன்மேல் காதலர் ஆதலின்,
மேல்நிலை உலகத்து அவருடன் போகும்
தாவா நல் அறம் செய்திலர்; அதனால்,
அம் செஞ் சாயல் அஞ்சாது அணுகும்
வஞ்சி மூதூர் மா நகர் மருங்கின்,
பொன்-கொடி-தன்மேல் பொருந்திய காதலின்,
அற்பு உளம் சிறந்து-ஆங்கு அரட்டன் செட்டி
மட மொழி நல்லாள் மனம் மகிழ் சிறப்பின்
உடன்வயிற்றோராய் ஒருங்குடன் தோன்றினர்—
ஆயர் முதுமகள் ஆய்-இழை-தன்மேல்
போய பிறப்பில் பொருந்திய காதலின்,
ஆடிய குரவையின், அரவு-அணைக் கிடந்தோன்
சேடக் குடும்பியின் சிறு மகள் ஆயினள்—
நல் திறம் புரிந்தோர் பெற்படி எய்தலும்,
அற்பு உளம் சிறந்தோர் பற்றுவழிச் சேறலும்,
அறப் பயன் விளைதலும், மறப் பயன் விளைதலும்,
பிறந்தவர் இறத்தலும், இறந்தவர் பிறத்தலும்,
புதுவது அன்றே; தொன்று இயல் வாழ்க்கை—
ஆன் ஏறு ஊர்ந்தோன் அருளின் தோன்றி,
மா நிலம் விளக்கிய மன்னவன் ஆதலின்,
செய் தவப் பயன்களும், சிறந்தோர் படிவமும்,

கைஅகத்தனபோல், கண்டனை அன்றே;
ஊழிதோறு ஊழி உலகம் காத்து,
நீடு வாழியரோ, நெடுந்தகை!' என்ற
மாடல மறையோன்-தன்னொடும் மகிழ்ந்து—

பத்தினிக் கோட்டத்திற்கு மானியம் அளித்து, நித்தல் விழாச் செய்யத் தேவந்தியை நியமித்து, கோட்டத்தை வலம் செய்து, சந்நிதியில் செங்குட்டுவன் நிற்றல்

பாடல்சால் சிறப்பின் பாண்டி நல் நாட்டுக்
கலி கெழு கூடல் கதழ் எரி மண்ட
முலைமுகம் திருகிய மூவா மேனி
பத்தினிக் கோட்டப் படிப்புறம் வகுத்து,
'நித்தல் விழா அணி நிகழ்க' என்று ஏவி,
'பூவும், புகையும், மேவிய விரையும்,
தேவந்திகையைச் செய்க' என்று அருளி,
வலமுறை மும் முறை வந்தனன் வணங்கி,
உலக மன்னவன் நின்றோன் முன்னர்—

ஆரிய மன்னர் முதலியோரது வேண்டுகோள்

அரும் சிறை நீங்கிய ஆரிய மன்னரும்,
பெரும் சிறைக்கோட்டம் பிரிந்த மன்னரும்,
குடகக் கொங்கரும், மாளுவ வேந்தரும்,
கடல் சூழ் இலங்கைக் கயவாகு வேந்தனும்,
'எம் நாட்டு ஆங்கண் இமையவரம்பனின்
நல்நாள் செய்த நாள் அணி வேள்வியில்
வந்து ஈக' என்றே வணங்கினர் வேண்ட—

பத்தினித் தெய்வத்தின் அருள்வாக்கு

'தந்தேன் வரம்!' என்று எழுந்தது ஒரு குரல்—

செங்குட்டுவன் வேள்விச் சாலை புகுதல்

ஆங்கு, அது கேட்ட அரசனும், அரசரும்,
ஓங்கு இருந் தானையும், உரையோடு ஏத்த,
வீடு கண்டவர்போல், மெய்ந் நெறி விரும்பிய
மாடல மறையோன்-தன்னொடும் கூடி,
தாழ் கழல் மன்னர் தன் அடி போற்ற,
வேள்விச் சாலையின் வேந்தன் போந்தபின்—

தேவந்தியின்மேல் கண்ணகி ஆவேசித்து, பத்தினிக் கோட்டம் சென்ற இளங்கோ அடிகளது துறவின் சிறப்பினைப் புகழ்ந்துரைத்தல்

யானும் சென்றேன்; என் எதிர் எழுந்து,
தேவந்திகைமேல் திகழ்ந்து தோன்றி,

'வஞ்சி மூதூர் மணி மண்டபத்திடை
நுந்தை தாள் நிழல் இருந்தோய்! நின்னை
''அரைசு வீற்றிருக்கும் திருப் பொறி உண்டு'' என்று,
உரைசெய்தவன்மேல் உருத்து நோக்கி,
கொங்கு அவிழ் நறுந் தார்க் கொடித் தேர்த் தானைச்
செங்குட்டுவன்-தன் செல்லல் நீங்க,
பகல் செல் வாயில் படியோர்-தம்முன்,
அகலிடப் பாரம் அகல நீக்கி,
சிந்தை செல்லாச் சேண் நெடுந் தூரத்து,
அந்தம் இல் இன்பத்து, அரசு ஆள் வேந்து' என்று—

அடிகள் அருளும் அறிவுரை

என் திறம் உரைத்த இமையோர் இளங்கொடி-
தன் திறம் உரைத்த தகைசால் நல் மொழி
தெரிவுறக் கேட்ட திருத்தகு நல்லீர்!—
பரிவும் இடுக்கணும், பாங்குற, நீங்குமின்;
தெய்வம் தெளிமின்; தெளிந்தோர்ப் பேணுமின்;
பொய் உரை அஞ்சுமின்; புறஞ்சொல் போற்றுமின்;
ஊன் ஊண் துறமின்; உயிர்க்கொலை நீங்குமின்;
தானம் செய்ம்மின்; தவம் பல தாங்குமின்;
செய்ந்நன்றி கொல்லன்மின்; தீ நட்பு இகழ்மின்;
பொய்க் கரி போகல்மின்; பொருள்-மொழி நீங்கல்மின்;
அறவோர் அவைக்களம் அகலாது அணுகுமின்;
பிறவோர் அவைக்களம் பிழைத்துப் பெயர்மின்;
பிறர் மனை அஞ்சுமின்; பிழை உயிர் ஓம்புமின்;
அற மனை காமின்; அல்லவை கடிமின்;
கள்ளும், களவும், காமமும், பொய்யும்,
வெள்ளைக் கோட்டியும், விரகினில், ஒழிமின்;
இளமையும், செல்வமும், யாக்கையும், நிலையா;
உள நாள் வரையாது; ஒல்லுவது ஒழியாது;
செல்லும் தேஎத்துக்கு உறு துணை தேடுமின்—
மல்லல் மா ஞாலத்து வாழ்வீர் ஈங்கு-என்.

கட்டுரை

முடி உடை வேந்தர் மூவருள்ளும்
குட திசை ஆளும் கொற்றம் குன்றூர்
ஆர மார்பின் சேரர் குலத்து உதித்தோர்
அறனும், மறனும், ஆற்றலும், அவர்-தம்
பழ விறல் மூதூர்ப் பண்பு மேம்படுதலும்,

விழவு மலி சிறப்பும், விண்ணவர் வரவும்,
ஒடியா இன்பத்து அவர் உறை நாட்டுக்
குடியின் செல்வமும், கூழின் பெருக்கமும்,
வரியும், குரவையும், விரவிய கொள்கையின்,
புறத் துறை மருங்கின் அறத்தொடு பொருந்திய
மறத் துறை முடித்த வாய் வாள் தானையொடு
பொங்கு இரும் பரப்பின் கடல் பிறக்கு ஓட்டி,
கங்கைப் பேர் யாற்றுக் கரை போகிய
செங்குட்டுவனோடு ஒரு பரிசு நோக்கிக்
கிடந்த வஞ்சிக் காண்டம் முற்றிற்று.

நூல் கட்டுரை

குமரி, வேங்கடம், குண குட கடலா,
மண் திணி மருங்கின் தண் தமிழ் வரைப்பில்,
செந்தமிழ் கொடுந்தமிழ் என்று இரு பகுதியின்,
ஐந்திணை மருங்கின், அறம், பொருள், இன்பம்,
மக்கள் தேவர் என இரு சார்க்கும்
ஒத்த மரபின் ஒழுக்கொடு புணர,
எழுத்தொடு புணர்ந்த சொல்அகத்து எழு பொருளை
இழுக்கா யாப்பின் அகனும் புறனும்
அவற்று வழிப்படூஉம் செவ்வி சிறந்து ஓங்கிய
பாடலும், எழாலும், பண்ணும், பாணியும்,
அரங்கு, விலக்கே, ஆடல், என்று அனைத்தும்
ஒருங்குடன் தழீஇ, உடம்படக் கிடந்த
வரியும், குரவையும், சேதமும், என்று இவை
தெரிவுறு வகையான், செந்தமிழ் இயற்கையில்,
ஆடி நல் நிழலின் நீடு இருங் குன்றம்
காட்டுவார்போல், கருத்து வெளிப்படுத்து,
மணிமேகலைமேல் உரைப் பொருள் முற்றிய
சிலப்பதிகாரம் முற்றும்.

சிலப்பதிகாரம் முற்றும்

சொல்-தொடர் விளக்கம்

அ

அகடு - நடு
அக நகை - இகழ்ச்சி நகை
அகநிலை - ஊர்
அகப்பா - மதில்
அகம் - இடம், மார்பு, வீடு
அகமலர் - இதய கமலம்
அகலம் - மார்பு
அகலிடம் - பூமி
அகலிடப் பாரம் - பூமியைத் தாங்குத லாகிய சுமை, அரசாட்சி
அகலுள் - ஊர், தெரு
அகவல் மகளிர் - பாடுதலையுடைய மகளிர்
அகவயின் - உள்ளிடத்தே
அகவை - உள்ளிடம், உட்பட்டது, உட்பட்ட பிராயம், ஏழாம் வேற்றுமை உருபு
அசும் கடல் - சகரரால் தோண்டப்பட்ட கடல்
அங்கம் பயந்தோன் - அங்காகமத்தை உண்டாக்கினவன்
அங்காரகன் - செவ்வாய்
அங்கி - அக்கினி
அங்குசம் - தோட்டி
அங்குலி - விரல்
அங்கை - அகங்கை, உள்ளங்கை
அச்சிரக் காலை - முன்பனிக் காலம்
அசைவு - மடிதல், சோம்புதல்
அஞ்சனம் - மை
அஞ்சுமகன் - அஞ்சுமான், சூரியன்
அஞ்ஞை - அன்னை
அஞர் - துன்பம்
அட்டில் - அடுக்களை, ஓமசாலை
அடவி - காடு, மலை சேர்ந்த காடு
அடித்தலை நீக்க - சிறை வீடு செய்ய
அடித் தொழில்ஆட்டி - குற்றேவல் மகள்
அடித் தோழி - சிலதி
அடி தொடு கடன் - அடியைத் தொட்டுச் சூளுற்ற கடன்
அடியிடு - அடியிடுதல், அடியிட்டு நடக்கை
அடியோர் பாங்கு - அடியார் பகுதித் திரள், செவிலித்தாய் முதலிய ஐவர்: ஆட்டுவாள், ஊட்டுவாள், ஒலுறுத்துவாள், நொடி பயிற்றுவாள், கைத்தாய் ஆகியோர்
அடி வீழ்தல் - வணங்கல்
அடும்பு - நெய்தல் கருப்பொருளாகிய பூ: அடம்பு என்றும் வழங்குவர்
அடை - இலை, வெற்றிலை
அடைக்காய் - பிளவு, பாக்கு
அடைப் பை - வெற்றிலைப் பெட்டி
அடைய - முழுவதும்
அடையல் - அடையாதே
அடையார் - பகைவர்
அணங்கு - தெய்வ மகள், விலங்கின் இளமைப் பெயர், குட்டி
அணங்கு ஏழுந்து ஆடி - தெய்வம் ஏறி ஆடி, தெய்வ ஆவேசம் கொண்டு ஆடி
அணங்குதல் - வருந்துதல்
அணி - அழகு, ஆபரணம்
அணிய - அணிதலால்
அணைவுறு வைகலின்-அணைந்த பொழுதே
அத்திரி - கோவேறு கழுதை
அதர் - வழி
அதர் பட - வழி உண்டாக
அதரிரித்தல் - நெற்கதிரைக் கடா விட்டு உழக்குதல்
அதள் புனை அரணம் - தோல் கைத் தளம்
அதிர்தல் - கலங்குதல், நடுங்குதல்
அதிர்வு - நரம்பைச் சிதற உந்தல்
அதிரல் - மோசி மல்லிகை
அதிராச் சிறப்பு - அதிர்ச்சியில்லாத சிறப்பு, பகைவரால் நடுக்கம் இல்லாத சிறப்பு
அந்தணர் அறு தொழில் - ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்பவை
அந்தர சாரிகள் - ஆகாயத்தில் செல்பவர்
அந்தரம் இன்றி - வேறுபாடு இன்றி, பருந்தும் நிழலும்போல ஒன்றி
அந்தரி - துர்க்கை
அந்தி - முச் சந்தி, அந்திப் பொழுது
அந்தில் - அவ்விடம், அசை
அந்தி விழவு - சீ பலி, கோயிலில் நித்தலும் நடைபெறும் விழா
அந்நிலையே - அப் பொழுதே
அம் - அழகு
அம்பணம் - மரக்கால்
அம்பி - ஓடம்
அம்மனை - அம்மானை ஆடும் காய்
அம்மாமி - மாமன் மனைவி
அமயம் - காலம், செவ்வி
அமயம் பிறக்கிட - பொழுது போதாதாம்படி
அமர் - சமர், போர்
அமர்தல் - தங்குதல், பொருந்துதல், விரும்புதல்
அமரர் - தேவர்
அமரர்க்கு அரசன் - தேவர்களுக்கு அரசன், இந்திரன்
அமரர்க்கு அரசன் தமர் - தேவர்
அமரர் தருக் கோட்டம் - தேவர் தரு நிற்கும் கோயில், கற்பகத் தரு நிற்கும் கோயில்

அமரி - அலங்கரித்தல் இல்லாதவள், துர்க்கை
அமலை - கூத்து, ஆட்டம்
அமளி - பள்ளிக் கட்டில், படுக்கை, தவிசு, ஆசனம்
அமிழ்து - அமிருதம்
அமை - மூங்கில்
அமைக - தணிக
அமைதி - பெருமை
அமைவரக் கேட்டு - செவிப் புலத்தான் அறிந்து
அயல் பட - வேறு பட
அயா - தளர்ச்சி
அயா உயிர்த்தல் - பெருமூச்செறிதல், நெட்டுயிர்ப்புக் கொள்ளுதல்
அயிர் - நுண் மணல், கண்டு சருக்கரை, நறு மணத்திற்காகப் புகைக்கப்படும் பொருள்
அயிர்ப்பு - ஐயம், சந்தேகம்
அயிராணி - இந்திராணி
அயிராது - ஐயுறுதபடி
அயினி - உணவு
அரங்கம் - ஆற்றிடைக்குறை, திருவ ரங்கம், நாடகசாலை
அரங்கின் பலகை - அரங்கின் தளத்திற்கு இட்ட பலகை
அரங்கு - நாடகசாலை, பள்ளி மண்டபம்
அரசர்க்கு ஒங்கிய வேள்வி - இராச சூயம், அசுவமேதம் முதலியன
அரசு - அரசன், அரசாட்சி
அரசு உவா - பட்ட வருத்தனம், அரசனது பட்டத்து யானை
அரசு கட்டில் - சிங்காதனம்
அரணம் - அரண்
அரத்தம் - சிவப்பு
அரந்தை - துன்பம், துக்கம்
அரமியம் - நிலா முற்றம்
அரவம் - ஒலி, வார்த்தை
அரவின் குருளை - பாம்பின் குட்டி
அரவு - பாம்பு
அரி - சிலம்பின் உள் இடு பரல், ஓசை, வினைத்திறம், சிங்கம், செவ்வரி, அரிந்திட்ட சூடு, மரகதம்
அரிஇல் - அரிதரல் இல்லாத, அழிதல் இல்லாத
அரிதாரம் - கத்தூரி
அரி மயிர் - ஐதான மயிர், மெல்லிய மயிர்
அரி மா - சிங்கம்
அரிமான் - சிங்கம்
அரியகம் - பாதசாலம்
அரியாயோகம் - அரைப் பட்டிகை, வியாதிகளைக் கெடுக்கும் மருந்து
அரித்தல் - கெடுத்தல்
அரில் - பிணக்கம்
அருகத் தானம் - ஸ்ரீகோயில்
அருகர் - சமண இருடிகள்
அருகன் - பூச்சியன், போற்றத்தக்கான்
அருங்கலச் செப்பு - மணிக்கலம் பெய்த பணிப் பெட்டகம், அணிகலப் பெட்டி
அருங்கலப் பாவை - அரிய அணிகலன்களை அணிந்தவள், இரத்தினப் பாவை
அருங்கலம் - ஆபரணம்
அருந்திறல் - அரிய திறலுடைய இராமன்
அரும் தவம் - அரிய தவம், தானம்
அரும் தெறல் கடவுள் - அரிதாகிய அழித் தல் தொழிலை வல்ல கடவுள்
அரும்பு பொதி அவிழ்ந்த - அரும்பின் கட்டு அவிழ்ந்து, அரும்பின் இதழ் விரிந்த
அரும் பொருள் - பெறுதற்கு அரிய பொருள், பெரும் செல்வம்
அரை இருள் யாமம் - இரண்டாம் யாமம்
அரைசியல் - அரசு முறை
அரைசு - அரசு, கொழுநன்
அரைசு கோல் - அரசனது செங்கோல்
அல் - இரவு
அல்கினர் அடங்கி - தங்கி உறைந்து
அல்குதல் - தங்குதல்
அல்லதை - அல்லது, அல்லாமல்
அல்லல் - வருத்தம்
அல்லவை - பாவச் செயல், பாவம்
அல்லியத் தொகுதி - அல்லிய ஆடல், யாணியின் கொம்பை ஒடித்து ஆடுதல்
அலத்தகம் - செம்பஞ்சு
அலம்வரும் - சுழலும்
அலமந்து - சுழன்று
அலர் - மலர், பழி
அலர்தல் - பரத்தல்
அலவ - அலந்தலைப்பட, மனம் தடுமாற
அலவல் பெண்டிர் - கணவன் நம்பும் பொருட்டுப் பொய்யொழுக்கத்தில் மறைந்து அவமே ஒழுகுவோர், பிற ஆடவரை விரும்புவோர்
அலவன் - நண்டு
அலவும் - சுழலும், வருந்தும், மனம் தடுமாறும்
அலவுற்று - மெலிவுற்று
அலைக்கும் - வருத்தும்
அலைநீர் - கடல்
அவ்வழி - அவ்விடத்து
அவ்வியம் - வஞ்சம்
அவ்வை - தாய்
அவந்தி - உஞ்சை, உச்சயினி
அவம் - தீமை
அவல் - பள்ளம்
அவல - பள்ளமான இடம், பள்ளமான வழி
அவனி - பூமி
அவுணர் - அசுரர்
அவைதீதல் - குற்றுதல்
அவையம் - சபை
அவையோர் - சபையோர், அறிஞர்கள்
அழல் - நெருப்பு, கார்த்திகை நாள், அழாதே
அழல் வாய் நாகம் - நெருப்புப் போலும் நஞ்சையுடைய நாகம்
அழி - நெற்போர், நெற்சூடு
அழுங்கி - இரங்கி

அழுவம் - பரப்பு
அளகம் - கூந்தல்
அளந்து கடை அறியா - இவ்வளவு என அளந்து அறிய முடியாத
அளி - கொடை
அளித்தலான் - அளிசெய்தலால், காப்பாற்றுதலால்
அளிய - அளிக்கத் தக்கன
அளியள் - அளிக்கும் தன்மை உடையாள், கருணையுடையவள்
அஃகு - மோர்
அஃதி - கலந்து, அளாவி
அற்பு - அன்பு
அறக்களத்து அந்தணர் - தருமாசனத்துக் கருத்தாக்கள்
அறக்கள வேள்வி - அற நால்களுள் அரசர்க்கு விதிக்கப்பெற்ற இராசசூயம், அசுவமேதம் போல்வன
அறப்பரிசாரம் - துறவறத்திற்குச் செய்யும் பரிசாரம், துறந்தாரைப் பூசித்தல், அறநெறியாளரை ஓம்புதல்
அறம் - அறக் கடவுள், இதம், நன்மை, இன்பம்
அறம் கூறு அவையம் - தருமாசனத்தார் வழக்கு உரைக்கும் இடம்
அறமனை - மனையறம், இல்லறம்
அறவி - அறநெறியில் செல்பவள், கவந்தி
அறவை ஆயர் - அறத்தையுடைய இடையர்
அறவோர் - சாவக நோன்பிகள்
அறவோர் பள்ளி - அருகர் பள்ளி, புத்தர் பள்ளி
அறன் ஓம்படை - தருமம் போதிக்கும் இடம்
அறிகுவன் - அறிவேன்
அறிதுயில் - யாவற்றையும் அறிந்து கொண்டே தூங்குதல், யோகநித்திரை
அறிந்தீமின் - அறிமின், உணர்ந்து கூறுமின்
அறியாக் கரி-பொய்ச் சான்று, தெளியாத சான்று
அறிவு அஞர் எய்தி - அறிவு சோர்ந்து
அறுகால் - வண்டு
அறு பொருள் - தீர்ந்த பொருள், அறுதியிட்ட பொருள், ஐயமற்ற பொருள்
அறுமுக ஒருவன் - முருகவேள்
அறுவர்க்கு இளைய நங்கை - சத்த மாதாக்களில் ஏழாவது இளையாள், பிடாரி
அறுவை - ஆடை, புடைவை, தோலில் இடும் உறி
அறுவை வீதி - புடைவைக் கடைத் தெரு
அறை - அறுதல், கற்பாறை, குழி
அறைக் கண் கரும்பு - முறிக்கும் பருவத்தையுடைய சருப்பு
அறைந்தனர் சாற்றல் - ஆகமத்தைச் சொல்லி விளக்கம் கூறுதல், மூலம் கூறிப் பொருள் உரைத்தல்
அறை போகுதல் - கீழறுத்தல், உட்பகையாய்ப் பகைவர்க்கு உதவி செய்தல்
அன்பன் - கணவன்

ஆ

ஆ - பசு, ஆச்சா மரம்
ஆகம் - மார்பு
ஆகுதிப் புகை - வேள்விச் சாலையில் எழும் ஓமப் புகை
ஆங்கனம் - அங்ஙனம்
ஆங்கு - ஓர் அசை, ஆதலால், அப்படி, அவ்விடம்
ஆசான் - புரோகிதன், ஒரு வகைப் பண்
ஆசான் திறம் - ஆசான் என்னும் பண் வகை, காந்தாரம்
ஆசின் - நுண்ணிதாக
ஆசிவகம் - சமண சமயத்தின் வகையுள் ஒன்று
ஆசு - குற்றம், சிறுமை, நுண்மை
ஆட்டி - சயித்து, வென்று, பெண், பெண்பால் விகுதி
ஆட்டு - விளையாட்டு
ஆடகம் - பொன்
ஆடகமாடம் - திருவனந்தபுரம், இரவிபுரம்
ஆடல் - தமிழ், வடுகு, கிங்களம் என்னும் மூவகைப்பட்ட ஆடல்கள், பிணையல்
ஆடல் கூத்தியர் - அகக் கூத்தாடும் பதியிலார்
ஆடல் தொகுதி - ஆடல் ஆசிரியன் ஈடும் மேல் வரவுகளும்
ஆடல், பாடல் - கூத்தும், பாட்டும்
ஆடல் மகள் - நாடக மகள்
ஆடாமோ - ஆடுவாம், ஆடுவோம்
ஆடி - கண்ணுடி, கலந்து
ஆடித் திங்கள் அகவையின் - ஆடி மாதத்திலே
ஆடிய - அசைந்த
ஆடிய கொள்கை - கூடிய ஒழுக்கம்
ஆடு - வெற்றி
ஆடு அரங்கு - நடிக்கும் அரங்கம், நடனசாலை
ஆடு களம் - அரங்கு
ஆடுகொள் மார்பு - வெற்றி கொண்ட மார்பு
ஆடுதல் - அசைதல், உடனுதல்
ஆடும் - அசையும், விளையாடும், கூத்தாடும்
ஆண்டலை அடுப்பு - ஆண்டலைப் புள் வடிவாக அமைந்த பொறி
ஆண்மை - சடுத்த முகமும், இடித்த குரலும் முதலியவற்றோடு கூடிய ஆண்மை வடிவு
ஆணி - ஆதாரம், யாழ் உறுப்பு
ஆணை - கட்டளை
ஆதிப் பூதம் - பிராமண பூதம்
ஆதியோ - வல்லியோ
ஆப் பயன் - பசுவினால் பெறும் பயன், பால் முதலியன
ஆம்பி - பத்தர்
ஆமந்திரிகை - இடக்கை
ஆய் - அழகு, ஆராய்தல்

ஆய் கலைப் பாவை - ஆராயும் கலைகளை உணர்ந்தவள்
ஆய் கொடிக் கவலை - அழகிய கொடியை உடைய கவலைக் கிழங்கு
ஆயம் - தாயம், கவருடுதல், தோழிமார், கூட்டம், பசுத்திரள்
ஆய மட மகளிர் - இடைக்குலப் பெண்டிர்
ஆயிரம் கண்ணோன் - இந்திரன்
ஆயுள்வேதர் - மருத்துவ நூலோர், கோயிலார்
ஆர் - கூர்மை, நிறைவு, அருமை, பெருமை
ஆர் அளுர் - பெரிய வருத்தம், பொறுத்தற்கு அரிய துன்பம்
ஆர் அளுர்ஆட்டி - மிக்க காம நோயை உடையவள்
ஆர் இடை - அரிய வழி
ஆர்ப்ப - ஒலிப்ப
ஆர்ப்பு - மாத்திரை இறந்த சுருதி, ஒங்க இசைத்தல்
ஆர்த்தும் - நிறைவிக்கும், உண்பிக்கும்
ஆர்வமும் செற்றமும் - விருப்பும் வெறுப்பும்
ஆரங்கண்ணி - ஆத்தி மாலை
ஆரணம் - வேதம்
ஆரம் - சந்தனம், முத்து, முத்து வடம், மாலை, ஆத்தி
ஆராய்தல் - தெரிதல், ஆரோகண அவரோகண வகையால் இசையைத் தெரிவது
ஆல் - ஆலமரம்
ஆல - ஆட
ஆலும் - ஆடும், கூவைக்கும், ஆலிக்கும், ஒலிக்கும்
ஆவண வீதி - கோயில் அங்காடி, கோயில் கடைத் தெரு
ஆவி - உயிர்
ஆவியங் கொழுநர் - உயிர் போலும் கணவர்
ஆவுதி - ஓமத்தில் இடும் பொருள்
ஆழி - சக்கரம், ஆக்கினை சக்கரம், தேர்க் கால்
ஆழி மால் வரை - சக்கரவாள கிரி
ஆள் - வீரர்
ஆற்றவும் - மிகவும்
ஆற்றவழிப்பட்டோர் - வழியில் கூடி வந்தோர்
ஆற்று லீ அரங்கம் - ஆற்றை மறைக்கும் அரங்கம், ஆவது குறை; அது சிரங்கம்
ஆறு எறி பறை - வழி பறிக்கக் கொட்டும் பறை
ஆறு-ஐங் காதம் - முப்பது காதம்
ஆன் - பசு
ஆன் நிரை - பசுக் கூட்டம்
ஆனை - யானை

இ

இகத்தல் - நீங்குதல், கடத்தல்
இகந்தோன் - கடந்தோன்
இகல் அமர் ஆட்டி - ஊடல் ஆகிய மாறுபட்ட போரை வென்று
இசை - புகழ்
இசைபோக்கி - இசையைப் பரப்பி
இசைமொழி - பொருந்தும் மொழி
இசையோன் - இசைக்காரன்
இட்டசித்தி - நினைத்தனவெல்லாம் பெறுதல்
இடங்கழி நெஞ்சம் - வரம்பு கடந்து செல்லும் உள்ளம்
இடாகினிப் பேய் - இடு பிணம் தின்னும் பேய்
இடி - இடிக்கப்பட்டது, மா
இடிக் கலப்பு - தெள்ளாத மா
இடித்தல் - அதிர்த்தல், பல் பறை கொட்டல்
இடுக்கண் - துன்பம்
இடுகும் - மெலியும்
இடு தேள் இடுதல் - தேள் அல்லாததான ஒன்றை மறைத்து மேலே போக விட்டு அஞ்சப் பண்ணுதல்
இடுபொருள் - பிறர் வரவிட்ட பொருள்
இடும்பில் - ஓர் ஊர்
இடும்பை - துன்பம்
இடை - நடுஇடம், இடுப்பு, வழி
இணர் - பூங்கொத்து
இணை - இரண்டு
இணை அணை - பலவான அணை, இணைதலை யுடையதாகிய பல்வகை அணை
இணை புணர் எகினம் - சேவலுடன் கூடிய அன்னம்
இதணம் - பரண்
இதழ் - உதடு, ஏடு
இந்திர குமரர் - தேவ குமாரர், தேவர்
இந்திர சிறுவன் - சயந்தன்
இந்திரர் - தேவர்
இந்திர விகாரம் - இந்திரனுல் நிருமிக்கப் பட்ட பள்ளி
இந்திர வில் - வான வில்
இம்மை இன்பம் - புகழ்
இமிர்தல் - ஒலித்தல்
இமில் - காளையின் முதுகிலுள்ள முரிப்பு
இமிழ்தல் - ஒலித்தல், ஆரவாரித்தல்
இயக்கம் - இயங்குதலையுடையது, வழி
இயக்கி - யட்சி தேவதை, இசக்கி
இயங்குநர் - செல்லுவோர்
இயல் ஐந்து - இயல் தமிழின் ஐந்து பாகுபாடு: எழுத்து, சொல், பொருள் யாப்பு, அணி என்பவை
இயவு - செலவு
இர - இரா, இரவு
இரண்டு வேறு உருவில் திரண்டதோள் அவுணன் - உடலுக்குத் தலை வேருள கடாவின் வடிவையுடைய மகிடாசுரன்
இரவிற்கு ஓர் கோலம் - இராப்பொழுதைக்கு அம்படி நோய்தானவை உடுத்தும் புனைந்தும் ஒப்பித்த கோலம்
இரிதல் - நீங்குதல்
இரியல் - விரைவு
இரீஇ - இருத்தி

இருக்கை - இருப்பிடங்கள்
இரு நிதி - பெரு நிதி; சங்கநிதி, பதுமநிதி என்னும் இரண்டு நிதி
இருநிதிக் கிழவன் - பெருஞ் செல்வத் திற்குரியோன், மாசாத்துவான்
இரு நிலம் - சோழநாடு ஒழிந்த மற்ற இரு கூருகிய தமிழ் நாடு, தமிழ் நாட்டு எல்லே
இரு பிறப்பாளர் - உபநயனத்துக்கு முன்னும் பின்னுமாக இரு பிறப்புடைய அந்தணர்
இரு பெரும் சூரவர் - தாய் தந்தையர்
இரு முச்சி - கரிய முடி
இரு முது குரவர் - தாய் தந்தையர்
இருமை - கருமை, பெருமை
இரு வகைக் கூத்து - அகக் கூத்து, புறக் கூத்து; வேத்தியல், பொதுவியல்; சாந்தி, விநோதம்; தேசியும் மார்க்கமும் என்று இரண்டு வகைப்பட்ட அகக் கூத்து
இருள் - இருட்டு, மரகதக் குற்றம் எட்டனுள் ஒன்றாகிய கருகல்
இல் - இல்லம், மனே
இல்லோர் - வறியோர், இல்லறத்தார்
இல்வழி - இல்லாத காலத்தே
இலக்கண முறைமை - இலக்கணமும் முறைமையும்
இலங்குதல் - விளங்குதல்
இலங்கு நீர் வரைப்பு - அலைவாய்க் கரை இருப்பு
இலஞ்சி - குளம், பொய்கை, மடு
இலம்பாடு - இல்லாமையுண்டாதல், வறுமை
இலவந்தி - நீராவி, தடாகம்
இலவந்திகை - நீராவி, நீராவியைச் சூழ்ந்த சோலை, யந்திர வாவி
இலேத் தார் - தழை விரவிய மாலே
இலேப் பூங்கோதை - பச்சை மாலே
இவர்தல் - தேரைக்கொண்டு எழுதல், பாய்ந்து செல்லல்
இழிதல் - இறங்குதல், வீழ்தல்
இளங்கால் - தென்றல்
இளங்கிளே - இளேயவள், தங்கை
இளங்கோ - இளவரசன்
இளவரசாளன் - இளவரசன்
இளே - கட்டு வேலி, காவற் காடு
இளே இருள் - இளேய இருள் (விகாரம்)
இறங்குதல் - வளேதல்
இறந்த பிறப்பு - முற்பிறப்பு
இறந்தோர் - எண்ணிறந்தோர், கழிந்தோர்
இறுக்கும் - திறையிடும்
இறுத்த - வந்து விட்ட
இறுத்தென - தலேப்பட்டதாக, பொருந்தியதாக
இறுதி இல் இன்பம் - வீடு
இறும்பூது - அதிசயம், புதுமை
இறும் முறை - இறந்து படும் முறைமை, வருந்தும் முறைமை
இறை-இறப்பு, திறை, முன்கை, தங்குதல்
இறை முறை - இராச நீதி
இறைவன் - எப்பொருளிலும் தங்குபவன்
இன நிரை - நிரையினம்
இனேயர் - வருத்தத்தையுடையர்

ஈ

ஈக்க - தரக்கூடவன்
ஈகை - பொன்
ஈங்கு - இவ்விடம், இப்பொழுது
ஈட்டம் - கூட்டம், திரள்
ஈட்டுதல் - தேடித் தொகுத்தல்
ஈண்டி - திரண்டு, நெருங்கி
ஈண்டுதல் - விரைதல், விரைந்து செல்லுதல்
ஈண்டு நீர் - கடல்
ஈண்டும் - திரளும், நெருங்கும்
ஈத்தல் - ஈதல், நிருமித்துத் தருதல்
ஈது - இது
ஈந்தார் - கொடுத்தார், அறிவித்தார்
ஈர் - இரண்டு, பெரிய
ஈர் அயிர் - மிகவும் நுண்ணிய மணல்
ஈர் ஐம்பதின்மர் - கௌரவர் நூற்றுவர்
ஈர்தல் - அறுத்தல், வெட்டுதல்
ஈர்ந் தண் துறை - ஈரமாகிய குளிர்ந்த நீர்த்துறை
ஈனோர் - இங்குள்ளோர், இவ்வுலக மக்கள்

உ

உகிர் - நகம்
உகிர்க்கரணம் - விரலின் செய்கை
உகுத்த - சிந்திய
உகுதல் - சிந்துதல்
உச்சி - தலே
உச்சிக்கிழான் - சூரியன்
உஞ்சை அம் பதி - உச்சயினி, அவந்தி நாட்டின் தலேமைப்பதி
உட்கு - அச்சம்
உடங்கு - உடன்
உடம்பிடி - வேல்
உடன்வயிற்றோர் - சகோதரர்
உடுத்தல் - சூழ்தல்
உண்கண் - மை பூசிய கண்
உண்ணுநோன்பு - உண்ணுவிரதம்
உண்பது - நுகர்வது, அனுபவிப்பது
உணக்கும் - வாட்டும்
உணங்கல் - வற்றல்
உத்தர குரு - போக பூமி
உத்தரப் பலகை - தூண் மீது வைத்த பலகை
உத்தரம் - வட பூமி
உதவா வாழ்க்கை - பிறர்க்கு உதவுதற்கு இயலாத வறுமை வாழ்க்கை
உதைய மால் வரை - உதயகிரி
உப்பால் - மேலே
உப்பாலே - பின் ஒக்கத்திடத்து
உம்பர் - அப்பால்
உம்மை - முற்பிறப்பு

உம்மை வினை - முற்பிறவியில் செய்தவினை
உய்யாலம் - அரசர் விளையாடும் காவற் சோலை, நீராவிச் சோலை
உயர்ந்தோர் - ஆன்று அவிந்து அடங்கிய கொள்கைச் சான்றோர்; இருடிகளும் புகார் நகர வணிகர்களும்; பொதியில் முனிவனும் இமையத்து இறைவனும், புகார் நகர் அரசனும்; தேவர், முனிவர் முதலாயினோர்
உயிர்க்கும் - பெருமூச்சு விடும்
உயிர்த்து - மூச்செறிந்து
உயிர்ப் புறத்தாய் - உயிரைச் சூழ்ந்துள்ளாய், உயிரைக் கவர்தற்கு அதனை முற்றியுள்ளாய்
உயிர் மருந்து - மிருத சஞ்சீவினி
உரகம் - பாம்பு
உரவு - வலிமை
உரவு நீர் - கடல்
உரவோர் - அறிஞர், பெரியோர்
உரவோன் - திண்மையுடையோன்
உரிது - உரித்து
உரிமைச் சுற்றம் - அடிமைத் திரள்
உரிவை - தோல்
உரு - அழகு, உட்கு, அச்சம், உருப்படி (இசைத் தமிழ் வழக்கு)
உருகுதல் - நெகிழ்தல், குழைந்து கிடத்தல்
உருத்தல் - ஊட்டுவித்தல், நுகர்வித்தல், தோன்றிப் பயன் அளித்தல், கோபித்தல்
உருத்து - உருக்கொண்டு, முதிர்ந்து வெளிப்பட்டு
உரும் - இடி
உருமு - இடி
உருமுக் குரல் - இடி முழக்கம்
உருவிலாளன் - அநங்கன் ஆகிய காமன், உருவமற்ற மன்மதன்
உருவிலாளன் ஒரு பெரும் சேனை - காமனது சேனையாகிய பொதுமகளிர்
உருவிலான் - அநங்கன்
உரை - உரைச் செய்யுள், சோதிட வார்த்தை, புகழ், புகழ்தல்
உரை இடையிட்ட பாட்டு உடைச் செய்யுள் - பாட்டும் உரையும் கலந்து வந்த காவியம்
உரைசால் - புகழ் அமைந்த
உரைத்தல் - தேய்த்தல், பூசுதல்
உரைப்பாட்டு மடை - உரைப்பாட்டை நடுவே மடுத்தல், உரை ஆகிய பாட்டை இடையே உடையது
உரை பெறு கட்டுரை - உரைத்துப் போதுகின்ற சுட்டுரை
உரையாட்டு - சொல்லலாவது, சொல்லத் தக்க செய்தி
உலக இடைகழி - உலகத்தார் எல்லோரும் போகத்தக்க ஊர் வாயில்
உலக நோன்பிகள் - இல்லறத்திலிருந்து விரதம் காப்போர், பூறவாது விரதம் காக்கும் சாவகர், இல்லறத்தையுடைய சாவகர்
உலகு விளங்கு அவிர் ஒளி - உலகம் விளங்குதற்குக் காரணமான ஒளி, சூரியன்
உலந்த பொருள் - கெட்ட பொருள்
உலவா - தொலையாத, ஒழியாத
உலறுதல் - தலை முளிதல்
உலை - கொல்லன் உலைக்களம்
உவணம் - கருடன்
உவவு உற்ற திங்கள் - உவா நாளில் பொருந்திய திங்கள், கலைகள் நிரம்பிய சந்திரன்
உவவுத்தலை - உவாக் காலம்
உவா - பௌர்ணமி அல்லது அமாவாசைக் காலம், யாதை
உழத்தல் - அனுபவித்தல், வருந்துதல், வெல்லுதல்
உழா நுண் தொளி - தானே பட்ட சேறு
உழி - அளவு, ஏழாம் வேற்றுமை உருபு
உழிஞ்சில் - வாகை
உழை - பக்கம், ஏழாம் வேற்றுமை உருபு
உழை இருந்த - பக்கத்தில் வந்திருந்த
உழையோர் - அருகிருக்கும் தோழிமார் முதலியவர்
உள் - உள்ளம்
உள் ஆற்று வேந்தன் - உள்ளேயிருக்கும் வலியில்லா அரசன், நொச்சியான்
உள்படும் - ஒருப்படும், ஆடும்
உள்வரி - வேற்றுருக் கொள்ளுதல், வேற்றுருக்கொண்டு நடிப்பது
உள்வரிக்கோலம் - கிருத்திரிம வேடம், பொய் உரு
உள்ளுநர் - நினைப்போர்
உள்ளூ - உள்ளல், உள்ளான் பறவை
உளநாள் - வரைந்த வாழ்நாள்
உளியம் - கரடி
உளை - பிடரி மயிர்
உற்றதை - உற்றது, உறவு, உறும் இடையூற்றை
உற - மிக
உறந்தை - உறையூர்
உறு - மிக்க
உறுக்கும் - உறுத்தும்
உறுகண் - துன்பம், வருத்தம்
உறுகண்ணர் - துன்பமுறும் பாவமுடையார், வறியர்
உறுவன் - மிக்கோன்
உறுவனே - அடையப் பெறுவேனே
உறை - மருந்து
உறைத்தல் - துளித்தல்
உறைதல் - தோய்தல்
உறைப்ப - உருப்ப, சிந்த
உறைமலி உய்யாநோய் - மருந்தால் போக்க முடியாத நோய்

ஊ

ஊக்க - நூக்க, தள்ள
ஊக்கம் - மன எழுச்சியும் முயற்சியும், வலி
ஊங்கனூர் - முன்னூர்
ஊசல் - ஊஞ்சல்

ஊசலாடும் - தடுமாற்றம் கொண்டு இங்கும் அங்குமாகச் செல்லும்
ஊட்டும் - நுகர்விக்கும்
ஊடல் கோலம் - வெறுப்பு
ஊது உலை - உலையில் ஊதும் துருத்தி
ஊது உலைக் குருகு - துருத்தி
ஊம் - ஊமர்
ஊர்ச்கோட்டம் - ஸ்ரீகைலாயம் நிற்கும் கோயில்
ஊரல் - நீர் மேல் ஊர்வது, குளுவைப் பறவை
ஊழ் - முறை
ஊழ்வினை - முன் செய்த இருவினை; முறைமையாகிய பழவினை
ஊன் - மாமிசம்
ஊன் ஊண் - மாமிசம் உண்ணுதல், மாமிச உணவு

எ

எக்கர் - மணல் மேடு
எகினக்கவரி - எகினமாகிய கவரி, மான்
எங்ஙனே - எவ்விடத்தாய்
எஞ்சலார் - அயலார்
எஞ்சாமை - தவறுமை, சோர்வின்மை
எட்டிசாயலன் - எட்டிப் பட்டத்தை உடைய சாயலன்
எட்டுக் கடை நிறுத்த ஆயிரம்-ஆயிரத்து எட்டு
எடுத்துக்காட்டு - சுட்டிக் காட்டுதல்
எடுப்பி - எழுப்பி
எண் - இலக்கம், கணிதம்
எண்ணுதல் - ஆய்ந்து செய்தல்
எண்ணும் எழுத்தும் - கணிதமும் இலக்கணமும்
எண் எண் கலையோர் - அறுபத்து நான்கு கலைகளில் வல்லோராகிய பதியிலார், வேசையர்
எண் பேர் ஆயம் - அரசர்க்குரிய எட்டுப் பெருந்தூணவர்: கரணத்தியலவர், கருமகாரர், கனகச் சுற்றம், கடைகாப்பாளர், நகரமாந்தர், நளிபடைத்தலைவர், யானைவீரர், இவுளி மறவர்
எண்வகைக் கூலம் - நெல், புல், வரகு, திணை, சாமை, இறுங்கு, தோரை, மூங்கில் நெல்
எண் வகை வரி - கண்கூடு வரி, காண் வரி, உள் வரி, புற வரி, கிளர் வரி, தேர்ச்சி வரி, காட்சி வரி, எடுத்துக் கோள் வரி (வேனில் காதை, வரி 74-108 பார்க்க)
எத் திறத்தானும் - எல்லா வகையிலும், வேண்டினர் வேண்டியவாறெல்லாம்
எதிர்தல் - எதிர் கொள்ளுதல், மாறுபடுதல்
எதிர்ந்தது - பாய வந்தது
எதிர் மலர் - செவ்வி மலர், எதிர்த்துப் பிணைத்த மலர்
எதிரி - எதிரேற்று, முழுங்கி
எய்துதல் - உணர்தல்
எய்யா ஒரு சிறை - யாவரும் அறியாத ஒரு பக்கம்
எய்யாமை - அறியப்படாமை
எயில் - மதில்
எயில்புறத்து வேந்தன் - உழிஞையான்
எயிற்றி - வேட்டுவ மகள்
எயிறு - பல்
எயின் - எயினர்
எயினர் - மறவர்
எயினர் கடம்-எயினர் ஊரை அடுத்த வழி
எரி - தீ
எரி நிறத்து இலவம் - தீப்போலும் நிறம் உடைய இலவ மலர்
எரிமுகப் பேர் அம்பு - வடவை எரியைத் தலையிலே உடைய பெரிய அம்பு; திருமால்
எரி முகம் - நெருப்பின் கூறு
எருத்தம் - கழுத்து, பிடரி, புறக்கழுத்து
எல் - ஒளி
எல்செய்வான் - பகலைச் செய்யும் சூரியன்
எல் படு பொழுது - சூரியன் மறையும் பொழுது
எல்லா - தோழி
எல்லை - பகல், பகல் பொழுது
எவ்வம் - துன்பம்
எவன்கொல் - யாது?
எழால் - யாழ்
எழில் கை - அழகுபெறக் காட்டும் கை
எழினி - திரை, திரைச்சீலை
எழுத்து - இலக்கணம்
எழு நிலை மாடத்து இடைநிலம் - ஏழடுக்கு மாளிகையின் இடைப்பட்ட நாலாம் நிலம், கூதிர்ப் பள்ளி
எழுமுடி - ஏழு அரசரை வென்று அவர்களுடைய ஏழு முடியானும் செய்த ஓர் ஆரம்
எழுவும் சீப்பும் - விடுமரங்கள், கதவிற்கு வலியாக உள் வாயிற்படியில் விடும் மரங்கள்; மேலே எழுப்பும் சீப்பு
எள் - இகழ்ச்சி
எள் அறு - இகழ்தல் இல்லாத
எள்ளல் - இகழ்ச்சி, இகழுக
எள்ளிய - இகழப்பட்ட
எள்ளுநர் - இகழ்பவர்
எற்று - எத்தன்மைத்து
எறிந்து ஓட்டி - அறுத்து ஓட்டி
எறி பிணம் - வெட்டுண்ட பிணம்
எறிவளை - அறுக்கப்படும் சங்கு, கரையில் எறியப்படும் சங்கு
என் உற்றனர் - என்ன உறவுடையார்
என்கோ - என்பேனே, புகழக்கடவேனே
என்செய்கு - என்ன செய்வேன்
என் முதல் - என்னைத் தொடங்கி
என்றூழ் - வெயில்
எனும் - சிறிதும்

ஏ

ஏக்கற்று - வழி காண்மல்
ஏகை - இரேகை
ஏங்கி - வருந்தி

ஏச்சு உரை - பழிப்புரை
ஏசல் - பழித்தல்
ஏசாச் சிறப்பு - இகழ்தல் இல்லாத சிறப்பு
ஏசும்படி - (அழகால் எல்லோரையும்) இகழும்படி, இகழும் வடிவம்
ஏடு - இதழ்கள்
ஏணி - எல்லை
ஏத்தம் - ஏற்றம்
ஏதம் - தீங்கு, துன்பம், குற்றம்
ஏதிலர் - அயலவர்
ஏதிலார் - அயலார்
ஏமம் - காவல், கரை, எல்லை
ஏர்தல் - எழுதல்
ஏர்பு - எழுதல்
ஏவல் உள்ளம் - ஏவிய உள்ளம்
ஏவல் கிலதியர் - குற்றேவல் மகளிர், மடைப்பள்ளியார் அடியார்
ஏவலன் - ஏவினபடி செய்தற்கு உரியோன்; விதிக்கின்றிலேன்
ஏழகத் தகர் - மேழகம், ஆட்டுக் கிடாய்
ஏழு நரம்புகளின் பெயர் - குரல், துத்தம், கைக்கிளை, உழை, இளி, விளரி, தாரம்
ஏற்ற வாயில் இரண்டு - அரங்கிற்கு உட்புகவும் புறப்படவும் சமைத்த இரண்டு வாயில்கள்
ஏற்று - உடன்பட்டு
ஏறு - இடி
ஏன்று - ஏற்று
ஏனப் படம் - பன்றி முகக் கடகு
ஏனம் - பன்றி

ஐ

ஐ - அழகு, வியப்பு
ஐ என்ருள் - வியந்தாள்
ஐது - அழகு
ஐது மண்டிலத்தால் - அழகிய மண்டில நிலையால்
ஐந்து கேள்வியும் அமைந்தோன் - திதி, வாரம், நட்சத்திரம், யோகம், கரணம் அறிந்த நிமித்தகன். நட்பு, ஆட்சி, உச்சம், பகை, நீசக்கோள் என்னும் ஐந்தும் அறிந்தவன்
ஐம் பெருங்குழு - அமைச்சர், புரோகிதர் சேனபதியர், தூதுவர், சாரணர் என்னும் ஐந்து பெரிய கூட்டத்தார்
ஐம் பெரு வேள்வி - கடவுள் வேள்வி, பிரம வேள்வி, பூத வேள்வி, மானிட வேள்வி, தென்புலத்தார் வேள்வி
ஐயம் தீர் காட்சி - தெளிந்த அறிவு
ஐயர் - மூத்தோர், தமையன்மார்
ஐயை - தலைவி, ஐயன் என்பதன் பெண் பால், மாதரியின் மகள்
ஐவர் - பாண்டவர் ஐவர்
ஐவன வெண்ணெல் - மலைச்சாரலில் விளையும் நெல் வகை

ஒ

ஒசிந்த - ஒடிந்த
ஒசிந்த நோக்கினர் - ஒதுங்கிப் பார்த்த பார்வை உடையார்
ஒட்டுப் புதவம் - இரட்டைக் கதவம்
ஒட்டேன் - இசையேன், ஒருப்படேன்
ஒடுக்கம் - மூடிபு
ஒடுங்கி - மறைந்து
ஒடியா இன்பம் - கெடாத இன்பம்
ஒய் என - விரைய
ஒய்தல் - போக்குதல்
ஒய்யாமை - போக்க ஒண்ணுமை
ஒரீஇ - நீங்கி
ஒரு சிறை - ஒரு பக்கம்
ஒரு தனி வாழ்க்கை - ஒப்பற்ற தனி வாழ்க்கை
ஒரு திறன் - ஒரு பக்கம்
ஒரு பரிசு - ஒரு படி, ஒருவாறு
ஒருமுக எழினி - இடத் தூணிடத்தே உருவு திரையாக அமைக்கப்படுவது
ஒரு முகம் - ஒரு திசை, ஓரிடம்
ஒரு மொழி - ஓரே ஆணை
ஒல் - அனுகரணம்
ஒல்கி - ஒதுங்கி, அசைந்து
ஒல்லுவது - சாரக்கடவது, மருவுவது
ஒலி - ஓசை, தழைத்தல்
ஒலியல் மாலை - தழைத்த மாலை
ஒழியா விளக்கு - விடி விளக்கு
ஒள் - ஒளி, விளக்கம்
ஒளித்த பிறப்பு - முந்தைப் பிறவியின் உணர்ச்சி
ஒளித்து - ஒடுக்கி, மறைத்து
ஒற்கா - ஒடுங்காத, சுருங்காத
ஒற்றல் - நீணடதல்
ஒற்றன் - இரகசியமாகச் செய்தி தெரிவோன்
ஒற்று - ஒற்றர், ஒற்றியறிபவர்
ஒற்றுதல் - ஒற்றிக் கேட்டு அறிதல், பொறித்தல்
ஒற்றை - ஏக தாளம்
ஒன்றன் மேலிட்டு - ஒரு பெயரிட்டுக் கொண்டு
ஒன்று புரி கொள்கை - வீடுபேற்றை விரும்பும் கொள்கை

ஓ

ஓ - வாய்த்தலைக்கு இட்ட கதவு, ஓவுதல்
ஓங்கல் - மரம்
ஓச்சுதல் - வீசி எறிதல்
ஓசனித்தல் - போதற்கு ஒருப்பட்டு முயலுதல்
ஓசுநர் - பரவர், மீகாமர், எண்ணெய் விற்பார்
ஓடை - நெற்றிப் பட்டம், பட்டம்
ஓத்து - வேதம்
ஓதம் - கடல்
ஓதி - கூந்தல்
ஓதை - ஓசை, ஆரவாரம்
ஓப்புதல் - ஓட்டுதல்
ஓம்படை - பாதுகாவல்
ஓம்பல் - பேணுதல், பாதுகாத்தல்
ஓவர் - ஓத்தாளர்

ஓவிய எழினி - சித்திரப்பணி எழுதின திரை, மசகாரி
ஓவியச் சூற்றம் - சித்திரத் திரள்
ஓவிய விதானம் - சித்திரம் எழுதப் பெற்ற மேற்கட்டி

க

கங்குல் - இரவு
கச்சை - யானைக் கீழ் வயிற்றில் உள்ள கச்சை, யானையின் வயிற்றில் இடும் கயிறு
கஞ்சகாரர் - வெண்கலக் கன்னர்
கஞ்சம் - வெண்கலம்
கஞ்சன் - கம்சன்
கஞ்சுக முதல்வர் - சட்டையிட்ட தலைவர்
கட்சி - காடு
கட்டல் - பறித்தல்
கட்டழித்தல் - நிலைகுலைவித்தல்
கட்டியது - மூண்டது, மூண்டது
கட்டு - களவு
கட்டு உண் மாக்கள் - களவு கண்டு உண்ணும் வாழ்க்கையை உடைய மக்கள்
கட்டுரை - பொருள் பொதிந்த உரை, உறுதியை உடைய சொல், விளங்கச் சொல்லுதல்
கட்டுரைத்தேன் - வழக்கு உரைத்தேன்
கண்புலம் - கண் பார்வை
கண்புலம் புகுகை - கண்ணறிவிற்குப் புலப்படுகை
கட்போர் - களவு செய்வோர்
கடகம் - கை வளை
கடம் - அருஞ் சுரம், பாலைநிலம், வழி, முறைமை
கடம்படாள் - கோபித்து வெகுளாள்
கடம்பூணல் - முறைமையை மேற் கொள்ளல்
கடமலை - யானை
கடல் தெய்வம் - வருணன்
கடல் வயிறு - கடலின் நடுவிடம்
கடவரை - மதமலை, யானை
கடவுள் மங்கலம் - பிரதிட்டை
கடவுள் வரைந்து - கடவுளரை வழிபட்டு
கடவுளர் - முனிவர்
கடன் - கடனுக இடக்கடவது, திறை, உத்தரக் கிரியை, பலி கன்மம்
கடி - காவல், அச்சம், மிகுதி, பேய்
கடிகை - குத்துக்கோல்
கடிகொள்ள - காவல் கொள்ள, விளக்கம் செய்ய
கடிஞை - பிச்சைப் பாத்திரம்
கடிதல் - நீக்குதல், தூரத்துதல்
கடிப்பகை - வெண் சிறு கடுகு
கடிப்பு - குறுந்தடி, குதம்பை என்னும் ஆபரணம்
கடிவாள் - ஓட்டுபவள்
கடுக்கும் - ஐயுறும்
கடுப்ப - கடுக்க
கடும் பரி கடவுநர் - விரைந்த செலவினை உடைய குதிரைகளைச் செலுத்துவோர், அச்சுவ வாணியர்
கடுமை - சினம்
கடை - எல்லை, வரம்பு, வாயில், வாயில் கடை
கடைஇ - கடாவுதலால், செலுத்துதலால்
கடை எயிறு - கடைவாய்ப் பல்
கடைக்கொள - முடிய
கடை கழிந்து - வாசலை விட்டு
கடை கழி மகளிர் - பொது மகளிர்
கடை கால் யாத்த - கடை ஒழுங்காகக் கட்டிய
கடைசியர் - உழத்திப் பெண்கள்
கடை நாள் - மரண நாள்
கடை நாள் எய்தல் - மரித்தல்
கடைநிலை - முடிவு
கடைநிறுத்தல் - கடை வாயிலில் நிறுத்தல்
கடை மணி - கண் மணிக்கடை
கடைமுக வாயில் - பண்டசாலை வாயில்
கடையம் - கடைசிக் கூத்து, கடைசியர் வடிவு கொண்டு ஆடிய கூத்து
கண் - இடம், கணு, கண்ணேட்டம்
கண் களி மயக்கம் - கண் களித்தற்குக் காரணமான ஆச்சரியம்
கண்கூடு - எதிர்முகமாதல், பிரியதரிசனம்
கண்டத்தால் பாடல் - மிடற்றுப் பாடல், வாய்ப் பாட்டு
கண்டம் - மிடறு, கழுத்து
கண்டி - கண்டத்தை உடையாள்
கண்டிகை - கழுத்து வடம்
கண்ணி - சூடும் பூ மாலை
கண்ணுள் வினைஞர் - சித்திரகாரிகள், உருக்குத் தட்டார்
கண்ணுளர் - சாந்திக் கூத்தர், மதங்கர்
கண்ணுளாளர் - மதங்கர், பெரும்பாணர், கூத்தர்
கண்ணெழுத்தாளர் - திருமுகம் எழுதுவோர்
கண்ணெழுத்து - குறியீட்டு எழுத்து
கண்புலம் - கண்ணினது அறிவு
கண் புலம்பு முத்து உறைப்ப - கண்ணிலிருந்து வருத்தத்தைத் தரும் கண்ணீர் சிந்த
கணக்கியல் வினைஞர் - காலத்தை அறுதியிடும் கணிகள்
கணம் - கூட்டம்
கணி - நிமித்திகன், சோதிடன்
கணிகையர் - பதியிலார், வரைவின் மகளிர், பொது மகளிர்
கணையம் - கணைய மரம்
கத்திகை - மாலை விசேடம்
கதன் - கதம், சீற்றம்
கதிர் - வெங் கதிரும் தண் கதிரும் (சூரிய சந்திரர்), கிரணம், ஒளி, ஆரக்கால், சூரியன்
கதுப்பு - கூந்தல், கொண்டை
கந்தன் - நிக்கந்தன்
கந்தன்பள்ளி - உறையூர் ஸ்ரீகந்தன் பள்ளி
கந்து - பற்றுக்கோடு
கந்துகம் - பந்து

கப்பம் - கற்பம், தேவர்க்குரிய வாழ்நாள் அளவு
கம்பலை - ஆரவாரம், ஒலி
கம்பலை மாக்கள் - வேறு சில காட்சி கண்டு திரியுமவர்
கம்புள்கோழி - சம்பங் கோழி
கம்மியர் - பணித் தட்டார்
கய - பெருமை
கய மலர் - பெரிய மலர்
கயவாய் - புகார் முகம், சங்கம இடம், புகார்
கயில் - பிடர்
கயிற்கடை - கோக்கு வாய், கொக்கி
கரணம் - கிரியை, தொழில்
கரத்தல் - மறைத்தல், வஞ்சித்தல்
கரந்து வரல் எழினி - மேற்கட்டுத் திரை யாக மறைந்து வருதலையுடைய எழினி
கரி - யானை, சான்று
கரிக் களபம் - யானைக் கன்று
கரிமா - யானை
கரிய மலர் - நீல மலர், குவளை
கரியவன் - கண்ணன், திருமால்
கரு - குட்டி
கருங்கை - வலிமையுடைய கை, வலிய கை
கருங்கை வினைஞர் - பள்ளர்
கருணை - அருள்
கருந்தலை - பசுந் தலை
கருந்தாழ்க் காவல் - வலிய தாழை உடைய அரண் காவல்
கருந் தொழில் - கொலைத் தொழில்
கருமக் கழி பலம் - பாவத்தைக் கழிக்கும் புண்ணியம்
கரும வினைஞர் - புரோகிதர்
கருமுகை - பித்திகை, சாதி மல்லிகை, சிறு செண்பகம்
கருமை - கரிய நிறம், பெருமை
கருவிக் குயிலுவர் - தோற் கருவி வாசிப் பார்
கரு வில் - வயிர வில்
கருவினை - காக்கட்டான், காக்கணம்
கரைதல் - அழைத்தல், ஓசைப்படுதல், வருந்துதல்
கல் - ஒலிக்குறிப்பு, அனுகரணம், மலை
கல் நவில் - கல்லை ஒத்த
கல இருக்கை - அணிகலம் பெய்த சரக்கறை, பண்டசாலை
கலத்தினர் - அணிகலன்களை உடையவர்
கலம் - மரக்கலம், கப்பல், யாழ், ஆபரணம்
கலன் - ஆபரணம், மரக்கலம்
கலவி - கூடுதல்
கலாம் தரு கிளவி - புலவிச் சொல்
கலி - ஆரவாரம்
கலிங்கம் - ஆடை
கலை - கல்வி, அறுபத்து நாலு கலை, சரீரம்
கலையிலாளன் - அநங்கன், மன்மதன்
கவடி - வெள் வரகு
கவண் - கல் வீசும் பொறி
கவயம் - கவசம்
கவர் பரிப் புரவி - பகுத்து விரையும் செலவினை உடைய குதிரை
கவரி - சாமரம்
கவலை - ஒரு வகைக் கிழங்கு, பலவாய் ஒன்றன முடுக்கு, பல நெறிகள் கூடின முடுக்கு, குறுந் தெரு
கவலைய மகளிர் - உயவல் பெண்டிர், கைம்மை நோன்பினுல் வருந்தும் மகளிர்
கவவுக் கை - அகத்திட்ட கை, தழுவிய கை, அணைத்த கை
கவற்ற - கவலை செய்ய
கவியது குறிப்பு - இயல் புலவன் நினைந்த கோட்பாடு
கவிர் - முருக்க மலர், முள் முருக்கு
கவுரி - கௌரை நிறத்தை உடையவள்
கவை - இரும்புக் கப்பு, மூன்று கவரான இரும்பு ஆயுதம்
கவைக்கோல் - தூத்துக்கோல், கொடித் துக் கோல்; படைக்கல், இட்டிகை முத லியவற்றைப் பறிக்கும் கருவி
கழங்கு - கழற்சிக் காய்
கழல் - வீரக் கழல், கழலுதல்
கழல் கண் - பிதுங்கின கண், பச்சைக் கழல் போலும் கண்
கழனி - வயல்
கழி - ஊன், மாமிசம், மிகுதி, கடல் சார்ந்த நிலமும் நீரோடையும்
கழி பேர் ஆண்மைக் கடன் - தன்னைத் தான் இடும் பலிக்கடன்
கழிய - நீங்க, வருந்த
கழு - கழுக்கோல்
கழுநீர் - ஒரு வகை நீர்ப் பூ
கள் - தேன், மது
கள்ளக் கமலம் - கள்ளத் தன்மையை உடைய கமலம், தேனை உடைய கமலம்
கள் நொடை ஆட்டியர் - கள் விற்கும் வலைச்சியர்
களபம் - யானைக் கன்று
கனமர் - உழுகுடி வேளாளர்
களன் - நிலம், அரங்கு, அழகு
களி - கள், களிப்பு, மகிழ்ச்சி
களித் துயில் - இன்பத் தூக்கம்
களி நறவம் - களிப்பைச் செய்யும் தேன்
களி மகிழ்வு - மிக்க மகிழ்ச்சி
களிற்றின் பாகர் - யானைப் பாகர்
களிறு - யானை, ஆண் யானை
களையாத துன்பம் - நீக்க ஒண்ணுத துன்பம்
கற்கடகக் கை - நண்டுக் கரம்
கறங்குதல் - முழங்குதல், ஒலித்தல்
கறவை - பசு
கறி - மிளகு
கறி மூடை - மிளகுப் பொதி
கறை - கடமை, வரி, கறுப்பு, இறை வரி, களங்கம்
கறைத் தோல் - கருங் கடகு, கரிய கிடுகு
கறை வீடு செய்தல் - இறை நீக்குதல், வரி தள்ளுபடி செய்தல்

கன்றிய - அடிப்பட்ட
கன்றிய காவலர் - அடிப்பட்ட காவலர், காவலில் தழும்பியவர்
கன்னகம் - அகழ் கருவி
கன்னி - குமரி, குமரி ஆறு, இளமை
கன்னிகாரம் - கோங்கு
கனக மாளிகை - பொன் மாளிகை, அந்தப்புரம்
கனிக்காய் - கனிக்கு ஆன முதிர்ந்த காய், முதாரிக் காய்
கனை - செறிவு, நிறைவு, மிகுதி, ஒலி
கனை எரி - முழங்கும் நெருப்பு
கனை குரல் - செறிந்த முழக்கொலி
கனை சுடர் - (ஞாயிற்றின்) மிக்க ஒளி

கா

கா - சோலை, காண்டா வனம்
காசறை - கத்தூரி
காசறைக் கரு - கத்தூரி மிருகத்தின் குட்டி
காசு - குற்றம்
காட்சி - தோற்றம், தன்மை, அறிவு
காட்சிக் காதை - கற்காட்சி பற்றிய காதை, கற் காணைத் துணிந்த காதை
காட்டம் - விறகு, சமித்து
காடு இடையிட்ட நாடு - காடும் நாடும் ஆகிய வழி
காண் - முன்னிலை அசை
காண்குதும் - காண்போம்
காண்டல் - காணுதல், செய்தல்
காண்வர - வெளிப்பட
காண்வரு - அழகு பொருந்திய
காணீர் - பாராய், அறியாய்
காணிகா - காண்பாயாக
காணிய - காண்பதற்கு
காணுதல் - உணர்தல்
காதலால் கொண்டு - காமக் குறிப்பினுள் உட்கொண்டு
காதலின் சிறந்து - காதல் மிக்கு
காந்தள் மெல் விரல் - காந்தள் மலர் போன்ற மெல்லிய விரல்
காப்பு - காவல், சுற்று மதில், திக்கில் கடவுளர்கள், திசைக் கடவுள்
காம்பு - மூங்கில்
காமக் கடவுள் - காமதேவன்
காமக் களி மகிழ்வு எய்தி - காமமாகிய கள்ளுண்டு களித்து
காமர் - அழகு, விருப்பம்
காமர் மனைவி - காமனும் ரதியும்
காமரு - விருப்பமுண்டாக்கும்
காமவேள் கோட்டம் - மன்மதன் கோயில்
காமன் - மன்மதன்
காமன் செயல் - வருத்தும் தொழில்
காமுறு செய்வம் - காமுறும் தெய்வம், விரும்பும் தெய்வம்
காய் சினம் - மிக்க சினம்
காய்த்திய - சுடவேண்டி, கோபித்த
காயம் - வெள்ளுள்ளி
கார் அரசாளன் - கார் காலம்
காரான் - எருமை
காரி - கருமை நிறமுடையது, கரிக்குருவி, காரி எருது
காரிகை - பெண்
காருக அடி - கிரக நிலை
காருகர் - நெய்வோர், சாலியர், அச்சுக் கட்டிகள்
கால் - வட்டை, சாகாடு, வண்டி, சுற்று, காலுதல், சொரிதல்
கால் கொள்கை - கடவுள் வடிவு எழுதத் தொடங்குதல், அடிச் செய்து கொள்ளுதல், ஆரம்பம் செய்தல்
கால் கோள் - தொடக்கம், கல் கொள்ளுதல், கல்லில் உருவம் சமைக்கத் தொங்டகுதல்
கால் சீயா முன் - போக்குதற்கு முன்
கால் தூதன் - ஓட்டன்
காலக் கணிதர் - சோதிட நூலோர், கணியர், காலத்தை எண்ணியிடுவார்
காலதர் - காற்று இயங்கும் வழி, சாளரம்
காலுதல் - வெளிப்படுத்தல்
காலை - காலம்
காவதம் - காதம், ஏழரை நாழிகை வழி, சுமார் 10 மைல் அளவு தூரம்
காவல் - காத்தல் தொழில், செவிலித் தாயர்
காவல் கணிகையர் - களத்து ஆடும் கூத்திகள், இராக் கடை வேசையர், காமக்கிழத்தியர் ஆகும் பரத்தையர்
காவல் தெய்வம் - நகரி காவல் தெய்வ மாகிய நான்கு வருண பூதங்கள்
காவல் பூதம் - புகாருக்கும் அரசனுக்கும் காவலாகிய பூதம்
காவலன் - அரசன்
காவற் பெண்டு - செவிலி
காவி - நீல மலர்
காவிதி - வரியிலார்
காவிரிப் பாவை தன் புதல்வர் - வேளாளர்
காவும் கானமும் - இள மரக்காவும் நந்தவனமும்
காழ் - வடம், சரம், கோவை, குத்துக் கோல், வயிரம்
காழ் அகில் - வயிரம் பொருந்திய அகில் கட்டை
காழ் ஊன்று சுடிகை - குத்துக் கோல்கள்
காழகம் - கருமை
காழியர் - பிட்டு வாணிகர், வண்ணர்
காழோர் - பரிக்காரர்
காற்கு அணி - காலில் அணியும் சிலம்பு
காற்றாதாளர் - தூதர்
காறு - அளவு
காறும் - அளவும்
கான் - மணம், காடு
கானக்கோழி - கானங்கோழி, காட்டுக் கோழி
கானப் படம் - காடு எழுதின கடகு
கானம் - நந்தவனம், காடு
கான வாரணம் - காட்டுக் கோழி

கி

கிடங்கு - அகழி
கிடந்தேன் - துயின்றேன், உறங்கினேன்
கிடை - கிடேச்சு, நெட்டி
கிடுகின் படம் - தோற் கடகு
கிணை - மருதப் பறை
கிம்புரி - கொம்பில் அணியும் பூண்
கிழமை - உரிமை
கிழவன் - உரியோன்
கிழார் - பூட்டைப் பொறி, நீர் இறைக்கும் கருவியுள் ஒன்று
கிழி - சீரை, துணி
கிளர்தல் - மிகுதல்
கிளர் முத்து - பரு முத்து, ஒளி கிளரும் முத்து
கிளை - கிள்ளை (இடைக்குறை), கிளி, ஐந்து நரம்பு, கூட்டம்

கு

குஞ்சர ஒழுகை - யானை நிரை
குஞ்சி - ஆண்பால் முடி, ஆடவர் தலை மயிர்
குட்டம் - குறைந்தது
குடக்கால் விளக்கம் - குடத் தண்டில் வைத்த விளக்கு
குடக்கோ - மேல் திசையில் அரசாண்ட அரசன்
குடசம் - வெட்பாலை விசேடம், வெட்பாலை
குடதிசை - மேற்குத் திக்கு
குடதிசை அயிர் - யவன தேசத்து உண்டான புகைக்கும் கண்டுசருக்கரை
குடமலை - சூட கமலை
குடமலைஆட்டி - குடநாட்டினை ஆளும் செல்வி
குடாஅடி - வளைந்த அடிகளை உடையது
குடா அடி உளியம் - பிள்ளைக் கரடி, கரடிக் குட்டி
குடிஞை - கோட்டான், பேராந்தை
குடி முதல் சுற்றம் - தாய் தந்தை முதலியோர்
குடுமி - உச்சி, உச்சியில் வைத்த சிகை
குடைச் சூல் - உட் கரு, குடைதல்
குடை நிலை வஞ்சி - குடை நாட்கோடல்
குடை வீழ்த்து - குடையைத் தாழ்த்து
குண்டப் பார்ப்பீர்-பிழுக்கை மாணிகாள், சிறு மாணிகள், சிறு பிள்ளைகாள்
குண்டிகை - கமண்டலம்
குண திசை - கீழ்த்திசை
குணவதன் - குணத்தையுடையவன்
குணில் - குறுந்தடி
குதலை - மழலை, இளமொழி
குந்தம் - சிறு சவளம்
குப்பை - குவியல்
குமரி - இளமை பொருந்தியவள்
குமரிக்கோடு - குமரி மலை
குமரிக் கூடு - அழியாத நெற்கூடு
குமரி வாழை - தாறு ஈனுத வாழை
குமிழ் - குமிழம் பூ
குயம் - அரிவாள்
குயிலாலுவம் - இடைய மலைப் பக்கத்து ஒரு பகுதி
குயிலுவ மாக்கள் - குயிலுவக் கருவியாளர், இடக் கை முதலான கருவியாளர்
குயிலுவர் - தோல் கருவி, துளைக் கருவி, நரம்புக் கருவி, உருக்குக் கருவியாளர்கள்
குயிற்றுதல் - அழுத்துதல்
குரங்கு அமை - வளைந்த மூங்கில்
குரல் - கொத்து, பூங் கொத்து, முடியின் ஐ வகையுள் ஒன்று, இசை
குரல் எடுப்பி - குரல் எழுப்பி, குரலால் உணர்த்தி
குரவம் - குரா மரம்
குரவர் - இரு முது குரவர், தாய் தந்தையர்
குரவன் - குரு மூர்த்தியாய் உள்ளவன்
குரவை - குரவைக் கூத்து; எழுவரேனும் ஒன்பதின்மரேனும் மகளிர் கை பிணைந்து, காமமும் வென்றியும் பொருளாக ஆடும் கூத்து; கை கோத்து ஆடும் கூத்து
குரு - கொப்புளம், சுட்டி, அம்மை
குருகு - நாரை, துருத்தி, குருக்கத்தி
குருகு பெயர்க் குன்றம் - கிரவுஞ்ச மலை
குருளை - குட்டி
குரை - ஒலித்தல்
குலம் தரு வான் பொருள் - தொன்று தொட்டு வருகின்ற பொருள்
குலமுதல் - அடியே தொடங்கி இரட்சித் தற்குரியாள்
குலவு வேல் - விளங்கும் வேல்
குலைந்து - தடுமாறி
குவளை - செங்கழு நீர், நீலோற்பலம்
குவளைக் கண் மலர் - குவளையாகிய கள்ளையுடைய மலர், குவளையாகிய கண் மலர்
குவிதல் - வணங்குதல், திரளுதல்
குழல் - கூந்தல், சுருண்ட மயிர், புல்லாங் குழல்
குழவி - குழந்தை
குழவித் திங்கள் - பிறைச் சந்திரன்
குழிசி - மிடா
குழியம் - வாசனை உருண்டை, தடி
குழை - காதணி, குண்டலம், தளிர், தழை
குழைத்த - ஒன்றுகச் சேர்த்துக் குழப்பிய, குழைவித்த, வருத்திய
குற்றிளையாள் - குறுந் தொழிலையுடைய இளையவள், குற்றேவல் செய்யும் மகள்
குற்றிளையோர் - குற்றேவல் மகளிர்
குறங்கு - துடை
குறங்கு செறி - துடையில் அணியும் ஆபரணம்
குறி அறிந்து - குறிப்பான் அறிந்து
குறிப்பு - கருத்து, எண்ணம்
குறியா - கருதாத

குறுங்கண் - குறிய கண்களையுடைய சாளரம்
குறுதல் - குற்றுதல்
குறுநர் - சூளை பறிப்போர்
குறும்பு - குறுநில மன்னர், பகைவர்
குறும்போக்கு - குடிகச் செலவும், துள்ளல் செலவும் பாடுதல்
குறு மகளிர் - இளம் பெண்கள்
குறு மகன் - கீழ் மகன்
குறு முறி - சிறிய தளிர்கள், கொழுந்திலை
குறுவர் - குற்றுவர்
குறை - குறைக்கப்பட்டது, கட்டை, துண்டு
குறைவு இல் உடம்பு - சாமுத்திரிகா இலக்கணத்தில் குறைவுபடாத உடம்பு
குன்றம் - மலை

கூ

கூஉய் - கூவி, அழைத்து
கூட்டுண்டல் - கவர்ந்த பொருளைச் சேர்ந்து உண்ணுதல்
கூடம் - இசை நிறவாதது, தன் பகை யாகிய ஆரும் நரம்பின் இசையில் குன்றித் தன்னேசை மழுங்கல்
கூடு ஆயினன் - வெற்றுடம்பானன், உயிர் நீத்தான்
கூடை - சுப்பிய கை
கூடை செய்த கை - ஒற்றையில் செய்த கைத்தொழில்
கூடை நிலம் - ஓர் உருவை இரட்டிக்கு இரட்டி சேர்த்தல்
கூத்துப் பதினென்று - பதினேர் ஆடல்
கூத்துள் படுதல் - ஆடத் தொடங்குதல்
கூத்துள்படுவோன் - ஆடலாசிரியன்
கூதாளம் - கூதாளி, நறுந்தாளி
கூதிர்ப்பள்ளி - கூதிர்க் காலத்திற்கு அமைந்த இடை நிலம்
கூந்தல் மண் பொறி - கூந்தலால் ஒற்றிய பொறி, மண்ணின் மீது கூந்தலால் ஒற்றிய பொறி
கூய் - கூவி, அழைத்து
கூலம் - பலசரக்கு, கருஞ்சரக்கு, தானியம்
கூல வீதி - கூலக் கடைத் தெரு, தானியம் விற்கும் கடை வீதி
கூவல் - கிணறு
கூவியர் - அப்ப வாணிகர்
கூவை நாறு - கூவைக் கிழங்கின் மா
கூழ் - உணவு
கூளி - பேய், பூதம்
கூற்றக்கொண்டிச் சேனை - யமன் போலும் கொள்ளையை உடைய சேனை
கூற்று - கூற்றம், யமன்
கூறை - ஆடை

கெ

கெடுக - அழிக
கெழீஇய - பொருந்தின
கெழுதகைமை - உரிமை
கெழுமல் - பொருந்துதல்

கே

கேட்டி - கேட்பாயாக
கேட்டீமின் - கேண்மின்
கேட்டைக்க - கேட்டை என்னும் வீனை அசைச் சொல்; கேட்க
கேண்மை - சுற்றத்தாரைப் பேணுதல், நட்பு
கேவணம் - கல்லழுத்தும் குழி
கேள்வன் - கணவன்
கேள்வி - கேள்வி அறிவு, நரம்பு

கை

கை - இடம்
கைக்கொள்ளுதல் - பற்றிக்கொள்ளுதல்
கைக்கோல் - கொடியறு, பற்றுக் குறடு
கைத்தாயும் அல்லை - வெறுக்கப்பட்டா யும் அல்லை
கைதை - தாழை
கைம்மிகுதல் - அளவு கடத்தல், மேலோங்குதல்
கைம்மை கூர் மகளிர் - கைம்மை நோன்பு செய்யும் மகளிர்
கையறுதல் - செயலறுதல்
கையறு துன்பம் - செயலறவாகிய துன்பம், மீளாத் துன்பம்
கையறு நெஞ்சம் - செயலற்ற நெஞ்சம், செயலறவினையுடைய நினைவு
கையாறு - கையறவு, செயலறவு
கையுறை - பரிசு, காணிக்கை
கையூழ் - வண்ணத்தில் செய்த பாடல் எல்லாம் இன்பமாகப் பாடுதல்
கைவரை - கையகம், கையிடம்
கை விடலீயான் - கையினின்றும் விட அறியான்
கைவினை - கைத்தொழில்

கொ

கொங்கு - தாது, மகரந்தம்
கொங்கை - முலை
கொட்டம் - ஒரு வகை வாசனைப்பொருள்
கொட்டிச் சேதம் - கொடு கொட்டிக் கூத்து
கொட்டு - அமுக்குதல், கூத்து வகை களுக்கு ஏற்ற வாச்சிய வகைகள்
கொட்பு - சுழற்சி, சூழ்வித்தல்
கொடித் தொடர் - சல்லியும் தூக்கும்
கொடி புணர் நிலை - கொடி மரம் நிற்கும் இடம்
கொடி வில் - ஒழுங்குபட்ட வானவில்
கொடுங் குழை - வளைந்த குண்டலம்
கொடு கொட்டி - திரிபுரம் எரியக்கண்டும் இரங்காது, சிவபெருமான் கைகொட்டி நின்று ஆடுதலால், பெயர் பெற்ற கூத்து
கொடுஞ்சி - தேர் மொட்டு

கொடுத்தலீயாது - கொடுத்துவிடாது
கொடும்பாடு - கொடுமை, தீமை
கொடு மணி - ஓசை கடிதான மணி
கொடுமரம் - வில்
கொடுமை - வறுமை, துன்பம்
கொடுவரி - புலி
கொடுவரி ஒற்றி - புலியைப் பொறித்து
கொடு வாய்க் குயம் - வளைந்த வாயை யுடைய அரிவாள்
கொடுவாள் - மழு
கொடுவேரி - செம்பூவையுடையதும் கார் காலத்துப் பூப்பதுமான மரவகை
கொண்டல் - கீழ் காற்று
கொண்டி - கொள்ளை, மிகுதி
கொண்டு - மேற்கொண்டு, கருதி
கொண்டு நிலை - பொருளைக் கொண்டு நிற்கும் நிலை
கொண்மூ - மேகம்
கொண்மை - கொள்ளும்
கொதி அழல் - வெம்மையான நெருப்பு
கொந்து - கொத்து
கொம்பர் - கொம்பு, பூங் கொம்பு
கொம்மை - திரட்சி
கொல்லாக் கோலம் - கொல்லுதற்குத் தகாத தவ வடிவம்
கொலைக்களப் பட்ட - கொலையிடத்தே பட்ட, கொலையுண்ட
கொழுநர் - கணவர்
கொழு முறி - இளந் தளிர்
கொள்கை - தவம், தியானம், முறைமை
கொள்கையின் இருந்தனள் - சேர இருந்தாள், என்றும் இருக்கும் முறைமையில் இருந்தாள்
கொளுச் சொல் - பாட்டின் கருத்துடைச் சொல்
கொளுத்தும் காலை - ஆட்டுவிக்குமிடத்தும் பாட்டுவிக்குமிடத்தும், இயற்றுமிடத்து
கொளை - இசை, ஒற்றுறுப்பு
கொளை புணர் சீர் வல்ல - பாடவும் புணர்க்கவும் அடைக்கவும் வல்ல, பாட்டுக்களைத் தாளத்துடன் புணர்க்க வல்ல
கொளை வல்லாய் - கொள்ளுதலில் வல்லாய்
கொற்றப் பந்தர் - கொற்றத்தால் வந்த பந்தர், முத்தின் பந்தர்
கொற்றம் - வெற்றி, அரச நீதி
கொற்றவன் - அரசன்
கொன் - மிகுதி
கொன்றை அம் சடை முடி - கொன்றை மாலையணிந்த சடைமுடியையுடைய சிவபெருமான்

கோ

கோ - அரசன்
கோகுலம் - ஆனிரை
கோட்டகம் - கரை, பள்ளம்
கோட்டம் - கோவில், வஞ்சம்
கோட்டி - கூட்டம், கோயில் வாயில்
கோட்டு மா - எருமைக் கடா, பன்றி, யானை
கோடி - புதிய ஆடை
கோடிக் கலிங்கம் - புதுப் புடைவை
கோடு - கொடுமுடி, சிகரம், கவர், தந்தம், கடமாக் கொம்பு, ஊது கொம்பு, யாழின் ஓர் உறுப்பு
கோதல் - வளைதல்
கோடை - மேல் காற்று
கோத்த - தொடுத்த
கோத் தொழில் - அரச வினை
கோத் தொழில் இளையவர் - அரசன் ஏவல் செய்யும் காவலர்
கோத் தொழிலாளர் - அரசியல்தொழிலை யுடைய அமைச்சர்
கோதை - மாலை, சேரர் குடிப் பெயர்
கோதைப் பிணையல் - கோதையாகிய பிணையல், மாலை
கோநகர் - தலைநகர், திருநகர், அமராபதி
கோப்பெருந்தேவி - அரசனுக்குரிய மனைவி, பட்டத்து அரசி
கோமகன் - அரசன்
கோமுறை - இராச நீதி
கோயில் - கடவுளர் இருப்பிடம், அரசனிருக்கும் மாளிகை
கோயில் மாக்கள் - கோயில் பணியாளர், கோயில் பரிவாரத்தார்
கோல் - நரம்பு, விட்டேறு, தாற்றுக் கோல், செங்கோல்
கோலம்கொண்ட - ஒப்பனையைத் திருந்தச் செய்த
கோவியன் வீதி - இராசப் பெருந் தெரு, சென்டு வெளி
கோவேந்தன் - மன்னர் மன்னன், சக்கரவர்த்தி
கோழி - ஒரு வகைப் பறவை இனம், உறையூர்
கோள் - தவறு, கொலை
கோளி - பூவாது காய்க்கும் மரம்

கௌ

கௌரியர் - பாண்டியர்

ச

சகடம் - வண்டி, கொல்லாப் பண்டி
சகடு - உரோகிணி
சங்கம் - சங்கு
சங்கரன் - சுகத்தைப் பண்ணுகின்றவன்
சங்கிலி - வீர சங்கிலி என்னும் அணி வகை
சதுக்கப் பூதர் - நாற்சந்திகளில் நின்று காவல் புரியும் பூதங்கள்
சதுக்கம் - நாற்சந்தி
சதுமுகன் - நான்முகன்
சந்தனம் மறுக - சந்தனக் குறடு சுழல, சந்தனம் அரைக்க

சந்தி ஐந்து-ஐந்து சந்தி; அருகர், சித்தர், ஆசாரியர்கள், உபாத்தியாயர்கள், சாதுக்கள் என்னும் பஞ்ச பரமேட்டிகளின் தெரு
சந்திரகுரு - வெள்ளி, வெண் முத்து
சந்திரபாணி - வயிரம்
சந்து - சந்தனம்
சமம் - போர், போர்க்களம்
சமரி - போரில் வல்லவள்
சமைத்தல் - நன்கு அமைத்தல்
சயம்பு - தானே தோன்றியவன்
சலதி - பொய்த்தி, பொய் சொல்லுபவள்
சலம் - பொய்

சா

சாக்கையன் - கூத்தாடும் தொழிலுடைய ஓர் குலத்தினன்
சாத்து - வணிகர் கூட்டம்
சாதுவன் - அடங்கியோன்
சாந்தம் - சந்தனம்
சாந்தி - விழா, வேள்வி
சாந்து - சந்தனம்
சாமரை - கவரிமானின் மயிரால் ஆகிய வெண் சாமரை
சாயல் - மென்மை, மேனி
சார்த்துவரி - பாட்டுடைத் தலைவன் பதியொடும் பெயரொடும் சார்த்திப் பாடப்படும் வரிப் பாட்டு வகை
சாரணன் - ஆகாசவாசி
சால் - அமைதி, நிறைவு, பொருந்துகை
சாலி - அருந்ததி, நெல்
சாலி அரிசி - செந்நெல் அரிசி
சாலினி - தேவராட்டி
சாலும் - அமையும்
சாவக நோன்பு - துறவாது விரதம் காத்தல்
சாறு - விழவு, திருவிழா

சி

சிங்கல் - குறைதல்
சிங்காமை - சுருங்காமை, அழியாமை
சித்தன் - செய்ய வேண்டுவனவற்றைச் செய்து முடித்தவன், கன்மங்களைக் கழுவினவன், எண்வகைச் சித்திகளை உண்டாக்கியவன்
சித்திரக்கரணம் - கைத்தொழில்
சித்திரப்படம் - சித்திரத்தொழில் அமைந்த ஆடை, உறை
சித்திரப் புணர்ப்பு - இசை கொள்ளும் எழுத்துக்களின் மேலே வல்லொற்று வந்தவழி மெல்லொற்றுப் போலப் பண் நீர்மை நிறுத்தல்
சித்திர வஞ்சனை - சித்திரப் புணர்ப்பு, வஞ்சனைப் புணர்ப்பு
சித்திரை - மாதம், ஒரு நட்சத்திரம்
சிதர் அரி - சிதறிய செவ்வரி
சிந்துரம் - சிவப்பு
சிந்தை விளக்கு - அவதிஞானம், திரிகால ஞானம்
சிமையம் - உச்சி, கொடுமுடி
சில்மலர் - சிலவான பூக்கள், மங்கலமலர், கற்பு முல்லை முதலியவை, அருச்சனை மலர்
சில்லை - இழிவு
சிலதியர் - ஏவல்மகளிர், ஏவல் பெண்டிர், சிறு குறுந் தொழிலியர்
சிவகதி நாயகன் - வீட்டுலகிற்குத் தலைவன்
சிவிகை - பல்லக்கு
சிறங்கனித்தல் - கண்களைச் சுருக்கிப் பார்த்தல்
சிறத்தல் - மிகுதல்
சிறப்பு - வரிசை
சிறப்பூண்-விருந்து உணவு
சிறப்புச் செய்தல் - புகழ்ந்துரைத்தல்
சிரூர் - சிறுவர்
சிறுகால் - மந்த மாருதம்
சிறுகுடி - வேட்டுவர் ஊர்
சிறு குரங்கு - மெலிந்த குரங்கு
சிறு குறுங் கைவினைப் பிறர் வினையாளர் - சிறிய கைத்தொழிலைப் பிறர்க்குச் செய்வார்
சிறுபுறம் - பிடர், முதுகு
சிறு பூளை - ஒரு வகைப் பூடு: இதன் பூவை நெல்லொடு கலந்து தூவி வாழ்த்துதல் மரபு; இவற்றைத் தூவி இறைவனை வணங்குதலும் உண்டு
சிறு மூதுக் குறைவி - சிறிய பிராயத்தே பெரிய அறிவுடையாள்
சிறுமை - இழிவு, துன்பம், வறுமை
சிறை - மதில்
சிறை அகம் - ஸ்ரீ கோயிலின் ஒருபக்கத்தே பள்ளி அகம்; சுற்றும் வேலியிட்ட காவலான இடம்
சினவரன் - சினத்தைக் கீழ்ப்படுத்தியவன்
சினேந்திரன் - எண் வகை வினைகளையும் வென்றவன்
சினை - கொம்பு

சீ

சீமின் - திறந்திடுமின்
சீர் - தாளக் கூறுபாடுகள், தாளவறுதி, அழகு, சிறப்பு, நன்மை, புகழ்
சீர் இயல் - தாள இயல்பு
சீர் இயல் பொலிய - நன்மை உண்டாக
சீர்சால் - புகழ் அமைந்த
சீற்றம் - மிகு சினம்
சீறடி - சிறிய பாதங்கள்

சு

சுட்டு - கருத்து, குறிப்பு
சுடர் - விளக்கு, சூரியன்
சுடுநோக்கு - சுடுவது போலும் நோக்கு, கொள்ளிக் கண்

சுடுமண் - ஓடு
சுடுமண் மண்டை - சுட்ட மண் கலம்
சுண்ணம் - பொடி, வாசனைப்பொடி, பூசு சுண்ணம்
சுணங்கு - பசலை
சுந்தரச் சுண்ணம் - அழகிய வாசனைப் பொடி, அழகிய பொற்சுண்ணம்
சுந்தரம் - நிறம், அழகு
சுரத்தல் - இடைவிடாது சொரிதல், மழை பொழிதல்
சுருங்கை - கரந்து படை, கரந்துறை, சுரங்க வழி
சுரும்பு - வண்டு
சுவல் - தோள்

சூ

சூட்டு ஆணி - சுடுவதாகிய ஆணி, சூட்டுக் கோல்
சூடகம் - கடகம், வளை, கைவளையின் வகை, தோள்வளை
சூதர் - கைவாரிகள், நின்று ஏத்துவார்
சூர் - சூரன், சூர்த் தெய்வம்
சூர்த்து - அச்சமுறுத்து, அச்சத்தைச் செய்து
சூர் மா - சூரனுகிய மாமரம்
சூலி - சூலம் ஏந்தியவள்
சூழ் கழல் - காலில் சூழ்ந்த வீரக் கழல்
சூழ் வினைச் சிலம்பு - சூழ்ந்த சிற்பத் தொழில் அமைந்த சிலம்பு
சூழி - முக படாம்
சூள் - சபதம், சத்தியம்
சூறைச் சின்னம் - சூறை கொள்ளும் போது ஊதும் சின்னம்

செ

செக்கர் - செந் நிறம்
செகில் - சிவப்பு
செங்கண் ஆயிரத்தோன் - ஆயிரம் கண்களை உடைய இந்திரன்
செங்கொடிவல்லி - சிவந்த கொடிப்பவளம்
செங்கோடு - திருச்செங்கோடு
செஞ்சடை வானவன் - சிவபெருமான்
செந்தில் - திருச்செந்தூர்
செந்திறம் - அருள், குறிஞ்சி யாழ்த் திறத்துள் ஒன்று
செந் நா - பொய் கூறு நா
செந்நிலை - சமநிலை
செப்பு - சொல், மெய்ம், மலரும் பருவத்து அரும்புகளை வைக்கும் பூஞ்செப்பு
செப்புவது - சொல்லுவது
செம்பகை - தாழ்ந்த இசை, இன்பம் இன்றி இசைத்தல்
செம்பியன் - சோழன்
செம்பு செய்குநர் - செம்பு கொட்டிகள்
செம்மல் - பழம்பூ, தலைமையில் சிறந்தோன், தலைவன்
செம்மை - நேர்மை
செய்கை - தொழில்
செய்ந - செய்தவை
செய்யவள் - திருமகள்
செய்யாக் கோலம் - பூனையாத அழகு, இயற்கை அழகு
செய்யுள் - பொருள் தொடர்நிலைச் செய்யுள், காவியம்
செய்யோள் - திருமகள்
செய்வினை - கைத்தொழில்
செயலை - அசோகு
செயிர் - செற்றம், கோபம்
செயிர்க்கை - மனக் கோபம், மிக்க கோபம்
செயிர்த் தொழில் முதியோன் - கூற்றுவன்
செயிர்ப்பு - வெகுளி
செரு - போர்
செல்லல் - துன்பம்
செல்லல் காலை - வற்கடம் மிக்க காலம், பஞ்ச காலம்
செல்லும் தேயம் - மறுமை உலகம்
செலவு - ஆளத்தியிலே நிரம்பப் பாடுதல்
செவ்வி - காலம், மனோதம், காண்டற்கு இனிய சமயம், குறிப்பு
செவ்வியள் - மனக்கோட்டம் இல்லாதவள்
செவ்வியன் அல்லன் - நடுவு நிலைமை இல்லாதவன், கோட்டம் உடையவன்
செவ்வேள் - செய்ய நிறத்தையுடைய முருகக் கடவுள்
செவ்வை நன் மொழி - செவ்விய வார்த்தை; நீதி மொழி
செழியன் - பாண்டியன்
செற்றம் - கறுவு
செற்றனள் - மாற்சரியம் உடையாள், கறுவு கொண்டாள்
செறிதல் - ஒடுங்குதல், மறைதல்
செறி நிலம் - அனுச் செறிந்த நிலம்
செறிவன் - இதனுள்ளவன், சலியாதவன்
செறு - வயல்
செறுநை - முகக் கோட்டம்
சென்று - போய், பரந்து
சென்னி - சோழன், தலை, உச்சி

சே

சே - சேவரம், உழிஞ்சில்
சேக்கை - படுக்கை,
சேக்கைப் பள்ளி - சேக்கையிடம், சேரும் சயனம், படுக்கை
சேடம் - தெய்வத்திற்குப் படைத்த உணவு, மலர் முதலியவை; பிரசாதம்
சேடல் - செலுந்தில், உச்சிச் செலுந்தில் என்னும் மரம்
சேடன் - அடியவன், திருவடி பிடிப்பான்

சேடி - தோழி, வித்தியாதரர் நகரம்
சேணோன் - பரணின் மேலோன்
சேந்தன - சிவந்தன
சேரல் - சேரன், செல்லாதிருக்கக்கடவை
சேரி - பல குடிகளும் சேர்ந்திருப்பது, ஊரின் பகுதி
சேவகன் - வீரன்

சொ

சொரி - தினவு

சோ

சோ - சோ என்னும் அரண், வாணுசுரனின் நகர்
சோர - சாய, இறக்க

ஞா

ஞாட்பு - போர்
ஞாண் - சரடு
ஞாயில் - மதில் உறுப்பு, குருவித்தலைகள்
ஞாயிற்றுச் சோழன் - சூரிய வங்கிசத்துச் சோழன்
ஞாயிறு - சூரியன்
ஞாலம் - பூமி
ஞாழல் - புலி நகக் கொன்றை
ஞான்று - பொழுது

ஞி

ஞிமிறு - தேனீ

ஞெ

ஞெகிழ்தல் - நெகிழ்தல்
ஞெகிழம் - சிலம்பு
ஞெமிர்தல் - பரத்தல்

த

தகை - அழகு, கொழுநர், பெருமை, கற்பு
தகைத்தல் - தடுத்தல்
தகைமொழி - தகுதி அமைந்த சொல், மங்கல மொழி
தங்கிய - நிலைபெற்ற
தஞ்சம் - எண்மை, எளிமை, பற்றுக்கோடு, அடைக்கலம்
தடம் - பரப்பு, பொய்கை
தடவு - இந்தளம், தூபமூட்டி, ஓம குண்டம்
தண்கான் - இழிந்த காடு
தண்டலை - சோலை, சோலை
தண்டலைத் தலைவர் - தாசைத் தலைவர்
தண்டா நோய் - காம நோய்
தண்டா வேட்கை - பசி
தண்ணளி - அருள்
தண்ணுமை - மத்தளம், தோலால் செய்யப்பட்ட பேரிகை முதலிய கருவிகள்
தண்பதப் பெருவழி - புனலாட்டுக்குப் போகும் பெருவழி
தண்பதம் கொள்ளுதல்- புதுப் புனல் ஆடுதல்
தண்பதம் கொள் விழவர் - புதுப் புனல் ஆடுவோர்
தண்மை - குளிர்ச்சி, இழிவு, தாழ்வு
தணத்தல் - நீங்குதல்
தணந்த மாக்கள் - பிரிந்து சென்றோர்
தந்திர கரணம் - கரவட நூல், களவைப் பற்றிய நூல், களவு நூலில் சொல்லுகிற கிரியை
தந்திர வீணஞர் - படைத் தலைவர்
தந்திரிகரம் - செங்கோட்டுயாழின் உறுப்பு, நரம்பு துவக்குதற்குத் தகைப்பு ஒழிய இரு சாண் நூல் விரல் நீளமாகக் குறுக்கிடத்துச் சேர்த்தும் ஐம்பத்தோர் உறுப்பு
தப்புதல் - தவறு செய்தல், கொல்லுதல்
தம்மூன் - தமையன், மூத்த சகோதரன்
தமனியம் - பொன்
தமாலம் - பச்சிலை
தயங்குதல் - விளங்குதல், ஒளிவிடுதல்
தருக்குதல் - மிகுதல்
தருக - புகுத விடுக, அழைப்பாயாக, கொண்டு வருக
தருதல் - கொடுத்தல், கொடை
தரு நிலைக் கோட்டம் - கற்பகத் தரு நிற்கும் கோயில்
தரும வீணஞர் - அறம் கூறும் தொழிலோர்
தலை - இடம், உச்சி, ஏழாம் வேற்றுமை உருபு
தலைக்கண் விருத்தி - பதுமாசனம்
தலைக்கீடு - வியாஜம், போலிக் காரணம், மயிர்க்கட்டு, அரசர் அளிக்கும் தலைப்பாகை
தலைக்கோல் - ஆடல் கணிகையர் பெறும் பட்டம்
தலைக்கோல் அரிவை - கூத்தாடுமவள்
தலைக்கோல் ஆசான் - நட்டுவன்
தலைக்கோல் எய்துதல் - வரிசைக்குத் தக்கபடி தலைக்கோல் பெயர் பெறுதல்
தலைக்கோல் தானம் - நாடக அரங்கு
தலைத்தாள் - தலைமை உடைய முயற்சி, தலையான உற்சாகம்
தலைநாள் - முன்நாள்
தலைப்படுதல் - கூட்டுதல்
தலைமயங்குதல் - விரவிக்கிடத்தல், கலந்திருத்தல், கைகலத்தல்
தவ்வை - தாய்
தவளம் - வெண்மை
தவறு - கொலை
தவா - கெடாத
தவிசு - தடுக்கு
தளவம் - செம்முல்லை

தா

தாங்கா வினையுள் - நிலம்பொருத வினைச் சல்
தாங்கும் - தடுக்கும்
தாசியர் - சிலதியர், ஏவல் மகளிர்
தாடி - மோவாய்
தாது - பூந்தாது, மகரந்தம், தேன்
தாது எரு மன்றம் - பொடியாகிக் கிடக்கும் எருக்கள் சூழ்ந்ததும், இடையர் குரவை ஆடுதற்கு இடமாக அமைந்த துமான மரத்தினடியிலுள்ள பொது இடம்
தாதை - தந்தை
தாபதர் - முனிவர்
தாயத்தார் - ஞாதிகள், பங்காளிகள்
தாயம் - உரிமை
தார் - மார்பில் அணியும் மாலை, மாலை, பூ மாலை
தார்ச் சேனை - தூசிப் படை, முன்னணிப் படை
தாரகை - விண் மீன், நட்சத்திரம்
தாரகைக் கோவை - வான் மீன் ஒழுங்கு போன்ற முத்து வடம், ஏகாவலி வடம்
தாரம் - பல பண்டம்
தாலம் - பனை
தாழ்தருதல் - தாழ்தல், தங்குதல்
தாழ்தரு துன்பம் - வரும் துன்பம், வரும் கொலைப் பாவம்
தாழ்தல் - தங்குதல், தாங்குதல், தொங்குதல், ஆழ்தல், பொருந்துதல்
தாழ்நீர் - தாழ்ந்த நீர், கிடங்கு, கடல்
தாழ்வரை - மலை அடிவாரம்
தாழி - பெரிய மட் பாண்டம், பானை
தாழிக் குவளை - தாழியில் மலர்ந்த குவளை மலர்
தாள் - கதவின் ஓர் உறுப்பு, மூட்டு வாயின் ஊடுருவச் செறிக்கும் கடை ஆணி, முயற்சி
தாள் வரை - அடிவாரம், பாத சைலம்
தாளொடு குயிற்றுதல் - போர்க் கதவு பண்ணும்போதே தாளோடே பண்ணுதல்
தாறு - குலை
தானை - சேனை, ஆடை

தி

திகழ்தல் - விளங்குதல்
திகிரி - ஆக்கினைசக்கரம், தேர்ச் சக்கரம், சக்கிராயுதம்
திசை - திசை
திங்கள் - சந்திரன், மாதம்
திதலை - தேமல், சுன்ற பெண்களுக்குள்ள வெளுப்பு நிறம்
திமில் - பரதவர் மீன் பிடிக்கச் செல்லும் கலம், மீன் படகு
திரங்கிய - வற்றிச் சுருங்கிய
திரணை - சுருள், மாலைவகை
திரித்தல் - முறுக்கல்
திரிதரு கோடு - முறுக்குண்ட கொம்பு
திரிதல் - திருகுதல், முறுக்குண்ணுதல்
திரு - செல்வம், அழகு, முலைமேல் தோன்றும் வீற்றுத் தெய்வம்
திருகல் - முறுகுதல், வேறுபடல்
திருகுதல் - முறுக்குதல், முறுக்கிப் பறித்தல், கையால் அறுத்தல்
திருந்து துயில் - கணவர் மார்பிலே கொள்ளும் களித் துயில்
திருமகள் இருக்கை - சீதேவி குடியிருப்பான பீடிகைத் தெரு, பட்டினப் பாக்கம்
திருமணி - நீலமணி
திருமணி குயிற்றுநர் - முத்துக்கோப்பார், வேகடிகள்
திருமா பத்தினி - அழகிய வீர பத்தினி
திருமால் குன்றம் - திருமாலிருஞ் சோலைமலை, அழகர் திருமலை
திருமுகம் - கடிதம், அரசர்கள் விடுக்கும் செய்தி வரைந்த ஏடு
திருமுனி - அகத்தியன்
திருமொழி - தருமம், ஆகமம்
திருவில் - இந்திர வில்
திருவின் செய்யோள் - திருமகள்
திருவினுள் - திருமகள்
திரை - அலை, கடல்
திரையல் - வெற்றிலை, வெற்றிலைச் சுருள்
திலகம் - நெற்றிப்பொட்டு, மஞ்சாடி மரம்
திவவு - யாழ் உறுப்பு, நரம்புகளை வலி பெறக் கட்டும் வார்க்கட்டு
திளைத்தல் - ஒரு தொழிலை இடைவிடாது பயிறல்
திறத் திறம் - வெற்றித் திறம், ஒரு வகைப் பண்
திறம் - கற்பு, தன்மை, ஒக்கும் திறம், ஏற்ற வகை, பக்கம்
திறவோர் உரைக்கும் செயல் - புராணம்
திறன் - பக்கம்

தீ

தீ - நெருப்பு, தீமை, கொடுமை
தீக் குற்றம் - கொடிய குற்றம், கடிதான குற்றம்
தீத் திறம் - அக்கினி காரியம், கொலைத் திறம்
தீது - பழுது, குற்றம், பிறர் நெஞ்சு புகுதல், தீங்கு, தீவினை, வீறின்மை
தீது இயல் கானம் - தீமை நிகழ்கின்ற காடு, பாலைத்தன்மை நிகழ்கின்ற காடு
தீ நட்பு - தீயோர் நட்பு
தீம் - இனிமை, இனிய
தீம் கதிர் - இனிய கதிர்களை உடைய சந்திரன்
தீம் தொடை - இன் இசை
தீ முறை - ஓமம்
தீர்தல் - விடுதல், ஒழிதல், நீங்குதல்

தீர்ந்த முகம் - பணிக்குறை அற்றுக் கை விட்ட முகம், குறை எதுவும் இன்றிப் பூனவினை முற்றுப் பெற்ற முகம்
தீர்ந்தாய்போல் தீர்ந்திலை - உறவு போல் இருந்து உறவாயிற்றில்லை
தீர்ம் - தீர்ப்பீராக
தீவேந்தன் - கொடிய அரசன்

து

துகிர் - பவளம்
துகிர்க்கோவை - பவளக்கோவை, பவள வடம்
துகில் - புடைவை, ஆடை, பட்டு
துஞ்சுதல் - தங்குதல், தூங்குதல், இறத்தல்
துடி-உடுக்கை என்னும் ஒருவகைப் பறை, துடிக் கூத்து
துணங்கை - சிங்கிக் கூத்து
துணி - துண்டம், ஒரு பொருளிலிருந்து துண்டிக்கப்பட்ட பொருள்
துணி பொருள் - தீர்ந்த பொருள், எழுதிய பொருள்
துணை - சேவல், கணவன்
துப்பு - கருவி
தும்பி - வண்டில் உயர்ந்த ஒரு சாதி
துயர் எஞ்சு கிளவி - துயர் இல்லாத மொழி, நன்மொழி
துரப்ப - செலுத்த
துருத்தி - ஆற்றிடைக் குறை, அரங்கம்
துலாம் - துலாக்கோல்
துவர்-செம்மை நிறம், பவளம்; துவர்ப்பு, துவர்ப்பை உடைய பொருள், பத்து வகை மருந்துப் பொருள்,
துவரை - துவாரகை
துவைசெய - முழங்க
துவைத்தல் - சப்தித்தல்
துளங்குதல் - நடுங்குதல், அசைதல்
துளங்கு கல இருக்கை - மரக்கலங்கள் அசைகின்ற கடல் துறைமுகம்
துளவம் - துளசி
துறவி - துறவு
துறவு - தவம்
துறு மலர் - நெருங்கிய மலர்
துறைப் பாட்டு மடை - துறைப் பாட்டுக் கூன நடுவிலே மடுத்தல்
துறைபடிதல் - நீராடுதல்
துறைபோகல் - முடிய அறிதல்
துன்பம் - மனத் தளர்ச்சி
துன்ப மாலை - துன்புற்ற இயல்பு
துன்னகாரர் - சிப்பியர், பாணர், தையல் காரர்
துனி - வெறுப்பு, கோபம்
துனிப்பதம் பாராமை - புலவி நீட்டிக்க விட்டிராமை
துனைந்து - விரைந்து

தூ

தூ - தூய்மை, வெண்மை
தூக்காது - கருதாது, ஆராயாது
தூக்கு - தாளங்கள் வழிவரும் செந்தூக்கு முதலிய எழுவகைத் தூக்குக்கள், வாச்சியம்
தூங்கு இருள் - செறிந்த இருள், யாவரும் துயிலும் இருள்
தூங்குதல்- தொங்குதல்
தூசு - பட்டு
தூண் அகம் - தூண்கள் வரிசையாக உள்ள மண்டபம்
தூது - தூதன்
தூமணி - முத்து
தூமம் - சினம்
தூவி - பறவையின் இறகு, அடிவயிற்றின் மயிர், சிறகின் மயிர், சூட்டு மயிர்
தூவுதல் - சொரிதல், வழங்குதல்
தூற்றுதல் - பலரும் அறியப் பரப்புதல்

தெ

தெண் மட்டு - தெளிந்த தேன்
தெண் மட்டு உருவ - வயிடூரியம்
தெய்வ உத்தி - சீதேவி என்னும் அணி
தெய்வக் காவல் படை - தேவரைக் காத்தற்குரிய வச்சிராயுதம், இது இரு தலைச் சூலமாய் நடுவு பிடியாய் இருப்பது
தெய்வம் உற்றாள் - தெய்வம் ஏறினாள், தெய்வ ஆவேசங் கொண்டாள்
தெய்வம் பரவல் -தெய்வ பூசனை
தெய்வ மால் வரை - தெய்வத்தன்மையையுடைய மலை, பொதியில் மலை
தெருட்சி - தெளிவு
தெவ்வர் - பகைவர்
தெழித்து - உரப்பி
தெள்- தெண்மை, தெளிவு
தெள்ளு நீர் - தெளிந்த நீர்
தெறல் - வருத்துதல்
தென்மலை - பொதியில் மலை
தென்னர் - பாண்டியர்
தென்னவன் - பாண்டியன்

தே

தே - தெய்வம், தேன், நறுமை
தேஎம் - தேயம்
தேசிக் கூத்து - ஒரு வகைக் கூத்து
தேசிகத் திருவின் ஓசை - இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வடசொல் என்பன, தேசாந்தரங்களின் பாஷைகள்
தேசிகம் - இயற்சொல், திரிசொல், திசைச் சொல், வட சொல் என்னும் நால்வகைச் சொல்வழக்கு
தேம் - இனிமை, தேன்
தேம் பழம் -இனிய பழம், பலாப் பழம், தெங்கம் பழம்
தேய்வை - சந்தனக் குழம்பு
தேயம் - தேசம், நாடு
தேர் ஊருநர் - தேர்ப் பாகர்
தேர்தல்- ஆராய்தல்

தேவ பாணி - தெய்வத்தைப் பரவும் பாட்டு
தேவர் கோமான் - தேவர்க்கு அரசனுகிய இந்திரன்
தேவன் - இந்திரன்
தேவு - தெய்வம்
தேறல் - கள்ளின் தெளிவு, கள், தேன்

தை

தைவரல் - அநு சுருதி ஏற்றுதல்

தொ

தொடக்கு - சங்கிலி, கழுக்கோல் போலக் கழுத்தில் பூட்டி முறுக்கும் சங்கிலி
தொடி - வளவு, கைவளை, தோள்வளை
தொடியோள் பௌவம் - குமரிக் கடல்
தொடுதல் - வாசித்தல், கொட்டுதல்
தொடுப்பு - விளாக் கொண்டு உழுதல், விதைப்பு
தொடை - இசை
தொண்டகம் -ஒரு வகைப் பறை
தொய்யகம் - தலைக்கோலத்தின் ஓர் உறுப்பு, தலைப்பாளை, பூரப்பாளை
தொய்யில் - பத்திக் கீற்று
தொல்லோர் - மேலையோர், முன்னையோர்
தொலைச்சல் - உண்டு தொலைத்தல்
தொழில் கை - தொழில் பெறக் காட்டும் கை
தொழுனையாறு - யமுனை நதி
தொளி - சேறு
தொன்று - பழமை

தோ

தோட்டு அலர் - இதழ் விரிந்த
தோட்டி - அங்குசம்
தோடு - இதழ், பனை ஓலை, தொகுதி, காதணி
தோம் - குற்றம்
தோரண வாயில் - வாயில் தோரணம்
தோரிய மடந்தை - பற்றுப் பாடுவாள்; ஆடி முதிர்ந்த பின்பு பாடல் மகளாய் ஆடல் மகளிர் காலுக்கு ஒற்றறுத்துப் பாடுங்கால், இடத் தூண் சேர்ந்தியலு மவள்
தோல் - கருங்கடகு, பரிசை
தோலின் துன்னர் - செம்மார், உறைகாரர், பறம்பர் முதலாயினோர்
தோற்றம் - வடிவு
தோற்றிய அரங்கு - நூல் முறைப்படி சமைக்கப்பட்ட அரங்கம்
தோன்றல் - தலைவன், அரசன்

ந

நகர் - நகரம், மனை, கோயில்
நகர நம்பியர் - நகரத்துப் பெருஞ் செல்வர், நகரத்து ஆண் இளங் குமரர்கள்
நகரம் - கோயில்
நகை - ஒளி, பல்
நகை ஆடு ஆயம் - நகைத்து விளையாடும் கூட்டம்
நகைப் பதம் - நகைக்கும் நகையின் செவ்வி
நகை வேழம்பர் - சாரமாணிகள், சிரிக்கும் பரியாசகர், விதூடகர்
நச்சு - நச்சப்படும் பொருள்
நசைஇ - விரும்பி
நசை வேட்கை - மிக்க விருப்பம்
நஞ்சம் - நஞ்சு, விஷம்
நட்பு நரம்பு - நாலாம் நரம்பு
நடம் நவில் - நடம் பயின்ற
நடு ஊர் மன்றம் - ஊர் நடுவிலுள்ள பொது இடம்
நடுக்கு - நடுக்கம்
நடுங்கல் - அசைதல், ஒலித்தல்
நடுங்குபு - நடுங்கி
நண்ணுர் - பகைவர்
நண்பகல் - நடுப்பகல்
நண்பன் - காதலன், கணவன்
நணித்து - அண்ணித்து
நந்தி - நந்தியாவர்த்தம்
நந்து - நத்தை, சங்கு
நயப்போர் - விரும்புவோர்
நரகன் - நரகிற்கு ஏதுவான வினையை உடையவன்
நரந்தை - நாரத்து
நல் திறம் - நீதி நெறி, அறத்தின் கூறுபாடு, சுவர்க்கம் புகுதல்
நல்நாள் - பிறந்த நாள்
நல் பகல் - விளக்கம் அமைந்த பகல்
நல்லோர் ஏத்து - மகளிரால் ஏத்தப்படும் அழகு
நல் வினை - விழா
நலம் - குளிர்ச்சி, நன்மை
நலம் கேழ் ஒளிய - நன்மை பொருந்திய ஒளியுடைய வயிரச் சாதி
நலம் பாராட்டுநர் - ஒப்பிப்பார், புனைந்து அழகு செய்யும் மகளிர்
நவமணி - வயிரம், மரகதம், மாணிக்கம், புருடராகம், வயிடூரியம், நீலம், கோமேதகம், முத்து, பவளம் (ஊர் காண் காதை, வரி 180-198 பார்க்க)
நவியம் - கோடரி
நவை - குற்றம், துன்பம், தண்டனை
நள் இருள் - செறிந்த இருள், செறிந்த இருளையுடைய இரவு
நள்ளியம் - பல சரக்குப் பொருள்கள்
நற்ருய் - ஈன்ற தாய்
நறவு - தேன் கூடு
நரு ஊண் - கள்ளாகிய உணவு
நறு விரை - நறு மணம், நல்ல மணம்

நறை - மணம், தேன்
நன்கலம் - புதுக் கலம்
நன் கலம் தருநர் - இரத்தினப் பணித் தட்டார்
நன் பகல் - உச்சிக் காலம்
நனந்தலை - அகன்ற இடம்
நனவு - விழிப்பு
நனை - அரும்பு

நா

நா - நாக்கு
நாக நாடு - பவணம், நாகலோகம்: இது சுவர்க்கத்தினும் போகத்தில் சிறந்தது
நாக நீள் நகர் - சுவர்க்கம்
நாகம் - சுரபுன்னை, பாம்பு
நாகு இள முத்து - மிக்க இளமையை உடைய முத்து
நாஞ்சில் - கலப்பை
நாட்டுதல் - நிறுத்துதல்
நாடகம் ஏத்தும் நாடகக் கணிகை - நாடகம் இவளால் சிறப்புப் பெறுதலால், அந்நாடகமே ஏத்தும்படியான நாடகப் பொதுமகள்; நாடகத்தின் பொருட்டாக எல்லோரும் புகழும் நாடக மகள்; உருப்பசி முதலிய யாவரும் ஏத்தும் நாடகத்தை ஆடிச் சிறப்பிக்கின்ற கணிகை
நாடக மடந்தையர் - தளியிலார், கோயில் பெண்டிர்
நாடு - சோழ நாடு, மருத நிலவளம் மிக்க நாடு
நாடுகேன் - தேடுவேன்
நாண் - கயிறு, கடை கயிறு, வில்லில் பூட்டும் கயிறு
நாத்தூண் - கணவனது உடன் பிறந்தாள்
நாமகள் - கலைமகள்
நாம நீர் - அச்சத்தைத் தருகின்ற கடல், புகழ் அமைந்த கடல்
நாமம் - அச்சம், பெயர், புகழ்
நாமம் தொலையாத - பெயர் சொல்லி முடியாத
நால் முலை ஆயம் - நான்கு முலைகளை உடைய பசு நிரை, தொங்குகின்ற முலையை உடைய பசு நிரை
நால்வகைத் தேவர் - நால்வகைப்பட்ட தேவர்: வசுக்கள் எண்மர், திவாகரர் பன்னிருவர், உருத்திரர் பதினொருவர், மருத்துவர் இருவர்
நா வலம் - நா வெற்றி
நாவல் அம் பொலம் தகடு - சாம்பூநதம் என்னும் பொன்னுல் ஆன தகடு
நாவல் அம் பொன் - சாம்பூநதம் என்னும் பொன்
நாவாய் - தோணி
நாவி - புழுகு பூனை
நாவிக் குழம்பு - புழுகு
நாவொடு - நாவால்
நாழிகைக் கணக்கர் - கடிகையார், நாழிகை வட்டில் இடுவார்
நாள் - வாழ்நாள், பகல்
நாள் அங்காடி - காலைக் கடைத் தெரு
நாள் நீர் - புதிய நீர்
நாள் பலி பீடிகை - நாள் தோறும் பலி இடும் பீடம்
நாள் வினைக் கிளை - அரசன் அளித்த செஞ் சோற்றுக்கும் சிறப்புக்கும் விலையாகத் தம் வாழ்நாளைத் தரும் மறவர்
நாள் வேள்வி - ஒரு நாளில் செய்யப்படும் யாகம்
நாறு - நாற்று
நான்மாடக் கூடல் - நான்கு மாடங்களை உடைய மதுரை
நானம் - நாற்றம், நெய்
நானிலம் - உலகம்

நி

நிக்கந்தக் கோட்டம் - நிக்கந்தத் தேவரான அருகர் கோயில்
நிகர்த்து - நேர் ஒத்து
நிகர் மலர் - ஒளி மலர்
நித்தல் விழா - நாள்தொறும் நிகழும் சிறப்பு, நித்திய பூசை
நித்திலத்து மாலைத் தாமம் வளையுடன் நாற்றி - முத்து மாலைகளால் சல்லியும் தூக்குமாக நாற்றி, முத்து மாலைகளால் சரியும் தூக்குமாகத் தொங்கவிட்டு
நித்திலம் - முத்து
நிமித்தம் - சகுனம்
நியமம் - கோயில்
நிரந்தன - நிரல்பட உள்ளன, ஒழுங்காக உள்ளன
நிரயத் தானை - மாற்றூர்க்கு நரக வேதனையைச் செய்யும் சேனை
நிரயம் - நரகம்
நிரையினர் - வரிசையாகத் திரண்டனர்
நில - நிலவு
நிலம் - இடம்
நிலவுக் கதிர் - திங்கள்
நிலா - ஒளி, நில்லா
நிலாக் கோட்டம் - சந்திரன் கோயில்
நிலைக்களம் - நிலையிடம்
நிலை கெழு கூடல் - நிலைபெற்ற மதுரை
நிலைச் செரு - நாள்தோறும் தொடர்ந்து நிகழும் போர்
நிலையும் படிதமும் - நின்றுடலும் வீழ்ந்தாடலும்
நிலை வரி - முகமும் முரியும் தன்னெடு முடியும் நிலைமையை உடையது
நிவந்து ஓங்கு - மிக உயர்ந்த
நிவப்பு - உயர்வு, சிறப்பு
நிழல் - ஒளி, அருள்
நிழல்கால் மண்டிலம் - உருவினை வெளிப்படுத்தும் கண்ணாடி
நிறம் - வர்ணம், தன்மை, வடிவு, மார்பு

நிறை - நிறுத்துதல், கற்பு, அழகு, நிறுக்கும் துலாக்கோல்
நிறைநீர்வேலி - பேய்த்தேர்
நின்ற சிலம்பு - மற்றைச் சிலம்பு, எஞ்சிய சிலம்பு
நின்றிலள் - போனாள்

நீ

நீர் - நீர்மை, முறை
நீர் அணி விழவு - திரு அபிடேக விழா
நீர் அல - நீர்மை அல்லாதன
நீர் அல நீங்க - திமை நீங்க
நீர்த்து - நீர்மையை உடையது, செவ்விது
நீர் தலைப்படுதல் - நீர் நிலையைச் சார்தல்
நீர்நிறக் காக்கை - நீர்க் காக்கை
நீர்ப்படை செய்தல் - நீராட்டுதல்
நீர்மாடம் - பள்ளியோடம்
நீர்மையேன் - தன்மையை உடையேன்
நீரணிமாடம் - பள்ளி ஓடம்
நீலப்பறவை - மயில்
நீலி - நீல நிறமுடையோள்
நீள் நோக்கம் - விடாமல் பார்த்தல், தொடர்ந்து பார்க்கும் பார்வை
நீள்மொழி - அறிவுரை, பெருமிதமொழி
நீளிடை - காடு

நு

நுகம் - எருதின் கழுத்தில் பூட்டப்படும் மரம்
நுசுப்பு - இடை
நுடங்குதல் - அசைதல்
நுண்தொடர் - நேர்ஞ் சங்கிலி என்னும் அணி வகை
நுண்வினைக் கம்மியர் - சிற்பத் தொழில் வல்ல கம்மாளர்
நுண்வினைக் கொல்லர் - பணித்தட்டார்
நுந்தை - உன் தந்தை

நூ

நூபுரம் - சிலம்பு
நூல் - நேர்மை, ஒழுங்கு, நடுவு நிலைமை, சாஸ்திரம்
நூல் அறி புலவர் - அமைச்சர்
நூல் நெறி மாக்கள் - தபதிகள், சிற்ப நூல் உணர்ந்த கம்மியர்
நூலோர் - கற்றோர்
நூழிலாட்டு - கொன்று குவித்தல்
நூற்றுவர் - துரியோதனுதியர்
நூறு - மா, நூறு என்னும் எண்

நெ

நெடித்தல் - நீட்டித்தல்
நெடியோன் - நெடிய திருமால்
நெடியோன் குன்றம் - வேங்கடமலை
நெடுங் கடை - நெடிய இடைகழி
நெடு நகை - மிக்க நகை, வெடி சிரிப்பு
நெடுநிலை மாடம் - எழு நிலைகள் அமைந்த மாளிகை
நெடு நெறி - பெருவழி, பெரும்பாதை
நெடுமொழி - புராணக் கதை, பரந்து பட்ட சொல், யாவரும் அறிந்த செய்தி, புகழ், வஞ்சினை மொழி, வீரமொழி
நெய் வாசம் - புழுகு நெய், கூந்தலுக்கு அணியப்படுவது, வாசனை பொருந்திய நெய்
நெற்றிச் செகில் - நெற்றி ஒழிந்த செகில், சிவந்த சுட்டி
நென்னல் - நெருநல், நேற்று

நே

நேமி - ஆணைச் சக்கரம், தேர்ச் சக்கரம்
நேர்ந்த - பொருந்திய
நேரிவாயில் - உறையூர்த் தெற்கு வாயிலின் அருகிலுள்ள ஓர் ஊர்

நொ

நொச்சி - மதில் புறம்
நொசி தவம் - நுண்ணிய தவம்
நொடித்தல் - சொல்லுதல்
நொடிதரும் - பாடும்
நொடிவது - சொல்லுவது, வெளியிடுவது
நொடை - விலை
நொடை நவில் மகடூஉ - பல பண்டங்களும் விற்கும் மிலேச்ச மகளிர்
நொண்டு - முகந்து

நோ

நோ தக்க - வருந்தத் தக்கன
நோதக - துன்பமுற
நோதகவு - மனக் கவலை
நோதிறம்-புறநீர்மை, பாலைப் பண்ணின் திறம் ஐந்தனுள் ஒன்று
நோம் - நோவும், வருந்தும்
நோய் - உடம்பின் மெலிவு
நோலை - எட்கசிவு, எள்ளுருண்டை
நோன்பு - தவம், நல்வினை

ப

பக - பிளக்க
பகடு - எருமைக் கடா
பகர்தல் - விலை கூறுதல், விற்றல்
பகல் - பாதி, அரை யாமம், நாள், பொழுது, சூரியன், நடுவுநிலைமை
பகல் செல் வாயில் - குணவாயில், பகல் தோற்றுகிற வாயில், கீழ்த் திசை
பகல் வெய்யோன் - நடுவு நிலைமையை விரும்புபவன்

பகவன் - கேவல ஞானி, முக்கால உணர்ச்சி உடையோன்
பகுதிப் பண்டம் - பல பண்டம்
பகுவாய் - அங்காந்த வாய்
பகை - உட் பகை, பகைவர்
பகை நரம்பு - ஆறும் மூன்றும் ஆகிய நரம்புகள்
பகைப் புலம் - பகைவர் நாடு
பகை விலக்கியது - பகையாய்த் தடுத்தது
பசத்தல் - பசலை பூத்தல், பொன் நிறம் கொள்ளுதல்
பசுங் கதிர் ஒளிய - மரகதச் சாதி
பசுங் கொடி - புதிய கொடி
பசுமை - பச்சை நிறம், கரு நிறம்
பஞ்சவர் - பஞ்ச பாண்டவர்
பஞ்சவன் - பாண்டியன்
பட்டடை - இளி நரம்பு, எல்லாப் பண்ணிற்கும் அடிமணையாய் அமைந் திருப்பது
பட்டது - விளைந்தது, நிகழ்ந்தது
பட்டாங்கு - உண்மை
பட்டி மண்டபம் - ஓலக்க மண்டபம், வித்தியா மண்டபம்
பட்டிமை - படிறு, வஞ்சத் தன்மை
பட்டேன் - அடைந்தேன், புகுந்தேன்
படப்பை - கொல்லைத் தோட்டம், தோட்டக்கூறு, பக்கம்
படம் - ஆடை, படங்கு, கூடகாரம்
படர் - நினைவு, துன்பம், வருத்தம்
படர்தல் - செல்லுதல், தொடர்தல்
படரா - செல்லாத
படரீர்ஆயின் - செல்லா விட்டால்
படலை - இலைத் தொடை, மலர்களும் இலை யும் விரவத் தொடுத்த மாலை, இலை மாலை
படாகை - கொடி, பெருங் கொடி
படாதன - அடாதன, இல்லாதன
படி - வடிவு, வேடம், உலகம், ஒப்பு
படிதம் - வீழ்ந்தாடல்
படிந்து - நீராடி
படிப்புறம் - அர்ச்சனை போகம், அர்ச்சனை முதலியவற்றிற்கு இறையிலியாக விடப்படும் நிலம்
படிமம் - வடிவம்
படிமை - தெய்வ வடிவு, தவ வேடம்
படியோர் - படிமையோர், தவவொழுக்க முடைய முனிவர்
படிவம் - வடிவம்
படிற்றுரை - பொய்ப் பழி
படிறு - பொய்
படுகாலை - அந்திப்பொழுது
படுதல் - தோன்றுதல், உண்டாகுதல்
படுபொருள் - புதையல், களவுப்பொருள்
படை - ஆயுதம், படுத்தல், உறக்கம்
படைத்துக்கோள் பெயர் - ஒரு பொரு ளுக்கு ஒரு பெயர் இருப்பவும், ஒரு காரணத்தால் வேறு பெயரிட்டு வழங்குதல்
படையுள்படுவோன் - படைச் சிறுக்கன், காளம் ஊதி
பண் - ஓசை, அலங்காரம்
பண் அமை முழவு - பண்ணுதல் அமைந்த முழவு, வாசிக்க ஆயத்தம் செய்த முழவு
பண்டு - முன்பு
பண்ணல் - பாட நினைத்த பண்ணுக்கு இணை, கிளை, பகை நட்பான நரம்புகள் பெயரும் தன்மை, மாத்திரை அறிந்து வீக்குதல்
பண்ணவன் - கடவுள்
பண்ணியப் பகுதி - பண்ணிகார வகைகள்
பண்ணுப் பெயர்த்தாள் - பண்ணைப் பாடத் தொடங்கினள்
பண்ணை - வயல், நீர் நிலை, ஓடை, மருத நிலம், தோட்டம்
பண் தேய்த்த - இசையைக் கெடுத்த
பண் நான்கு - இசைத் தமிழின் நால் வகைப் பண், நான்கு பெரும் பண்
பணி - பணி விடை, ஏவல், பாம்பு
பணிமொழி - பணித்த மொழி, பணித்தி டும் மறுமொழி, பணிக்கும் மாற்றம்
பணிலம் - சங்கு
பணை - மூங்கில், கிளை, குதிரைப் பந்தி
பணைத்தல் - பருத்தல்
பணைத் தோள் - பருத்த தோள், பூரித்த தோள்
பத்தர் - யாழின் ஓர் உறுப்பு
பத்தி - வரிசை
பத்தினி - கற்புடை ஆட்டி, ஆக்கலும் அழித்தலும் வல்லவள்
பத்தினிக் கடவுள் - கண்ணகி
பத்தினிக் கல் - சிறந்த கற்புடை ஆட்டி யின் பொருட்டு நாட்டப்படும் கல்
பதம் - செவ்வி, உணவு
பதாகை - பெருங்கொடி, நாட்டியத்துள் பதாகைக் கை, அபிநயக் கைவகை
பதி - ஊர், உடம்பு
பதி எழு அறியா - பதியிலிருந்து பெயர் தலை அறியாத
பதிகம் - பாயிரம், பல்வகைப் பொருளை யும் தொகுத்துச் சொல்வது
பதினோர் ஆடல் - அசுரரைக் கொல்ல அமரர் ஆடிய பதினோர் ஆடல், அல்லியம் முதலாகக் கொடுகொட்டி ஈறுகிய பதினொரு வகைக் கூத்து (கடல் ஆடு காதை, வரி 39-63 பார்க்க)
பந்தர் - பந்தல், நிழல்
பயந்தோன் - தந்தை
பயம் - பயன்
பயம்பு - யானையைப் படுக்குங் குழி
பயிர்தல் - இசைத்தல், பாடுதல்
பரகதி - மேலான கதி, வீட்டுலகம்
பரசல் - போற்றுதல்
பரசினர் கொண்டு - வாழ்த்துடன் கொடுத்து
பரத்தர் - தூர்த்தர், கழிகாமுகர், பரத் தையை விரும்புவோர்
பரதர் - கடலோடிகள், வணிகர்
பரதவர் - நெய்தல் நில மக்கள், பட்டின வர், வணிகர்

பரந்து - பரக்க, அறிய
பரப்பு - கடல்
பரமன் - மேலானவன்
பரல் - பருக்கை, பருக்கைக் கல்
பரவல் - பராவுதல், துதித்தல், போற்றுதல்
பரி - செலவு, மிகுதி, குதிரை
பரிதல் - வருந்துதல், அன்புறுதல், அறுத்தல்
பரி புலம்பினர் - மிகவும் வருந்தினர்
பரியகம் - கால் சவடி, கைச்சரி
பரிவட்டணை - வீக்கின நரம்பை அக விரலாலும் புற விரலாலும் கரணம் செய்து, தடவிப் பார்த்தல்
பரிவு - குற்றம், வருத்தம், அன்பு, கவலை
பரூஉக் காழ் ஆரம் - பருத்த முத்து வடம்
பல் இயம் - பல வாச்சியங்கள்
பல்கி - பெருகி, மிக்கு
பல் நிண வினைஞர் - ஆட்டின் தசை முதலிய பலவகையான மாமிசம் விற்போர், ஆட்டு வாணிகர்
பல்முறைக் கருவியர் - படைக்கும் விழுவுக்கும் கொட்டுவார்
பல்வகைக் கூத்து - பலவகைப்பட்ட புறநடனங்கள்; வென்றிக் கூத்து, வசைக் கூத்து; விநோதக் கூத்து, சாந்திக் கூத்து
பல்வேறு ஆயம் - பரிசன மகளிரும் சிலதியர் முதலாயினோரும்
பலம் - பலன்
பலி பீடிகை - பலி பீடம்
பலி முன்றில் - பலி கொள்ளும் முற்றம்
பவம் - பிறப்பு
பழங்கடன் - முன்பு நேர்ந்த கடன்
பழங்குடி - தொல்மரபு, ஆதிகாலத்தேயிருக்கிற குடி
பழிச்சினர் - போற்றுவார்
பழுது - குற்றம், உடல்
பழு மணி - பழுத்த மணி, சிவந்த மணி
பள்ளி - இடம், இருப்பிடம், ஆச்சிரமம், கோயில், படுக்கை
பற்றுவழிச் சேறல் - பூமியில் பற்றுள்ள இடத்தே பிறத்தல்
பறம்பு - மலை
பறழ் - குட்டி
பறை - தலைமட்டமாக அளக்கும் ஓர் முகத்தலளவைக் கருவி, ஒரு வகை வாத்தியம்
பனி - நீர், கண்ணீர்
பனிக்கும் - நடுங்குவிக்கும்
பனித்து - நடுங்கி, பனிகொண்டு, பனி என்ற நோயைக் கொண்டு

பா

பாகல் - பலா
பாகு - வெல்லப் பாகு, யானைப் பாகர்
பாகு அடு குழிசி - செப்பு உருக்கும் பாத்திரம், சாணம் கரைத்துக் காய்கிற மிடா
பாங்கு - முறைமை, பகுதித் திரள்
பாசடை - பசிய இலை
பாசண்டச் சாத்தன் - சாத்தன் என்கிற ஐயன்
பாசண்டம் - தொண்ணூற்றாறு வகைச் சமய சாத்திரத் தருக்கக் கோவை
பாசண்டன் - சாத்தனாகிய ஐயன்
பாசத்துக்கை - பாசத்திடத்து
பாசவர் - இலையுமுது இடுவார், வெற்றிலை கட்டுவோர், வெற்றிலை விற்பார், கயிறு திரித்து விற்பார், பச்சை இறைச்சியும் சூட்டிறைச்சியும் விற்பார்
பாசிலை - பசுமையான இலை
பாசிலைக் குருகு - பசுமையான இலைகளை உடைய குருக்கத்தி
பாசு - பசுமை
பாட்டு - பாட்டுக்கள், அக நாடகங்களுக்கும், புற நாடகங்களுக்கும் உரிய உருக்கள், பாடுதல், ஒலித்தல், இசைப் பாட்டு
பாட்டு உடைச் செய்யுள் - உருவாகிய பாட்டுக்களையுடைய காவியம், பல பாக்களோடு உரைப்பாட்டையும் இசைப்பாட்டையும் உடைய இயல், இசை நாடகப் பொருள் தொடர்நிலைச் செய்யுள்
பாடகம் - மகளிர் அணியும் காலணிகளில் ஒன்று
பாடல் - ஒலித்தல், பாட்டு: இன்பம், தெளிவு, நிறை, ஒளி, வன்சொல், இறுதி, மந்தம், உச்சம் என்னும் எண் வகைப் பயன் உடைய பாடல்
பாடல் பாணி அளவு - பண்ணையும் திறத்தையும் கலந்து வாசித்து
பாடலம் - பாதிரி
பாடி - படை விட்டிருக்கும் இடம், நகரி
பாடு - பெருமை, இயல்பு, படுக்கை
பாடு அமை சேக்கை - ஒன்றின் மேல் ஒன்றுகப் படுத்த படுக்கை, சேரும் இடம்
பாடு உற்று - பெருமை பெற்று
பாடுகம் - பாடுவோம்
பாடுகளம் - கண்டம், தொண்டை
பாடுகிடத்தல் - வரம் கிடத்தல்
பாடுகேம் - பாடுவோம்
பாடு பெற்றன - பெருமையாவன, இயல்பாவன
பாடேலோர் - பாடு
பாண் - பாண் சாதி, பாட்டு
பாண்டரங்கம் - வெண்ணீற்றை இறைவன் அணிந்து ஆடிய கூத்து; இது நிறம் பற்றி வந்த பெயர்
பாண்டில் - இரண்டு உருளையை உடைய சகடம், தேர் வட்டை
பாணி - கொட்டு, அசை, தூக்கு, அளவு என்னும் நால்வகை நிலையினை உடையது; தாளம், இருவகைத் தாள விகற்பங்கள், பாட்டு

பாணி யாது - வாசிக்கும் தாளம் யாது, (பணிஎன்பதன் நீட்டலாகக் கொண்டு) கட்டளை யாது
பாத்தல் - பகுத்தல்
பாத்தில் - பகுத்தற்கு அரிய
பாதக்காப்பு-மிதியடி, பாதமாகிய துணை, திருவடி ஆகிய பாதுகாவல்
பாய் - பரப்பு
பாய் கலிப் பாவை - தாவும் மானை ஊர்தியாக உடையாள், கொற்றவை, துர்க்கை
பாய்தல் - பரத்தல், பரவுதல்
பார் - உலகம், உலகத்தவர்
பாரதி - பைரவி
பாரதி அரங்கம் - சுடுகாடு, பாரதி ஆடுதலால் பெற்ற பெயர்
பாரம் - சுமை
பால் - பகுதி, பக்கம், பாகுபாடு
பால்பயன் - பாலும் நெய்யும்
பால் மடை - பால் சோறு
பால் வகை தெரிந்த பகுதியோர் - மதி நுட்பம் உடையோர், ஓதாது நன்மை தீமை அறிவோர்
பாலிகை - முளைப் பாலிகை
பாவை-போர் செய்வதற்கு ஆயத்தமான அவுணர் மோகித்து விழும்படி திருமகள் கொல்லிப் பாவை வடிவாக ஆடிய ஆடல், மதனப்பாவை முதலியன
பாவை மன்றம் - பாவை நிற்கின்ற ஒரு மன்றம்
பாவை விளக்கு - பாவை நின்று ஏந்திய விளக்கு
பாழி - வலிமை, பெருமை
பாறுக - கெட்டொழிக
பான்மை - முறைமை, தன்மை

பி

பிஞ்ஞை - பின்னை
பிடர் - பிடரி, புறக்கழுத்து, மலையின் உறுப்பு
பிடர்த்தலை - பிடரில்
பிடி - பெண் யானை
பிண்டம் - அரசன் பிண்டித்து வைத்த உணவு
பிண்டி - ஒன்று, ஒற்றைக் கை, இணையா வினைக் கை என்றும் கூறுவர், பொருட் கை, அசோகு
பிணங்கு அரில் - பின்னிய பிணக்கம்
பிணங்கு நேர் ஐம்பால் - செறிந்த மெல்லிய மயிர்
பிணிப்பு - பற்று
பிணிமுகம் - மயில்
பிணையல் - இணைதல், இரட்டைக் கை, இணைக் கை, தொழில் கை, மாலை, மார்பில் இடுவன, அணியும் பூமாலை
பித்தை - மயிர் முடி
பிலம் - பாதாள வழி
பிழா - இடா, இறை கூடை, நீர் இறைக்கும் கருவி
பிழைத்தது - தவறியது
பிழைத்தோர் - வழுவியவர், தவறியவர்
பிழைப்பார் - தப்புவார், வாழ்வார்
பிழை மணம் - ஒழுங்கற்ற விவாகம்
பிழையா வினையுள் - பொய்யாது வினையும் வினைவு, குன்று வினையுள்
பிள்ளை நகுலம் - கீரிக் குட்டி
பிறக்கிடுதல் - பின்னிடுதல்
பிறக்கு - வேறு, (பிருதக் என்னும் வட மொழிச் சிதைவு)
பிறங்கிய முத்து - பரு முத்து
பிறங்குதல் - விளங்குதல், மிகுதல்
பிறர் மனை - பிறர் மனைவி
பிறர் மனை அஞ்சுதல் - பிறன்இல் விழையாமை, பிறன் மனைவியை விரும்பாமை
பிறவா யாக்கைப் பெரியோன் - மகாதேவன், பரமசிவன், அரூபி
பின் தேர்க் குரவை - தேரின் பின்னே கூளிச் சுற்றம் ஆடுவது
பின்றை - பின்பு

பீ

பீடிகைத் தெரு - கடைத் தெரு, பெரிய கடைத் தெரு
பீடிகை மறுகு - கடைத் தெரு
பீடு - பெருமை
பீடு அன்று - இயல்பு அன்று
பீரம் - பீர்க்கு
பீலி - மயிலின் இறகு

பு

புகர் - குற்றம், அழகு
புகர் முகம் - புள்ளி பொருந்திய முகத்தையுடையது, யானை
புகல் - புகுதல், புகல்வு, தருக்கு
புகல் இடம் இல்லை - சொல்லி முடியாது, ஒடியொளிக்கலாம் இடம் இல்லை
புகற்கிலர் - புகார்
புகன்று - தருக்குற்று
புகார் - காவிரிப் பூம் பட்டினம்
புகுத்தி - புகவிட்டு
புகை-அகில் முதலியவற்றின் நறும்புகை, மயிருக்குப் புகைக்கும் அகில் முதலாயின
புகைக்கொடி - தூமகேது
புகைய - புகை உறுப்புக்கள்
புட்கை - பூட்கை, மேற்கொள்
புடைபெயர்தல் - அசைதல், செல்லுதல்
புடைத்தனன் - தட்டினான்
புண்ணிய திசை - வட திசை
புண்ணிய நெடுவரை - பொதியில் மலை முதலாகிய புண்ணிய மலைகள்
புண்ணியம் - அறநெறி, தவம்
புணை - தெப்பம்
புதவம் - வாயில்

புதா - பெருநாரை
புதுவன் - புதியவன்
புதை - அம்புக் கட்டு
புதைத்தல் - போர்த்தல்
புரப்போர் - அரசர்
புரவி - குதிரை
புரி குழல் - சுருண்ட கூந்தல்
கடை குழன்று சுருண்ட கூந்தல்,
புரி குழல் அளகம் - புரிந்த சுருளை உடைய கூந்தல்
புரிந்து - விரும்பி
புரி வளை - இடமாகவோ வலமாகவோ வளைந்த வரிகளையுடைய சங்கு
புரு - புருவம்
புரை - குற்றம், ஒத்த
புரையோய் - மேலோய்
புரையோர் - உயர்ந்தோர்
புல் - புறக்காழ் உடைய தாவீரம்; சுபில நிறம், புல்லை என வழங்கும்
புல்லகம் - மகளிர் தலைக்கோலத்தின் ஓர் உறுப்பு: தென்பல்லி, வடபல்லி
புல்லார் - பகைவர்
புல்லுவழி - பொருந்தும் இடம்
புலத்தல் - ஊடுதல், வெறுத்தல்
புலம் - நிலம்
புலம்பு - தனிமை, வருத்தம்
புலம்பு நீர் - வருத்தத்தால் வந்த நீர்
புலம்பும் - தனிமையால் வருந்தும், ஒலிக்கும்
புலம்பு முத்து - துன்பக் கண்ணீர், தனியான கண்ணீர்த் துளி
புலம் பெயர் மாக்கள் - பரதேசிகள், பிற தேசத்தார், கடலோடிகள்
புலர்த்திய - ஈரம் புலர்த்திய, உலர்த்திய
புலர்தல் - உலர்தல்
புலரி வைகறை - புலருகின்றதாகிய விடியும் நேரம், விடியற்காலம்
புல வரை - அறிவின் எல்லை
புலவாய் - வெறுத்தல் செய்யாய்
புலவி - ஊடுதல்
புலவு - புலால் நாற்றம்
புலவு உற்று இரங்கி-புலால் நாற்றம் பொருந்தி முழங்கி, புலத்தல் உற்று வருந்தி
புலவு ஊண் - புலால் உணவு
புழுக்கல் - அவரை, துவரை முதலிய முதிரைப் பண்டங்களை வேக வைத்த புழுக்கல்; அவரை, துவரை முதலியன
புழை - ஏவறை
புள் - பறவை
புள் வாய்ப்பு - புள் நிமித்தம்
புள்வாய் முரசம் - புள்ளொலி ஆகிய முரசு
புறச்சிறை இருக்கை - புறஞ்சேரியில் இருக்கும் இருப்பு
புறஞ்சிறை - புறஞ்சேரி
புறஞ்சேரி - ஊருக்கு வெளிப்புறம், புற நகர்
புறஞ்சொல் - புறங்கூறுதல், வெளியில் சொல்லும் பழிச்சொல்
புறந்தருதல் - காத்தல்
புறநிலைக்கோட்டம் - ஊரின் புறம்புள்ள திருக்கோயில்
புறம் - இடம், பின்புறம், முதுகு
புறம் சிறை வாரணம் - கோழி
புறம்பணையான் - சாத்தன்
புறவு - புரு
புன்கண் - வருத்தம், துன்பம்
புனிதன் - சுத்தன், தூய்மையுடையோன், புதியவன்
புனைசாந்து - மெய்ச் சாந்து

பூ

பூ - அழகு; பொலிவு; விடு பூ, தொடைப் பூ, கட்டுப் பூ என மூவகைப் பட்ட பூக்கள்
பூங்கா - பூஞ்சோலை
பூங்கானல்-பூக்கள் நிறைந்த கடற்கரைச் சோலை
பூச உருவில் பொலம் தெளித்தனைய - புருட ராகம்
பூசம் - எட்டாம் நட்சத்திரம்
பூஞ்சேக்கை - பூம்படுக்கை, பூவினால் அமைந்த படுக்கை
பூணுதல் - மேற்கொள்ளுதல், அணிதல்
பூதர் - வருண பூதர்; அந்தணர், அரசர், வணிகர், சூத்திரர் என்று சொல்லப் பட்ட நால்வகை வருண பூதர்
பூந்துகள் - பூந்தாது, மகரந்தப் பொடி
பூப்பலி - அருச்சனை
பூப்பலிசெய்தல் - அருச்சித்தல்
பூ மலி கானம் - பூ விற்கும் இடங்கள், பூவின் மிகுதி பற்றிக் கானம் எனப் பட்டன
பூ மலி கொடி - பூங் கொடி
பூரண கும்பம் - நிறை குடம்
பூ வந்த - பூவை ஒத்த
பூவர் சோலை - பூக்கள் நிறைந்த சோலை
பூவல் - செம்மண்
பூவா வஞ்சி - வஞ்சி மா நகர், கருவூர்
பூவிலை - பூவிற்கு விலை, பரிசம், கூத்திக்குக் கொடுக்கும் முன்பணம்
பூவிலை மடந்தையர் - அற்றைப் பரிசம் கொள்வார், நாள்தோறும் பரிசம் பெறுபவர்
பூவை - காயாம்பூ
பூழி - பூழ்தி, புழுதி
பூளை - ஒரு வகைச் செடி

பெ

பெண் - பெண் வடிவு
பெண் அணிப் பேடியர்-பெண்களுக்குரிய அணியை விரும்பிய பேடியர்
பெண்மை - நாணுடைக் கோலமும், நகை முகமும், பண் மொழி மிழற்றலும், உடைய பெண் வடிவு
பெயர் - புகழ்

பெயர்கு - செல்கின்றேன்
பெயர்குவர் - நீங்குவர், தப்புவர்
பெயர்த்த - போக்கின
பெயர்தல் - மீள்தல், திரும்புதல், செல்லுதல், தாளம் அறுதல்
பெயர்புறத்து - புறங்கொடுத்த வழி
பெயர்போகி - பெயர் யாண்டும் பரக்கப் பெற்று
பெயல் - மழை
பெயல் வளம் - மழை வளம்
பெரியோன் - இறைவன்
பெருங்கணி - கணித விவர்த்தகன், தலைமை நிமித்திகன்
பெருங்கிழத்தி - முழு உரிமை உடையாள், மனைவி
பெருஞ்சோற்று வஞ்சி - வீரர்களுக்குப் பெருஞ்சோறு அளித்தல்
பெருஞ்சோறு - பெருஞ்சோற்று விருந்து, அரசன் தன் படைத் தலைவருக்கு அளிக்கும் பேருணவு
பெருந்தகை - பெருமான்
பெருந் தண் வாழ்க்கை - இல்லறம்
பெருநாள் - பெருமையுடைய நாள், நல்ல நாள்
பெருநாளிருக்கை - பெரிய நாளோலக்கத்து இருக்கை
பெருநீர் - கடல்
பெரும் சீர் - மிக்க புகழ்
பெரும்பதம் - வான்பொருள், சிறந்த பொருள்
பெரும்பாண் இருக்கை - பெரும் பாணர் முதலிய இசைக்காரரின் இருப்பிடங்கள்
பெரும்பிறிதாகை - கையற்றுப் போகை, செயலற்றொழிதல், மரிக்கை, இறத்தல்
பெரும் பெயர் - பெரிய புகழ், மிக்க புகழ்
பெரும் பேதுறுவர் - மயக்கமுறுவர், செயலற்று அழிவர்
பெருமகன் - பெரியோன், அரசன், அருகதேவன், தசரதன்
பெருவழி - பெரும் பாதை, பிரதான சாலை
பெரு விறல் - பெரிய வெற்றி
பெற்றவர்க்கு - கொண்டவர்களுக்கு
பெற்றி - தன்மை, பெருமை, நோன்பு

பே

பேடி - பெண் தன்மை மிகுந்த அலி
பேடியாட்டல் - பதினோர் ஆடலுள் ஒன்று, பேடிக்கோலத்துடன் காமன் ஆடிய கூத்து
பேணுதல் - விரும்புதல்
பேதுறவு - மயக்கம், அறிவு மயங்குதல், அறிவு திரிதல்
பேதைமைத்து - அறியாமையை உடையது
பேய் வாலுவன் - பேயாகிய மடையன், பேய்க்குச் சோறிடும் மடையன்

பேர் - பெரிய
பேர் இயல் கிழத்தி - மனைக் கிழத்தி, கோவலன் மாதா
பேர் இருட்பக்கம் - கிருட்டின பக்கம்
பேராச் சிறப்பு - மாறுத சிறப்பு, நீங்காத பெருமை, மாறுத விழவுச் சிறப்பு
பேராளன் - மிக்க புகழை உடையவன்

பை

பை - படம்
பைங்கொடிப் படலை - பச்சிலை மாலை
பைந்தளிர் - பச்சிலை
பையுள் - வருத்தம்

பொ

பொங்கர் - பூம்பூ, வாடல் பூ, சோலை, பூங்கொம்பு, பொதுளல், மரக்கொம்பு
பொங்கல் - கள்ளு, பொங்கல் சோறு
பொங்கழி - தூற்றுப் பொலி, தூற்றுத நெற்குவியல்
பொச்சாப்பு - மறதி
பொடி ஆடிக் கிடத்தல் - புழுதி படிந்து கிடத்தல்
பொதி-அரும்பு, மூட்டை, பண்டங்களைப் பொதிந்தவை
பொதி அறை - துவாரம் இல்லாத அறை, துவாரம் இல்லாத கீழறை
பொதியில் - பொதிய மலை, பொது இல், பொது இடம்
பொதி வாய் - கட்டின வாய்
பொது அறு சிறப்பு - பொதுமை நீங்கிய சிறப்பு, தனக்கே உரிய சிறப்பு
பொது இயல் - புறக்கூத்து, அரசர் ஒழிந்த ஏனையோர்க்கு ஆடும் கூத்து, எல்லார்க்கும் ஒப்ப ஆடும் கூத்து
பொது நீங்கு திருநிழல் - பிறிது மரநிழல் போல ஆதித்தனுடன் திரியாது நிற்கும் நிழல், தனக்கே உரிய நிழல்
பொது நெறி-சிறப்பில்லா நெறி, எல்லாரும் செல்லும் வழி
பொதும்பர் - மரச் செறிவு, சோலை
பொய் - புரை, துளை
பொய் இல் காட்சி - ஐயம் திரிபு இல்லா அறிவு
பொய்க் கரி - பொய்ச் சான்று
பொய்க் கரியாளர்-பொய்ச் சான்று பகர்வோர்
பொய்கை - தடாகம், குளம்
பொய்தல் - விளையாட்டு, மகளிரின் விளையாட்டு
பொய் தீர் காட்சி-குற்றம் நீங்கிய அறிவு
பொய் பொரு முடங்கு கை - துதிக்கை
பொய்யறைப்படுத்து - பொய்க்குழிப் படுத்தி
பொரு - பொருந்தும், பொருந்தின
பொருந்துதல் - ஆடுதல், நீராடுதல்
பொருநர் - எதிர்த்துப் பொருவோர், போர் செய்பவர், வீரர்

பொரு முக எழினி - வலத்தூண் இரண்டினிடத்தும் உருவு திரையாக அமைவது
பொருள் இல் யாக்கை - பயனற்ற உடம்பு
பொருள் உரை - மெய்யுரை
பொருள்மொழி - மெய் வார்த்தை
பொருளன் - ஆகமத்தின் பொருளாக உள்ளவன், உண்மைப் பொருளாக உள்ளவன்
பொல்லா - கொடிய
பொலம் - பொன், அழகு
பொலம் தெரி மாக்கள்-பொன் வாணிகர்
பொழில் - உலகம், நீவு, சோலை
பொழில் தண்டலை - பொழிலாகிய சோலை
பொற்படி - பொன்னுலகம்
பொற்பு - அழகு, பொலிவு
பொறி - புள்ளி,இலக்கணம், ஊழ்,அறம், புண்ணியம்
பொறி அலவன் - புள்ளிகளையுடைய நண்டு
பொறித்தல் - அடையாளம் செய்தல்
பொறி வெள்ளை - புள்ளிகளை உடைய வெண்ணிறமான ஏறு, மறை
பொறை - பாரம், சிறுமலை, துறுகல், பொத்தை, மலை
பொன் - சீதேவி, திருமகள்
பொன்கோட்டு மேரு - பொன்மயமான சிகரத்தையுடைய மேரு மலை, பொலிவு பெற்ற சிகரம் உடைய மேரு
பொன் செய் கொல்லர் - உருக்குத் தட்டார்
பொன் செய் கொல்லன் - பொன்னால் வேலை செய்வோன், பொற்கொல்லன், தட்டான்
பொன் பொறி வெள்ளை - மறை
பொன்னுலகம் - தேவர் உலகம்

போ

போக்கினள் - புகழும்படி பரவச் செய்தாள்
போக - அகல
போகம் - இன்பம்
போகிய - ஒழுகிய
போகு - நெடுமை
போகுவல் - போவேன்
போதகம் - யானை
போதி - அரசமரம்
போதித்தானம் - போதி மாதவர் முன் செய்யும் புண்ணிய தானம், புத்த சங்கம்
போது - பூ, மலர், வருவாயாக
போதுவல் - செல்வேன்
போயது - போய அது (விகாரம்); ஒரு சொல்லாகக் கொளின், சென்றது என்பது பொருள்
போற்ரு ஒழுக்கம் - நீய ஒழுக்கம்
போற்றும் - வணங்குவாம், புகழ்வோம்
போன்ம் - போலும்

பௌ

பௌவம் - கடல்

ம

மக - மகவு, குழந்தை
மகடூஉ - பெண், பெண் பால் பொதுச் சொல்
மகரத் திண் கொடியோன் - மன்மதன்
மகரம் - சுறுமீன்
மகரவாரி - கடல்
மகர வெல் கொடி- மீனமாகிய வெற்றிக் கொடி, மீன் கொடி
மகர வெல் கொடி மைந்தன் - காமன்
மகன் - ஆண்பால் பெயர், புதல்வன், கணவன்
மகிழ்தல் - விரும்புதல்
மகிழ்வு - மகிழ்ச்சி
மங்கல அணி - மங்கல நாண், மாங்கலிய சூத்திரம், பூணாத இயற்கை அழகு
மங்கலத் தாசியர் - மங்கலத் தொழில் செய்யும் ஏவல் மகளிர், சுமங்கலிகளான தாசியர், அழகிய தாசியர்
மங்கலம் - கலியாணம்
மங்கலமடந்தை - மங்கலாதேவி,கண்ணகி
மங்கல வாழ்த்து - கலியாண வாழ்த்து
மங்குல் - இருட்சி
மஞ்சு - மேகம்
மஞ்ஞை - மயில்
மட்டு - தேன், மது, கள்
மடங்கல் - சிங்கம்
மடந்தை - பெண்
மடப்பம் - இளமை
மடம் - அழகு
மடமை - அறியாமை
மடல் - இதழ், பூ
மடல் அவிழ் கானல் - பூக்கள் இதழ் விரிந்த கடற்கரைச் சோலை
மடவரல் - பெண்
மடவன் - அறியாமை உடையன்
மடவார் - மகளிர், பெண்கள்
மடவோர் - பேதையர்
மடன் - கொளுத்தக் கொண்டு கொண்டது விடாமை
மடி - புடைவை, வயிறு
மடித் திரைத்து - வயிற்றிலே அணைத்து, மடியாகிய புடைவை உடையை ஒக்கலையிலே திரைத்து
மடிதல் - உறங்குதல்
மடை - சோறு
மடைக் கலம்-சமைத்தற்குரிய பாத்திரம்
மடைப்பள்ளி - மடைப்பள்ளி, கோயில் முதலியவற்றின் அடுக்களை
மடைமை - அடிசில் அடும் தன்மை
மண் - சுதை, மார்ச்சனை
மண் உடை முடங்கல் - மண் இலாஞ்சனை இட்ட கடிதம்
மண் கணை முழவு-மார்ச்சனையை உடைய திரண்ட மத்தளம்
மண்டிலம் - வட்டம், சூரியன்

மண்டிற்று - முடுகிற்று, நெருங்கிற்று
மண்ணக மடந்தை - நிலமகள்
மண்ணிய - கழுவிய
மண்ணீட்டு அரங்கம் - சுதை பூசிய அரங்கம்
மண்ணீட்டு ஆளர் - சிற்பாசாரிகள், சுதையால் பாவை உள்ளிட்டன பண்ணுபவர், குயவர்
மண்ணுதல்-திருமுழுக்குச் செய்வித்தல், நீராடல்
மண் திணி மருங்கு - நில உலகம்
மண் தேய்த்த புகழ் - பூமி சிறுகும்படி வளர்ந்த புகழ்
மண அணி - மணக் கோலம்
மணந்த - கலந்த
மணம் கெழு முரசம் - விழா முரசு
மண மகளிர் - கலியாண மகளிர்
மணமகன் - கணவன்
மணவாய்த் தென்றல் - மணத்தைத் தன்னிடத்தே உடைய தென்றல்
மணி - அழகு, நீலமணி, மாணிக்கம்
மணி உரு - நீலமணி போலும் வடிவம்
மணிக் கால் அமளி -அழகிய கால்களுடன் கூடிய பள்ளிக்கட்டில், இரத்தினங்கள் இழைத்துச் செய்யப்பட்ட கால்களையுடைய பள்ளிக் கட்டில்
மணியரங்கம் - நிலாமுற்றம்
மணி வண்டு - நீல நிறமுடைய வண்டு, நீலமணியைப் போன்ற வண்டு
மணி விளக்கு -மாணிக்க விளக்கு, அழகிய விளக்கு
மத்தக மணி - முகப்பில் கட்டிய மாணிக்கம், தலையான மாணிக்கம்
மதி - சந்திரன், இராசி, மாதம்
மதி நிழல் - சந்திரனது ஒளி
மதி முடி - சந்திரனைச் சடைமுடியில் கொண்ட தேவன்
மதியம் - சந்திரன், திங்கள், மாதம்
மதுக்கொள் வேள்வி - சோம யாகம்
மதுகரம், ஞிமிறு, வண்டு - வண்டின் வகைகள்
மதுரை மா தெய்வம் - மதுரையைக் காக்கும் காவல் பெருந்தெய்வம்
மதுவின் குடம் - தேன் குடம்
மதைஇய - மதர்த்த
மந்திரக் கணக்கர் - மந்திர ஓலை எழுதுவோர்
மந்திரச் சுற்றம் - அமைச்சர் திரள்
மயக்கம் - மருட்சி, வியப்பு
மயக்கு - மயக்கம், அனந்தல்
மயங்குதல் - அறிவு திரிதல்
மயல் பகை - மயக்கமாகிய பகை
மயன் - தெய்வத் தச்சன்
மயிடன் - மகிஷன், மகிஷாசுரன்
மயிர் - உரோமம், எலி மயிர்,
மயிர்க்கண் முரசு - மயிர் சீவாமல் போர்த்த தோலையுடைய முரசு
மயிலை - இருவாட்சி, கொடிமல்லிகை
மரக்கால் - துர்க்கை மரக்கால் கொண்டு ஆடிய கூத்து
மரகதமணி - பச்சை இரத்தினம்
மரகத மணித்தாள் - மரகத மணி பதித்த மோதிரங்கள்
மரப்பந்தர் - சோலை
மரப்புணை - கட்டுமரம், தெப்பம்
மரம்பயில் அடுக்கம் - மரச் செறிவு
மரவம் - வெண் கடம்பு
மராம் - வெண் கடம்பு
மரீஇ - மருவி, பொருந்தி
மருங்கு - பக்கம், கிளை
மருட்கைத்து - வியப்பைத் தருகிறது
மருட்சி - மயக்கம்
மருட்டுதல் - மயக்குதல்
மருது - மருத மரம்
மருந்து - அமுதம், ஔஷதம்; சல்லிய கரணி, சந்தான கரணி,சமனிய கரணி, மிருதசஞ்சீவினி முதலாகிய மருந்துகள்
மருள் - கருமை, மயக்கம்
மருள்மாலை - மயங்கிய மாலை, மயக்கத்தைச் செய்யும் மாலை
மருள - மயங்க
மல்கிய - திரண்ட, நிறைந்த
மல்லல் - வலி, வளன், வளப்பம்
மலயகக் கொழுஞ் சேறு- சந்தனக்குழம்பு
மலயகம் - பொதியில் மலை
மலயம் - பொதியில் மலை
மலயமாருதம் - பொதியில் மலைத் தென்றல்
மலர் அணி விளக்கம் - மலர் அணிதற்குக் காரணமாகிய மை விளக்கு, எரிகிற நெய்த் தீபம்
மலர்அமளி - பூவிஞல் அமைந்த படுக்கை, புஷ்ப சயனம்
மலர் கதிர் - விரிந்த கிரணம்
மலர்தல் - விரிதல்
மலர் வாளி - மலர் ஆகிய அம்பு
மலரா வட்டிகை - மலராத வட்டிகை, வட்டிகையாவது நால்வகைச் சாந்துள் ஒன்று
மலிந்த - மிக்க
மலிந்து - மிகுந்து
மலிய - மிகவும்
மலைப்பு அரும் சிறப்பு - மாறுபடுதல் அரிய சிறப்பு, ஒப்பில்லாத சிறப்பு
மழலை - முதிராத சொல்
மழலைத் தும்பி - இளமையுடைய வண்டுகள்
மழவர் - வீரர்
மழ விடை - இளைய காளை
மழை - மேகம்
மழைக்கண் - குளிர்ச்சி பொருந்திய கண்
மறப்பு - மறத்தல்
மறம் - அகிதம், தீமை, தறுகண்மை, வீரம்
மறலா - மாறுபடா
மறவர் - வீரர், காலாட்படைத்தலைவர்
மறவை - மறத்தை உடையது
மறன் - ஆண்மை
மறி - ஆட்டுக் குட்டி

மறித்தல் - மீளுதல்
மறு - குற்றம்
மறுகி - சுழன்று
மறுகு - தெரு, பெருந்தெரு, குறுந்தெரு
மறுகும் - வாய்விடும், குறுக்கிடும், சுழன்று திரியும்
மறுதர - மீளவும்
மறுதர ஒதுதல் - மீட்டும் மீட்டும் ஒதுதல்
மறுதரவு - மீட்சி
மறுமை இன்பம் - புண்ணியம்
மறை நூல் - வேத ஒழுக்கம்
மறை முது முதல்வன் - முதிய மறையை உண்டாக்கிய பிரமன், வேதங்களை அருளிய சிவபெருமான்
மறையோர் - பஞ்சக்கிராமிகள், வேதியர்
மன் - மன்னன், கணவன்
மன்பதை - மக்கட் கூட்டம், அயலார்
மன்றம் - அரண் இல்லா இடம், பொது இடம்
மன்று - பொது இடம்
மன்னர் பின்னோர் - வணிகர்
மன்னும் - நிலை பெறும்
மனை - வீடு
மனை அகம் - மனையும் மனையும், இல்லாளும் இல்லமும்
மனைப்பெருங்கிழத்தி - மனைவி
மனையறம் - இல் வாழ்க்கை

மா

மா - பெரிய, நிறம், கரிய, கருமை, மா மரம்
மாகதர்-இருந்து ஏத்துவார், பட்டுக்கள்
மாகம் - விசும்பு, ஆகாயம்
மாசு - குற்றம்
மாடம் - சரக்கறைகள்
மாண் - மாட்சிமை, சிறப்பு
மாண்பு - இயல்பு
மாண் விளக்கு - மாட்சிமைப்பட்ட நிலை விளக்கு
மாண - மிக, திண்ணிதாக
மாணி - பிரமசாரி
மாதர் - காதல், பெண்
மாதர்க்கோலம் - கண்டார் காதலிக்கும் அலங்காரம்
மாதர் வீதி - தளிப்பெண்டுகள் தெரு, தேவ தாசிகள் வசிக்கும் தெரு
மாதவத்துஆட்டி - கவுந்தியடிகள்
மாதவி - குருக்கத்தி
மாதிரம் - திக்கு, திசை
மாது - பெண், மனைவி, தேவதை
மாந்துதல் - பருகுதல்
மா நீர் - கடல்
மா மகள் - இலக்குமி
மா மணி - முழு மாணிக்கம்
மா முது பார்ப்பான்-பிதாமகன், பிரமன், புரோகிதன்
மா முது முதல்வன் - வேதா, பிரமன், சிவபிரான்
மாய்தல் - மறைதல்
மாயம் - கனவு
மாயவள் - துர்க்கை
மாயோன் பாணி - திருமாலைப் பாடும் தேவ பாணி
மார்க்கக் கூத்து - வடுகுக் கூத்து
மாரன் - மன்மதன்
மாராயவஞ்சி - அரசனுல் சிறப்பு எய்தும் நிலை
மாரி - மேகம்
மால் - மயக்கம்
மால்மகன் - மயங்கின மகன், உன்மத்தன், மாலின் மகனுகிய காமன்
மால் மணி - பெரிய மணி
மாலை - இயல்பு, மணி மாலை, மாலைக் காலம்
மாலைச் சேரி - ஒழுங்குபட்ட சேரிகள், வரிசையாக அமைந்த குடியிருப்புக்கள்
மாழ்குதல் - மயங்குதல்
மாற்றம் - உரை
மாற்றல் - துடைத்தல்
மாற்றுள் - கனவனுடைய மற்றொரு மனைவி, சக்களத்தி
மாற்றோர் - பகைவர்
மாறி - விற்று
மாறு - பகை, பகைவர், ஒப்பு
மான் தேர் - குதிரை பூட்டிய தேர்
மான் நேர் நோக்கம் - மானை ஒத்த பார்வை
மான்மதச் சாந்து - கத்தூரிச் சாந்து
மான்மதச் சேறு - கத்தூரிக் குழம்பு, சவ்வாது
மான் மதம் - கத்தூரி, புழுகு கத்தூரி முதலியன

மி

மிச்சில் - மிகுந்தது, எச்சில்
மிசை - மேடாய வழி
மிடறு - மிடற்றுப் பாடல், சாரீர வீணை, கழுத்து
மிடை - நெருங்கிய
மிடைதல் - நெருங்குதல்
மிளிர்தல் - பிறழ்தல், நெளிதல்
மிளை - காவற்காடு, கட்டுவேலி
மின் - ஒளி, மின்னல்
மின்னுக் கோடி - மின்னலாகிய புதுப் புடைவை

மீ

மீக்கூற்ருளர் - மேற்பட்ட வார்த்தை உடையவர்கள், மேம்பட்ட புகழினையுடையார்
மீக் கூற்று - மேலாடு சொல், புகழ்
மீன் - விண்மீன், நட்சத்திரம்
மீன் அரசு - சந்திரன், மீன் இராச்சியம்
மீன் ஏற்றுக் கொடியோன் - காமன்

மு

முக்குடை - சந்திராதித்தம், நித்திய விஞ்ஞதம், சகலபாசனம்என மூன்று அடுக்கு உள்ள அருகக் கடவுளுக்கு உரிய குடை
முகச் சார்த்து - மூன்றடி முதல் ஆறடி ஈருக வருவது
முகம் - இடம்
முகம் இல் வரி - முகம் ஒழிந்து ஏனை உறுப்புக்களால் வருவது
முகம் உடை வரி - வரிப் பாட்டிற்கு முக மாக முதலில் நிற்பது
முகவைப் பாட்டு - பொலி பாடுதல், நெல்லை முகந்து அளக்கின்ற காலத்துப் பாடும் பாட்டு
முகில் - மேகம்
முகிழ்த்த மூரலர் - அரும்பிய புன் முறுவலை உடையவர்
முசுண்டை - கொடிவகை, முசுட்டை
முட்டா - வழுவாத
முட்டாச் சிறப்பு - இடையறுத சிறப்பு
முடங்கல் - ஓலை, திருமுகம், கடிதம்
முடங்கு - வளைந்த
முடம் - குற்றம்
முடி - முடியையுடைய தலை, கிரீடம், சிறு கட்டு
முடி கெழு வேந்தர் மூவர் - முடி பொருந்திய தமிழ் நாட்டு வேந்தர் மூவர்: சேரர், சோழர், பாண்டியர்
முடித்த கேள்வி - கரை கண்ட கேள்வி
முடிதல் - மரித்தல்
முடி நாறு - முடியாகவுள்ள நாற்று
முடிவலகு - வீட்டுலகம்
முடுக்கர் - குறுந்தெருக்கள், குறுகலான வீதிகள்
முண்டகம் - முள்ளிச் செடி
முத்தப் பூணூல் - அழகிய பூணூல்
முத்தரை - அரையின் முத்துவடம்
முத்தீ - ஆகவனீயம், காருகபத்தியம், தக்கிணக்கினி என்னும் மூன்று ஓம குண்டங்கள்
முத்து - கண்ணீர்த்துளி, நவ மணிகளுள் ஒன்று
முதல் - இடம், தொடக்கம், முதற் பொருள், மூலதனம்
முதல்வன் - தலைவன்
முதிர்தல்-முற்றுதல், சூழ்தல், முற்படுதல்
முதிர்வினை - முற்பட்ட நல்வினை
முதிராக் கிளவி-முற்றுத மழலைச் சொல்
முதிராது - ஒழியாது
முதுக்குறை - அறிவு
முது திரை - பெரிய அலை
முது நரி - ஓரி
முதுநீர் - கடல்
முதுமகள் - முதியோள்
முந்த - முற்பட
முந்தி - முற்பட்டு
முந்துற - முன்னுக
முந்தை - முன்பு
முந்தைப் பிறப்பு - முற்பிறப்பு
முந்நீர் - கடல்
முப்பத்திருகாழ்-முப்பத்திரண்டு வடத்தி னால் செய்த விரிசிகை என்கிற மேகலை
முரசம் - முரசு
முரல்தல் - ஒலித்தல்
முரி - வளைவு, வளைந்த
முரிவரி - எடுத்த இயலும் இசையும் முரித்துப் பாடுதல்
முருகு - மணம்
முருடு - பத்தல், மத்தளம்
முருந்து - மயிலிறகின் அடிக் குருத்து
முரைசு - முரசு
முல்லை - முல்லைப்பூ, முல்லைப்பண்
முல்லைமகம் - முல்லையிடம்
முழங்கு வாய் - கொக்கரிப்பையுடைய வாய்
முழவு - குடமுழா
முழுத்தம் - முகூர்த்தம்
முழுநெறி - இதழ் ஒடியாத முழுப் பூ
முழு மெயும் - மார்பம் முழுதும்
முள் எயிறு - கூரிய பற்கள்
முறம் செவி வாரணம் - யானை
முறி - தளிர்
முறுவல் - பல்
முறை - நீதி, நியாயம்
முறைசெய்தல் - ஒழுக்கத்தினும் வழக்கினும் இழுக்கினுரை ஒறுத்தல்
முள் வாய் - கூர்த்தவாய்
முளி - காய்ந்த
முன்தேர்க்குரவை - பகையரசர் பலரையும் வென்ற வேந்தன் வெற்றிக் களிப்பாலே தேர்த்தட்டிலே நின்று போர்த் தலைவர்களுடன் கைகோத்து ஆடுவது
முன்போந்து - முன்னின்றும் போய்
முன்றில் - முற்றம்
முன்னிலையாள் - முன் நில்லாள், முன் நிற்றலைச் செய்யாள்
முன்னுதல் - கருதுதல்
முன்னை - முன்னர், முந்திய
முனிதல் - வெறுத்தல்
முனிவு - வெறுப்பு
முனை - போர் முனை, யுத்தம், மறவரின் இருப்புக்கள்
முனையிடம் - போர்க்களம்

மூ

மூ அறு கணங்கள் - பதினெண் வகைப் பட்ட கணங்கள்: ஆகாசர், நாகர், சித்தர், கந்தருவர், விஞ்சையர், பாசாசர், தாரகை, போகபூமியோர், கிம்புருடர், சுரர், அசுரர், பூதம், முனி, தேவர், கருடர், இராக்கதர், இயக்கர், சாரணர்
மூடை - பொதி
மூதில் பெண்டிர் - மறக்குடி மகளிர்
மூதூர் - பழைய நகரம்
மூதூர்ப்பொழில் - இலவந்திகைச்சோலை

மூதை வினை - பழ வினை
மூவகை இயக்கம் - வலிவு, மெலிவு, சமன்
மூவா - மூத்தல் இல்லாத
மூவா மருந்து - மூவாமைக்கு ஏதுவாகிய அமுதம்
மூழ்குதல் - அழுக்கறக் குளிரக் குளித்தல்
மூன்று அவித்தோன் - காமம், வெகுளி, மயக்கம், என்னும் மூன்றையும் கெடுத்தவன்

மெ

மெய் - உண்மை, உடம்பு, வடிவு
மெய் உறத் தீண்டி-உடல்கரித்து, தோள் தட்டி
மெய்ப்பாட்டியற்கை - சைன பரமாகமம்
மெய்ப்பை - சட்டை
மெய்ந் நெறி - வீட்டு நெறி
மெய்ம் மயிர் நிறுத்து - உடலின் மயிர் சிலிர்த்து
மெலிக்கும் - மெலிவிக்கும்

மே

மேகலை - எண் கோவை, பவளக் கோவை எட்டினுல் செய்து இடையில் அணிவது
மேதகு - மேம்பாடு தக்க, மேன்மை பொருந்திய
மேல் - மேலிடம், தோள்
மேல் ஓர் நாள் - முன்னெரு நாள்
மேல்நிலை - மேல் மாடி
மேல்நிலை உலகம் - துறக்க உலகம்
மேல் நின்று - மேலாய் நின்று, மேலே நின்று, எல்லாப் பொருளுக்கும் மேலாக நின்று
மேலோர் - முனிவர், தேவர்
மேழி - கலப்பையின் உறுப்பு, கலப்பை
மேனி - நிறம், வடிவம்

மை

மை - கருமை, மஞ்சு
மைந்தர் - ஆண்மையுடைய மக்கள், ஆண்கள்
மைந்து - அழகு, வலிமை

மொ

மொத்துண்டு - தாக்குண்டு, அடிபட்டு
மொழிப் பொருள் தெய்வம் - பொருள் மொழியாகிய தெய்வம், பஞ்ச மந்திரம்: அருகர், சித்தர், ஆசாரியர், உபாத்தியாயர், சாதுக்கள், என்ற ஐவரையும் முறையே வணங்குதற்கு அறிகுறியாகச் சைனமதத்தில் வழங்கும் அ, சி, ஆ, உ, சா என்ற ஐந்து எழுத்தாலாகிய மந்திரம்
மொழிபெயர் தேத்தோர் - மொழி வேறுபட்ட தேயத்தினர், பாஷை வேறுபட்ட தேயத்து மிலேச்சர், பரதேசிகள்

மோ

மோதகம் - ஒரு வகைப் பணிகாரம், பிட்டு

ய

யவனர் - சோனகர், துருக்கர், மிலேச்சர், கிரேக்கர்
யாண்டு - ஆண்டு, வருடம்
யாப்பு அறை மாக்கள் - புண்ணியத்தின் உறுதியற்றோர், அறிவென்னும் உறுதி யற்றவர்
யாப்புறவு - பொருத்தம், வினு
யாரையோ - யார்
யாவதும் - யாதொன்றையும், யாதும், சிறிதும், எளிய இடத்திலும்
யாவும் அறியா - ஒன்றும் தெரியாத
யாழ் உறுப்புக்கள்-பத்தர், கோடு, ஆணி, நரம்பு
யாறு - ஆறு

யோ

யோகம் - அரைப் பட்டிகை

வ

வக்காணம் வகுத்து - ஆளத்தியிலே வைத்து
வக்கிரித்திட்டதை - ஆளத்தி வைத்த பண்ணின் நீர்மையை
வகுந்து - வழி
வகுந்து செல்வருத்தம் - வழி நடந்த வருத்தம்
வகுளம் - மகிழ மரம்
வங்கம் - நாவாய்
வச்சிரக் கோட்டம் - வச்சிராயுதம் இருக்கிற கோயில்
வச்சிர நாடு - சோணைக் கரையில் உள்ள நாடு
வசி - மழை
வஞ்சம் - கிருத்திரிமம், தாமதாத்திரம், இருட்டை உண்டாக்குவதோர் அம்பு
வஞ்சனைப் புணர்ப்பு - இசைகொள்ளா எழுத்துக்களின் மேலே வல்லொற்று வந்தவழி மெல்லொற்றுப்போல நெகிழ்த்துப் புணர்த்தல்
வஞ்சி - ஒரு கொடி, சேரர் தலைநகர்
வஞ்சிக்கூட்டு - எடுத்துச் செலவால் கொண்ட திறை, பகைவர் நாடு சென்று பொருது பெற்ற திறை
வஞ்சிக்கோன் - வஞ்சி நகர அரசன், சேரன், ஆட்டன் அத்தி
வஞ்சினம் - மேற்கோள், சூளுறவு
வட்கர் போகிய - இடையில் முரிவில்லாத
வட்டத் தொகுதி - முத்து வருக்கம், ஆணி முத்து
வட்டிகை - சித்திரம்
வட்டித்தல் - எழுதுதல், சுழற்றுதல், பிரதிக்கினை பண்ணல்

வட்டு - உண்டை, விளையாட்டுக் கருவி
வடம் - முத்துமாலை, மணிவடம், ஆபரண மாலை
வடமலை - இமயமலை
வடமீன் - அருந்ததி
வடவரை - மந்தரகிரி, இமயமலை
வடவளம்- வடக்கில் கிடைத்த பாகுடம், வடதிசையினின்று போந்த பொருள்
வடிகயிறு - புரவியை வசமாக்கும் கயிறு
வடித்தோல் - பதனிட்ட தோல்
வடியாக் கிளவி - தெளிவில்லாத புன் மொழி
வடு - குற்றம், பழி, தீங்கு
வண்டல் - சிறு பெண்கள் மணலில் கட்டிய சிற்றில்
வண்டல் அயர்தல் - சிறுமியர் மணலில் சிற்றில் முதலியன அமைத்து விளையாடுதல்
வண்டால் - வண்டல், (நீட்டல் விகாரம்)
வண்டு - வளையல்
வண்டு ஆர் - வண்டுகள் நிறைந்த, வண்டுகள் ஒலிக்கின்ற
வண்ணம் - நிறம், எழுது வண்ணம், தொய்யில் குழம்பு, தோள் முதலியவற்றில் நிறம் எழுதும் குழம்பு, சுருதி தன்மை, அழகு
வணர்கோடு - வளைந்த தண்டு
வணர் சுரி ஐம்பால் - வளைந்த கடை குழன்ற கூந்தல்
வதிதல் - தங்குதல்
வதுவை - மணமாலை, கலியாணம்
வந்த - ஒத்த
வந்ததை - வந்த உறவு
வந்தனை - துதித்தல்
வந்தனை செய்து - பூசித்து
வந்தீக - வருக
வம் - வா, வம்மின்
வம்பப் பரத்தர் - புதிய காம நுகர்ச்சியை விரும்பும் காமுகர்
வம்பப் பரத்தை - புதிய பரத்தைத் தன்மையை உடையாள், குண்டக் கணிகை
வம்பப் பெரும் தெய்வம் - புதுமையை உடைய பெரிய தெய்வம்
வம்ப மாக்கள் - புதியோர்
வம்பலர் - வழிப்போவார், புதியராய் வருபவர்
வம்பின் முடிந - புதுமையாக முடிவன, கயிற்றால் முடிவன
வம்பு - கயிறு, நிலையின்மை, புதுமை
வயக்கரி - வலிய யானை
வயங்குதல் - விளங்குதல்
வயம் - வெற்றி
வயிர் - ஊது கொம்பு
வயிறு - நடுவிடம்
வயின் - பதம், பக்குவம்
வர்த்தனை நான்கு - ஆரோகண அவரோகண நிலையில் விரல்களை விட்டு விட்டுப் பிடிக்கும் நிலை நான்கு
வரம்பு - எல்லை
வரி - வரிக்கூத்து, கோலச்சாரி, அவரவர் பிறந்த நிலத்தன்மையும் பிறப்பிற் கேற்ற தொழில் தன்மையும் தோன்ற நடித்தல், காமங் கண்ணிய இசைப் பாட்டு, வரிப் பாட்டு
வரிப் பாட்டு - பண்ணும் திறமும் செயலும் பாணியும், ஒரு நெறியன்றி மயங்க வருவது, காமங் கண்ணிய இசைப் பாட்டு
வருடை - ஒரு வகை மான், மலையாடு
வருணப் பூதர் - நால்வகை வருணத்துப் பூதர்
வருநிதி - கலத்தினும் காலினும் வரும் நிதி, நியாயத்தால் வரும் நிதி
வரைத்தாள் - தாழ்வரை, மலையடிவாரம்
வரைந்த - நீக்கிய
வரைப்பு - எல்லை
வரைபொருளி - அறுதி செய்துகொண்ட பொருள்
வல் - சூது, சூதாடு கருவி
வல்லாநடை - மாட்டாத நடை
வல்லி - கொடி
வலம் - வலப் பக்கம், வெற்றி
வலம் செய்தல் - வலப் பக்கமாகச் சுற்றி வருதல்
வலம்படு கொற்றம் - மேலான வெற்றி
வலம்புரி - வலம்புரிச் சங்கு, வலம்புரிச் சங்கு போலும் அணி
வலயம் - தோட்டம், பாத்தி
வலவை - நாணிலி, வல்லபம், சமத்து
வலவைப் பார்ப்பான் - வல்லபத்தை உடைய அந்தணன், வலவை என்ற ஊரிலுள்ள அந்தணன்
வலன் - வலப் பக்கம், வெற்றி
வழக்கு - வழக்கம், முறை
வழங்க - கொடுக்க, உபகரிக்க
வழங்கு தொடி - ஏறுதலும் இழிதலும் உடைய தொடி
வழி - இடம், பாதை
வழித்திறம் - பண்வழிப் பிறக்கும் திறம்
வழிநாள் - மறுநாள்
வழிப்படர் - வழிச்செலவு
வழிமுதல் - வழியில், மரபில்
வழிமொழி - ஏவல்
வழு - குற்றம், பழிப்புரை
வழுக்கம் - வழுவுதல்
வள்ளம் - கிண்ணம்
வள்ளி - வல்லி, கொடி, முருகன் தேவி
வள்ளை - உலக்கைப் பாட்டு
வளர்தல் - பொருந்துதல், தோன்றுதல், மிகுதல்
வளாகம் - பரப்பு
வளை - ஒரு வகைப் படை, சங்கு
வளை போழுநர் - சங்கறுப்போர், சங்குகளை அறுத்து வளை முதலியன செய்வோர்
வளை வில் பொறி - வளைந்து தானே எய்யும் எந்திரவில்
வறங்கூர்தல் - வறத்தல் மிகுதல், மழை பெய்யாது போதல்

வறிது ஆக்க - பயனில்லையாகச் செய்ய
வறிது மீள்தல் - செயலற்று மீள்தல்
வறியேன் - தமியேன்
வறியோன் - அறிவிலான்
வறுநிலம் - வெறு நிலம்
வறுமொழியாளர் - பயனில சூறுவோர்
வறுமொழியாளன் - பயனில் சொல் லாளன், விடன்
வன்கணர் - கொடியர்
வன்னிகை - அரைத்துப் பூசும் ஒரு வாசனைப் பொருள், எழுதுகோல்
வனசாரிணி - வனத்தில் திரிகின்ற இயக்கி

வா

வாங்கி - வளைத்து
வாங்கு - வளைவு
வாங்குதல் - வளைத்தல், விலக்குக் கொள் ளுதல்
வாங்கும் - பெற்றுக் கொள்ளும்
வாசவர் - பஞ்சவாசம் (தக்கோலம், தீம்பூ, இலவங்கம், கர்ப்பூரம், சாதிக் காய்) விற்போர்
வாசிகை - மாலை, செறியக் கோத்த மாலை
வாசிகைத் தோரணம் - வாசிகை வடிவாக வளையச் செய்த தோரணம்
வாட்டு அரும் சீர் - குறைதல் இல்லாத புகழ்
வாடுதல் - குறைதல், வருந்தல், மெலிதல்
வாதுவர் - வாசிவாரியர்
வாய் - இடம், வாய்ப்பு, வாய்த்தல், பொருந்துதல், வாசல், அரண்டிடம், வாய்மை, மெய்
வாய் அல் முறுவல் - மெய் அல்லா முறுவல், பொய்ந்நகை
வாய் அவிழ்தல் - மலர்தல்
வாய் அவிழ்ந்த - கட்டு அவிழ்ந்து குலைந்த
வாய் காவா மழவர் - நாயகனை நெருங்கும் வீரர், அரண்டத்தைக் காவாமைக்கு ஏதுவாகிய வீரர்
வாய்ச்சி - வாயை உடையவள்
வாய்புலம்பல் - ஒலித்தல்
வாய்முதல் - முகத்தில்
வாய்வதின் வந்த குரவை - புத்தி பூருவ மாக எடுத்த குரவை, வாய்ப்புடைத் தாகிய உற்பாதசாந்திப் பொருட்டு ஆடிய குரவை
வாய்வாள் ஆண்மை - வாயாகிய வாளின் ஆண்மை, வாய் சும்மா இராமை
வாயில் - கதவு, வாயிலோன், காவலாளர்
வார் ஒலி கூந்தல் - நீண்டு தழைத்த கூந்தல்
வார்த்தை - புகழ்
வார்தல் - நெடுமை, சுட்டு விரலால் செய் யும் தொழில்
வாரணம் - கோழிச் சேவல், கோழி, சங்கு, யானை, கோழியூர், வாரணவாசி நகர்
வாரநிலம் - வாரப் பாடல்
வாரம் - கீத உரு, சொல்லொழுக்கமும் இசையொழுக்கமும் உடைய பாடல், வாரப் பாட்டு, தெய்வப் பாடல், பற்று, கிழமை
வாரம் செய்த கை - இரட்டையிற் செய்த கைத்தொழில்
வாரி - கடல், வருவாய், யானையைப் பிடித்தற்குரிய குழி, இடம்
வால் - வெண்மை, இளமை
வால்வளை - வெள்ளி வளை, சங்க வளை
வால் வெண் களிற்று அரசு - ஐராவதம் என்னும் வெள்ளை யானை
வால் வெள்ளை - பலராமன்
வால சரிதை - பாலிய சரிதம்
வாலாமை - தூய்மை இன்மை, ஆசௌ சம்
வாலியோன் - வெள்ளைமூர்த்தி, பலதேவன்
வாலுகம் - வெண் மணல், மணல்
வாலுவன் - மடையன், சமைப்போன்
வாழ்தல் - வாழ்க்கை நடத்துதல், சீவித் தல்
வாள் - ஒளி, ஆயுதம்
வாள்அமலை - வாட்கூத்து
வாள் உழத்தி - கொற்றவை
வாள் நகை - ஒளி பொருந்திய சிரிப்பு
வாள்வரி - புலி
வாள் வரிக் கொடுங் காய் - வளைந்த வரிகளை உடைய வெள்ளரிக்காய்
வாள்வினை - போர்த் தொழில்
வாள் வேங்கை - கொடிய புலி, புலி இலச் சினை
வாளி - அம்பு
வான் - பெருமை, மிகுதி, ஆகாயம், மேகம்
வான் உறை - துறக்கத்து உறைதல்
வான்கண் - சூரியன்
வான் கேழ் வட்டம் - மிக்க ஒளியை உடைய சிலாவட்டம், சந்தனச்சாணை, சந்தனம் அரைக்கும் வட்டக் கல்
வான்கொடி - சிறந்தகொடி, வானவல்லி, கற்பகத்தைச்சேர்ந்து படரும் காமவல் லிக் கொடி
வான் துறவு - சிறந்த துறவு
வான்பொருள் - அறத்தாற்றில் ஈட்டிய விழுப்பொருள், கல்வி
வான்பொருள் கேள்வி - மிக்க கல்விகளும் பொருட் கேள்விகளும், மறைநூலும் அங்கமும்
வானக்கடவுளர் - தேவர், தேவ முனிவர் கள்
வானகம் - வானுலகம், சுவர்க்கம்
வானநாடி - சுவர்க்க நாட்டை உடைய வள்
வானம் - மேகம், மழை
வானவர் - தேவர், சேரர்
வானவர் போற்றும் வழி - வீட்டுநெறி, மோட்ச மார்க்கம்
வானவல்லி - மின்னுக்கொடி
வானவன் விழவு - இந்திர விழவு

வி

விகாரம் - அரங்கு; கையாலோ, கருவியாலோ, செய்யாது நீனைவினுல் நிருமித்தது; பௌத்தப் பள்ளி
விச்சை - வித்தை
விஞ்சம் - விந்தியம், விந்தியமலை
விஞ்சை - மந்திரம்
விஞ்சை வீரன் - விச்சாதர வீரன்
விட்டாள் எறிந்தாள் - விட்டு எறிந்தாள்
விடர் - மலையுச்சி, மலைமுழைஞ்சு
விடுதலறியா - விடாத
விடுவாய்செய்தல் - அரிதல்
விடைகொள்ள - நீங்க
விண்ணவர் கோமான் விழு நூல் - ஐந்திரம்
விண்ணவர் தலைவன் - இந்திரன்
விண்ணவன்-சுவர்க்கவாசி, சுவர்க்கத்தில் வசிப்பவன்
விண்ணோர் பாவை - விண்ணோர் பரவும் பாவை
விண்புலம் - விண் இடம், தேவலோகம்
விதானம் - மேற்கட்டி
விதானித்து - மேற்கட்டுக் கட்டி
விதித்தல் - மனத்தால் நிருமித்தல்
விந்தம் - ஒரு வகை மாணிக்கம்
விந்து - புள்ளி
விம்மிதம் - அதிசயம்
வியம் - ஏவல்
வியர் - வியர்வை
வியர்ப்பிரிய - வியர்வை பெருது நீங்க
வியல் - அகலம், மிகுதி
வியலுள் - அகன்ற ஊர்
வியன் - வேறுபாடு, மிகுதி
விரகு - சூழ்ச்சி, சதுரப்பாடு
விரல் அணி - மகரவாய் மோதிரம், பீலி, கால் மோதிரம்
விரியல் - மலர்ச்சி, பூமாலை
விருத்தன் - ஞான விருத்தன், மேலோன்
விருத்தி - இருப்பு
விருந்தாட்டு - ஆண்டுதோறும் செய்யும் விழா
விருந்தின் தேஎம் - புதுமையை உடைய தேயங்கள், பரதேசங்கள்
விருந்தின் மன்னர் - புதிய அரசர்
விருந்தின் மூரல் - புதிய நகை
விருந்து - புதுமை, விருந்தினர்
விருந்துபடக் கிடந்த - புதுமையுடைத்தாகச் சமைத்த
விருந்து புறந்தருதல் - விருந்தனரைப் பேணுதல்
விரை - வாசனை, மணம், நறுமணப் பொருள்கள், வாசனைப் பொருள், கொட்டம் முதலாயின
விலக்கல் - தடுத்தல்
விலக்கு - விலக்கு உறுப்பு; வேந்து விலக்கு, படை விலக்கு, ஊர் விலக்கு, என்னும் பாட்டுக்களுக்கு உறுப்பாய் வருவது. பொருள் முதல் சேதம் ஈறுகிய பதினுன்கும் விலக்கு உறுப்பு எனப்படும்
விலங்கு - குறுக்கு, பக்கம், மிருகம்
விலங்கப் பாயின்- குறுக்காகப் பாயுமாயின்
விலங்கு ஒளி - ஒரு பக்கமாக ஓடுகிற ஒளி
விலங்கு நடைச் செலவு - ஒதுங்கிச் செல்லும் செலவு, மேன் மக்களைக் கண்டு ஒதுங்கி நடத்தல்
விலங்கு வலை - குறுக்கிட்டுத் தடுத்து அகப்படுக்கும் வலை
விலைஞர் - விலைக்கு விற்பவர்
விலைபெறுதல் - மதிப்பெய்துதல்
விலைப்பொருட்டால்- விலையின் நிமித்தம், விலை கொடாமைக்காக
விழவு கொண்டு எடுக்கும் - விழாவிற்குக் கால்கொண்டு கொடி எடுக்கும்
விழா - திருவிழா, உற்சவம்
விழித்தல் - புறப்பட விடுதல், தோற்றுவித்தல், விளங்குதல்
விழிநுதல் - நுதல் விழி, நெற்றிக் கண்
விழுக்கு - நிணம்
விழுக்கு உடை மடை - நிணச் சோறு, மாமிசத்துடனே கூடிய சோறு
விழுங்குதல் - மறைத்தல்
விழுமம் - துன்பம், வருத்தம், இடும்பை
விழுமியோர் - சீரியோர், சிறந்தவர்
விளக்கம் - விளக்கு
விளங்கு ஒளி - அஞ்ஞான இருள் நீங்க விளங்கும் ஒளி
விளம்பி - அறிவித்து
விளம்பொரி - அரைத்துப் பூசும் ஒருவகை வாசனைப் பொருள்
விளரிப்பாலை - இரங்கற் பண்
விளிக்கும் - உரைக்கும், ஒலிக்கும்
விளிதல் - கெடுதல், நீங்குதல்
விளைகாலம் - பலிக்கின்ற காலம்
விளையாட்டு - பொழில், புனல், முதலிய வற்றில் விளையாடுதல்; பாடநினைத்த வண்ணத்தில் சந்தத்தைச் செல்லவிடுதல்
விளையா மழலை - முற்றாத மழலை
விளையுள் - விளைவு
விறல் - வெற்றி, பெருமை, மேன்மை, மேம்பாடு
விறல் வெய்யோன் - வெற்றியை விரும்புவோன்

வீ

வீங்குநீர் - மிக்க நீர், கடல்
வீடு - முத்தி
வீதி - பெரிய தெரு
வீரபத்தினி - சிறிய கற்புடையாள், மறக் கற்புடையாள், கண்ணகி
வீழ் - விருப்பம்
வீழ்குடி உழவர் - உழவின் மேல் விரும்பும் உழவர் குடிகள், காணியாளர்
வீழ்த்தல் - போக்குதல், சாய்த்தல்
வீழ்த்து - போகட்டு
வீழ்தல் - விரும்புதல், இறத்தல்
வீழ் துயர் - விருப்பத்தான் வரும் துன்பம், விரக நோய்

வீறு - பெருமை, உயர்ச்சி, வெற்றி, பெருமிதம்
வீறு உயர் பசும் பொன் - மாற்று அற்ற பசும் பொன்
வீறுபெற - அழகுபெற

வெ

வெங்கதிர் - சூரியன்
வெங்காதல் - மிக்க விருப்பம்
வெண்கால் - மருப்புக்கால், தந்தத்தால் ஆன கால்
வெண்குடை - வெண் கொற்றக்குடை
வெண் குன்று - சுவாமி மலை
வெதிரம் - மூங்கில்
வெந்நெய் - கொதிக்க வைத்த நெய்
வெப்பு நோய் - வெதுப்பு நோய், தொழு நோய்
வெய்யவன் - சூரியன்
வெய்யோள் - விரும்பியவள்
வெய்யோன் - விரும்புதலை உடையோன், கடுங்கதிர்ச் செல்வன், சூரியன்
வெரிந் - முதுகு
வெல் நரு - கடுமை செய்யும் கள்
வெள் உப்புப் பகருநர் - உமணரும் உமட்டியரும்
வெள்யானை - ஐராவதம்
வெள்ளணி - பிறந்த நாளில் செய்யும் அலங்காரம்
வெள்ளி - சுக்கிரன்
வெள்ளிடை - வெளியிடம்
வெள்ளிடைப் பாடி - வெளியான நிலத்தில் அமைத்த பாசறை
வெள்ளிமால் வரை - பெரிய வெள்ளி மலை, இமயமலை
வெள்ளி வாரம் - வெள்ளிக்கிழமை
வெள்ளி விளக்கம் - வெள்ளி எழுந்த விளக்கம் வெள்ளிய விளக்கம்
வெள்ளைக் கோட்டி - பயனிலுரைக் கோட்டி
வெள்ளைநாகர் - பலதேவர்
வெற்றம் - வெற்றி
வெறி - மணம்
வெறுக்கை - அத்தம், பொருள், பொன்
வெறுத்தல் - மிகுதல், வெறுப்புக் கொள்ளுதல்
வென்றி - வெற்றி

வே

வேங்கை - வேங்கை மரம், புலி
வேட்டம் - வேட்டை
வேட்டல் - ஓமம் செய்தல்
வேண்டி - விரும்பி
வேத்தர் - வேந்தர்
வேத்தியல் - அரசியல், அகக் கூத்து, அரசர்க்கு ஆடுங் கூத்து
வேத்தியல் மண்டபம் - அரசிருப்பாய பேரோலக்க மண்டபம்
வேதாளிகர் - வைதாளி ஆடுவார்
வேதிகை - திண்ணை
வேதினம் - ஈர்வாள்
வேது - வெம்மையுடைய ஒற்றடம்
வேந்து - வேந்தர்
வேம்பன் - வேப்ப மாலையை அணிந்தவன், பாண்டியன்
வேய் - ஒற்று, மூங்கில்
வேயாமாடம் - தட்டோடிட்டுச் சாந்து வாரப்பட்ட மாளிகை, நிலாமுற்றம்
வேர் - வெட்டி வேர்
வேரி - தேன்
வேல் - வல்லயம், ஈட்டி
வேல்கோட்டம் - முருகன் கோயில்
வேலன் - படிமத்தான், வெறியாடுவோன்
வேலி - சூழ்தல், அரண், கடல், காவல்
வேலை - கடல், கடற்கரை
வேள்வி - ஓமம்
வேளாவிக் கோமாளிகை - வேள் ஆவிக் கோமந்திரம், வேளாகிய ஆவிக் கோவின் பெயரால் கட்டப்பட்ட மாளிகை
வேறுபடு திரு - நானாவிதமான செல்வம்
வேனல் - வேனில்
வேனில் - வேனில்பொழுது, காமன், மன்மதன்
வேனில்பள்ளி - இளவேனில் காலத்திற்கு அமைந்த நிலா முற்றம்

வை

வை - வைக்கோல், கூர்மை
வைகல் - பொழுது, நாள்
வைகறை - விடியற்காலம்
வைகறை யாமம் - வைகறையாகிய யாமம், விடியற் காலம்
வைத்தல் - நினைத்தல், தியானம்
வைப்பு - வைக்கை
வையம் - தேர், கொல்லாப் பண்டி, கூடாரப் பண்டி, நிலம், உலகம், உலகத்தவர்